# நல்லொழுக்கக் கல்வி



சாம்பா

# நல்லொழுக்கக் கல்வி

ஒன்பதாம் வகுப்பு



விலை : ரூ. 2-75

ஆசிரியர்
புலவர். இளங்கோவன்
Presentation Convent
Girls' High School, Coimbatore.

சாம்பா பப்ளிஷிங் கம்பெனி
12, பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை-600 001.

முதற்பதிப்பு 1978



"PAPER USED FOR THE PRINTING OF THIS BOOK WAS MADE AVAILABLE BY THE GOVERNMENT OF INDIA AT CONCESSIONAL RATES".



சாம்பா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை—600 013.

# வேண்டுகோள்

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்." இதுவள்ளுவர் வாக்கு. "நல்லொழுக்கக் கல்வியே நாட்டின் உயிர்நாடி." என்பது சான்றோரின் உறுதியான எண்ணம். அந்த எண்ணமும் வாக்கும் நிறைவேற எடுத்த பெரு முயற்சியே எங்களின் நல்லொழுக்கக் கல்வி நூல் வரிசை.

"பள்ளிக்கால அட்டவணையில் வாரத்திற்கு இரண்டு பிரிவேளை கள், ஒழுக்க ஆன்மீகப் பண்புக் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டும்." இது திரு. பிரகாசா கல்விக் குழுவின் பரிந்துரை ஆகும்.

"நம்முடைய கல்வி முறையில் மிகப்பெரியதும் ஆழமானதுமான குறைபாடு ஒன்று உள்ளது; ஒழுக்கப் பண்புகளையும் ஆன்மப் பண்புகளையும் ஒழுங்காகத் திட்டமிட்டுச் செயல்முறையில் கற்பிக்கா மல் இருப்பதே அக்குறைபாடாகும்." இவ்வாறு கூறுகிறது 1964-66 ஆண்டின் கல்விக்குழு.

நம் தமிழ்நாட்டுக் கல்வித் துறையினர் அக்குறைபாடுகளைப் போக்கும் வகையில் நல்லொழுக்கக் கல்விக்கென புதிய பாடத் திட்டத்தினைச் செம்மையான முறையில் வகுத்து அளித்துள்ளனர்.

நம் பெருமதிப்பிற்குரிய தமிழ் நாட்டுக் கல்வித் துறை இயக்குநர் அவர்கள், நல்லொழுக்கக் கல்வியைச் செம்மையாகவும் சீராகவும் கட்டாயமாகப் பள்ளிகளில் கற்பித்தல் வேண்டுமென ஆணையிட் டுள்ளார். (PROCEEDINGS OF SCHOOL EDUCATION R.C. No 122296/E4/76 Dated 25-9-76.) அது நம்நாட்டு எதிர்காலச் சந்ததிகளின் ஒழுக்கக்கல்வியில் அவர்கள் கொண்டுள்ள அக்கரை யினைக் காட்டுவதாகும்.

இவற்றையெல்லாம் உளங்கொண்டு எழுதப்பட்டு வெளி வருவது எங்கள் தயாரிப்பான இந் 'நல்லொழுக்கக் கல்வி' நூல் வரிசை ஆகும்.

குழந்தையைப் பெற்று வளர்க்கும் அன்புடைத் தாயாக இருந்து—அக்குழந்தையைச் சான்றோனாக்கப் பாடுபடும் தந்தை யாக இருந்து—நல்லறிவூட்டி நாளும் கற்பிக்கும் ஆசிரியனாக அமர்ந்து—அறநெறிகளைக் கற்பிக்க வள்ளுவரின் வாய்மொழியைத் துணையாக ஏற்று—இறைநெறியைப் போதிக்க ஏசுவின், புத்தரின், நபிகள் நாயகத்தின், இந்து சமயத்தலைவர்களின் பக்தனாக இருந்து —மொழிப்பற்று, நாட்டுப்பற்றினைப் போதிப்பதில் அண்ணல்காந்தி யடிகளின் அறநெறியைப் பின்பற்றி, "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" 'எம்மதமும் சம்மதம்' என்ற மனப்பக்குவத்தோடு அரசினரின் புதிய பாடத்திட்டத்தினை முழுமையாக ஏற்று இந்நூல் வரிசை எழுதப்பட்டுள்ளது.

எங்களின் இச்சிறந்த படைப்பினை மாணவச் சமுதாயம் கற்றுப் பயனடைய கல்வி நிலையத் தலைவர்களும் ஆசிரியப் பெருமக்களும் பெருமளவில் உதவி புரிந்து எங்கள் சீரிய பணி சிறக்கச் செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

சாம்பா பப்ளிஷிங் கம்பெனியார்.

# பொருளடக்கம்

# SYLLABUS FOR MORAL INSTRUCTION.

## STANDARD IX.

| *Topics* | *Explanation* |
|---|---|
| 1 You and your Home ... | Home, sweet Home, Parents, brothers and sisters—love, confidence, service, respect, obedience, gratitude, truthfulness. |
| 2 Your companions and friends ... | Companions near Home, friends to be carefully chosen, What is friendship ? Joys and dangers of friendship. |
| 3 Your work and your play ... | What is work ? Manual and mental work, dignity of labour, joy of work, facing hardship, work for others. What is play ? How to play ? Games their value. How to spend your leisure. |
| 4 Reading and study ... | What should we read ? Why, how ? How to read a newspaper. How to benefit others by our reading and study. How to study ? |
| 5 True greatness ... ... | Everyone should aim at greatness. True and false greatness. Doing one's duty is true greatness. Trifles make perfection, but perfection is no trifle. |
| 6 Self-sacrifice ... ... | Love is tested by sacrifice of money, time, comfort, even life for a proportionate cause. |
| 7 Care of our body ... ... | Our body does not belong to us. We must take sufficient care of it. Food, exercise, healthy habits. Self-control. Health and Strength. |
| 8 Order and regularity ... | Order is arrangement of each thing in its right place. Regularity is steadiness, punctuality, preseverance. Sacrifice of pleasure for duty. Time-table, room, dress, books, home, school. |
| 9 Truth and falsehood, calumny, backbiting. | Satyameva Jayathe. Truth in word and action. Lying make socials life impossible. Don't answer unnecessary questions, don't be afraid Stealing the good name of others is worse than stealing money. Don't be jealous. |

| *Topics* | *Explanation* |
| --- | --- |
| 10 Service of fellow man. (brotherhood of man). | Love is shown by service : service of God is service of fellowmen for God, specially those most in need — the poor, the suffering. In what way or profession can you best serve them ? All men or children of God, and therefore brothers and sisters among themselves. Love all, and all will love you. |
| 11 Rights and duties ... ... | Right and duty are correlative terms. Parents and children, teachers and students, employers and employees, State and citizens have mutual rights and duties. |
| 12 Murder and Suicide ... | Life belongs to God. Murder and suicide are acts of injustice Cap ital punishment is not murder. Is fas ting to death suicide ? |
| 13 Good manners ... ... | Politeness is the sign of internal respect. Learn the forms of politeness used by the people you live with : how to ask, receive, thank, apologise, make up for a mistake. Keep appointments. |
| 14 Bravery ... ... | Bravery is the virtue of facing difficulties without fear. It is soul-strength. It is not boldness, or rashness or foolhardiness. |
| 15 Obedience ... ... | Obedience is necessary for order and peace in the home, the school, the office, the city, the country. Obedience is only to God, since all men are equal. It is the secret of peace and happiness. |
| 16 Beauty ... ... | The world around us in full of beauty to be studies and admired. Beauty is in proportion, order and harmony. Natural and artifical beauty. |

## பரம்பொருள் வாழ்த்து !

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

பாரதியார்.

## ஒன்று

# நீயும் உன் வீடும்

## 1. மனிதனும் மிருகமும்

**நீ யார்?**

நீ யார்? உனக்கு உயிர் இருக்கிறது; உன்னில் அசைவும் இருக்கிறது. ஆதலால் நீ மண், கல், மலை போன்ற சடப்பொருள் அன்று.

உனக்கு உயிர் இருக்கிறது. மரம் செடி கொடிகளுக்கும் உயிர் இருக்கிறது. உனக்கு உணர்ச்சி இருக்கிறது; அதனை நீ வெளிப்படுத்துவாய். மரம் செடி கொடிகள் உணர்ச்சியை வெளிப்படுத்துவதில்லை. உனக்கு இயக்கம் உண்டு; அவற்றிற்கு இயக்கம் இல்லை. ஆதலால் நீ மரம் செடி கொடியுமன்று.

உனக்கு உயிர் இருக்கிறது; விலங்குகளுக்கும் உயிர் இருக்கிறது. உனக்கு இயக்கம் உண்டு; விலங்குகளுக்கும் இயக்கம் உண்டு. உனக்கு எதைப் பற்றியும் சிந்திக்கும் ஆற்றல் உண்டு; விலங்குகளுக்கோ சிந்திக்கும் ஆற்றல் இல்லை. ஆகவே நீ விலங்கும் அன்று.

நீ கண்களால் பார்க்கும் அறிவைப் பெற்றிருக்கிறாய்; காதுகளால் கேட்கும் அறிவைப் பெற்றிருக்கிறாய்; மூக்கால் முகரும் அறிவைப் பெற்றிருக்கிறாய்; வாயால் சுவைக்கும் அறிவைப் பெற்றிருக்கிறாய். உடலால் உற்றுணரும் அறிவும் உனக்கு உண்டு.

இவ்வாறு ஐம்பொறிகளில் அமைந்த ஐம்புலன்களையும் நீ பெற்றிருக்கிறாய். விலங்குகளுக்கும் ஐம்பொறிகள் உண்டு; அவற்றில் அமைந்த ஐம்புலன்களும் உண்டு. உன்னைப்போலவே விலங்குகளுக்கும் பசியும் உண்டு; தாகமும் உண்டு.

ஆயினும் உனக்கும் விலங்குக்கும் ஒரே ஒரு வேறுபாடு உண்டு. அஃது என்ன? பகுத்துணரும் ஆற்றலாகிய ஆறாவது அறிவுதான். நீ பகுத்தறிவைப் பெற்றிருக்கிறாய்; விலங்குகட்குப் பகுத்தறிவு இல்லை.

ஒளி இருள்; அறிவு அறியாமை; நீதி அநீதி; நல்லது கெட்டது ஆகியவற்றைப் பகுத்து அறிந்து வாழச் செய்யும் பகுத்தறிவு ஒன்றுதான் மனிதனுக்குள்ள சிறப்பு அம்சம்.

தமிழ் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்,

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறிவுயிரே"

என மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளார். விலங்குகளுக்கு ஐந்து அறிவே உண்டு; மக்களுக்கோ ஐந்தறிவுக்குமேல் ஆறுவதாகிய பகுத்தறிவும் உண்டு என்பதே தொல்காப்பியர் கூறும் உண்மையாகும்.

விலங்குகள் பசித்தபோது கிடைத்ததை உண்ணும்; தாகம் எடுத்தால் கழிவு நீர் என்றும் கருதாது குடிக்கும்; மனிதன் அத்தகையவன் அல்லன். பசித்தாலும் உண்ணத் தக்கனவற்றையே உண்பான்; தனக்கு உரிமையானவற்றையே உண்பான். கொடிய தாகமே என்றாலும் நல்ல நீரையே அருந்துவான். நன்னீர் கிடைக்கவில்லை என்றாலும் தேடிச் சென்றேனும் பெற முயல்வான்.

### இறைவன் தந்த பெரும் பேறு

நெற்பயிர் பசுமையாக விளைந்திருக்கிறது; சுற்றிலும் வேலியிடப்பட்டிருக்கிறது; பசு ஒன்று பசியோடு அந்தப் பக்கமாக வருகிறது. அப்பசு என்ன செய்யும்?

'பிறர்க்கு உரியது நெற்பயிர்; ஆகலின் நாம் அதனைத் தின்னக் கூடாது' என்று கருதுமா? கருதாது. 'வேலியிட்டிருக்கிறார்கள்; அதனைத் தாண்டி உள்ளே செல்வது சட்ட விரோதம்' என்று எண்ணுமா? எண்ணாது.

பசுவிற்கோ தாளாத பசி; பசியைப் போக்கும் பசிய நெற் பயிர் அதன் கண் முன்னே; பசு என்ன செய்யும்? வேலியைத் தாண்டும்; நெற்பயிரை மேயும்; பசியைப் போக்கிக் கொள்ளும்.

நீ சாலை வழியே சென்று கொண்டிருக்கிறாய். பசிக் கொடுமையும் நடந்த களைப்பும் உன்னை வாட்டுகின்றன. வழியிலே ஒரு வாழைத் தோட்டம்; சுற்றிலும் வேலியிடப் பட்டிருக்கிறது. உள்ளே வாழைக் குலை ஒன்று பழுத்துத் தொங்குகிறது.

பழம் உன்னுடைய பசியைப் போக்கும்; உனக்கு அது நன்றாகத் தெரியும். ஆயினும் நீ என்ன செய்வாய்? வேலியைக் கடந்து உள்ளே செல்வாயா? செல்ல மாட்டாய். விருப்பம் போல் பழத்தைப் பறித்து உண்பாயா? உண்ண மாட்டாய். ஏன்? பழம் பிறர்க்கு உரியது; உரிமையாளரைக் கேளாமல் அதைப் பறித்து உண்பது தவறு என்பது உனக்குத் தெரியும்.

மனத்தை அதுபோகும் போக்கில் எல்லாம் போகவிடாமல், அது செல்லும் வழி நல்ல வழியா? அல்லாத வழியா? என்பதை அறிந்து

நல்ல வழி எனின், அவ்வழி செல்வாய்; அல்லாத வழியெனின் அவ் வழி செல்ல மாட்டாய். நன்னெறி எனின் ஏற்பாய்; தீ நெறி எனின் தவிர்ப்பாய்; அத்தகைய பகுத்தறிவு உனக்கு இருக்கிறது.

> "சென்ற இடத்தாற் செலவிடாது தீதொரீஇ
> நன்றின்பால் உய்ப்பது அறிவு"

இந்த மேலான அறிவு உனக்கு இருக்கிறது. ஆமாம்! இயற்கை உனக்கு அளித்திருக்கும் பெருஞ் செல்வம் பகுத்தறிவு; இறைவன் உனக்குத் தந்திருக்கும் பெரும்பேறு பகுத்தறிவு.

**காலத்திற்குக் காலம்**

உன் வீட்டில் எலி இருக்கிறதா? உன் வீட்டைச் சார்ந்து தோட் டமும் இருக்கிறதா? இரவு நேரத்தில் நீ நன்ருக உறங்குவாய்; அந்த நேரத்தில் உன் வீட்டினுள் எலி உணவைத் தேடி அங்கும் இங்கும் ஓடித் திரியும். பாத்திரம், பண்டங்களை உருட்டும்.

நீ உடனே விளக்கை ஏற்றுவாய்; எலியோ இருந்த இடம் தெரி யாமல் ஓடி ஒளியும். தோட்டத்தில் போய்ப் பார்த்தால் பூமியில் எங்கோ ஒரு மூலையில் ஒரு வளை இருக்கும்; அதன் உள்ளே நுழைந்து ஒளிந்து கொள்ளும்.

வளை வெட்டப் பட்டால் 'நாம் அகப்பட்டுக் கொள்வோம்' என்ற அறிவு அதற்கு இல்லை. அதனல் நம் தோட்டத்திலேயே வளையைத் தோண்டி அதன் உள்ளேயே ஒளிந்து கொள்கிறது. அன்று ஒரு நாள் மட்டுமா? என்ருல் இல்லை. தொடர்ந்து அங்கேயே தங்குகிறது.

இரவு நேரம்; கொள்ளையடிப்பதற்காகத் திருடன் ஒருவன் ஒரு வீட்டினுள் நுழைகிருன்; சத்தம் கேட்கிறது; வீட்டில் உள்ளவர்கள் விழித்துக் கொள்கிருர்கள்; திருடன் தப்பி ஓடுகிருன். அவன் ஓடி எங்கே ஒளிவான்? நம் வீட்டிலேயே ஒளிந்து கொள்வானு? ஒளிந்து கொள்வான்; அவசரத்திற்குச் சில மணி நேரம் அங்கேயே ஒளிந்திருந் தாலும் அரவம் அடங்கியவுடன் தக்க பாதுகாப்புள்ள வேறு இடத்திற் குப் போய் விடுவான். வேறுபல பாதுகாப்புகளையும் தேடிக் கொள் வான்.

நாம் இன்று பார்க்கிருேம்; எலி, வளையைத்தான் தன் வீடாகக் கொண்டிருக்கிறது. நம் தந்தையின் காலத்திலும் எலிக்கு வளை தான் வீடு; நம்பாட்டன் முப்பாட்டன் காலத்திலும் எலிக்கு வளை தான் வீடு; இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் எலிக்கு வளை தான் வீடு.

இதனல் என்ன தெரிகிறது? எலியின் வாழ்க்கையில் வளர்ச்சி என்பதே இல்லை. எலியின் வாழ்க்கையில் மட்டுமன்று; ஏனைய விலங்குகள் வாழ்க்கையிலும் வளர்ச்சி என்பது இல்லை. தாவரங்களின்

வளர்ச்சியிலும் மாற்றம் என்பது இல்லை. பறவைகளின் வாழ்க்கையிலும் வளர்ச்சியோ மாற்றமோ இல்லை.

மாற்றம் இன்மைக்கும் வளர்ச்சி இன்மைக்கும் காரணம் என்ன ? அவற்றிற்குப் பகுத்தறிவு இல்லை.

ஆனால் மனிதன் பகுத்தறிவோடு படைக்கப்பட்டவன்; அவன் வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள்! நாளுக்கு நாள்—மணிக்கு மணி நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

**சிந்தனையின் விளைவு**

ஆதிமனிதன் மழையில் நனைந்தான்; வெயிலில் உலர்ந்தான்; பனியில் நடுங்கினான்; இருளில் தவித்தான்; விலங்குகளோடு போராடினான். இவ்வாறு மனிதன் இயற்கையை எதிர்த்து நேருக்கு நேர் நின்று போராடினான். அவன் வாழ்க்கையே எதிர் நீச்சலாக அமைந்தது.

காலச் சக்கரம் சுழன்றது; வெயில், மழை, பனி—இவற்றின் கொடுமையைத் தவிர்க்க மனிதன் மலைக்குகைகளைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான்; மரப் பொந்துகளையும் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான். இவை மனிதனின் இயற்கை இல்லங்களாக அமைந்தன.

பருவங்கள் மாறின. மனிதன் மண்ணால் சுவர் எழுப்பினான்; மரங்களாலும் தழைகளாலும் மேற்பகுதியை மூடினான்; புதிய இல்லத்தை அமைத்துக்கொண்டான்.

காலம் மாறியது; செங்கல் கட்டடம் எழுந்தது; கருங்கல் கட்டடம் எழுந்தது; சிமிண்டும் இரும்புக் கம்பியும் சேர்ந்த கான்கிரீட் கட்டடங்கள் எழுந்தன. இவையெல்லாம் மனிதனின் அறிவு வளர்ச்சியின் விளைவுகள்.

மனிதன் எலியைப் போன்றவன் அல்லன்; இருந்தபடியே இருப்பதற்கு. பகுத்தறிவு படைத்தவன் மனிதன்; அதனால் அவன் ஒவ்வொரு நாளும் வாழ்க்கை முறையில் புதிய புதிய மாற்றங்களைக் கண்டு கொண்டே வருகின்றான்.

குகையில் வாழ்ந்த மனிதன் வீடு கட்டத் தொடங்கினான். அவை ஒன்றும் பலவுமாகப் பெருகிச் சிற்றூர் பிறந்தது. சிற்றூர்களின் சேர்க்கையால் பேரூர் உருவாயிற்று; நகரம் வளர்ந்தது; நாடாயிற்று; கண்டமாயிற்று; உலகமாயிற்று; அந்தரத்தில் இருக்கும் சந்திரனிலும் அடி எடுத்து வைக்கும் அறிவை மனிதன் பெற்றுவிட்டான்.

இவையெல்லாம் மனித அறிவின் மாபெரும் வளர்ச்சியின் விளைவுகளே; மானிட சமூகத்தின் வளர்ச்சியின் உருவங்களே. அந்தச்

சமூதாயத்தில் நீயும் ஓர் அங்கம்; அந்த ஆற்றல் அனைத்தும் உன்னிடமும் அமைந்திருக்கிறது. அந்த ஆற்றல் முழுவதும் சமுதாயத்திற்குப் பயன்படுதல் வேண்டும்.

நாட்டின் நலம் வீட்டில் தொடக்கம் என்பார்கள். உன் வீடு எப்படியிருக்கிறது? உன் இல்லம் எப்படியிருக்கிறது?

## 2. நல்லதோர் இல்லம்

இல்லம் :

எங்கெங்கோ அலைந்து திரிந்து வாழ்ந்த மனிதன் இருந்து வாழும் இடத்தையே இல்லம் என்பார்கள்.

உழைத்து அலுத்துக் களைத்து வரும் மனிதன் இளைப்பாறி மகிழ உழைப்பிலிருந்து விடுதலை தந்து உதவும் இடமே வீடு என்பார்கள்.

நிலையான இருப்பிடம் இன்றி அங்கும் இங்கும் அலைந்து திரிந்த மனிதன் ஓரிடத்தில் நிலையாக அமைத்துக்கொண்ட இடத்தையே 'மனை' என்பார்கள். அங்கே நிலைத்திருந்து வாழ்வு நடாத்தும் பெண்ணையே இல்லாள், மனைக்கிழத்தி, வீட்டுத்தலைவி, மனையாள் எனப் பெயரிட்டு மாண்புடன் அழைப்பார்கள்.

மண்சுவர் எழுப்பப்பட்டு ஓலை வேய்ந்த வீடுகள் குடிசை எனப்படும். அதில் உறங்கும் இடமும் உண்ணும் கூடமும் ஓய்வாகத்தங்கும் இடமும் சமைக்கும் பகுதியும் சாமான்கள் வைக்கும் பகுதியும் ஒன்றுகவே இருக்கும்.

கற்களினுலோ மண்ணினுலே சுவர் எழுப்பி அளவிற் பெரியதாக அமைக்கப்படும் வீடுகளும் உண்டு. அவற்றில் ஓலைகளுக்கு மேல் வைக்கோல் வேயப்படுவதும் உண்டு. வசதியுள்ளவர்கள் நாட்டு ஓடுகளாலும் சீமை ஓடுகளாலும் மேற் கூரையை மூடவும் செய்வார்கள்.

அந்த வீட்டில் சமைப்பதற்கு ஒரு பகுதி இருக்கும்; உண்டு மகிழ ஒரு பகுதி இருக்கும்; உறங்கிச் சுகம் காண ஒரு பகுதி இருக்கும்; இருந்து பேசவும் ஒரு பகுதி இருக்கும்; சாமான்கள் வைக்கவும் தனிப் பகுதியிருக்கும். இப்படி அமைக்கப்பட்டவை சாதாரண வீடுகள் தாம். இத்தகைய வீடுகளைச் சுற்றிலும் தோட்டம் அமைப்பதற்கேற்ற இடமும் கொஞ்சம் இருப்பதுண்டு.

மிகப் பெருஞ்செல்வர்களோ பரந்த இடத்தில் தங்கள் வீடுகளை வளமனைகளாக ஆக்கிக் கொள்வர். பரந்த வெளியின் இடையே வீட்டை அமைப்பர்; வீட்டைச்சுற்றிலும் பரந்த இடம் இருக்கும். அங்கே பூக்கும் செடி கொடிகளும் காய்த்துக் குலுங்கும் கனிதரு மரங்களும் கவினுறக் காட்சியளித்துக் கொண்டிருக்கும்.

சமையல் பகுதி தனி; சாமான்கள் வைக்கும் பகுதி தனி; உண்ணும் இடம் தனி; உடுக்கும் இடம் தனி; படிக்கும் இடம் தனி; நண்பர்கள் வந்தால் பழகும் இடம் தனி; இவ்வாறு ஒவ்வொன்றும் தனித்தனிப் பகுதிகளாக அமைந்திருக்கும்.

வீட்டில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தங்கும் அறைகள்; தனித்தனிக் குளியலறைகள்; தனித்தனிக் கழிப்பிடங்கள் அமைந்திருக்கும். வாகனம் நிறுத்தவும் வந்தவர் தங்கவும் தனித்தனி இடங்கள் இருக்கும். இத்தகைய வசதிகளோடு கூடிய மனைகளை வளமனைகள் என்பார்கள்.

குடிசை என்றாலும் மனை என்றாலும் வளமனை என்றாலும் எல்லாம் ஒன்றேதான்; அனைத்தும் மக்கள் வாழும் இல்லங்களே!

நல்ல இல்லம் :

'வீடு' என்பது வெறும் செங்கல்லாலும் மண்ணாலும் சுண்ணம்பாலும் கட்டப்படும் கட்டடமே. அது பல்வேறு வசதிகளைப் பெற்றும் இருக்கலாம்; பெறாமலும் இருக்கலாம். பார்ப்பதற்கு அழகுடையதாகவும் காணப்படலாம்; அழகற்றதாகவும் காணப்படலாம்.

எலிக்கு, வளை இருப்பிடமாகிறது; பறவைகளுக்குக் கூடுகள் இருப்பிடமாகின்றன; விலங்குகளுக்குப் புதர்கள் இருப்பிடமாகின்றன; எறும்புகளுக்குப் புற்று இருப்பிடமாகிறது. இவை போலவே மனிதனுக்கும் வீடு தங்கியிருக்க இருப்பிடமாகிறது. அந்த இருப்பிடமாகிய இல்லம் நல்ல இல்லமாக விளங்குவது எப்படி ?

ஓர் இல்லம் கலையுணர்வோடு கட்டப்பட்டிருக்கிறது; கண்ணைக் கவரும் வண்ணங்கள் பூசப்பட்டிருக்கின்றன; எங்கும் மின் விளக்குகள் உண்டு; எதற்கும் தானியங்குமுறை உண்டு. இல்லாதது இல்லை என்னும்படி எல்லா வசதிகளும் நிறைந்துள்ளன, இவற்றால் மட்டுமே அது நல்ல இல்லம் ஆகிவிடுமா? ஆகாது.

நல்ல இல்லம் என்பது கட்டடத்தைப் பொறுத்ததன்று; அங்கு வாழும் மக்களின் நல்லியல்பைப் பொறுத்ததுதான். தமிழ் மூதாட்டி ஔவையாரைப் பற்றிப் படித்திருக்கிறீர்களா? ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற அரிய தமிழ் நூல்களை எழுதியவர்; மாணவப்பருவத்தில் படிக்கத்தக்க—படித்து மகிழத்தக்க சிறந்த பாடல்களை எழுதியவர்; அவர்தம் பாடல்கள் அறிவுரைகளும் அறவுரைகளும் நிறைந்தவை. இவர் பிற்காலத்தில் வாழ்ந்த ஔவையார். சங்க காலத்திலும் ஓர் ஔவையார் இருந்தார்.

சங்கால ஔவையாரிடம் சிலர் சென்றனர். "ஔவை மூதாட்டியே! தாங்கள் அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்; ஆதலின் எங்களுக்கு ஓர் உதவி செய்யவேண்டும். எங்களுக்கு நூற்றுக்கணக்கான வேலி

நிலங்கள் உண்டு; அதில் நாங்கள் குடியிருப்பதற்கேற்ற நிலப்பகுதி ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறோம். நீங்களே ஒரு நல்ல இடம் பார்த்துச் சொல்ல வேண்டும்.'' என்றனர்.

சாரமற்ற மண்ணாக இருக்கிறது; எருவிட்டால் சத்துடைய மண்ணாக மாறிவிடுகிறது. கல்லும் முள்ளும் நிறைந்த களர் நிலமாக இருக்கிறது; கல்லைப் பொறுக்கி விடுகிறோம்; முள்ளை வெட்டி எறிகிறோம்; கலப்பை உழுகிறது; எரு நிறைகின்றது; நீர் பாய்ச்சப் படுகிறது; களர் நிலம் நன்னிலம் ஆகிவிடுகிறது.

நிலத்தில் என்ன இருக்கிறது? மக்களுடைய உழைப்பில்தான் இருக்கிறது. இதனை அறிந்தவர் ஔவையார்.

மலையும் மலையைச் சார்ந்த குறிஞ்சி நிலமா? அங்கு மக்கள் வாழ்கிறார்கள். காடும் காட்டினைச் சார்ந்ததாகிய முல்லை நிலமா? அங்கும் மக்கள் வாழ்கிறார்கள். வயலும் வயலைச் சார்ந்ததுமாகிய மருத நிலமா? அங்கும் மக்கள் வாழ்கிறார்கள். கடலும் கடலைச் சார்ந்தது மாகிய மருத நிலமா? அங்கும் மக்கள் வாழ்கிறார்கள். மக்களுக்குத் தேவையான செல்வப் பொருள்கள் எங்கேயும் உண்டு. ஆகவே நிலத்தில் எந்தவிதமான ஏற்றத் தாழ்வும் இல்லை என்பதை அறிந்தவர் ஔவையார்; அதனால் அவர் சொன்ன நல்ல நிலம் — நல்ல இடம் எது தெரியுமா?

"ஒரு நிலம் நாடே ஆயினும் ஆகுக; காடே ஆயினும் ஆகுக; பள்ளமே ஆயினும் ஆகுக; மேடே ஆயினும் ஆகுக; அஃது எப்படி இருந்தால் என்ன? மக்கள் எந்த இடத்தில் நல்லவர்களாக வாழ்கின்றார்களோ அந்த இடமே நல்ல இடம்; அந்த நிலமே நல்ல நிலம்.'' என்று கூறினர் ஔவையார்.

இதோ அவர் பாடிய பாடல்,

> நாடா கொன்றோ காடா கொன்றோ
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே!

ஆகவே நல்ல இல்லம் என்பது எது? குடிசையா? நடுத்தர வீடா? வளமனையா? எது நல்ல இல்லம்? நல்ல இல்லம் குடிசையாகவும் இருக்கலாம்; நடுத்தர மனையாகவும் இருக்கலாம்; வளமனையாகவும் இருக்கலாம். நல்ல இல்லமா? அல்லவா? என்பதை அங்கு வாழும் மக்களின் குண நலன்களை — செயல் முறைகளைக் கொண்டே கூற முடியும்.

நல்ல இல்லம் என்பது, உண்மை, நம்பிக்கை, இரக்கம் ஆகியவற்றை அன்பாகிய காரையிலே கலந்து கட்டப்படுவதே ஆகும்.

அந்த நல்ல இல்லத்தின் புறத் தோற்றமே கண்ணுக்குத் தெரிவது; அகத் தோற்றமே கருத்துக்கு இனிப்பது.

மேட்டுப் பாங்கான இடத்திலே வீடு அமைந்துள்ளது; நல்ல காற்ரேட்ட வசதியுண்டு; மழை பெய்தால் நீர் தேங்காது. சுட்ட செங்கல்லும் சுண்ணும்புக் காரையும் இட்டுக் கட்டிய காரை வீடு; தனித் தனி அறைகள் உண்டு. காற்ரேட்டத்திற்குச் சாளரங்கள் உண்டு. வெளிச்சத்திற்கு மின் விளக்குகள் உண்டு. பார்ப்பதற்கும் அழகாக இருக்கிறது; வசிப்பதற்கும் சுகமாக இருக்கிறது. ஆயினும் இவை நல்ல இல்லத்தின் புறத் தோற்றங்களே.

புறத் தோற்றத்தைக் காட்டினும் அகத் தோற்றமே நல்ல இல்லத்திற்கு முதன்மையானதாகும். அகத் தோற்றமாவது யாது? இல்லத்திலே வாழும் மக்களின் சிறந்த நடை உடையும் பழக்க வழக்கங்களுமே ஆகும்.

ஆன்ரோர் 'நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்றனர். பல கலைகளும் பயிற்றுவிக்கும் இடமே பல்கலைக் கழகம். பல கலைகளும் பயிலுமிடமும் பல்கலைக் கழகம்தான். குடும்பம் என்ற பல்கலைக் கழகத்தில் அன்பு போதிக்கப்படுகிறது; அறம் வளர்க்கப்படுகிறது. நம்பிக்கை விதைக்கப்படுகிறது; நாணயம் விளைகிறது; இரக்கம் ஏற்றம் பெறுகிறது; உண்மை உருவாகிறது. எனவேதான் நல்ல குடும்பத்தையும் பல்கலைக் கழகம் என்றனர் ஆன்ரோர்.

வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடப்போகும் ஒவ்வொருவருக்கும் இல்லமே பாசறையாகும். அடுத்த நாட் போருக்கான திட்டங்கள் தீட்டப்படும் இடம் அதுதான். அதற்கான மனத் துணிவையும் ஆற்றலையும் உருவாக்கும் இடமும் அந்தப் பாசறை தான்; அடுத்த நாட் போருக்கான கருவிகளைத் தயாரிக்கும் இடமும் அந்தப் பாசறையேதான்.

நாடாளும் அமைச்சருக்குச் செயலாளர்களும் அதிகாரிகளும் சேவகர்களும் உதவுவதைப் போல உன் இல்லத்திலே உன் பெற்ரேரும் சகோதர சகோதரிகளும் உனக்கு உதவுகின்றனர்.

அன்னை பெற்ற பாசத்தால் உன்னைப் பேணி வளர்க்கின்ருள். தந்தையோ கல்வியும் ஒழுக்கமும் கற்க உதவுகிருர். உடன்பிறந்தவர்களோ பாசத்தால் உனக்கு உற்றுழி உதவுகின்றனர். இத்துணைப் பேர்களின் நல்லியல்புகளும் ஒன்ருகக் கூடியே நல்ல இல்லத்தை உருவாக்குகிறது. ஆகவே நல்ல இல்லம் என்னும் பெயர் கட்டடச் சிறப்பால் அமைவதன்று; அங்கு வாழ்கின்ற மக்களின் நல்லியல்பால் அமைவதே ஆகும் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

அன்புள்ள மாணவ மணியே!

உன் இல்லத்தின் பெருமை அதன் வடிவத்தில் இல்லை; அதன் தோற்றத்திலும் இல்லை. அந்த இல்லத்தில் வசிக்கின்ற உங்கள் அனைவரின் நடவடிக்கைகள், செயல்கள் ஆகியவற்றின் உயர்வி லேயே அமையும். அவற்றைக் கொண்டே உன் இல்லத்தை நல்ல இல்லம் என்பார்கள்; உன் குடும்பத்தை நல்ல குடும்பம் என்பார்கள்.

ஒருவன் நல்லவன், நல்ல பண்புள்ளவன் என்பதை அவன் இல்லத்தைக் கொண்டே உலகம் கணித்துவிடுகிறது. ஒருவன் தன் குடும்பத்தில் பழகும் விதம், பாசம் காட்டும் தன்மை, மரியாதை காட்டும் மாண்பு ஆகியவற்றைக் கொண்டே உலகம் அவனை நல்லவ னாகக் கருதுகிறது; அவன் இல்லத்தை நல்ல இல்லமெனக் கணிக்கிறது.

## 3. நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்

### தாயும் தந்தையும்

இல்லத்தின் அரசனும் அரசியுமாக இருந்து செங்கோல் செலுத்து பவர்கள் யாவர்? உன் தாயும் தந்தையும் அல்லவா? நீ இந்த ஆண்டு ஒன்பதாம் வகுப்பில் படிக்கின்றாய்; உனக்குப் பதினான்கு வயதிருக்கும். நீ பிறந்ததிலிருந்து உனக்கு முன்னறி தெய்வமாக விளங்குபவர் யார்? தாயும் தந்தையும் அல்லவா? அதனால்தானே நம் முன்னோர், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றனர்.

"காலை எழுந்தவுடன் படிப்பு — பின்னர்க்
கனிவு தரும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு — இதை
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!"

என்று பாடுங்குயில் பாரதியார் பாடியவாறு, நீ காலையில் எழுந்த வுடன் படிக்கின்றாய்; உண்ணுகின்றாய்; பள்ளிக்குச் செல்கின்றாய்; மாலையில் விளையாடுகின்றாய்; மகிழ்ச்சியாகக் காலத்தைக் கழிக் கின்றாய்.

இத்துணை வசதிகளையும் உனக்கு ஆக்கித் தந்தது யார்? தாயும் தந்தையும் அல்லவா? நீ பிறந்தபோது பேருவகை கொண்டவள் தாய்; பாலூட்டிச் சீராட்டிப் பக்குவமாக வளர்த்தவள் தாய்; தான் விரும்பியவற்றையும் உண்ணாமல் உனக்காகப் பத்தியம் இருந்து உன்னைப் பாதுகாத்தவள் தாய். காலம் அறிந்து கருத்துடன் உணவிட்டு வளர்த்தவள் உன் தாய்; நின் பிஞ்சு முகம் வாடாமல் உன்

ஊக் கொஞ்சி வளர்த்தவள் தாய்; நீ பிறந்தது முதல் இன்று வரை உன்னைப் பேணி வளர்க்கின்றவளும் தாய்.

உன் தாய் உனக்காக மருந்து உண்டிருக்கிறாள்; உனக்காகப் பட்டினி இருந்திருக்கிறாள்; உனக்காகப் பத்தியம் காத்திருக்கிறாள்.

உன் தந்தை உனக்காகப் படும்பாடுதான் எத்தனை யெத்தனை? நீ நல்லவனாக வளர வேண்டும் என்பதற்காக எத்துணைக் கட்டுப் பாட்டோடு உன்னை வளர்க்கிறார்; நீ கல்வி கற்பதற்காக எத்துணை பாடுபடுகிறார். அவர் உழைப்புக்கு எல்லையுண்டா?

'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன்' என்பதை உணர்ந் தவர் ஆயிற்றே அவர். நீ பள்ளிக்குச் செல்கிறாய்; உனக்கு நல்ல உடைகள் வேண்டும்; வாங்கிக் கொடுக்கிறார். பாடப் புத்தகங்கள், எழுது கருவிகள் உனக்கு வேண்டும்; வாங்கிக் கொடுக்கிறார். பள்ளிக்கூடத்திற்கு நீ பேருந்தில்தான் சென்றுவர வேண்டும்; செல வுக்குக் காசு கொடுக்கிறார். நீ பாடத்தில் பின்தங்கியிருக்கிறாய்; உனக்குத் தனிப் பயிற்சிக் கொடுப்பதற்காக ஆசிரியருக்கு நன் கொடை தருகிறார். இப்படி எத்தனையெத்தனை செலவுகள் உன்னால் அவருக்கு ஏற்படுகின்றன; எண்ணிப் பார்!

உடலால் உழைத்து உள்ளத்தால் நேசிக்கும் உன் பெற்றோருக்கு நீ செய்யும் கைம்மாறுதான் என்ன?

உன் முதற்கடமை தாயிடத்தும் தந்தையிடத்தும் அன்பு காட்டுவது; தாய்க்கும் தந்தைக்கும் கீழ்ப்படிந்து நடப்பது.

பெற்றோர்க்கு மதிப்பும் மரியாதையும் தேடிக் கொடுப்பது பிள்ளை களின் கடமையாகும். பெற்றவர்கள் அழகற்றவர்களாக இருக்கலாம்; கல்வி கற்காதவர்களாக இருக்கலாம்; நாகரிகமற்றவர்களாகத் தோன்றலாம். இத்தகைய குறைபாடுகள் எத்தனை இருந்தால்தான் என்ன? அவர்கள் நம்மைப் பெற்றவர்கள்; வளர்த்தவர்கள்; இன்றும் நம்மை அன்போடு வளர்க்கின்றவர்கள். நம் உடல், உணவு' உடை, கல்வி ஆகிய அனைத்தும் அவர்கள் இட்ட பிச்சை என்பதை மறந்துவிடக் கூடாது.

நாம் நகரப் பள்ளியில் படிக்கிறோம்; பலரோடும் பழகுகின்றோம். நம் ஆசிரியர் நமக்குத் தூய்மையைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்; நாகரிகத்தைப் பற்றி நன்முறையில் போதிக்கிறார். ஆதலால் நம் நடை உடை பாவனையில் கொஞ்சம் நாகரிகம் மின்னி ஒளி வீசலாம்.

நம்முடைய பெற்றோர் சிற்றூர்களில் வாழலாம்; வயலில் வேலை செய்பவர்களாகவிருக்கலாம்; ஆலைத் தொழிலாளியாக இருக்கலாம். அவர்கள் நம்மைப்போல நாகரிகம் உடையவர்களாய் விளங்க முடியாது. ஏனென்றால் அவர்கள் செய்யும் தொழில் அத்தகையது.

நம் பெற்ருேர்களாகிய அவர்கள், கடின உழைப்பு உழைப்பதால் தான் நாம் நாகரிக வாழ்வு நடத்த முடிகிறது. கடின உழைப்பைக் கொண்டிருப்பதால்தான் அவர்களால் நம்மைப்போல நாகரிகமாக வாழ முடிவதில்லை. அதற்குக் காரணமும் நாம் தானே!

ஒரு கதை உங்களுக்குத் தெரியுமா? கதையன்று; உண்மை நிகழ்ச்சியேதான். நான்தான் அதைக் கதையாக உங்களுக்குச் சொல்கிறேன். பெயர்களெல்லாம் கற்பனை; நிகழ்ச்சி மட்டுமே உண்மை.

**சிவசாமியும் கந்தசாமியும்**

என்னுடன் பயின்ற ஒரு மாணவர் பெயர் கந்தசாமி. நான் சிற்றூரில் பிறந்தவன்; அதனுல் நகரத்தில் வந்து விடுதியில் தங்கிப் படித்தேன். கந்தசாமியும் விடுதியில் என்னுடன்தான் தங்கிப் படித்தான். எனக்கு அவன் மிகவும் வேண்டியவன்; நண்பனுகப் பழகியவன்.

அவன் தாய் ஞாயிற்றுக்கிழமைதோறும் விடுதிக்கு வருவாள்; தன்னுடைய சுருக்குப் பையிலிருந்து ஏதோ கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொடுப்பாள்; போய்விடுவாள். இவனும் யாரோ வேலைக் காரி பணத்தைக் கொடுத்துவிட்டுச் செல்வது போலவும் அதனைத் தான் வாங்கிக் கொள்வது போலவும் நடிப்பான்; நடப்பான்.

காரணம் என்ன? அந்தத் தாயின் அழுக்கு நிறைந்த உடை; புழுதி படிந்த மேனி; எண்ணெய் காணுத தலை—இவைதாம் அதற்குக் காரணம்.

அந்தத் தாய்க்கு என்ன தொழில் தெரியுமா? தோட்டக் காடு களில் சென்று புல்லினைச் செதுக்குவாள்; கட்டாகக் கட்டுவாள்; நகரத்திற்குக் கொண்டுவந்து விற்பாள்; அப்படி விற்றதால் கிடைத்த காசுகளைத் தாம் ஞாயிறுதோறும் தன் மகனுக்குக் கொண்டுவந்து கொடுக்கிருள். அவள் உழைப்பின் பயனைத்தான் கந்தசாமி, விடுதியிலிருந்து அனுபவித்துக் கொண்டிருக்கிருன். ஆயினும் அந்தத் தெய்வத்தைத் தன் தாயென்று கூறக் கந்தசாமியின் மனம் கூசுகிறது.

என்னுடன் இன்னெரு மாணவனும் படித்தான்; அவனும் எனக்கு நண்பன்தான். அவன் பெயர் சிவசாமி. அவன் பணக் காரனும் அல்லன்; ஏழையும் அல்லன். அவனுக்கு மாதந்தோறும் ஊரிலிருந்து பணம் வரும். அதை வாங்கி விடுதிக்குக் கட்டுவான்; செலவுக்கும் வைத்துக் கொள்வான்.

சிவசாமி கடிதம் எழுதுகிருன் என்ருல் அன்று ஞாயிற்றுக்கிழமை யாகத்தான் இருக்கும். அப்படியொரு ஒழுங்குமுறை அவனிடம்

உண்டு. அந்தக் கடிதமும் அவன் தந்தைக்குத்தான் எழுதப் பட்டிருக்கும்; அவன் தாயைப் பற்றி விசாரித்து எழுதியிருப்பான். அந்தக் கடிதத்தைப் படித்த தாயும் தந்தையும் எத்தனை மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதை அவர்கள் எழுதும் பதில் கடிதமே விளக்கும்.

ஒரு நாள் இரவு சிவசாமி அவசரம் அவசரமாக என் அறைக்கு ஓடிவந்தான்; "நாளை காலையில் அப்பாவும் அம்மாவும் வருகிறார்கள்; நான் புகைவண்டி நிலையம் போகிறேன்; நீயும் வருகிறாயா?" என்றான். நல்ல நண்பன் ஆயிற்றே! 'சரி' என்றேன்.

அடுத்த நாள் காலையில் நாங்கள் இருவரும் புகைவண்டி நிலையத்தில் காத்திருந்தோம். வண்டி வந்தது.

சிவசாமியின் தந்தையின் கடிதத்தைப் படித்திருக்கிறேன்; அந்தக் கடிதத்தின் வாசகங்களை வைத்து அவரின் உருவத்தைக் கற்பனை செய்திருந்தேன்; அவரின் உருவத்தை அடிப்படையாக வைத்துச் சிவசாமியின் தாயின் தோற்றத்தையும் கற்பனை செய் திருந்தேன்.

சிவசாமியின் தாயும் தந்தையும் வண்டியிலிருந்து இறங்கினார்கள். சிவசாமி ஓடிச் சென்று அவர்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அவன் குழந்தையைப்போல் கொஞ்சினானா? அழுதானா? என்பதைக் கண்டுகொள்ள முடியவில்லை. அந்தத் தாயோ மகனைத் தடவிக் கொடுத்து மகிழ்ந்தாள். இதில்என்ன வியப்புத் தெரியுமா?

கந்தசாமியின் தாய் புல்லுக் கட்டுச் சுமந்து விற்பவள்; அந்தத் தாயின் தோற்றம் எவ்வளவோமேல். இந்தத் தாயிடம் பாசம், பரிவு, அன்பு ஆகியவற்றைத் தவிர வேறு எந்த நாகரிகமும் இல்லை. ஆயினும் என்ன? சிவசாமியிடம், பாசம் இருந்தது; பண்பு இருந்தது; பரிவு இருத்தது.

என்னுடைய நண்பர்கள்தாம் கந்தசாமியும் சிவசாமியும். கந்த சாமி நன்றி மறந்தவன்; இரண்டு எழுத்துகளைக் கற்றதாலேயே பெற்றவரை மதிக்க மறந்தவன்.

சிவசாமியோ நன்றிமறவாதவன்; தன் கல்விக் கண்ணைத் திறப் பவர்கள் பெற்றோர்களே என்ற நன்றி உணர்வோடு அவர்களை மதிக்கக் கற்றவன். ஆகவே நீங்கள் கந்தசாமியைப்போல் நன்றி மறவாதீர்கள்; பெற்றோரிடத்தும் பிறரிடத்தும் மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள். அந்த மரியாதை வார்த்தையில் வெளிப்படுதல் வேண்டும்; செயலில் தெரிதல் வேண்டும்.

நாம் படித்திருக்கலாம்; நம் பெற்றோர்கள் படியாதவர்களாக இருக்கலாம். ஆயினும் நாம், "வாருங்கள்" "செல்லுங்கள்" என்

பதைப் போன்ற மரியாதைச் சொற்களையே அவர்களிடம் பயன் படுத்துதல் வேண்டும். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அன் போடு பதில் சொல்லுதல் வேண்டும்.

சில பிள்ளைகள் இருக்கிறார்கள்; காலம் கடந்து வீட்டிற்கு வரு வார்கள்.

"இவ்வளவு நேரம் எங்கே யப்பா! போயிருந்தாய்?" என்பாள் தாய். "எங்கே போனால் உனக்கென்ன?" என்பான் மகன். இவ்வாறு முரட்டுத் தனமாகவும் மூடத்தனமாகவும் பதில் கூறக் கூடாது.

"என்னப்பா இது; படிக்காமல் இப்படி ஊரைச் சுற்றுகிறாய்; உன் அப்பாவுக்குத் தெரிந்தால் கோபிக்க மாட்டாரா?" என்பாள் தாய்.

"இப்போது போலீசுக்காரர் விசாரணை; இந்தப் போலீசுக்காரர் இன்ஸ்பெக்டருக்குச் சொல்லப் போகிறார்." இப்படிக் கேலி பேசுவர் சிலர். இவ்வாறு பெற்றோரிடம் கேலியாகப் பேசுவது பிள்ளைகளின் இழிந்த குணத்தையே காட்டும்.

"தேர்வு நெருங்கி விட்டது; படிப்பதை விட்டுவிட்டுத் திரைப் படம்! திரைப்படம்!! என்று அலைகிறாயே! அது நல்ல பழக்கமன்று." இவ்வாறு தாய் கூறுவாள்.

"அப்படித் தான் போவேன்; நீ ஒன்றும் கேட்க வேண்டிய தில்லை." என்பான் மகன். இவ்வாறு எதிர்த்துப் பேசுவது விலங்கு மனப்பான்மையாகும்.

பெற்றவர்களைக் கேலிபேசுவதோ, அவர்களிடம் முரட்டுத்தன மாகப் பேசுவதோ, அவர்களை எதிர்த்துப் பேசுவதோ தவறாகும்.

நம்மைப் பெற்றவர்கள் கல்லாதவர்களாக இருக்கலாம்; நம் மைப் பெற்றவர்கள் வறியவர்களாக இருக்கலாம். அதற்காக நாம் ஏன் வெட்கப் படவேண்டும்?

நம்முடைய பெற்றோர்கள் கல்லாதவர்களாக இருப்பினும் நாம் கற்க வசதி செய்து கொடுக்கிறார்களே, அதற்காக அவர்கட்கு நன்றி கூறுதல் வேண்டும் நம்முடைய பெற்றவர்கள் வறியவர்களாக இருந்தும் வருந்தி உழைத்துச் சம்பாதித்து நம்மைப் படிக்க வைக் கிறார்களே அதற்காக நாம் காலமெல்லாம் அவர்கட்குச் சேவை செய்யவேண்டும்.

ஒருவர்க்கு அணிகலன் எது? மணியாலும் பொன்னாலும் செய்யப் பட்ட ஆபரணங்கள் சிறந்த அணிகலன்கள் ஆகமாட்டா. சிறந்த அணிகலன் பணிவுடைமையும் இன்சொல்லுமே ஆகும்.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற

என்பது தெய்வப் புலவரின் திருமொழியாகும்.

நாம் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கின்றோம்; நம் பெற்றோர் நமக்கு உணவு, உடை, கல்வி அனைத்தும் கொடுக்கிறார்கள். அவர்கட்கு நாம் என்ன கைம்மாறு செய்தோம். ஒரு கைம்மாறும் செய்ததில்லை; ஆயினும் அவர்கள் நமக்கு எல்லாவுதவிகளையும் செய்கிறார்கள்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

இவ்வாறு கூறுகின்றார் பொய்யாமொழிப் புலவராம் திருவள்ளுவர். ஆம்! நாம் எந்த உதவியும் செய்ததில்லை; ஆயினும் அவர்கள் நமக்கு எல்லாவுதவிகளையும் செய்கிறார்கள். அத்தகைய உதவிக்கு நிலவுலகத்தையும் வானவர் உலகத்தையும் ஈடாகக் கொடுத்தாலும் போதுமோ? போதாது.

கைம்மாறு கருதாது உதவும் பெற்றோர்க்கு நாம் செய்ய வேண்டுவது என்ன? அவர்களிடத்து நாம் அன்பு காட்டுவதுதான். அந்த அன்பு உண்மையானதாக இருத்தல் வேண்டும்; உறுதியானதாக இருத்தல் வேண்டும்.

இறைவன் இயற்கையாகவே பெற்றோரிடத்துப் பிள்ளைகளுக்கு அன்பினை உருவாக்கியிருக்கின்றார். அந்த அன்பினை, அன்பின் ஊற்றாக விளங்கும் தாய் தந்தையர்க்குக் காணிக்கையாக்குதல் வேண்டும்.

## உன் கடமை

பெற்றவருடைய நலன்களைப் பிள்ளைகள் விரும்புதல் வேண்டும்; அவர்களுக்கு எத்தகைய தீங்கும் வாராது பாதுகாத்தல் வேண்டும். அவர்களைத் துன்புறுத்தி அவர்கள் மனம் நோகுமாறு செய்தல் கூடாது.

படிக்கும் காலத்தில் ஒருவன் பெற்றவர்க்குச் செய்யவேண்டுவது என்ன?

முதலில் 'நல்லபிள்ளை' என்ற பெயரைப் பெற்றவர் செவியில் விழச் செய்யவேண்டும். தேவைக்குமேல் வீண்செலவுகளைச் செய்து பெற்றோர்க்குத் துயரத்தை உண்டாக்கக் கூடாது. காலத்தோடு கற்கும் கடமையைச் செய்யவெண்டும்.

படித்துமுடித்த பின் ஒருவன் உத்தியோகம் பார்க்கலாம்; இன்னொருவன் வாணிகம் செய்யலாம்; மற்றவன் விவசாயம் செய்யலாம். எதைச் செய்தாலும் தான் பெறும் ஊதியத்தைப் பெற்றவரிடமே

கொடுத்தல் வேண்டும்; தேவைக்கு அவர்களிடமே கேட்டுப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்,

நீ சம்பாதிக்காத காலத்திலேயே உனக்குத் தேவையானதைச் செய்தவர்கள், நீ சம்பாதித்துக் கொடுக்கும் காலத்தில் உனக்குத் தேவையானதைச் செய்ய மாட்டார்களா? உறுதியாகச் செய்வார்கள்; உண்மையாகச் செய்வார்கள்.

உனக்குத் திருமணம் ஆகிவிட்டது; தனிக் குடித்தனம் நடத்தத் தொடங்கிவிட்டாய். அப்போது உன் கடமை என்ன? அப்போதும் பெற்றோரை ஒதுக்கி வையாதே; அவர் தம் உரிமையைப் பறியாதே. அவர்களிடம் அன்பு காட்டு; இயன்ற பொருளுதவியைச் செய். அஃது உன் கடமை. தள்ளாத பருவத்தில் அவர்களைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை; அவர்கள் பிணியுற்ற காலத்தில் பார்க்க வேண்டியதும் உன் கடமை.

உடன் பிறந்தார்

அறிவறிந்த மக்கட் பேற்றின் மாண்பினை உணர்ந்தது நம் நாடு. 'நாமிருவர் நமக்கிருவர்' என்பது நாட்டின் எதிர்கால நல்வாழ்வை நாடும் திட்டமாகும். ஆயினும் அத்திட்டத்திற்கு முன்னரே பெற்றெடுத்த பிள்ளைகள் குடும்பத்தில் பலராக இருக்கலாம்.

ஒருவனுக்குத் தமையன் தமக்கையர் இருக்கலாம்; தம்பி தங்கையர் இருக்கலாம். ஆயினும் அனைவரும் ஒருதாய் மக்களே. அனைவரும் ஒரே வீட்டில் வசிப்பவர்கள் ; ஒருவரோடு ஒருவர் நேசித்து வாழ வேண்டியவர்கள்.

நம் நாட்டில் ஐந்து குழந்தைகள், ஆறு குழந்தைகள் உள்ள குடும்பங்கள் ஏராளம்; செல்வர்கள் வீட்டைக் காட்டிலும் வறியவர்கள் வீட்டில்தான் குழந்தைகள் அதிகம். ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகளிற் சிலர் வலுவுள்ளவர்களாக இருக்கலாம் ; சிலர் வலு வற்றவர்களாக இருக்கலாம். சிலர் நன்றாகப் படிக்கலாம் ; சிலர் படிப்பில் கொஞ்சம் மந்தமாக இருக்கலாம். சிலர் நிறைய உண்ணுவார்கள்; சிலர் குறைவாகவே உண்ணுவார்கள். சிலர் சிறந்த அழகு படைத்தவர்களாக இருக்கலாம் ; சிலர் அழகற்றவர்களாகத் தோன்றலாம். ஒரே குடும்பம்தான் என்றாலும் இத்தனை வேறுபாடுகளும் இருப்பது இயற்கைதானே.

ஆயினும் அனைவரையும் ஒன்றாகப் பிணைத்து வைத்திருப்பது சகோதர பாசம் ; இரத்தத்தின் இரத்தத் தொடர்பு ; உடன் பிறப்பென்னும் உணர்வு; ஒரு தாய் மக்கள் நாம் என்னும் பந்தம். அந்தப் பந்தமும் பாசமும் குடும்பத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

**உணவும் உடையும்**

ஒரு குடும்பம்; குழந்தைகள் அறுவர்; பெற்றவர் இருவர்; ஆக எட்டுப் பேர் ஒரு குடும்பத்தில் இருக்கிறார்கள். ஒரு குழந்தைக்கு அவரைக்காய் பிடிக்கும்; இன்னொரு குழந்தைக்கு உருளைக்கிழங்கு தான் பிடிக்கும்; மற்றொரு குழந்தைக்கு முட்டைதான் வேண்டும்; வேறொரு குழந்தைக்குக் கீரை என்றால் உயிர். இவ்வாறு ஒரே குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை விரும்பிச் சாப்பிடலாம்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவைத் தயாரித்துக் கொடுக்க அன்னையால் முடியுமா? முடியாது. ஒரு நாள் அண்ணனுக்குப் பிடித்தமான உணவு சமைக்கப்படலாம்; உடனே தம்பி, தாயிடம் பிணங்கிக் கொள்வது முறையாகாது. பிறிதொரு நாள் தம்பிக்குப் பிடித்தமான உணவு தயாரிக்கப்படலாம்; உடனே அண்ணன் அன்னையிடம் கோபம் காட்டக்கூடாது.

'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை' என்பார்கள். பிள்ளைகள் மீது மிகப் பெரும் பாசங்கொண்டவள் தாய்; பிள்ளைகளுக்கு நல்ல உணவைச் சமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற ஆசையுடையவள் தாய். ஆயினும் பொருளாதாரம்—தன் ஆற்றலின் அளவு இரண்டையும் கணக்கிட்டுத்தானே உணவு தயாரிக்க முடியும்.

ஆகவே குழந்தைகள் தங்களுக்குள் போட்டி மனப்பான்மையும் பொருமையுணர்வும் இன்றி உள்ளதை உண்டு மகிழும் நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். உடன்பிறந்தவர்கள் ஒருவரோடொருவர் அன்புடன் பழகவேண்டும்; தன்னினும் மூத்தார்க்கு மரியாதை காட்டுதல் வேண்டும்; பணிந்து நடத்தல் வேண்டும். மூத்தவர்கள் இளையவர்கட்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும்; இளையவர்கள் மூத்தவர்களைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு நல்ல ஆடைகளை உடுத்திப் பார்ப்பதிலும் சிறந்த அணிகலன்களை அணிந்து அழகு பார்ப்பதிலும் பெற்றவர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள்.

ஒரு தாய் மக்கள்தாம் என்றாலும் ஒரு பிள்ளைக்கு ஒருவகையான ஆடை பிடிக்கும்; இன்னொரு பிள்ளைக்கு வேறொரு வகையான ஆடை தான் பிடிக்கும்; ஒன்று விலை உயர்ந்ததாக இருக்கலாம்; மற்றொன்று விலை குறைந்ததாக இருக்கலாம். விலையின் ஏற்றத்தாழ்வை எண்ணிப் பிள்ளைகள் தங்களுக்குள் பொருமை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உடன் பிறந்தவர்களுக்குள் அன்பு பெருக்கெடுக்க வேண்டும். பேச்சிலும் நடத்தையிலும் மரியாதை வளரவேண்டும். ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ளும் உயர்ந்த மனம் உருவாக வேண்டும். பிள்ளைகள் அனைவரும் பெற்றவர்களுக்கு உதவியாக இருத்தல் வேண்டும். இளையவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய மூத்தவர்கள் உதவியாக இருத்தல் வேண்டும். பெண் குழந்தைகள் வீட்டு வேலைகளைச் செய்தும் ஆண் [மக்கள் வெளி வேலைகளைச் செய்தும் பெற்றவர்க்கு உற்ற துணையாக இருத்தல் வேண்டும்.

தாயின் பணிகளைத் தமக்கையர் செய்யலாம்; தந்தையின் வேலை களைத் தமையன்மார் செய்யலாம்.

உடன் பிறந்தாரிடம் பாசம் காட்டு ; அவர்கட்கு உற்றுழி உதவி செய். உடன் பிறந்தாரின் உயர்வு கண்டு பொறாமை கொள்ளாதே; அதற்காகப் பெருமைப்படு; அவர்களைப் பாராட்டு. உடன் பிறந் தாருக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்.

உடன் பிறந்தாரின் துன்பங்கண்டவிடத்துத் துயரப்படுதலும் இன்பங் கண்டவிடத்து மகிழ்தலும் பாசத்தின் விளைவு ஆகும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து நடைமுறையில் கைக் கொண்டு இன்பவாழ்வு வாழக் கற்றுக்கொள்.

பிள்ளைகளாகிய நீங்கள் பெற்றவர்களிடம் அன்பையும் நன்றி யையும் காட்டக் கடமைப்பட்டவர்கள் ஆவீர்கள். அந்த அன்பையும் நன்றியையும் காட்டுவது எவ்வாறு?

கூரைமேல் அமர்ந்து கொண்டு கூக்குரலிட்டுத் தெரிவிக்கலாமா? அஃது அறிவற்ற செயல் அல்லவா? நம்மீது அன்பு பொழிபவர்க்குப் பதிலாக அவர்களிடம் அன்பு செலுத்துவதுதான் நாம் செய்யும் உதவி யாகும். நமக்குப் பேருதவி செய்வோர்க்கு நம்மால் இயன்ற சிறு உதவியையேனும் செய்வதுதான் நாம் காட்டும் நன்றியாகும்.

ஆகவே, மாணவர்களே!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
தந்தை தாய்ப் பேண்.
நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்.

இந்த நல்ல மொழிகளை நாளும் நினைவிற் கொள்வீர்களாக!

## 5. தாய் சொல்லைத் தட்டாதே

அயோத்தி மன்னன் தசரதன்; தசரதனின் மூத்தமகன் இராமன். இராமனுக்கு நாளை முடிசூட்டு விழா என அறிவிக்கப்பட்டுவிட்டது. நகரமே விழாக்கோலம் கொண்டிருக்கிறது.

இராமனின் சிற்றன்னை கைகேயி ; அவள் இராமனை அழைத்து வரச் சொன்னாள் ; இராமனும் வந்தான் ; தாயை வணங்கினான்.

"இராமா ! உன் தந்தையின் விருப்பத்தை இப்போது உன்னிடம் சொல்லப் போகிறேன் ; அதனைக் கேட்டு அதன்படி நடப்பாய் எனக் கருதுகின்றேன்." என்றாள் கைகேயி.

" நல்லது தாயே!" என்றான் இராமன்.

" நீ பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும். உன் தம்பி பரதனே இந்த நாட்டை ஆளவேண்டும். இதுவே உன் தந்தையின் விருப்பம். உடனடியாக நிறைவேற்று." என்றாள் கைகேயி.

" தாயே! தந்தையே கட்டளையிடவேண்டும் என்பதில்லை; தாங்கள் கட்டளையிட்டாலே போதும்; இதோ புறப்படுகிறேன்." என்று சொல்லிக் காடு நோக்கி நடந்தான் இராமன்.

இது கதைதான் என்று நீ கருதலாம்; ஆயினும் இஃது எதைக் காட்டுகிறது? பெற்றோரிடத்து இராமன் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது அல்லவா? ஆகவே நாமும் பெற்றவர்கள் நமக்கு நல்லனவற்றையே நாடுவார்கள் ; நல்லனவற்றையே செய்வார்கள் என்ற நம்பிக்கை கொள்ளவேண்டும்.

இந்தக் கதையை ஆசிரியர் ஒரு நாள் வகுப்பு மாணவர்களுக்குச் சொன்னார். கதையைக் கேட்ட மணியும் மல்லிகாவும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். காரணம் என்ன தெரியுமா?

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களாகிய மணியும் மல்லிகாவும் படிப்பிலே கவனம் உடையவர்கள்; பண்போடு பழகுவதில் நாட்டம் கொண்டவர்கள்.

மணி, அவன் தாயிடமும் தந்தையிடமும் காட்டும் அன்பிற்கு எல்லையேது? அவர்களும் மணியின்மீது அன்பைச் சொரிகிறார்கள். தன் பெற்றோர்கள் தனக்கு நல்லதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை மணிக்கு உண்டு. மணிக்கு மட்டுமா அந்த உறுதி? அவன் தங்கை மல்லிகாவுக்கும் அந்த உறுதி உண்டு. ஆகவே மணி, மல்லிகா இருவருமே தாய் சொல்லை மீறுவதும் இல்லை; தந்தை சொல்லைத் தட்டுவதும் இல்லை.

பெற்றோர்களிடத்துப் பிள்ளைகளுக்கு அவ்வளவு நம்பிக்கை. மணியும் மல்லிகாவும் அத்துணை நம்பிக்கை உடையவர்கள். அதனால் இராமனின் கதையைச் சொல்லக் கேட்டதும் மணியும் மல்லிகாவும் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

மாணவர்களே! நீங்களும் உங்கள் பெற்றோரிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள்; தாய் சொல்லைத் தட்டாதீர்கள்; தந்தையின் வார்த்தையை மீறாதீர்கள். உங்கள் பெற்றவர்கள் உங்களுக்கு நல்லதையே நினைப்பர்; நல்லதையே சொல்வர்; நல்லதையே செய்வர்.

## செய்முறைப் பயிற்சி

1. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
2. மனிதப் பண்பையும் விலங்கு மனப்பான்மையையும் ஓர் எடுத்துக்காட்டின் வழியே விளக்குக.
3. மனிதன் அறிவில் வளர்ச்சி அடைகிறான்; மற்றவை அறிவிலே வளர்ச்சியடைவதில்லை என்பதை விளக்குக.
4. ஆதி மனிதன் வாழத் தொடங்கிய வரலாற்றை விவரி.
5. 'நல்ல இல்லம்' என்பது கட்டட அமைப்பில் இல்லை என்பதை விளக்குக.
6. ஔவையார் நல்ல நிலம் என எதனைக் குறிப்பிடுகின்றார்?
7. நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்பதை விளக்குக.
8. உன் பெற்றோர்கள் உனக்குப் புரியும் உதவிகள் யாவை? வரிசைப் படுத்துக.
9. உன் பெற்றோர் மட்டில் உன் கடமைகள் யாவை?
10. சிவசாமி, கந்தசாமி இருவரின் இயல்புகளை விவரி. நீ யாரைப் பின்பற்றுகிறாய்?
11. பெற்றவரிடம் தவறாக நடந்துகொள்ளும் சிலரைப்பற்றி ஆசிரியர் கூறுவது யாது?
12. நீ உன் தாயிடமோ தந்தையிடமோ பணிவின்றி நடந்ததுண்டா? ஏன்? அது சரியா?
13. மாணவப் பருவத்தில் உன் கடமைகள் யாவை?
14. இராமனின் கதை விளக்கும் நீதி யாது?
15. உனக்குத் தெரியுமா?
    (1) காந்தி தன் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதி—அவர் அவற்றை நிறைவேற்றிய முறை.
    (2) சிரவணன் தன் பெற்றோர்க்குச் செய்த தொண்டுகள்.
16. நீ உன்னைப் பெற்றவர்க்குச் செய்யும் உதவிகள் யாவை?

### நீ கற்றுக்கொள்ளவேண்டிய நன்னெறி

1. தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை; தாயைப் போற்று.
2. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை; தந்தைசொல் கேள்.
3. உடன்பிறந்தாரிடம் உறவு காட்டிப் பழகு; பாசம் பத்தும் செய்யும்.
4. உள்ளத்து உறுதிகொள்; உனக்கு வல்லமை சேர்க்கும்.
5. அன்பு பாராட்டு; அனைத்துயிரும் நட்பாகும்.
6. என்றும் பணி செய்; ஏற்றமுறு வாழ்வு காண்பாய்.
7. மரியாதை செய்; மரியாதை பெறுவாய்.
8. நீ பணிவோடு வாழ்ந்தால் உன்னைப் பலரும் பணிவர்.
9. நன்றி மறவேல்; நாடு உன்னை மறவாது.
10. உண்மை பேசு; அஃது உன்னை உயர்த்தும்.

பொன்மொழிகள் பத்தையும் நீ போற்றியே வாழ்ந்திடின்
மன்னுயிர் அனைத்தும் உன்னை வாழ்த்தியே வரவேற்கும்.

# இரண்டு

# பழகுதற்குரியாரும் பண்புமிகு நண்பரும்

## 1. பழகுதற்குரியார்

**போராடும் உலகத்தில்......**

மனிதன் தனித்து வாழ்வதில்லை. பலரோடும் கூடி வாழ்கிறன். தாய் தந்தையோடு வாழ்கிறன்; மனைவி மக்களோடு வாழ்கிறன்; அண்ணன் தம்பியோடு வாழ்கிறன்; அக்கை தங்கையோடு வாழ்கிறன். இவ்வாறு ஒரு குடும்பமாக ஓரிடத்தில் கூடி வாழ்கிறன்.

ஒரு குடும்பம் பல குடும்பங்கள் ஆகின்றன; பல குடும்பங்கள் ஒரு தெருவாக அமைகின்றது; பல தெருக்கள் ஒரு சிற்றூர் ஆகின்றது. சிற்றூர் பேரூர் ஆக மாறுகின்றது. இவ்வாறு சமுதாயம் வளர்ச்சி பெற்று வருகின்றது.

மிகப் பழங்காலத்தில் மனிதன் தனித்தே வாழ்ந்தான். அவன் தன்னைக் காத்துக்கொள்ள மட்டுமே போராடினன். அது சிறு போராட்டமே. இன்றே மனிதன் தனித்து வாழ முடியாது; அவனுக்கென்று ஒரு குடும்பம்; அவனைச் சார்ந்து வாழும் பல்வேறு குடும்பங்கள்; சிற்றூர் — பேரூர் — நாடு — உலகம் என்று அவன் தொடர்பு விரிவடைகின்றது.

ஆகவே மனிதன் வாழ்க்கையை நடத்துவதற்கு இன்று பெரும் போராட்டமே நடத்தவேண்டியிருக்கிறது. வாழ்க்கையே ஒரு பெரும் போர்க்களம்; அதில் ஈடுபடும் மனிதனின் திறமையைப் பொறுத்தே வெற்றி தோல்விகளை நிர்ணயிக்க முடிகிறது.

உலகில் வாழும் ஒவ்வொருவரும் பலருடைய உதவிகளையும் பெற்றே வாழ முடிகிறது. நீயே எண்ணிப் பார்! யார் யாருடைய உதவி உனக்குத் தேவைப்படுகிறது? பிறருடைய உதவியின்றி உன்னல் வாழ முடியுமா? எண்ணிப் பார்!

உணவைச் சமைத்து உனக்குப் பரிமாறுவது யார்? உன் தாய். பள்ளிக்குச் செல்ல-பாடநூல்கள் வாங்க உனக்குப் பணம் கொடுப்பது யார்? உன் தந்தை. அழுக்கு ஆடையை வெண்ணிற ஆடையாக்கி உனக்கு அளிப்பது யார்? வேலைக்காரி.

நீ நாளும் அருந்தி மகிழும் சுவையான பாலினைக் கொண்டுவந்து கொடுப்பது யார்? பால்காரர். உன் பறட்டைத் தலை முடியைப் பக்குவமாக அழகுபடுத்தித் தருவது யார்? முடிவெட்டும் தொழிலாளி. நீ ஓடி விளையாடி மகிழ எண்ணும்போதெல்லாம் உடன் வந்து ஆடுவார் யார்? உன் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் உன் வயது இளைஞர்கள்.

இவர்கள் அனைவருமே நாம் பழகுதற்கு உரியவர்கள் ஆவார்கள். இவர் தம் பழக்கம் நம் தேவைகளின் அல்லது அவர்கள் தேவைகளின் அடிப்படையிலேயே உருவாகின்றது.

நம் பக்கத்து வீடுகளில் வாழ்பவர்கள் நாளும் நம்மால் பார்க்கப் படுபவர்கள்; நம்மை நாளும் பார்ப்பவர்கள். நம்மொடு பள்ளியில் அல்லது நம் வகுப்பிலேயே படிக்கும் மாணவர்களும் நம்மோடு பழகுபவர்களே; நாம் பழகுவதற்கு உரியவர்களே!

நாமும் பழகுவோம்

நாம் பழகுதற்கு உரியவர்களோடு பண்போடு பழகுதல் வேண்டும். இன்முகம் காட்டி இனிய சொற்களையே அவர்களிடம் பேசவேண்டும். அவர்கட்குத் தேவைப்படும் சிறு சிறு உதவிகளைச் செய்தல் வேண்டும்.

நாம் பிறரிடம் எதை எதிர்பார்க்கிறோமோ அதையே நாம் அவர்கட்குச் செய்தல் வேண்டும். நம்மோடு பழகுபவர்களின் துன்பத்தில் நாமும் பங்கு கொள்ள வேண்டும்; அவர் தம் துயரத்தைத் துடைத்தல் வேண்டும்; அவர் தம் இன்பம் கண்டு மகிழவேண்டும்.

அடக்கமும் பொறுமையும் விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவமும் அனைவர்க்கும் வேண்டும்.

வீதியில் தண்ணீர்க் குழாய் இருக்கிறது; அது நகராட்சி மன்றத்தினரால் அமைக்கப்பட்டது. வீதியிலுள்ளார் அனைவர்க்கும் அதுதான் குடிநீர்க் குழாய். குறித்த நேரத்தில்தான் அக்குழாயில் தண்ணீர் வரும். வீதியில் வாழும் மக்கள் என்ன செய்வார்கள்? தண்ணீர் பிடிக்க ஒருவரையொருவர் முந்துவார்கள். முந்துவதில் ஒருவரோடொருவர் போராட்டமே நடத்தத் தொடங்கிவிடுவர். வாய்ச்சண்டையாகத் தொடங்கிய அது கைச்சண்டையாக மாறுவதும் உண்டு. இருவர் தொடங்கிய போர், தெருப் போராக—ஊர்ப் போராக மாறுவதும் உண்டு. இத்தகைய நிலை ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும்.

அனைவருக்கும் தண்ணீர் கிடைக்கும்; கிடைக்கும் தண்ணீரை ஆளுக்குக் கொஞ்சம் பங்கிட்டுக்கொள்ளலாம். தண்ணீர் பிடிப்பதில் முந்தினால் என்ன? பிந்தினால் என்ன? என்ற உணர்வை நாமும் வளர்த்துக்கொள்ள வேண்டும்; அது பிறர்க்கும் உண்டாக வேண்டும்.

பக்கத்திலே இருந்து பழகுபவர் தொடர்பு ஒரு நாளோடு முடிவ தில்லையே! அடுத்தடுத்துத் தேவைப்படும் ஒன்றுயிற்றே!

நீ யாருடன் பழகுவாய்?

நீ உன் வயதொத்த இளைஞர்களோடு விளையாடுவதற்காகப் பழகு வாய்; உன்னுடன் படிக்கும் மாணவர்களோடு படிப்பதற்காகப் பழகு வாய். இப்படிப் பழகுபவர்கள் பலர் இருப்பார்கள். உன்னுடன் விளையாடி அதனல் பழக்கப்பட்டவர்கள் உன் வீட்டைச் சுற்றியும் இருக்கலாம்; கொஞ்சம் தூரத்திலும் இருக்கலாம்.

உன் வகுப்பில் படிப்பதால் உன்னுடன் பழகுபவர்கள் உன் வீட்டைச் சுற்றியும் இருக்கலாம்; கொஞ்சம் தூரத்திலும் இருக்கலாம்.

உன் வீட்டிற்கு அருகே உள்ள சிறுவர்களின் பழக்கம் உனக்குத் தேவை. அவர்கள் உன் விளையாட்டுக்கும் வேடிக்கைக்கும் உதவு வார்கள். அவர்கள் மிகப் பலராகவும் இருக்கலாம்.

உன் வகுப்பில் உன்னுடன் படிக்கும் மாணவர்களின் பழக்கமும் உனக்குத் தேவை. அவர்கள் உன் படிப்புக்கு உதவுவார்கள். அவர் களும் மிகப் பலராக இருக்கலாம்.

ஆயினும் அவர்களைத் தவிர உற்றுழி உதவும் நண்பர்கள் உனக்குத் தேவை. உன் நண்பனே உன் வாழ்க்கைக்கு வழிகாட்டி ஆவான். அந்த நண்பன் யார்?

## 2. பண்புமிகு நண்பர்

நட்பு என்பதன் பொருள் யாது? நட்டல் என்பதே அதன் பொருளாகும். நட்டல்—அஃதாவது ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளுதல். தன்னுடன் தொடர்பு கொண்டவருக்காக உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் இழக்கத் துணியும் உயர்ந்த தொடர்பே நட்பு எனப்படும். நண்பர் என்னும் சொல் 'நாம் அடிக்கடி தொடர்பு கொள்பவர்' என்னும் பொருள் தருவதாகும்; அச்சொல் அன்பு செலுத்துபவர் என்னும் பொருளைத் தரும்.

நட்பு என்பது வெறும் பேச்சுப் பழக்கத்தினல் உண்டாவதன்று; அஃது உள்ளத்திலேயிருந்து உயிரோடு பிணைந்து தோன்றுவ தாகும்; அஃது உடலிலிருந்து உயிர் நீங்கும் வரை தொடர்வது; இறுதி வரை இன்பத்தையே நல்குவது. ஆதலால் ஒருவருடன் நட்புக்கொள்வதன் முன்னர் நன்ருகச் சிந்தித்து ஆராய்ந்த பின்னரே நட்புக் கொள்ளல்வேண்டும். ஏனெனில் 'மனிதன் தன் நண்பர் களின் மூலம் அறியப்படுவான்' என்பது ஒரு முதுமொழியாகும்.

ஒருவனை நாம் நண்பனாக ஏற்றுக்கொள்ளுமுன் அவன் நல்லவனா? நல்ல உள்ளம் படைத்தவனா? இன்சொல் பேசும் இயல்பினனா? இனிய சொல் ஆற்றும் இயல்பினனா? என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிந்த பின்னரே நட்புக் கொள்ள வேண்டும். சிரித்துப் பேசுகிறான்; சேர்ந்து விளையாடுகிறான்; தின்பண்டம் தருகிறான்; அடிக்கடித் தேடி வருகிறான்; செல்வந்தர் மகன்; தேவையானதைப் பெறலாம் என்ற எண்ணத்தோடு ஒருவரோடு நட்பு கொள்ளுதல் கூடாது. உள்ளத்தால் ஒன்றுபட்டவனா? உயிரினும் மேலானவனா என்பதைக் கருதியே நட்புக் கொள்ளவேண்டும். இதனைக் கருதியே திருவள்ளுவர்

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

என்று தெளிவு படுத்தியுள்ளார்.

நம் தமிழ் இலக்கியங்களில் நல்லவர் நட்பின் பெருமை பற்றியும் தீயவர் நட்பின் சிறுமை பற்றியும் கூறப்படுகின்றன.

## நல்லவர் நட்பு

வளர்பிறை ஒவ்வொரு நாளும் வளர்வதைப்போல நல்லவர் நட்பும் ஒவ்வொரு நாளும் வளரும். கரும்பை நுனியிலிருந்து கடித்துச் சுவைக்கத் தொடங்கின், முதலிற் சுவையிற் குறைந்தும் பின்னர்ச் சுவை மிகுந்தும் வருவதைப் போன்று நாளாக நாளாக நல்லவர் நட்பு இன்பத்தைப் பெருக்கும். படிக்கப் படிக்கச் சுவை தரும் பயனுடைய நூல் நயம்போலப் பழகப் பழக பண்புடையாளர் நட்பும் இன்பந்தரும்.

"துணி ஒன்றிலுள்ள நிறம் பொருந்திய நூல்கள் பல நாட்கள் அழியாமல் நின்று எவ்வாறு அத்துணிக்குப் பயன்படுகின்றதோ அதைப் போலவே நல்ல நண்பர்கள் தங்கள் நண்பர்களுக்குப் பயன்படுவர்." எனப் பாரதம் நல்ல நண்பர்கள் இயல்பினைக் கூறுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்கள் நல்லனவற்றைச் செய்வதற்கு நம்மை ஊக்குவிப்பர்; நம்மிடம் தீயனவற்றைக் காணின் சீறியெழுவர்; நல்லனவற்றைச் செய்யத் தூண்டுவர்.

## தீயவர் நட்பு

தம் தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்காகச் சிலர் நம்மோடு நட்புக் கொள்வர்; மிகவும் பேரன்புடையவர்கள் போல நடிப்பர்; நண்பர்களுக்காகத் தியாகம் செய்யவும் தயாராக இருப்பதுபோலத் தேனொழுகப் பேசுவர். அவர்கள் வஞ்சக எண்ணம் படைத்தவர்கள்; தீயைக் காட்டினும் அஞ்சத் தக்கவர்கள்.

கரும்பை அடியிலிருந்து கடித்துச் சுவைத்தால் முதலில் மிக்க சுவை தரும்; நுனிக் கரும்பை நோக்கி வரவரச் சுவை குறையும். அதைப் போலவே முதலில் மிகப் பெரியதாக தோன்றிய நட்பு, நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். இதுவே தீயவர் நட்பின் இயல்பாகும். முன்னர் முழுமதியாகத் தோன்றி நாள்தோறும் குறைந்து வரும் தேய்பிறையைப் போலத் தீயவர் நட்பும் நாளும் குறைந்து வரும் இயல்பினதாகும். தீயவர்கள் நண்பர்களாயின் நம்மை நம் மனச் சான்றின் வழிநடக்க விடார்: நாம் நல் வழி செல்லும்போது நம்மைக் கேலி செய்து தீ நெறிப்படுத்துவர். அம்மை நோய்ப் பற்றியவரிடையே நாம் சென்றால் அம்மை நோய் நம்மையும் பற்றும்; தீயவர் நட்பும் அத்தகையதே ஆகும்

**இவரே நண்பர் !**

இடையிலே உடை உடுத்தியிருக்கிறோம்; அஃது அவிழ்ந்து உடலிலிருந்து நழுவுகிறது; உடனடியாகக் கை என்ன செய்கிறது? ஆடை நழுவாமல் அதனைத் தடுத்து எடுத்து உடுத்துகிறது.

நண்பன் துயரப் படுகிறான்; தொல்லைப் படுகிறான். அது நமக்குத் தெரிகிறது தெரிந்தும் தெரியாததைப்போல் நழுவப்பார்ப்பது நட்புக்கு இலக்கணம் அன்று. உடுக்கை இழந்தவன் கைபோல அப்பொழுதே நண்பர்தம் துன்பத்தைப் போக்க முயல்வதே நட்பிற்கு இலக்கணமாகும்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

என்பது வள்ளுவர் வாய்மொழி.

நாம் ஒருவரை நண்பராக ஏற்குமுன் அவர்தம் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை நன்கு ஆராய்தல் வேண்டும். நாம், நட்புக் கொள்ளத் தகுந்தவன் யார்? என்பதையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். நட்புக்குரியவன் பண்புடைய குடியிற் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்; பழிதரும் சொல்லுக்கும் பழி சேர்க்கும் செயலுக்கும் வெட்கப்படுபவனாக இருத்தல் வேண்டும்; துன்பம் வந்த காலத்தில் துணை நிற்பவனாக இருத்தல்வேண்டும்; முகத்தால் இனியராய் அகத்தால் கொடியராம் தன்மை அற்றவர்களாயிருத்தல் வேண்டும். இத்தகைய இயல்புடையவர்களின் நட்பே நல்லன பயக்கும்; நற்புகழ் சேர்க்கும்.

நம் நண்பர்கள் நம் எண்ணத்தோடு ஒட்டி நடப்பவர்களாக இருத்தல் வேண்டும். நல்ல தீர்மானம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். 'கோபக்காரனுடன் நட்புக் கொள்ளாதே.' என்பது சாலமோன் பொன்மொழி. ஆதலின் நம்மால் நட்புக் கொள்ளப்படுபவர்கள்

கோபமற்றவர்களாக இருத்தல்வேண்டும். தன்னலம் கருதாதவனே நம் நலம் கருதுவான். ஆதலால் நண்பர்கள் தன்னலம் அற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

நாம் பலரோடு பழகலாம்; ஆயினும் அவர்கள் அனைவரும் நம் நண்பர்கள் ஆகமாட்டார். நாம் பலரை அறிந்திருக்கலாம்; ஆயினும் சிலரையே நண்பர்களாகப் பெறமுடியும். நண்பர்கள் ஒருவர்பால் ஒருவர் இரக்கம் காட்ட வேண்டும்; இன்ப துன்பங்களில் சமமாகப் பங்கு கொள்ளவேண்டும். அதனுல் இன்பத்தில் மகிழ்ச்சி பெருகும்; துன்பத்தில் துயரம் குறையும். நண்பர்கள் தவறு செய்யும்போது நாம் கண்டிக்க வேண்டும்; நம் தவறுகளை அவர்கள் எடுத்துக் கூறும் போது அவற்றை ஏற்று நம்மை நாமே திருத்திக் கொள்ளவேண்டும்.

## 3. உணர்வொத்த நட்பு

நட்புக் கொள்பவர்கள் ஒரு நாட்டினராயிருத்தல் வேண்டும் என்பதில்லை; ஒரே மொழி பேசுபவராயிருத்தல் வேண்டுமென்பதில்லை; ஒரே இனத்தவராயிருத்தல் வேண்டும் என்பதும் இல்லை; ஒருவரோ டொருவர் கண்டு நெருங்கிப் பழகுபவர்களாக இருத்தல் வேண்டும் என்பதும் இல்லை.

கண்ணுல் காணுமலேயே ஒருவரோடு நட்பு ஏற்படுவதும் உண்டு; வாயால் பேசாமலேயே ஒருவரோடு நட்பு ஏற்படுவதும் உண்டு; நெருங்கிப் பழகாமலேயே ஒருவரோடு நட்பு உண்டாவதும் உண்டு, இருவர் தம் உணர்ச்சி ஒன்று படும்போது நட்பு மலர்கின்றது. அந்த நட்பு உயர்ந்த நட்பு; உணர்வொத்த நட்பு. அதனுல்தான் திருவள்ளுவர்,

> புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதாம்
> நட்பாங் கிழமை தரும்.

என்றுர்.

உணர்ச்சி ஒத்தவர்களே உற்ற நண்பர்கள் ஆவர். கண்டும் பழகியும் கலந்துரையாடாமலும் நண்பர்கள் ஆதல் உண்டோ? என்னும் ஐயம் எழுதல் இயல்பே. உணர்ச்சியொத்தலே நட்புக்குப் போதுமோ? என்னும் வினவும் எழலாம்.

சங்க கால வரலாறு 'போதும்' என விடை தருகிறது. கோப் பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் அந்தக் கொள்கையை நிலை நாட்டுகின்றனர்.

பாரதத்தின் தென் பகுதி தமிழகம். தமிழகம் பண்டை நாளில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாகப்

பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றை முறையே சேரரும் சோழரும் பாண்டியரும் ஆண்டு வந்தனர்.

பாண்டிய நாட்டில் பிசிர் என்பது ஓர் ஊர்; அவ்வூரில் ஆந்தையார் என்னும் பெரும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சொன்னலமும் பொருணலமும் அமையக் கவி பாடுவதில் வல்லவர்; உயர்ந்த குணமும் பரந்த அறிவும் வாய்க்கப் பெற்றவர். ஆந்தையாரை அவர் ஊர்ப்பெயரோடு சேர்த்துப் பிசிராந்தையார் என மக்கள் அழைத்து மகிழ்ந்தனர்.

அக்காலத்தே சோழநாட்டை ஆண்டவன் கோப்பெருஞ்சோழன்; செங்கோல் மன்னவனுகச் சிறந்து விளங்கினுன். புலவர்களை ஆதரிக்கும் புரவலனுக விளங்கினுன்; நண்பர்களை உயிர்க்குயிராக நேசிக்கும் அன்பனுக விளங்கினுன்.

பாண்டிய நாட்டுப் புலவர் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழனின் உயர் பண்புகளை அறிந்தார்; அதனுல் அவன்மீது நீங்காத பற்றுக் கொண்டார்.

சோழநாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையாரின் பெரும்புலமையையும் உயர் பண்புகளையும் உணர்ந்தான்; அதனுல் அவரைத்தன் உயிர்க்குயிராக நேசித்தான்.

இருவர் தம் பற்றும் பாசமும் வளர்ந்தது; அதுவேநட்பாக மலர்ந்தது. அஃது உயர் நட்பாகவும் உயிர் நட்பாகவும் சிறந்தது. சோழன் பிசிராந்தையாரை நேரிற்கண்டிலன்; பிசிராந்தையாரும் சோழனை நேரிற் பார்த்திலர். ஆயினும் இருவர் தம் நட்பும் வளர்பிறையாக வளர்ந்தது.

நல்ல மரத்திலே புல்லுருவி பாய்ந்தது என்பார்கள். அவ்வாறே கோப்பெருஞ்சோழனின் மக்களிருவர் கொடுங்குணங்கொண்டு விளங்கினர். அவ்விருவராலும் நாட்டு மக்கள் சொல்லொணுத் துயருற்றனர். தம் மக்களைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வர சோழன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணுயின. வேறு வழியின்றித் தம் மக்களை நாடு கடத்தினுன் சோழன்.

நாடு கடத்தப்பட்ட அவர்களோ பகைமன்னர் சிலருடைய துணையோடு தந்தையின் நாட்டின் மீது படையெடுத்து வந்தனர். கோப்பெருஞ்சோழன் சினங்கொண்டான்; தன்படைகளையும் திரட்டினுன்.

வெறுக்கத்தக்க சூழ்நிலை சோழநாட்டில் விளைந்ததை அறிந்தனர் புலவர்கள்; கோப்பெருஞ்சோழனிடம் விரைந்தனர்; அறிவுரையும் அறவுரையும் வழங்கினர்; "படைகொண்டு வருபவர் மக்கள்; எதிர் நின்று போர் செய்பவர் தந்தை; தம் மக்களை எதிர்த்துத் தந்தையே போரிடும் தகாத செயலை ஒழித்திடுக!" எனத் தடுத்தனர் அப் புலவர்கள்.

கோப்பெருஞ்சோழனும் புலவர்களின் பொன்னுரையை ஏற்ருன்; போரை விடுத்தான்; வடக்கிருந்து உயிர் துறக்க முடிவு செய்தான். அந்த முடிவை எவராலும் தடுத்த நிறுத்த முடியவில்லை.

கோப்பெருஞ்சோழன் காவிரியிடைத் தீவிலே வடக்கிருந்து உண்ணுநோன்பினை மேற்கொண்டான்; உயிர்விடவும் துணிந்தான். சுற்றத்தினரும் புலவர் பெருமக்களும் சோழவேந்தனைச் சூழ்ந்து நின்றனர். சோழன் அவர்களைப்பார்த்து, "என் ஆருயிர் நண்பர் பிசிராந்தையாரும் இப்போது இங்கு வருவார்; அவருக்கும் எனக்குப் பக்கத்தில் இடத்தை ஒதுக்குங்கள்." என்று கூறினன்.

கோப்பெருஞ்சோழனின் பேச்சு, புலவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வியப்பை உண்டாக்கியது. "வேந்தே! பிசிராந்தையாரோ தங்களைக் கண்டதில்லை; தாங்களும் அவரை நேரிற் கண்டதில்லை. ஒருநாளும் ஒருபோதும் நீவிர் இருவீரும் கண்டு பழகியதும் இல்லை; ஒருவரோடொருவர் உரையாடியதும் இல்லை. எனினும் அவர் வருவார் என இடம் ஒதுக்கச் சொல்கிறீர்கள்; இஃது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது." என்று புலவர்கள் கூறினர்.

"புலவர்களே! உங்களுக்கும் நான் சொல்ல வேண்டியதும் உண்டோ? 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதாம் நட்பாங் கிழமை தரும்.' என்பது தமிழ்மறையன்றோ! என் மனமும் என் நண்பர் பிசிராந்தையார் மனமும் ஒன்றுபோல நினைக்கக் கூடியவை; கொஞ்சம் பொறுங்கள்; உறுதியாக அவர் இங்கு வந்து சேர்வார்." என்றனன் கோப்பெருஞ்சோழன். சொல்லி முடிப்பதற்குள் "பிசிராந்தையார்! பிசிராந்தையார்!" என்ற குரலொலி எங்கும் கேட்டது.

புலவர் பிசிராந்தையார் வந்து சேர்ந்தார்; கோப்பெருஞ்சோழனே அவரைக் கட்டித் தழுவிக்கொண்டான். வளநாட்டுக் காவலரும் பாண்டிய நாட்டுப்பாவலரும் ஒருவரையொருவர் நேரிற் கண்டு மகிழ்ந்தனர். இஃதே உணர்வொத்த நட்பு. இந்த வரலாறு நமக்கு வியப்பையன்றோ அளிக்கின்றது.

## 4. அரசனும் ஆண்டியும்

துவாரகை மன்னன் கண்ணனும் ஏழைக் குசேலரும் குருகுலத்தில் ஒன்ருகக் கற்றவர்கள். ஆயர் குலத்துவேந்தன் கண்ணன்; அந்தணர் குலத்து ஏழை குசேலர். செல்வக்குடியில் பிறந்தவர் கண்ணன்; எளியவர் குடித்தோன்றல் குசேலர். ஒருவர் அரசர்; மற்றவர் ஆண்டி; ஆயினும் இருவரும் உயிரினும் மேலான நண்பர்களாக விளங்கினர்.

இவர்தம் நட்பினைக் குடிப்பிறப்போ செல்வப்பெருக்கோ தடுத்து நிறுத்தவில்லை. வளர்பிறையென வளர்ந்தது இவர் தம் நட்பு. இருவரும் குருகுல வாசம் முடித்துத் தத்தம் ஊர் திரும்பினர். கண்ணபிரான் துவாரகையின் மன்னர் ஆனார். குசேலரோ மனைவியோடும் மக்கள் பலரோடும் வறுமையில் வாடும் வாழ்க்கையைப் பெற்றார். கொடிது! கொடிது! வறுமை கொடிதாயிற்றே!

குசேலரின் துணைவியார் சுசீலை; அந்த அம்மையார் மன்னவராகிய கண்ணபிரானிடம் சென்று வறுமை போக்கும் வளமான செல்வம் பெற்று வருக என வேண்டினாள் குசேலரிடம். குசேலரும் மனைவியின் மொழி கேட்டார்; மறுத்துரைக்க மனமில்லாமல் அந்த அம்மையார் தந்த அவல் முடிப்பையும் பெற்றார்; துவாரகை நோக்கிப் பயணமானார்.

நாட்கள் பல கடந்தன; நடந்து மெலிந்து துவாரகையை அடைந்தார் குசேலர். மெலிந்த தோற்றமும் கிழிந்த ஆடையும் குசேலரின் வறுமையை வெளிப்படுத்தின; அதனால் வாயிற்காவலரும் கண்ணபிரானின் கட்டளை பெற்றே அரண்மனையின் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

தன்னை நாடிவரும் குசேலரைக்கண்ட கண்ணபிரான் ஓடோடி வந்து அவரை வரவேற்றான்; அவர் பொன்னடிகளில் வீழ்ந்து வணங்கினான். பனிநீரில் நீராடச் செய்தான்; பட்டாடை உடுத்தினான்; அவர் கொண்டு வந்த எளிய உணவாகிய அவலை அள்ளி அள்ளித்தின்று மகிழ்ந்தான்.

குசேலரின் வறுமைநிலையைக் குறிப்பாகக் கண்டுணர்ந்த கண்ணன், அவர் தம் இல்லத்திலே கோடிக்கணக்கிலே செல்வம் பெருகச்செய்தான். இன்சொல்லால் முகமலரச் செய்தான்; இன்பந்தரும் செயலால் இதயம் குளிரச் செய்தான்.

கேளாமலேயே வேண்டியதையெல்லாம் விரும்பியளித்தான். துன்பத்தைத் துடைக்கும் தூணாக நின்று காத்தான். இஃது உயர்ந்த நட்பிற்கோர் உதாரணமன்றோ!

கண்ணபிரானைப் போல் நண்பர்களின் துயர்போக்கும் தூயவர்களாக நாம் விளங்கவேண்டும்; துன்பக்காலத்தில் துயர்போக்கும் நண்பர்களையே நாமும் தேடிக்கொள்ளவேண்டும்.

**கபிலரைக் காணீர் !**

பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையது. அந்நாட்டை ஆண்டவன் பறம்பிற் கோமான்பாரி. பாரி கொடைவள்ளல்; முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கியவன்.

பாரியின் நண்பர் கபிலர்; சிறந்த தமிழ்ப்புலவர். பாரியின் உயர் குணமும் கபிலரின் பெரும்புலமையும் இருவரையும் நண்பர் களாக்கியது.

மரம் பழுத்திருக்கிறது; பறவைகளை யாரும் 'வா' என்று அழைக்க வேண்டுவதில்லை; அவை தாமே மரம் நாடி வரும்; பழம் தின்று மகிழும்; மரம் பழுத்து ஓய்ந்துவிட்டால் வேறு இடம் நாடிப் பறந்து விடும்.

செல்வம் இருக்கின்ற வரையிலே சிலர் நண்பர்களாக இருப்பர்; செல்வம் குறைந்து வறுமை வந்தது என்று தெரிந்தால் கொஞ்சம் கொஞ்சமாக நழுவப் பார்ப்பர். ஆனால் உண்மை நட்பு கொண்டவர் களோ என்றும் நிலையாக இருப்பர்.

மூவேந்தரின் படையெடுப்பால் பாரி மன்னன் கொல்லப் பட்டான்; அவன் நாடும் பகைவர் கைப்பட்டது. பாரியின் பெண் மக்களிருவரும் துயரக் கடலில் மூழ்கினர். அவர்களின் துயரை துடைப்பது யார்?

"கேட்டினும் உண்டோர் உறுதி" என்பது வள்ளுவர் மொழி. ஆம்! நமக்கு வேண்டியவர் யார்? வேண்டாதவர் யார்? நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்? என்பதை எப்போது தெரிந்து கொள்ள முடியும்? தெரிந்து கொள்ளத்தக்க காலமும் ஒன்று இருக்கிறது.

நமக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில்தான் நண்பர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். துன்பக் காலத்தில் துணை நிற்பவனே நண்பன். பாரியின் மக்களுக்கு உற்றுழி உதவும் பெரியவராக விளங்கினர் கபிலர். அவர்களுக்கு வேண்டும் உதவி களைச் செய்து மன்னர் பரம்பரையினர்க்குத் திருமணமும் செய்வித்தார், இவ்வாறு துன்பக் காலத்தில் துணை நிற்கும் நட்பே சிறந்த நட்பாகும்.

### தீயினும் அஞ்சப்படும்

தீயவர்களுடன் நட்பு செய்வது நமக்குத் தீமையே பயக்கும். ஆதலின் தீயவர் நட்பு தீயினும் அஞ்சப்படத்தக்கதாகும். "உனது நண்பன் யார் என்று சொல்; உன்னை யார் என்று சொல்லுகிறேன்." என்பது ஆங்கிலப் பழமொழி. அதன் உண்மைப் பொருள் என்ன?

நீ நல்லவனாக இருக்கலாம்; உன் நண்பன் தீயவன் ஆயின் உலகம் உன்னையும் தீயவன் என்றே கருதும்; அவன் நல்லவன் ஆயின் உன்னையும் உலகம் நல்லவன் என்றே கருதும். ஆதலின் தீயவர் நட்பை ஒதுக்கு; நல்லவர் நட்பை ஏற்றுக் கொள்.

பாத்திரம் நிறைய பால்; பசுப் பால்தான். மிக்க சுவை யுடையதுதான். ஆயினும் கலப்பாலில் ஒரு துளி நஞ்சு கலந்தாலும் பால் முழுவதும் நஞ்சாகத்தானே மாறுகிறது.

நீ பாத்திரம் நிறைந்த பால் போன்று மிகவும் நல்லவனுக இருக்கலாம்; வெள்ளை உள்ளத்தினனுக இருக்கலாம்; உயர்ந்த பண்புகள் உன்னிடம் நிறைந்திருக்கலாம். ஆயினும் தீய நண்பனின் சேர்க்கை, கலப் பாலில் துளி நஞ்சு கலந்தது போல் ஆகிவிடும். ஆகவே நீ எத்துணை நல்லவனுக இருந்திடினும் பயன் இல்லை. உன்னுடன் பழகும் நண்பனும் நல்லவனுக இருத்தல் வேண்டும். அப்போதுதான் நீயும் நல்லவனுக மதிக்கப்படுவாய்.

"உயிர் காப்பான் நண்பன்" என்பது பழமொழி. துன்பக் காலத்தில் துயர் துடைப்பவனே உற்ற நண்பனுகக் கொள்ளத் தக்கவன். தீய நண்பன் எத்தகையவன் என்பதை ஒரு சிறு கதையே நமக்கு விளக்கும்.

**கரடி கண்ட நண்பர்கள்**

நண்பர்கள் இருவர் காட்டு வளம் காணச் சென்றனர். அங்கே சீர்மிகு அழகுக் காட்சிகளைக் கண்டனர்; சிரித்துப் பேசி மகிழ்ந்தனர். ஒருவன் பெயர் மாணிக்கம்; மற்றவன் பெயர் மருதாசலம்.

இருவரும் இயற்கைக் காட்சிகளின் இன்பத்திலே மூழ்கிச் சென்றனர். வழியிலே கரடி ஒன்று எதிர்ப்பட்டது. கரடியைக் கண்டதும் மாணிக்கம் வேகமாக ஓடினுன்; ஒரு மரத்தின்மீது தாவி ஏறினுன்; அதன் உச்சிக்கே சென்று தன்னைப் பாதுகாத்துக் கொண்டான்.

தன்னுடன் ஒரு நண்பன் வந்ததைப் பற்றியோ அவனையும் பாதுகாக்க வேண்டியது தன் கடமை என்பதைப் பற்றியோ அவன் எண்ணியும் பார்க்கவில்லை.

மருதாசலத்துக்கு மரம் ஏறத் தெரியாது. அதனுல் அந்த மரத்தின் அடியிலேயே படுத்தான்; மூச்சை அடக்கினுன்; இறந்தவனைப் போலக் கிடந்தான்.

கரடி வந்தது; மரத்தடியில் படுத்திருந்த மருதாசலத்தின் அருகே சென்றது. அவனை உற்றுப் பார்த்தது. மருதாசலம் செத்துக்கிடக்கிறுன் என்று எண்ணிய கரடி அவனை ஒன்றும் செய்யாமல் போய் விட்டது.

கரடி போய்விட்டது என்பதை அறிந்த மாணிக்கம் மரத்திலிருந்து இறங்கினுன். மருதாசலத்திடம் வந்தான். "நண்பனே! நீ படுத்திருந்தாய்; கரடி உன் காதில் ஏதோ கூறியதுபோல் தோன்றியதே; என்ன கூறியது?" என்று கேட்டான்.

"துன்பக் காலத்தில் துணைக்கு வாராத நண்பனேடு சேராதே. என்று கூறியது." என்று கூறினுன் மருதாசலம்.

ஆகவே, மாணவர்களே! மாணிக்கம் போன்ற நண்பர்களைத் தேடாதீர்! கண்ணபிரானைப் போன்று வறுமையில் உதவும் நண்பர்களைத் தேடுங்கள். கபிலரைப் போன்று துன்பக் காலத்தில் துணை நிற்கும் நண்பர்களைத் தேடுங்கள்! பிசிராந்தையாரைப் போன்று சாவிலும் பிரியாத நண்பர்களைத் தேடுங்கள்.

## செய்முறைப் பயிற்சி

1. உலகில் ஒரு மனிதன் தனித்து வாழ முடியாமையை விளக்குக.
2. நாம் யார் யாருடன் பழகுகின்றோம். ஏன்?
3. நாம் மற்றவர்களுடன் எவ்வாறு பழகுதல் வேண்டும்?
4. நீ உன்னைச் சூழ்ந்துள்ளவர்களோடு எவ்வாறு பழகுகின்றாய்?
5. உணர்ச்சியொத்தலே உயர்ந்த நட்பு என்பதை ஒரு வரலாற்றுச் சான்றால் விளக்குக.
6. துன்பந் துடைப்பதே தூயநட்பு என்பதை விளக்கும் வரலாற்றைக் கூறு.
7. கபிலரின் சிறந்த நட்பினை விளக்குக.
8. பாரி எத்தகையவன்?
9. தீயவர் நட்பின் கொடுமையை விளக்குக.
10. கரடி கண்ட நண்பர்களின் கதை யாது?
11. மாணிக்கம், மருதாசலத்திடம் என்ன கேட்டான்? அதற்கு மருதாசலம் கூறிய பதில் யாது?

## நீ கற்றுக்கொள்ள வேண்டிய நன்னெறி

1. நல்ல நண்பர்களைத் தெரிந்தெடு.
2. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.
3. முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகம் நக நட்பதே நட்பாகும்.
4. கண்ணனைப் போல் அன்பு பாராட்டு.
கபிலரைப் போல் துன்பந் துடை.
பிசிராந்தையாரைப் போல் பிரியாதே.

மூன்று

# வேலையும் விளையாட்டும்

## 1. இராசராசன் கேட்ட கேள்வி

தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைக் கண்டிருப்பீர்கள்! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பட்டது அக்கோயில். சோழப் பேரரசன் இராசராசனே அதனைக் கட்டியவன். வானுற உயர்ந்த அந்தக் கோபுரம் கலைஞர்களின் கைத்திறத்திற்கோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

பெரிய கோயில் கட்டடப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில், ஒரு நாள் இராசராசன் அங்குச் சென்றான். கல்லுளித் தச்சர் கற்களில் கலைநலம் காணச் செய்தனர்; கலவைச் சாந்தினர் அதனைக் கலைத்திறம் மிகக் கூட்டினர்; வண்ணக் கலவைகள் வகை வகையாகக் கூட்டப்பட்டன.

கோபுரக் கற்களை அடுக்குவோர் கணக்கிட்டு அடுக்கினர்; சிற்பக் கலைஞர் செதுக்கியவற்றைச் செப்பம் செய்து கொண்டிருந்தனர்.

இராசராசன் கட்டடக் கலைஞன் ஒருவனை அழைத்தான். "நீ ஏன் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளாய்?" இவ்வாறு கேட்டான் இராசராசன். அந்தத் தொழிலாளியோ "அரசர் பெருமானே! இந்தத் தொழிலை நான் செய்வதால் எனக்குத் தாங்கள் மிகுதியான ஊதியம் தருகின்றீர்கள்; அதனால் என் குடும்பமும் நானும் இன்பமாக வாழ முடிகிறது. ஆதலால்தான் நான் இந்தத் தொழிலைச் செய்கிறேன்." என்றான் அந்தக் கட்டடக் கலைஞன்.

மற்றொருவன் சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டிருந்தான்; அவன் சிற்பக் கலைஞன். அவனை அழைத்தான் இராசராசன். அவனும் ஓடோடி வந்து, அரசன் முன் நின்றான்.

"தொழிலாளியே! நீ ஏன் இந்தத் தொழிலைச் செய்ய வந்தாய்?" என்று கேட்டான் இராசராசன். அவனோ, "மன்னர் மன்னவா! இந்தத் தொழிலைச் செய்வதால் எனக்கு நல்ல ஊதியத்தைத் தாங்கள் கொடுக்கின்றீர்கள்; அதைக்காட்டிலும் இந்தச் சிற்பத்தைப் பார்த்

தீர்களா? எத்துணை நுணுக்கமான வேலைப்பாடுகளைக் கொண்டு அழகுடன் விளங்குகின்றது; இத்தகைய அழகூட்டும் வேலைகளைச் செய்வது என் மனதுக்கு இன்பமாக இருக்கிறது; அதனால்தான் இந்த வேலையைச் செய்கிறேன்.'' என்றான் சிற்பத் தொழிலாளி.

மூன்றாவதாகக் கோபுரத்தை உயர்த்த கணக்கிட்டுக் கற்களை அடுக்கிக் கொண்டிருந்தான் ஒரு கட்டடத் தொழிலாளி. இராசராசன் அவனை அழைத்தான். கட்டடத் தொழிலாளியும் இராசராசன் முன்னர் வந்து வணங்கி நின்றான்.

"கட்டடக் கலைஞனே! நாட்டில் உழைப்பதற்கேற்ற தொழில்கள் எத்தனையோ உண்டு; நீ இந்தத் தொழிலை ஏற்றுச் செய்வதன் நோக்கம் யாது?'' என்று கேட்டான் மன்னன் இராசராசன்.

"அரசர்க்கரசே! இஃது ஆலயப் பணி; இறைவன் எழுந்தருளுவதற்குரிய கட்டடப் பணி; இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் இங்கே சிற்பக் கலை வளரும்; சித்திரக் கலை வளம் பெறும். இவ்விடம் இசைக்கலை பயிலும் இடமாகும்; நாட்டியக் கலை இங்கே வளர்ச்சி பெறும்; தமிழ்க் கலை செழிக்கும். இத்தனைக்கும் மேலாக மக்கள் அனைவரும் இறைவனை வணங்க ஒன்றுகூடும் திருத்தலமாகவும் இது விளங்கும்.

ஆகவே இந்தக் கோயிற் கட்டடம் சமுதாயத்துக்கே பயன்படுகிறது. சமுதாயத்திற்குப் பயன்படும் இக்கோயிற் சேவை செய்வது மனித இனத்துக்குச் செய்யும் சேவையல்லவா? அது மட்டுமல்லவே! என்னுடைய கலைத் திறமையைக் காட்ட ஒரு வாய்ப்பாகவும் இந்தத் தொழில் அமைந்துள்ளது; தேவையான ஊதியத்தையும் இத்தொழில் எனக்குத் தேடித் தருகிறது.

என் திறமைக்கு வாய்ப்பைக் கொடுக்கிறது; தேவைக்கு ஊதியம் தருகிறது; மனித இனத்துக்குச் சேவை செய்ய வழி வகுக்கிறது. ஆகவே நான் இத்தொழிலை விரும்பினேன்.'' என்றான் கட்டடக் கலைஞன்.

மன்னன் இராசராசன் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையேது? இது கதைதான்; கற்பனைதான்; என்றாலும் இதன் கருத்தை எண்ணிப் பாருங்கள்!

பிறர் சேவை, மன நிறைவு, தன்னிறைவு இந்த மூன்றின் அடிப்படையில் எந்தத் தொழிலும் அமைய வேண்டும். மூன்றாமவன் பதிலே மன்னனுக்கு மன நிறைவைத் தந்தது.

உழவன் உழவுத் தொழிலைச் செய்கிறான்; அவன் ஊதியத்தால் தன்னிறைவு பெறுகிறான்; பயிர்களின் பசுமையிலே மன நிறைவு கொள்கிறான்; உலக மக்களுக்கு உணவை உண்டாக்கிக் கொடுத்துப் பிறர் சேவையும் செய்கிறான்.

நெசவாளி ஆடை நெய்கிறன்; அதில் கிடைக்கும் ஊதியத்தால் தன்னிறைவு பெறுகிறன்; அழகும் கலை நலமும் பொருந்த நெய்யும் ஆடைகளால் மன நிறைவு பெறுகின்றன்; மக்களுக்குப் பயன்படும் ஆடைகளை நெய்து கொடுத்துப் பிறர் சேவை செய்கின்றன். இவ்வாறு ஒவ்வொரு வேலையும் தன்னிறைவு, மன நிறைவு, பொதுச் சேவை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும்.

### உழைப்பே உயர்வு தரும்

உலகில் பிறந்தார் ஒவ்வொருவரும் முன்னேற வேண்டுமென்றே ஆசைப்படுகின்றனர். அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதால் மட்டுமே முன்னேற முடியும். உடல் உழைப்பே ஒருவனை முன் னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும். உடலும் உழைப்பதற் கென்றே படைக்கப்பட்டுள்ளது; உழைப்பை உடல் மறந்தால் உடல் உறுப்புகள் பலமிழக்கும்; செயலிழக்கும்.

உழைப்பினலேயே உடல் வலிவு பெறும்; நோயற்ற வாழ்க் கையைப் பெறும். உழைக்காமலேயே வாழும் உல்லாச வாழ்வோ அவர்களை நோயாளிகளாகவே மாற்றிவிடும்.

உழைப்பொன்றே செல்வத்தைச் சேர்க்கும்; உழைப்பின்மையோ வறுமையை ஆக்கும்.

> முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
> இன்மை புகுத்திவிடும்.

என்பது வள்ளுவர் வாய்மொழி. தெய்வத்தால் ஆகாது என்றுலும் ஒருவனுடைய உடல் உழைப்புக்கேற்ற கூலி உறுதியாகக் கிட்டும்.

மரம் அறுக்கும் தொழிலாளி குடும்பத்தில் பிறந்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக வந்தது எதனுல்? அவர் தம் ஓயாத உழைப்பால்தான். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த பேரறிஞர் அண்ணு, தமிழக முதல்வர் ஆனது எப்படி? அவர்தம் ஓயாத உழைப்பால்தான்.

### விளையாட்டும் வேலையும்

ஒருவனுடைய விளையாட்டிலும் உழைப்பு இருக்கிறது; வேலையி லும் உழைப்பு இருக்கிறது. ஒருவனுடைய உழைப்பே விளையாட் டாகவும் வேலையாகவும் மாறுகிறது.

ஒருவன் உடல் உழைப்பைத் தருகிறன்; அந்த உழைப்பிற் கேற்ற ஊதியத்தை எதிர்பார்க்கிறன்; அந்த ஊதியம் பணமாகவும் இருக்கலாம்; பதவியாகவும் இருக்கலாம். ஆகவே ஒருவித பயன் கருதி உழைப்பது வேலையாகிறது.

உடல் உழைப்புச் சிலநேரங்களில் பொழுது போக்காகப் பயன் படுகிறது; உள்ளத்திற்கு மகிழ்ச்சி யூட்டுவதாக அமைகிறது; அந்த நிலையில் உழைப்பு, விளையாட்டு ஆகிறது. சில சமயங்களில் விளையாட்டு, விளையாட்டுக்காகவே அமைகிறது.

## 2. உள்ளமும்உடலும்

நம் உழைப்பினை அஃதாவது வேலையை இருவகையாகப் பிரிக் கலாம். ஒன்று உடலால் செய்யப்படும் வேலை; மற்றொன்று உள்ளத் தால் செய்யப்படும் வேலை. உடலால் உழைப்பதைச் சிறுமையாகவும் உள்ளத்தால் உழைப்பதைப் பெருமையாகவும் கருதுபவர் பலர். உடல் உழைக்காமல் வாழ்வதே நாகரிகம் என்றும் கருதுவாரும் உளர்.

உழவன் உடலால் உழைத்துப் பயிர் செய்யாவிடின் நாம் உண்ண உணவேது? ஆடை நெய்வோன் தன் உழைப்பை நல்காவிடின் உடுத்த உடை ஏது? தோட்டி கழிவுப் பாதைகளைத் தூய்மை செய்யா விடின் நோயற்ற வாழ்வேது? கட்டடவேலை செய்வோர் தங்கள் உடல் உழைப்பைத் தந்திராவிட்டால் நாம் எங்கே குடியிருப்பது? ஆகவே உடல் உழைப்பே இந்த உலகை வாழ வைத்திருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

உடல் உழைப்பு இல்லாதவர்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நலிந்து வாடுவர். உன் குடும்பத்தைப் பார்!.

உன் தாய் சமையல் செய்கிறாள்; உன் தந்தை தோட்ட வேலை செய்கிறார்; உன் தமக்கை வீட்டைப் பெருக்குகிறாள்; உன் தங்கை பாத்திரங்களைத் தூய்மை செய்கிறாள்; உன் தமையன் கடைக்குச் செல்கிறான்; நீ படுக்கைகளைச் சுருட்டி உரிய இடத்தில் வைக்கிறாய்; எல்லாரும் உடல் உழைப்பைத் தருகிறீர்கள். அதனால் நல்ல உணவு உண்ண முடிகிறது; தூய உடை உடுத்த முடிகிறது. இவை உடல் உழைப்புத்தரும் இன்பம்.

நீ பள்ளிக்குச் சென்று படிக்கிறாய்; உன் தமையனும் தமக்கையும் கல்லூரிக்குச் சென்று படிக்கின்றார்கள்; உன் தம்பியும் தங்கையும் தொடக்கப் பள்ளிக்குச் சென்று படிக்கிறார்கள். உன் தந்தை அலு வலகம் செல்கிறார்; உன் தாய் ஓய்வாகக் கதை படிக்கத் தொடங்கு கிறார்.

எல்லாரும் மன உழைப்பை அஃதாவது மூளைக்கு வேலையைத் தருகிறீர்கள். ஆகவே உடல் உழைப்பும் உள்ள உழைப்பும் ஒருவரால் மாறி மாறிச் செய்யத் தக்கதே ஆகும்.

உடலை வளர்ப்பதற்கு உடல் உழைப்புத் தேவை; உலகம் இயங்குவதற்கு உடல் உழைப்புத் தேவை. அதைப்போல நல்லுணர்வு பெருகுவதற்கும் நல்லொழுக்கம் வளர்வதற்கும் மன உழைப்புத் தேவை.

இவற்றுள் ஒன்று உயர்ந்தது; மற்றது தாழ்ந்தது என்பதில்லை. இரண்டும் உயர்ந்தனவே; இரண்டும் தேவையானவைகளே.

**நம் நாடு**

நம் நாட்டில் மிகப் பலர் உடல் உழைப்பைப் பெற்றவர்களே; நீண்ட நேர உடல் உழைப்பு ஒருவருக்குச் சோர்வையே உண்டாக்கும். ஆதலின் அவர்கள் புத்தகங்கள் படித்தல், நாடகம் பார்த்தல், இசை கேட்டல் போன்ற உள்ள உழைப்பைப் பொழுதுபோக்காகக் கொள்வர். உடல் உழைப்பால் உடல் வலிவு பெறும்; உள்ள உழைப்பால் மூளை வலிவு பெறும்.

நம் நாட்டில் உள்ள உழைப்பு உடையவர்கள் சிறுபான்மையினரே. அவர்கள் தோட்ட வேலை செய்தல், வீட்டு வேலைகளைச் செய்தல் போன்ற உடல் உழைப்பை மேற்கொள்ளலாம். அதனுல் அவர்கள் உடலும் வலிவு பெறும்; உள்ளமும் வலிவு பெறும்.

**உழைப்பின் பெருமை**

திருமண வீட்டிற்குச் சமையற்காரன் வருகிறுன்; அவன் உழைப்பிற்குக் கூலி பேசப்படுகிறது. சமைக்கிறுன்; உரிய கூலியையும் பெறுகிறுன். ஆனுலும் அவன் அதில் இன்பம் காண்பதில்லை.

திருமண வீட்டிற்கு வந்து பலரும் விருந்து உண்ணுகின்றனர். ஒவ்வொருவரும் விருந்தினைப் பாராட்டிச் செல்கின்றனர். அவியலும் பொறியலும் எத்துணை சுவை? சாம்பாரும் ரசமும் பிரமாதம்! பாயசம் இன்னெரு கரண்டி ஊற்ற மாட்டார்களா என்றிருந்தது? என்றெல்லாம் பாராட்டிக் கூறுகின்ற சொற்களே அவனுக்கு இன்பத்தைத் தருகின்றன.

சமையற்காரனும் தான் பெறுகின்ற கூலியைக் காட்டிலும் தான் சமைத்த உணவை மற்றவர்கள் விரும்பி உண்பதையே விரும்புகிறுன்.

உன் தாய் அடுக்களை நெருப்பிலிருந்து உணவைச் சமைக்கிறுள். உன்னிடம் என்ன கூலியா கேட்கிறுள்? அன்னை சமைத்த உணவு அமிர்தமாக இருந்தது என்று சொல்லி நீ உண்பதைக் கண்டல்லவா மகிழ்கிறுள். ஆகவே உடல் உழைப்பின் பெருமை, அதன் அருமையை உணர்பவர்களிடத்தே சிறப்பைப் பெறுகிறது.

உழைப்பு பிறர்க்கே

உழுது பயிர் செய்கிறன் உழவன்; அவன் தனக்காக மட்டுமா உழுது பயிர் செய்கின்றன். நீக்க முடியாத உடல் நோய்க்கு வருந்தி உழைத்து மருந்தொன்றைக் கண்டுபிடிக்கிறன் விஞ்ஞானி; அவன் தனக்காக மட்டுமா அதைக் கண்டுபிடிக்கிறன். மரங்களை வெட்டி மலையைக் குடைந்து சாலை அமைக்கிறன் தொழிலாளி; அவன் தனக்காக மட்டுமா? அமைக்கிறன்.

இவ்வாறு எவருமே தனக்காக மட்டுமே உழைப்பதில்லை; மற்ற வர்க்கும் சேர்த்தே உழைக்கிறர்கள். அத்தகைய உழைப்பை மகிழ் வோடு செய்தல் வேண்டும். மனமகிழ்ச்சியே மெய் வருத்தத்தைப் போக்கும்.

அண்ணல் காந்தி உண்ணுவிரதத்தால் தம் உடலை வருத்தினர்; பல ஆண்டுகள் சிறைப்பட்டு வாடினர். யாருக்காக? மற்றவர்கட் காக.

ஏசுபெருமான் முள்முடி சூட்டப் பெற்றர்; சாட்டையால் அடிக் கப்பட்டார்; சிலுவையில் அறையப்பட்டார். இத்தனை உடல் துன்பங்களையும் அவர் ஏற்றர். யாருக்காக? மக்களுக்காக.

புத்தர் பிரான், அரச போகத்தைத் துறந்தார்; மனைவி மக்களை மறந்தார்; காட்டிலும் மேட்டிலும் அலைந்தார்; பனியிலும் மழையிலும் நனைந்தார்; வெயிலிலும் காற்றிலும் காய்ந்தார். யாருக்காக? மக்களுக் காக.

நபிகள் நாயகம் கல்லால் எறியப்பட்டார்; மெக்காவிலிருந்து மெதினவுக்கு விரட்டப்பட்டார். ஏன்? எதற்காக? மாந்தர் நலம் போற்றியதற்காக.

இவ்வாறு அண்ணல் காந்தியும் ஆண்டவன் ஏசுவும் புத்தர் பெருமானும் நபிகள் நாயகமும் மற்றவர்களுக்காக உழைப்பதையே தங்கள் கடமையாகக் கொண்டார்கள்; அதிலேயே பேரின்பம் கொண்டார்கள்.

உழைப்பிலே பேதமா?

உழைப்பில் பேதம் ஏது? எந்தத்தொழிலும் கேவலமானதன்று செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதுவது நம் நாடு.

ஆபிரகாம் லிங்கன் எங்கே பிறந்தார்? தச்சுத் தொழில் புரியும் தொழிலாளி வீட்டில்; அதே தொழிலைத்தானே அவர் செய்தார். அவர்தாம் அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஆனர். உடல் உழைப்பைக் கருதி எவரும் அவரை இழிவாகக் கருதியதில்லை.

செருப்புத் தைக்கும் தொழிலாளி சீமையைத் திருத்திய வரலாறு உண்டே! அவரை யாரும் இழித்துப் பேசமாட்டார். ஆகவே உழைப்பில் உயர்வு தாழ்வு இல்லை. ஆகவே நம் தொழிலைப் போலவே மற்றவர் தொழிலையும் நாம் மதிக்கவேண்டும்.

ஓடி விளையாடு பாப்பா !

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

இவ்வாறு பாடுகிறார் பாரதியார். விளையாட்டு உடலுக்கு உழைப்பைத் தருகிறது; அதனால் உடல் வலிவு பெறுகிறது; உள்ளம் சுறுசுறுப்படைகிறது. அஃது உள்ளத்திற்கு மலர்ச்சியையும் கொடுக்கிறது.

விளையாட்டால் வியர்வை வெளிப்படுகிறது; கழிவு அகற்றப்படுகிறது; உடல் நலம் பெறுகிறது. நாம் கூடி விளையாடும் மனப்பாங்கைப் பெறுகிறோம்.

எந்த விளையாட்டும் தனித்த ஒருவனால் ஆடப்படுவதன்று; பலரோடு சேர்ந்தே ஆடுதல் வேண்டும். அவ்வாறு விளையாடுவதால் உடல் மட்டும் நலம் பெறுவதில்லை; உள்ளமும் நலம் பெறுகிறது.

கூடி விளையாடும் இளைஞர்கள் கூட்டுறவு மனப்பான்மையைப் பெறுகின்றனர்; ஒற்றுமை உணர்வைப் பெறுகின்றனர். பிறருக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவத்தை அடைகின்றனர். விளையாட்டு விதிகளுக்கு அடங்கி நடக்கும் கட்டுப்பாட்டுணர்வைப் பெறுகின்றனர்.

வேலையைச் செய்வதன் மூலம் உடல் உழைப்பை விரும்பாதவர்கள், விளையாட்டின் மூலம் பெறும் உடல் உழைப்பை விரும்புகின்றார்கள். விரும்பி ஆடும் விளையாட்டினால் ஒருமனப்படுகின்றனர்; பெரும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

## 3. கவியரசர் பெற்ற ஓய்வு

காலை பத்து மணிக்கு அலுவலகம் செல்லும் ஒருவன் மாலை ஐந்து மணிக்குத் தன் வேலைமுடித்துத் திரும்புகின்றான். அவன்உழைப்புக்கு ஓய்வு தேவை.

காலை பத்து மணிக்குப் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் மாலை நான்கு மணிக்கு வீடுதிரும்புகிறார்கள். அவர்கள் உழைப்புக்கும் ஓய்வு தேவை.

காலை ஆறு மணிக்கு வயலுக்குச் சென்ற உழவன் பகல் ஒரு மணிக்கு வீடு திரும்புகின்றான். அவன் உழைப்புக்கும் ஓய்வு தேவை.

விடியற்காலை ஐந்து மணிக்கு வீட்டு வேலையைத் தொடங்கிய அன்னை, ஒன்பது மணிக்குத் தன் வேலையை முடிக்கிறாள். அவள் உழைப்புக்கும் ஓய்வு தேவை.

அலுவலகம் செல்லும் ஒருவனும் பள்ளிக்குச் செல்லும் மாணவனும் உள்ள உழைப்பைப் பெற்றவர்கள்.

சமையல் தொழில் செய்யும் தாயும் வயலில் வேலைசெய்யும் உழவனும் உடல்உழைப்பைப் பெற்றவர்கள். இவர்கள் ஓய்வு பெறுவது எப்படி ?

பொதுவாகவே பலரும் ஓய்வு என்றாலே உறங்குவதுதான் என்று கருதுகின்றனர். அஃது உண்மையன்று. நிரந்தரமாக ஒருவர் தாம் செய்யும் தொழிலை மாற்றி வேறு தொழிலைச் செய்வதே ஓய்வாகும். அஃதாவது தொழில் மாற்றமே ஓய்வு என்பதாகும். அந்த ஓய்வு நேரமும் நன்முறையில் பயன்படவேண்டும்; ஓய்வு நேரத்தொழிலும் பயன் படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்! கரந்தைக் கவியரசர் தஞ்சைத் தமிழ்க்கல்லூரியின் பேராசிரியர்; பெரும்புலவர். அவர் ஒருநாள் தம் அறையில் அமர்ந்திருந்தார்; அவர் எதிரே வெள்ளைத்தாளும் பேனாவும் இருந்தன. எதையோ சிந்தித்தவாறே இருந்தார். அங்கே யாரும் இல்லை.

ஓய்வாகத்தானே இருக்கிறார் என்று எண்ணிய நான் அறையின் உள்ளே சென்றேன்; அவர் என்னைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அதனால் நான் 'ஐயா!' என அழைத்தேன். அவர் திடுக்கிட்டவர் போல் என்னைப் பார்த்தார். "ஐயா அவர்கள் ஓய்வாக இருப்பதாக அறிந்தேன்; அதனால் தங்களிடம் என் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்று வந்தேன்." என்றேன்.

"இப்போது ஓய்வு இல்லை; பின்னர்ப் பார்க்கலாம்." என்றார். "என்ன இது? ஓய்வாக உட்கார்ந்திருக்கிறார்; ஓய்வில்லை என்கிறார்." என்ற எரிச்சலோடு வெளியே வந்து விட்டேன்.

அன்றுமாலை மீண்டும் கவியரசரின் வீட்டிற்குச் சென்றேன். கவியரசரோ தோட்டத்தில் செடிகளுக்கிடையேயுள்ள மண்ணைக் கொத்திக் கிளறி விட்டுக் கொண்டிருந்தார்; களைச்செடிகளை எடுத்துக் கொண்டிருந்தார். அவர் வேலை செய்வதைப் பார்த்த நான் அமைதியாகத்திரும்பத் தொடங்கினேன். அவர் என்னை அழைத்தார். "நான் இப்போது ஓய்வாகத்தான் இருக்கிறேன்; உன் ஐயங்களைக் கேட்கலாம்." என்றார். நான் வியப்பால் விழிகள் விரிய நின்றேன்.

என் வியப்பை அறிந்த கவியரசர் எனக்கு அளித்த விளக்கம் இதுதான்.

"என்னுடைய நிரந்தரத் தொழில் என்ன? கவிதைகளைப் புனைவது; இன்று காலையில் நான் அதைத்தான் செய்து கொண்டிருந்தேன்; அது வேலை நேரம். வேலையின் களைப்பைப்போக்க மாலையில் தோட்டவேலை செய்கிறேன். இஃது என் பொழுதுபோக்கு; ஓய்வு நேரப்பணி. காலையில் நான் செய்தது மன உழைப்பு; இப்போது செய்வது உடல் உழைப்பு." என்றார் கவியரசர்.

ஆகவே மாணவர்களே! ஓய்வு என்பது எது? உடல் உழைப்புப் புரிபவர்களுக்கு உள்ள உழைப்பை ஏற்பது ஓய்வாகும். உள்ள உழைப்பை ஏற்றவர்களுக்கு உடல் உழைப்பைச் செய்வது ஓய்வாகும் ஆகவே ஓய்வு என்பது தொழில் மாற்றமேயாகும் என்பதை அறிதல் வேண்டும்.

### ஓய்வு பெறுவோம் !

உடலுக்கு வலிமையையும் உள்ளத்திற்கு வலிமையையும் தருவது விளையாட்டு. ஓடி ஆடி விளையாடுவதால் உடல் வலிமை பெறுகிறது; மனம் ஒரு முகப்பட்டு மகிழ்ச்சி அடைவதால் உள்ளமும் வலிமை பெறுகிறது. உடலை வளர்த்தால் தான் உயிரைக்காக்க முடியும். அதனால்தான் திருமூலர்,

> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே.

என்று பாடிப்போந்தார். ஆகவே ஓய்வு நேரத்தை விளையாட்டில் பயன்படுத்தலாம். விளையாட்டும் பயனுள்ள பொழுது போக்குத் தான்.

ஓய்வு நேரம் முழுவதையும் விளையாட்டிலேயே கழிப்பது என்பதும் இயலாத ஒன்றாகும். அதனால் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பிறவற்றிலும் கழிக்கலாம்.

மாணவர்களாகிய நீங்கள் நூல் நிலையங்களுக்குச் சென்று சிறந்த நூல்களை எடுத்துக் கற்கலாம். நாட்டுத் தலைவர்கள், சிறந்த அறிவியலறிஞர்கள், இயற்கைக் காட்சிகள் போன்ற படங்களைச் சேர்த்து வைக்கலாம்.

அயல் நாட்டு உள்நாட்டு அஞ்சல் தலைகளைச் சேகரித்து அழகுற ஒட்டிப்பெருமை சேர்க்கலாம்; இக்கலையை இன்று உலகமே விரும்பி வரவேற்கிறது. புதிய நாணயங்களையும் போற்றத்தகும் பழைய நாணயங்களையும் சேகரிக்கலாம்.

இவற்றினும் சிறந்த தோட்டவேலை செய்து பயன்தரும் காய்கறிச் செடிகளைப்பயிர்செய்யலாம். அவரவர் தத்தம் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு ஓய்வு நேரப் பொழுதுபோக்காக மாற்றுத் தொழில்களை ஏற்றுச் செய்யலாம். வேலையை விளையாட்டாக்கலாம்; விளையாட்டை வேலையாகவும் ஆக்கலாம்.

## செய்முறைப் பயிற்சி

1. இராசராசன் கேட்ட கேள்விக்கு,
   (1) கட்டடக்கலைஞன் கூறிய பதில் யாது ?
   (2) சிற்பக்கலைஞன் கூறிய பதில் யாது ?
   (3) கட்டடத் தொழிலாளி கூறிய பதில் யாது ?
2. இராச ராசன் யாருடைய பதில் கேட்டு மனம் நிறைவு பெற்றான் ?
3. உழைப்பே உயர்வு தரும் என்பதை விளக்குக.
4. உழைப்பால் உயர்ந்த பெரியவர்களை உன் நினைவுக்கு கொண்டுவா ; அவர்களைப் போல நீயும் உழைத்து முன்னுக்கு வர முயற்சி செய்.
5. உழைப்பொன்றே உலகை மகிழ்விக்கிறது என்பதை விளக்குக.
6. எதனை மிகவும் விரும்புவர் ?
   (1) சமையற்காரன் சமைக்கிறான்.
   கூலிகிடைக்கிறது — பாராட்டும் கிடைக்கிறது.
   (2) ஓவியன் வரைகின்றான்.
   பணமும் கிடைக்கிறது — பாராட்டும் கிடைக்கிறது.
   (3) ஆசிரியர் கதை எழுதுகிறார்.
   மாதச்சம்பளம் கிடைக்கிறது ; மக்கள் பாராட்டும் கிடைக்கிறது
7. பிறர்க்கெனப் பாடுபட்டுப் பேரின்பம் கண்டவர்கள் யாவர் ?
8. கவியரசர் கண்ட ஓய்வு எது ?
9. உன்னுடைய ஓய்வு நேரப் பணிகள் யாவை ?
10. உன் வேலை எது ? விளையாட்டு எது ?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி ;**

1. நீ எதைச் செய்தாலும் உன் நலத்திற்காக மட்டுமன்றிப் பிறர் நலத்தையும் எண்ணிச் செய்.
2. ஓடிவிளையாடு ; நண்பர்களோடு கூடிவிளையாடு.
3. உள்ளத்திற்கு உழைப்பு கற்பது.
   உடலுக்கு உழைப்பு விளையாட்டு.
4. காலை எழுந்தவுடன் படிப்பு — பின்னர்க்
   கனிவுதரும் நல்லபாட்டு
   மாலை முழுதும் விளையாட்டு — இதை
   வழக்கப் படுத்திக்கொள்.
5. வீட்டு வேலைகளைச் செய் ; தோட்டவேலைகளிற் பயிற்சிபெறு.

நான்கு

# படித்தலும் கற்றலும்

## 1. வள்ளுவர் சொன்ன வழி

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தந்த நூல் திருக்குறள் ஆகும். அதில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உண்டு. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பத்துக் குறட்பாக்கள் உண்டு. அவர் மூன்று அதிகாரங்களில் கற்றலைப் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

**கல்வி**

சான்றோர்கள் எழுதிய நூல்களைக் கண்களால் கண்டு கற்கிறோம்; கலைஞர்கள் அமைத்த கலைக் கூடங்களைக் கண்களால் கண்டு உணர்கிறோம்; இயற்கை வெளிப்படுத்தும் எழில்மிகு காட்சிகளைக் கண்களால் கண்டு அறிகின்றோம். இவ்வாறு கண்ணால் கண்டு கருத்தால் ஏற்றுக் கற்றுணர்வதையே கல்வி என்றார் திருவள்ளுவர். அதனால் கல்வி என ஓர் அதிகாரம் வகுத்தார்.

**கேள்வி**

கற்றுணர்ந்த சான்றோர்கள் மேடையேறிக் கருத்துகளைச் சொல்கிறார்கள்; நாம் செவியால் கேட்டு அறிகின்றோம். உலகியல் அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் தாங்கள் அறிந்தனவற்றை நமக்கு எடுத்துரைக்கின்றார்கள்; நாம் கேட்டு அறிகின்றோம். பள்ளியில் நம் ஆசிரியர் பாடங்களைப் போதிக்கின்றார்; நம் செவிகள் கேட்கின்றன; உள்ளம் அவற்றை ஏற்கின்றது. பெற்றவர்களும் மற்றவர்களும் நமக்கு நல்லுரை வழங்குகின்றனர். அவற்றைக் கேட்டு உணர்கின்றோம். இவ்வாறு காதால் கேட்டு கருத்தில் ஏற்றுக் கேட்டுணர்வதைக் **'கேள்வி'** என்றார் வள்ளுவர். அதனால் 'கேள்வி' என ஓர் அதிகாரம் வகுத்தார்.

**அறிவுடைமை :**

நாம் சில நூல்களைக் கற்கிறோம்; சிலவற்றைக் காண்கின்றோம். அவை அனைத்தும் நம் உள்ளத்தில் அப்படியே பதிவதில்லை; சில உள்ளத்தில் ஆழமாகப் பதிகின்றன; பல மறதிக்கு ஆட்படுகின்றன.

வகுப்பில் ஆசிரியர் நமக்குப் பாடங்களைப் போதிக்கிறார்; கேட்கிறோம். அறிஞர்கள் மேடையில் பேசுகிறார்கள்; கேட்கிறோம். ஆயினும் கேட்ட அனைத்தும் நம் உள்ளத்தில் பதிவதில்லை. ஒரு சில உள்ளத்தில் பதிகின்றன; பலவும் மறதிக்கு ஆட்படுகின்றன.

ஆகவே கற்றனவற்றையும் கண்டனவற்றையும் கேட்டனவற்றையும் கேட்டுத் தெரிந்தனவற்றையும் ஆழ்ந்து சிந்தித்து மனத்திடத்தே பதிய வைத்துக் கொள்வதே அறிவு ஆகும். அதனால் வள்ளுவர் 'அறிவுடைமை' என ஓர் அதிகாரம் வகுத்தார்.

திருவள்ளுவர் கல்வியைச் செல்வம் என்றார்; கேள்வியையும் செல்வம் என்றார். கல்விச் செல்வம் கேள்விச் செல்வம் இரண்டுமே நிலையற்றவைதாம். கற்றதும் மறப்பதுண்டு; கேட்டதும் மறப்பதுண்டு. ஆயினும் கற்றும் கேட்டும் உள்ளத்தே அமைத்துக்கொண்ட அறிவோ என்றும் அழிவதில்லை; மறைவதில்லை; மறப்பதும் இல்லை. ஆகவே அறிவு + உடைமை அறிவுடைமையாயிற்று. அந்த அறிவைப் பெறத் தக்க வழியே படித்தலும் கற்றலும் ஆகும்.

## 2. ஏன்? எதை? எப்படி?

"நூல் அறிவு இளமைக்கு ஊட்டம் அளிக்கிறது; முதுமைக்கு மகிழ்ச்சி அளிக்கிறது; துன்பத்திலே இன்பம் சேர்க்கும் இசையைப் போல இனிமையைத் தருகிறது. இன்ப நாட்களில் இன்பத்தைப் பன்மடங்காகப் பெருக்குகிறது. வீட்டில்—வெளியில்—பயணம் செய்யும் காலங்களில் இனிய நண்பனாக—உற்றுழி உதவும் தோழனாகத் திகழ்வது நூல்கள் தாம்." இவ்வாறு படிப்பதைப் பற்றி **'சிசரோ'** என்னும் பேரறிஞர் கூறுகின்றார்.

மாணவர்களே! நீங்கள் உங்கள் பாடத்தினைப் படிக்கிறீர்கள் அல்லது பத்திரிகைச் செய்தியினைப் படிக்கிறீர்கள். அதன் மூலம் காலங்கடந்த ஒருவர்தம் எண்ணங்களை உணரமுடிகிறது; நாடு கடந்து ஒருவர் தம் எண்ணங்களை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

அதை எண்ணும்போது வியக்காமல் இருக்க முடியுமா? மிகச் சிறந்த கல்வித் திறனைப் பெறப் பயன்படுவது வாசிப்பு; கல்வி, கலாச்சாரம் ஆகியவை வளரவும் வளம் பெறவும், வாசிக்கும் திறன் பயன்படுகிறது. ஆகவே நாம் வாசிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

'வாசிப்பு' என்பது மிகக் குறைந்த செலவில் கிடைக்கும் மிகச் சிறந்த சுவையான பொழுதுபோக்காகும். ஒன்றைப் பற்றிக் கேட்கிறோம்; ஒன்றைப் பற்றிப் பேசுகிறோம்; அதைப் போலவே ஒன்றைப் பற்றி வாசிக்க வேண்டும்.

உங்கள் உள்ளத்திலே எதை வாசிப்பது என்ற வினு எழும். நீங்கள் விரும்பியதைப் படியுங்கள் என்பதுதான் எனது பதில். உங்களுக்குப் பிரியமானவற்றைப் படியுங்கள்; படிப்பதில் சுவையை முதலில் உண்டாக்கிக் கொள்ளுங்கள்; பின்னர்ப் படிக்க வேண்டுவது எது என்பது பற்றிச் சிந்திக்கலாம்.

படிப்பதற்கு நேரம் ஏது எனக் கேட்காதீர்! மனம் இருந்தால் மார்க்கமா இல்லே? பள்ளியின் விடுமுறை நாட்கள்; பயணம் செய்யும் நேரங்கள்—படிப்பதற்குரிய நேரம் அல்லவா? வாசிக்கும் வழக்கத்தை இன்றே இப்பொழுதே தொடங்க வேண்டும்; அஃது உமக்கு நல்வாழ்வை அளிக்கும்.

சான்ருேர்கள் தங்கள் பட்டறிவால் கண்டு அறிந்தனவற்றை—கேட்டுத் தெரிந்தனவற்றை—சிந்தித்து உணர்ந்தனவற்றை நூல்களாக ஆக்கித் தந்துள்ளனர். அவற்றுள் நல்லது எது எனக் கண்டு கற்றல் வேண்டும். சான்ருேர்கள் கண்டு அறிந்ததைக் கற்க வேண்டும். அதனுல்தான் நம் முன்னுேர்கள் "கண்டதைக் கற்கப் பண்டிதனுவான்" எனக் கூறினர். 'கண்டதை' என்ருல் என்ன பொருள்? நம் முன்னுேர்கள் கண்டு அறிந்த உண்மைப் பொருளே என்பது பொருள்; நம் முன்னுேர்கள் ஆராய்ந்து கண்ட அதனே என்பதே பொருள்.

நாம் ஏன் கற்க வேண்டும்? என்பதற்கு வள்ளுவர் கூறும் காரணங்கள் மிகச் சிறந்தனவாகும்.

கல்வியே சிறந்தசெல்வம்; பொன் பொருள், மண், மனே முதலிய செல்வங்கள் எல்லாம் சிறப்புடைய செல்வங்கள் ஆகா.

கற்றவர்களே கண்களேப் பெற்றவர்; கல்லாதவர்களோ உடலில் இருபுண்களேப் பெற்றவரே. தாழ்ந்த குடியிலே பிறந்த கற்றவர்களுக்கு, உயர்ந்த குடியிலே பிறந்த கல்லாதவர்கள் ஒப்பாக மாட்டார்கள்.

கற்றவர்களே மக்களினத்தார்—கல்லாதவர் விலங்கினத்தாராவர். அறிவுடையவரே எல்லாம் உடையவராக மதிக்கப்படுவர். ஆதலின் ஒருவன் கற்று அறியாவிடின் கேட்டேனும் அதனேப் பெறுதல் வேண்டும் எனக் கற்றலின் மேன்மையைத் திருவள்ளுவர் விளக்குகின்ருர்.

"கற்ருேர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்பது அருந்தமிழ் மொழியன்ருே. கற்ற ஒருவன் சென்ற ஊர்களிலெல்லாம் சிறப்படைகின்ருன்; சென்ற நாடுகளிலெல்லாம் சிறப்பிக்கப்படுகின்ருன். அவ்வாறிருந்தும் ஒருவன் சாகும் வரை கல்லாதிருப்பது ஏன்? எனக் கேட்கிருர் வள்ளுவர்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

என்பது வள்ளுவர் குறள்.

எதைக் கற்பது? திருவள்ளுவர் எதைக் கற்க வேண்டும்? என்பதை மூன்று சொற்களில் முழுமையாகக் கூறியுள்ளார். ‘கற்க கசடற கற்பவை’ என்பதே அத்தொடர். நீங்கள் மாணவர்கள்; ஆதலின் எவற்றைக் கற்க வேண்டும் என்பதை அறிந்தே கற்றல் வேண்டும். ‘கற்பவை’ அஃதாவது கற்கத் தகுந்தவற்றை என்றே வள்ளுவர் கூறியுள்ளார்:

மாணவப் பருவத்தினராகிய நீங்கள் முதலில் உங்களுக்குரிய பாடத் திட்டப்படி பாடங்களைப் படியுங்கள். ஆங்கில மொழியை அழகுறப் பயிலுங்கள்; அன்னைத் தமிழ் மொழியைச் செம்மையுறக் கற்றிடுங்கள்; கணக்கியலைக் கருத்தோடு படியுங்கள்; அறிவியலை ஆராய்ந்து படியுங்கள்; வரலாற்றையும் நில நூலையும் விளக்கமுறப் படியுங்கள். இவையெல்லாம் நீங்கள் வாழ்வில் உயர்வதற்கு வழி காட்டும் பாடங்கள். இவற்றை நீங்கள் கவனத்தோடு படித்திடல் வேண்டும்; கருத்தோடு கற்றுச் சிறந்த மதிப்பெண்கள் பெறுவதால் உங்கள் வாழ்வு வளம் பெறும்.

பள்ளிப் பாடங்களை மட்டும் கற்றால் போதாது; நூல் நிலையங்களுக்குச் செல்லுதல் வேண்டும். சான்றோர்களால் எழுதப்பட்ட அறிவியல் நூல்கள், அறநெறி கூறும் நூல்கள், சமய நூல்கள், சான்றோர் வரலாற்று நூல்கள் ஆகியவற்றை எடுத்துக் கற்றல் வேண்டும். இஃது அறிவு வளர்ச்சிக்கு வழி வகுப்பதாகும்.

காலையிலோ மாலையிலோ அன்றாடச் செய்திகளை அறிய நாளிதழ்களை வாங்கிப் படித்தல் வேண்டும். வார இதழாகவும் திங்கள் இதழாகவும் வெளிவரும் அறிவியல் பத்திரிகைளைப் படித்துணரவேண்டும்.

கற்றலால் மட்டுமே சிறந்த அறிவைப்பெற்று விடமுடியாது. சான்றோர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும் அறிவை வளர்த்தல் வேண்டும்.

பாடநூல்களைத் தவிர பிறநூல்களைக் கற்கும் போது கற்கத் தகுந்தவை எவை என்பதை ஆசிரியர் வாயிலாகக் கேட்டு அறிதலே நலம் பயப்பதாகும்.

எப்படிக் கற்க வேண்டும்? தனிமையான பொழுதை இனிமையாகக் கழிக்க உதவுவன நூல்கள்; நம் வேகத்திற்கு ஏற்றாற்போல நம்முடன் இணைந்து இயங்குபவை நூல்களே; நூல்களே நம் தோழர்கள்.

நல்ல நூல்களே அறிவை வளர்க்கும்; ஆக்கத்தைத்தரும்; ஊக்கத்தை உண்டாக்கும்; மன உயர்வை ஏற்படுத்தும்; எண்ணத்திலே எழுச்சி உண்டாக்கும்; ஏற்றமிகு கருத்துகளை அள்ளித்தரும்.

நூல்கள் பல வகைப்படும். பயண நூல்கள், பகுத்தறிவு நூல்கள், அறிவு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், மொழிநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள்—இப்படிப் பலவகைஉண்டு. அவற்றுள் தேவையானவற்றையும் சிறந்தனவற்றையும் தேர்ந்தெடுத்துக் கற்றல் வேண்டும்.

இவற்றை எவ்வாறு கற்கலாம்? சில நூல்களை முழுவதும் கற்றுணரவேண்டும்; சில நூல்களைக் கருத்தூன்றி அறிதல் வேண்டும்; சிலவற்றை மேலான போக்கில் அறிந்தாலே போதும். செய்தித்தாள்களைப் படிக்கிறோம்; அதில் அங்கங்கே சிலவற்றைப் படித்தாலே போதும்; செய்திகளைத் தெரிந்து கொண்டு விடலாம்.

## 3. வாசிப்போம் வாரீர் !

ஆங்கிலத்தில் கற்றலை இருவகையாகப் பிரித்துக்காட்டியுள்ளனர் Reading—அஃதாவது படித்தல் அல்லது வாசித்தல், Study—அஃதாவது கற்றல்.

ஒருவன் காரண காரியங்களை உணர்ந்து உள்ளத்திலே பதிய வைத்துக்கொள்ளும் வகையில் கற்பதே கற்றல் எனப்படும். ‘கல்’ என்னும் சொல் ‘தோண்டுதல்’ என்னும் பொருளைத் தருவதாகும். கற்றல் என்பது ஆழமாக ஆய்ந்து உணர்ந்து அறிதல் என்னும் பொருளைத் தரும். தேர்வுக் கெனப் பாட நூல்களை ஒருவன் கற்கிறான்; அது கற்றலாகும்.

கருத்தில் ஆழ்ந்து விடாமல் மேம்போக்காகப் படித்தலே படித்தல் எனப்படும். ஒருவன் செய்தித்தாளைப் படிக்கிறான்; அவன் அதில் ஆழ்ந்து விடுவதில்லை.

ஒருவன் கற்பதை அவன் ஒருவனே உணரமுடியும்; படிப்பதையோ பிறரும் உணர்ந்து கொள்ள முடியும். பல நூல்களையும் நாம் படிக்கலாம்; சில நூல்களை மட்டுமே கற்க முடியும்.

கற்றற்குரிய பருவம் இளமைப் பருவமே; அதனால்தான் ‘இளமையிற்கல்’ என்று நம் முன்னோர் கூறினர். கற்றற்குரிய நேரமும் காலைப் பொழுதே ஆகும்; ஆகவே காலையில் கற்பதே சாலவும் நன்றாகும்.

ஒருவன் கற்கும் போது ஐயம் திரிபு அறக்கற்றல் வேண்டும். பசு மரத்தாணிபோல் உள்ளத்தில் பதியும்படியாகக் கற்றல்வேண்டும். பசித்தவன் உணவை விரும்பி உண்ணுவது போல அறிவு நூல்களை விரும்பிக் கற்க வேண்டும்.

மாணவர்களே! நீங்கள் படிக்கும்போது சில அறிவியல் முறைகளையும் அறிந்து படித்தலே நலம் பயக்கும். புத்தகங்களைக் கண்ணுக்கு அருகே வைத்துப் படிப்பதோ வெகு தூரத்தே வைத்துப் படிப்பதோ தவருகும்; அம்முறை கண்களைக் கெடுத்துவிடும். ஆகவே கண்ணுக்கும் புத்தகத்துக்கும் இடையே ஓரடி தொலைவு இருக்குமாறு வைத்துப் படித்துப் பழகுதல் வேண்டும். மிகக் குறைந்த ஒளியிலும் மிக அதிகமான ஒளியிலும் படித்தல் தவருகும். தேவையான அளவுடைய வெளிச்சத்திலேயே இருந்து படித்தல் வேண்டும். அமர்ந்து நிமிர்ந்து படிப்பதே உடலுக்கு அழகு தருவதாகும். படுத்துக் கொண்டு படிப்பதோ நடந்து கொண்டே படிப்பதோ தவருகும். படிக்கும்போது விரைவாகப் படிக்கவேண்டும். அந்த விரைவோடு கருத்தையும் உள்ளத்தில் ஏற்கவேண்டும். அத்தகைய பயிற்சி மாணவப் பருவத்திலேயே பெறுதல் வேண்டும். அதற்கேற்ற உழைப்பினை மேற்கொள்ள வேண்டும். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? இல்லையன்றோ!

எதைப் படித்தாலும் தேவையானவற்றைக் குறிப்பெடுத்து வைக்கும் பழக்கம் சிறந்ததாகும்.

### நன்னூல் காட்டும் நல்வழி

மாணவர்களே!

நீங்கள் எவ்வாறு கற்க வேண்டும்? எவ்வாறு கற்ருல் சிறந்த அறிவைப் பெறலாம்; அறியாமையைப் போக்கலாம் என்பது பற்றி நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் கூறியதைக் கூறுகிறேன்; தெரிந்து கொள்ளுங்கள்; மிக்க பயன் தரும்.

முதல் நாள் ஆசிரியர் சொல்லிக் கொடுத்த பாடங்களை வீட்டிலிருந்து மீண்டும் படித்தல் வேண்டும்; அவர் சொல்லிக் கொடுக்க நாம் கேட்டனவற்றை மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆசிரியர்க்கு முன்னர் அமைதியாக அமர்ந்து பாடங்களைக் கேட்டல் வேண்டும்; பின்னர்த் தம்முடன் பயிலும் மாணவர்களுடன் கலந்து பழகிப் பயிலுதல் வேண்டும்; ஆசிரியர்பால் படித்தவை பற்றிய வினுக்களை மாணவரிடத்து எழுப்ப வேண்டும்; அவர் கேட்கும் வினுக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒருமுறை பாடம் கேட்பவன் நூலின் பொருளை அறிவான்; இரண்டாவது முறையும் அப்பாடத்தைக் கேட்டு அறிபவன் பிழையின்றி அறிந்தவன் ஆவான்.

மூன்ருவது முறையும் அப்பாடத்தை ஒருவன் கேட்டறிவானுயின் அவன் பிறர்க்குச் சொல்லிக் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றுவிடுவான். இவ்வாறு கற்கும் முறை பற்றிக் கூறுகின்ருர் நன்னூலார். அம்முறை உங்கட்கு மிக்க பயன்தருமன்ருே?

பிறர்க்கும் பயன் தரும்

நாம் படிப்பது எவ்வாறு பிறர்க்குப் பயன்படும்? பொதிய மலையிலிருந்து புறப்படும் தென்றல் மென்மை, குளிர்ச்சி, மணம் ஆகிய வற்றைச் சுமந்து வருகிறது. யாருக்குக் கொடுக்கிறது? மக்களுக் கன்றோ மாண்புறத் தருகின்றது. அதைப்போல ஒருவன் கற்ற கல்வியும் அனைவருக்கும் பயன்பட வேண்டும்.

கடல் நீரைப் பெறுகின்ற மேகம், மழையாகப் பொழிந்து உலக மாந்தருக்கு உதவுவது போல மாணவர்களாகிய நீங்கள் பெறுகின்ற அறிவும் பலருக்கும் பயன்பட வேண்டும்.

படிப்பறிவு அற்றவர் நம் நாட்டில் மிகுதியாக உள்ளனர். அவர் களுக்குப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் நீங்கள் படித்துக் காட்டிக் கேட்டறியச் செய்யலாம். செய்திகளைப் படித்து அவர்கள் தெரிந்து கொள்ளும் முறையில் சொல்லலாம். அவர்கட்கு வரும் கடிதங்களைப் படித்துச் சொல்லலாம்.

ஓய்வு கிடைத்திடின் கல்லாதவர்கட்கு கற்பதில் ஆர்வத்தை ஊட்டலாம்; கற்றும் கொடுக்கலாம்.

மாணவர்களே! கற்றறிந்த—ஆயினும் மக்கட் பண்பற்ற மரம் போன்ற சிலர் கயமைக் குணங்களை வளர்க்கும் நூல்களை எழுதியிருப் பர்; அட்டையில் கவர்ச்சிதரு படங்களையும் போட்டிருப்பர். அவர் கள் கவிஞர்கள் எனப் போற்றப்படுவதும் உண்டு; கதை ஆசிரியர் எனப் பாராட்டப்படுவதும் உண்டு. ஆயினும் அவர்கள் மனித சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள். அவர்கள் கவலை யெல்லாம் பணம்! பணம்! பணம்தான்!

அத்தகையவர்கள் எழுதிய நூல்கள், உங்களைத் தீநெறிச் செலுத் தும்; சோம்பலை வளர்க்கும்; அறிவைக் கெடுக்கும்; ஆற்றலை அழிக் கும்; உங்கள் எதிர்காலத்தையே பாழாக்கும். ஆதலால் அத்தகைய இழிந்த நூல்களை ஒதுக்கித் தள்ளுங்கள்; அவர்களும் சமுதாயத்தால் ஒதுக்கித் தள்ளப்படுவார்கள்.

## செய்முறைப் பயிற்சி

1. கல்வியாவது யாது?
2. கேள்வியாவது யாது?
3. அறிவுடைமை என்றால் என்ன?
4. ஏன் கற்க வேண்டும்? இதற்கு வள்ளுவர் கூறுகின்ற விடை யாது?
5. நாம் எதைக் கற்க வேண்டும்?
6. நாம் எப்படிக் கற்றல் வேண்டும்?
7. "கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்" விளக்கம் தருக.
8. வாசிப்பின் பயன் யாது?
9. கற்கும் முறைபற்றிப் பவணந்தியார் யாது கூறுகின்றார்?
10. கல்வியைப் பிறர்க்கும் பயன்படுத்துவது எவ்வாறு?

நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி:

1. ஓய்வு கிடைத்த போதெல்லாம் படி.
2. அறிஞர் உரை எங்குக் கேட்பினும் காது கொடுத்துக் கேள்.
3. இயற்கைக் காட்சியின் எழில் நுட்பங்களைக் கண்ணால் கண்டு அறிந்துகொள்.
4. நீ கற்பதும் வாசிப்பதும் பிறர்க்குப் பயன்படச் செய்.

# ஐந்து

## உண்மை உயர்வு

### 1. உங்களுக்குத் தெரியுமோ?

திருமதி பங்கஜத்தை உங்களுக்குத் தெரியுமோ? அவர் உயர்ந்த பட்டங்களைப் பெற்றவர்; ஒரு சிறந்த கல்வி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்; அன்பும் அடக்கமும் பண்பும் பாசமும் நிறைந்தவர்.

வெளியூருக்குச் சென்றிருந்த அவர் கணவர் திரும்பி வருகின்றார்; அவரைப் பேருந்து நிலையத்திற்குச் சென்று அழைத்து வரவேண்டும். வெளியூர் சென்றால் எப்போதும் அவர் வெறுங்கையோடு திரும்பி வர மாட்டார்; சுமக்க முடியாத அளவுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டுதான் வருவார்.

பழைய வேலைக்காரியென்றால் பேருந்து நிலையம் செல்வாள்; அவரை அழைத்துக்கொண்டு மூட்டைகளையும் சுமந்து கொண்டு வந்து விடுவாள். புதிய வேலைக்காரி இன்றுதான் வேலைக்கு வந்திருக்கிறாள். அவரை அவள் பார்த்ததே இல்லை. எப்படி அடையாளம் சொல்லி அனுப்புவது?

"இதோ! என் கணவர் எட்டுமணிக்குப் பேருந்துவண்டியிலிருந்து இறங்குவார்; உயரமாக இருப்பார்; செக்கச்சிவந்த மேனியோடு இருப்பார்; முறுக்கு மீசை துடுக்காகத் தெரியும்; கைவிரல்களில் ஐந்தாறு மோதிரங்கள் இருக்கும்; கழுத்திலும் ஒருதங்கச் சங்கிலி தொங்கும்; தங்கச்சங்கிலியோடு உயர்ந்த ரகக் கடிகாரம் ஒன்றைக் கையில் கட்டியிருப்பார்; பட்டுச்சட்டை அணிந்திருப்பார்; பகட்டான வேட்டி உடுத்தியிருப்பார். கையில் சிகரெட் புகைந்து கொண்டே இருக்கும். இதுதான் அவர் அடையாளம்; போய் அழைத்து வா!" என்றுதானே அடையாளம் சொல்ல வேண்டும்.

இந்த அடையாளங்களைத் திருமதி பங்கஜம் வேலைக்காரியிடம் சொல்லியனுப்பியிருந்தால்—அவர் கணவர் பெருமைக்குரியவர் அல்லர்; பெரும்பணக்காரர்; படாடோபக்காரர்; பகட்டுக்காரர் அவ்வளவுதான் அவருக்குரிய மரியாதையும் மதிப்பும்.

ஆனல் அந்த அம்மையார் என்ன சொல்லி அனுப்பினுர் தெரியுமா? புதிய வேலேக்காரி இராசம்மாவை அழைத்தார். "இராசம்மா! இதோ பார்! என் கணவர் இன்றுகாலே எட்டுமணிக்குப் பேருந்தில் வந்து இறங்குவார்; நீ போய் அழைத்துவா; அவர் உயர மான பெரிய மனிதர்; பிறருக்கு உபகாரம் செய்யும் மனம் படைத் தவர்." இந்த அடையாளங்களேயே சொல்லி அனுப்பினுர்.

வேலேக்காரி இராசம்மாளுக்கு அந்த அடையாளங்களே போது மானதாக இருந்தது. அவள் பேருந்து நிலேயம் சென்ருள்; உயரமான பெரியமனிதர் ஒருவர், பேருந்திலிருந்து இறங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த மூதாட்டி ஒருத்தியைக் கைகொடுத்து இறக்கி விட்டார்; அவர் மூட்டையை எடுத்து வண்டியில் வைத்தார்; அந்த மூதாட்டியை வண்டியிலேற்றி விட்டுத் திரும்பினுர்.

வேலேக்காரி தன் எசமானனேக் கண்டு கொண்டாள்.

மாணவர்களே! எத்தகைய சிறந்த அம்சம் இது; எண்ணிப் பாருங்கள்! ஒருவரை எப்படி வேண்டுமானுலும் அடையாளம் காட்ட லாம். அவர்தம் அங்க அடையாளங்களேக் கூறலாம்; நிறத்தைக் கூறலாம்; ஆடை அணிகலன்களேயும் நடை உடை பாவனேகளேயும் அடையாளமாகக் கூறலாம். ஆனல் அவையெல்லாம் அவர்க்குக் பெருமை தருவனல்ல; ஒருவருடைய சிறந்த நற்பண்பினே எடுத்துக் காட்டி அடையாளம் சொல்வது எத்துணே பெருமை வாய்ந்தது? அத் தகைய பெருமையை நாம் அடையவேண்டும்.

### உயர்வுள்ளல்

மாணவர்களே! விலங்குகளும் உண்ணுகின்றன; உறங்கு கின்றன; பார்க்கின்றன; கேட்கின்றன. மனிதனும் உண்ணு கின்ருன்; உறங்குகின்ருன்; பார்க்கின்ருன்; கேட்கிருன். ஆயினும் விலங்கினும் மனிதன் உயர்ந்தவனுகக் கருதப்படுகிருன். ஏன்? அவனிடம் இருக்கின்ற சிந்தனே ஆற்றலே அவனே உயர்ந்தவன் ஆக்குகிறது; அவனிடமுள்ள பகுத்தறியும் அறிவே அவனே உயர்ந் தவன் ஆக்குகிறது.

ஆகவே சிந்திக்கும் திறனும் பகுத்துணரும் அறிவும் பெற்ற நீயும் உயர்ந்ததையே எண்ணவேண்டும்; உயர்ந்தவற்றையே பேசுதல் வேண்டும்; உயர்ந்த செயல்களேயே செய்தல் வேண்டும். உயர்ந்த செயலேச் செய்ய நினேத்தோம்; வெற்றிகிட்டவில்லே என்ருலும் வருந்த வேண்டா.

'மணல்மேட்டின் உச்சியில் கால்வைப்பேன்' என்று கூறிப் பெறும் வெற்றியைக் காட்டிலும் இமயமலே உச்சியில் கால் வைக்க

முயன்று பெறும் தோல்வி சிறந்தது அல்லவா? அதனால்தான் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றார். காட்டு முயலை வேட்டையாடிப் பெற்ற வெற்றியைக் காட்டிலும் யானைமேல் வேல் எறிந்து அது தப்பிச் செல்ல ஒடிந்து விழுந்த வேலை ஏந்தி நிற்றல் பெருமைதரும் செயல் அல்லவா?

ஆகவே, உயர்ந்ததை நினை; உயர்ந்ததைப்பேசு; உயர்ந்ததைச் செய்; வெற்றி பெறுவாய்; பெருமை அடைவாய்.

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்றார் திருவள்ளுவர். உலகிற் பிறந்த ஒருவன் புகழுக்குரிய—பெருமைக்குரிய செயல்களைச் செய்பவனாக இருத்தல் வேண்டும். அத்தகைய செயல்களைச் செய்யாதவன் பிறத்தலினும் பிறவாமையே நன்றாகும்.

## 2. புகழொடு வாழ்க!

உலகில் கோடிக்கணக்கில் மக்கள் தோன்றுகிறார்கள்; மறைகிறார்கள். அவர்கள் அனைவரையும் இந்த உலகம் நினைவில் வைத்துப் போற்றுவதில்லை; ஒரு சிலரை மட்டுமே நினைவில் வைத்திருக்கிறது; போற்றுகிறது; புகழ்கின்றது. காரணம் என்ன? அவர்களின் ஆற்றல்; அறிவு; பெருந்தகைமை; பொது நலப்பாங்கு; இரக்கத்தன்மை. இத்தகைய புகழுக்குரிய பண்புகளோடு அவர்கள் வாழ்ந்தார்கள்; புகழுக்குரிய செயல்களைச் செய்தார்கள்.

அடிமை நாடு விடுதலை பெற அல்லும் பகலும் பாடுபட்டார்; சாதி வேறுபாடுகளைத் தகர்த்தார்; மதப் போராட்டங்களைத் தடுத்தார்; தீண்டாமையை ஒழித்தார். அதற்காக உண்ணாவிரதமிருந்து தம் உடலையே வருத்திக்கொண்டார். அதனால் அண்ணல் காந்தியை ஊர் போற்றுகிறது; நாடு போற்றுகிறது; உலகமும் போற்றுகிறது.

மணிமுடியைத் துறந்தார்; மனைவி மக்களைப் பிரிந்தார்; மக்கள் படும் துன்பங்களுக்கெல்லாம் என்ன காரணம் என்பதைச் சிந்தித்தார்; அதற்காகப் பலநாட்கள் பட்டினி கிடந்தார்; உண்மையை அறிந்தார்; அதை ஊரெங்கும் உலகெங்கும் உபதேசித்தார்; தன்னலம் மறந்து பிறர் நலம் காத்தார். அதனால் சித்தார்த்தர் புத்தர் ஆனார்; போதிமரத்து அண்ணல் ஆனார். அவர் நெறியை இன்று உலகமே பின்பற்றுகிறது. அவர் மதமே பௌத்த மதமாயிற்று.

'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்றமைக்காகக் கல்லால் அடித்தனர்; சொல்லால் சுட்டனர்; மெக்காவிலிருந்தவரை மெதினா

வுக்கு ஓடச் செய்தனர்; ஆனால் அவரோ மாற்றாரையும் மன்னித்தார்; பகைவருக்கும் அருள் புரிந்தார்; முகமது, நபிகள் நாயகம் ஆனார். இன்று அவரை நாடு புகழ்கிறது; நானிலம் போற்றுகிறது; பகுத்தறிவாளரும் பாராட்டுகின்றனர்; நாத்திகர் எனப்படுவோரும் போற்றித் துதிக்கின்றனர்.

பிதாவின் மகனாகக் குடிசையிலே பிறந்தார்; வையத்துள் வாழ் வாங்கு வாழ மக்களுக்கு வழிகாட்டினார்; வானுறையும் தெய்வத்தை அடையும் நெறி கூட்டினார்; பாவிகளை மன்னித்தார்; பகைவர்களுக்கும் இரங்கினார்; குருடர்களுக்கு ஒளி தந்தார்; முடவர்களை நடக்கச் செய்தார். ஆயினும் இந்தப் பொல்லாத உலகம் அந்த நல்லவர் மீது இல்லாத பழியைச் சுமத்தியது. அவர் சிலுவையிலே அறையப் பட்டார்; அப்போதும் அவர் "இன்னதென அறிகில்லார் தாம் செய்வது; இவர் பிழையை மன்னியும்." என்றே பிதாவிடம் வேண்டிக் கொண்டார். மனித குமாரனாகப் பிறந்த ஏசு, தேவ குமாரனாகப் போற்றப்பட்டார். இன்று உலகமே அவரைத் தெய்வமாகப் போற்று கிறது. இன்று அவர் மதம் உலகமெங்கும் ஒளிவீசித் திகழ்கிறது.

இத்தகைய புகழுக்குரிய செயல்களைச் செய்து பெருமை பெற்றவர் களை நாமும் போற்றி மகிழ்கின்றோம். இவர்களே உண்மையாக உழைத்தவர்கள்; இவர்கள் பெற்ற உயர்வே உண்மையான உயர்வு.

உண்மையான பெருமை என்பது பணத்தினால் கிடைப்பதன்று; பதவியினால் கிட்டுவதன்று; பகட்டினால் பெறத்தக்கதும் அன்று. இவற்றால் வரும் பெருமை பொய்யான பெருமையாகும்; பொய்யான உயர்வு ஆகும்.

உண்மைப் பெருமை ஒருவர் உயிரோடு வாழும் காலத்திலும் இருக்கும்; அவர் மறைந்த பிறகும் நிலைபெறும். பொய்யான பெருமை பொய்யான உயர்வு - பொய்யான புகழ் என்றும் நிலைப்பதில்லை.

## 3. புகழை விரும்பாதார் யார்?

உலகில் புகழை விரும்பாதார் யாருளர்? எல்லாரும் விரும்பு கின்றனர். ஆயினும் புகழைப் பெறுவதற்குரிய வழியைத்தான் பலரும் அறியாதிருக்கின்றனர். அறிந்தும் நடைமுறைக்குக் கொண்டு வரும் மனமற்றவர்களாக இருக்கின்றனர். உண்மையான உயர்வினை உண்மையான புகழினை—உண்மையான பெருமையை ஒருவன் எப்போது பெறமுடியும்? எவனொருவன் தன் கடமைகளை ஒழுங்காகச் செய்கின்றானோ அவனே உண்மையான உயர்வை அடையமுடியும்.

படிக்கின்ற மாணவன் ஒழுங்காகப் படிக்காவிட்டால் தேர்விலே வெற்றி பெறமுடியுமா? முடியாது. அதைப்போலவே கடமைகளை

ஒழுங்காகச் செய்யாத ஒருவனல் உண்மையான பெருமையை அடையவும் முடியாது.

"புத்தரும் காந்தியும் போற்றுதற்குரிய ஏசுவும் நபியும் புகழுக் குரிய செயல்களைச் செய்தார்கள்; மாணவர்களாகிய நாங்கள் என்ன செய்ய முடியும்?" இப்படியொரு கேள்வி மாணவர்களாகிய உங்கள் உள்ளத்திலே எழலாம்.

அவர்களெல்லாம் மகாத்துமாக்கள்; ஆதலால் தன்னலத்தை முற்றும் துறந்தார்கள்; பிறர் நலத்தையே பெரிதும் நாடினர்கள். அத்தகைய தியாகத்தை உங்களால் செய்ய முடியாது என்பது உண் மையே; ஆதலால், நீங்கள் முதலில் உங்கள் நலத்தைப் போற்றுங்கள்; உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்; அத்துடன் பிறர் நலத்திலும் கவனம் செலுத்துங்கள்.

மாணவர்களே! நீவிர் முறையாகப் பாடங்களைப் படித்தல் வேண்டும்; காலம் தவருமல் கல்வி நிலையத்திற்குச் செல்லவேண்டும்; ஆசிரியரை மதித்தல் வேண்டும்; பெற்ருேரைப் பணிதல் வேண்டும்; எளியவர்க்கு உதவுதல் வேண்டும்; இனிய பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும். இவையெல்லாம் மாணவர்களாகிய உங்கள் கடமைகள் அல்லவா?

ஆகவே மாணவ மணிகளே!

நீங்கள் அண்டை அயலாரை நேசியுங்கள்; அவர்களுக்கு உங்களால் ஆன உதவியைச் செய்யுங்கள். பணத்தால் மட்டுமேதான் உதவ முடியும் என்பதில்லை. உழைப்பால் உதவலாம்; விட்டு கொடுக்கும் தன்மையால் உதவலாம்; ஆறுதல் தரும் பேச்சால்— அன்புக்குரிய செய்கையால் உதவலாம்.

தேவைக்கு மேல் பணத்தைச் சேர்த்து வைத்து அழகு பார்ப்பதை விட அதனை எளியவர்க்குக் கொடுத்து அவர் கொள்ளும் மகிழ்ச்சியைக் கண்டு நாம் மகிழலாம்; பணக்காரனுகப் பலகாலம் வாழ்ந்து சாவதைக் காட்டிலும் பரோபகாரியாகச் சிலகாலம் வாழ்ந்து சாவது மேல் அல்லவா? பணக்காரனுக இருந்தான் என்பதால் எந்தப் பெருமை யும் இல்லை; பரோபகாரியாக இருந்தான் என்பதிலே பெருமை உண்டு.

## 4. யாருக்கு உதவலாம்?

உதவி செய்தல் என்பது உயர்ந்த பண்புதான். ஆயின் யாருக்கு உதவி செய்யலாம்? எத்தகையவர்களுக்கு உதவி செய்யலாம்? எத்தனை பேருக்கு உதவி செய்யலாம்? நாம் எல்லாருக்குமே உதவி செய்யலாம்; அனைவருக்குமே நம்மால் ஆன உதவியைச் செய்யலாம். பாவிகளுக்கும் உதவி செய்யலாம்; விரோதி என்று நம்மால் கருதப் படுபவர்களுக்கும் நாம் உதவி செய்யலாம்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கனை அவர் நண்பர்கள் கோபித்துக் கொண்டனர். தன் விரோதிகளிடமும் ஆபிரகாம் லிங்கன் பெருந்தன்மையாக நடந்து கொள்கிறார் என்பதே அதற்குக் காரணம். விரோதிகளை அழிக்க வேண்டுமென்றே அந்த நண்பர்கள் ஆபிரகாம் லிங்கனிடம் வேண்டிக்கொண்டனர்.

அதற்கு ஆபிரகாம் லிங்கன் என்ன சொன்னார் தெரியுமா? "நான் விரோதிகளை அழிக்கத்தான் போகிறேன்; எப்படியெனின், அவர்களை என் நண்பர்களாக மாற்றுவதன் மூலம்." என்று கூறினார். மனித சமுதாயத்தையே நேசிக்க முடியாதவர்களால் இறைவனை நேசிக்க முடியுமா? முடியாதன்றோ! ஆதலின் முதலில் மனித சமுதாயத்தை நேசி; இறைவனை நேசிப்பாய்!

எப்படி உதவலாம்?

அடுத்தவருக்கு உதவி செய்வது எப்படி? நாம் செய்யும் சிறு உதவியும் பிறருக்குப் பேருதவியாக அமையலாம்; அற்பம் அற்பம் அன்றே! தாகத்தால் துடிப்பவனின் உயிரை நாம் தரும் தண்ணீர் காப்பாற்றும் அல்லவா? சிறு துரும்பே என்றாலும் பல் குத்தவவாது உதவுமே.

முதலில் நீங்கள் அடுத்தவர்களைப் பற்றி நல்லபடியாக நினையுங்கள். உங்கள் நினைவு புன்சிரிப்பாகும்; புன்சிரிப்பு அன்பு நிறை சொல்லாகும்; அன்பு நிறை சொல், பிறர்க்குதவும் அருஞ் செயலாக வெளிப்படும்.

அண்ணல் காந்தியைப் போல் நம்மால் பிறருக்குச் சேவை செய்ய முடியாமற் போகலாம்; ஆயினும் நம்மால் இயன்ற சேவை களைச் செய்யலாம்; அதனால் சீரான பெருமையை அடையலாம்.

நம்முடன் பயிலும் மாணவர்களுக்குப் பாடங்களில் ஏற்படும் ஐயங்களைப் போக்கலாம்; கல்வியறிவற்றவர்களின் அறியாமையை நீக்கலாம்; துயர் உறுவோர்க்கு ஆறுதல் வார்த்தை கூறலாம்; அவர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கலாம்; அவர்களுக்காக நாம் இரக்கப்படலாம்.

எளியவர்தம் பசிக்கு உணவளிக்கலாம்; தாகத்திற்குத் தண்ணீர் தரலாம்; உடுத்த உடையற்றவர்களுக்குப் பழைய ஆடைகளைத் தரலாம்; இருக்க இடமற்றவர்களுக்கு இடம் தரலாம்.

சிறைப்பட்டவர்களைப் பார்த்து ஆறுதல் கூறலாம்; நோய்வாய்ப் பட்டவர்களுக்குச் சிறு உதவிகளைச் செய்யலாம்; மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆறுதல் கூறலாம்.

இத்தகைய சிறு சேவைகள் மூலம் நம் கடமைகளை நாம்செய்யத் தொடங்கலாம். கடமைகளைத் தவருது செய்பவர்களே பெருமையை அடையத்தக்கவர்கள் ; புகழை அடையத்தக்கவர்கள்.

## செய்முறைப் பயிற்சி

1. திருமதி பங்கஜம் தன் கணவரை வேலைக்காரிக்கு எவ்வாறு அறிமுகப் படுத்தினர்? அதனல் நீவிர் அறிந்து கொண்ட தென்ன ?
2. இராசம்மாள் தன் வீட்டுத் தலைவரை எவ்வாறு அடையாளம் கண்டார் ?
3. 'உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல், என்பதை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகின்ருர் ?
4. புகழுக்குரிய செயல்களைச் செய்த தெய்வப் பிறவிகள் யாவர்? அவர்கள் செய்த செயல்கள் யாவை ?
5. உன் கடமைகள் யாவை ? அவற்றை நீ எவ்வாறு செய்வாய் ?
6. யாருக்கு உதவலாம் ? எப்படி உதவலாம் ?
7. நீ உன் கடமைகளாகச் செய்யும் செயல்கள் யாவை ?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி :**

1. வல்லவன் எனப் பெயர் பெறுவதைக் காட்டிலும் நல்லவன் எனப் பெயர் பெறுவதையே விரும்பு.
2. உயர்ந்ததை நினை ; உயர்ந்ததைப் பேசு; உயர்ந்ததைச் செய்.
3. பிறர்க்கு உதவி செய் ; பெரும்புகழ் காண்பாய் !

# ஆறு

# தன்னலத் தியாகம்

## 1. தன்னலம் இங்கே; பொதுநலம் அங்கே.

**தன்னலம் வளர்கிறது**

ஒருவன் காலையில் எழுகிறான்; காலைக்கடன்களை முடிக்கிறான்; நீராடுகிறான்; காலை உணவைக் களிப்போடு உண்ணுகின்றான்; பணியில் ஈடுபடுகின்றான்.

பகல் வருகிறது; பசி உண்டாகிறது; பல வகைப் பதார்த்தங்களோடு பகல் உணவை உண்ணுகின்றான்; உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? சிறிது நேரம் உறக்கம் கொள்ளுகின்றான்; மீண்டும் பணியில் ஈடுபடுகின்றான்.

மாலை நேரம்; "சூடாகவும் சுவையாகவும் ஏதேனும் இருந்தால் கொடு." எனக் கேட்கிறது வயிறு. பலகாரத்தையும் பக்குவமான சுவை நீரையும் அருந்துகின்றான். ஓடி ஆடலாமா? உல்லாசமாக நடக்கலாமா? என்று எண்ணுகின்றான்; ஏதேனும் ஒன்றில் ஈடுபடுகின்றான்.

இருள் சூழ்ந்தது; இரவும் வந்தது. வற்றல் குழம்பும் வகைவகையான காய்கறிகளும் அவன் வயிற்றை நிறைக்கின்றன. உள்ளத்து மகிழ்ச்சிக்கு ஓரிரு கதைகளைப் படிக்கிறான்; அல்லது ஊர்வம்பு பேசுகின்றான். உறக்கம் தழுவுகிறது; பஞ்சணை வரவேற்கிறது; உறங்குகிறான்.

ஒருவன் தன் உடலை வளர்ப்பதற்காக—தன்னலத்தைக் காப்பதற்காகச் செய்யும் பணிகள் இவை. தன்னுடல் நன்றாக இருக்க வேண்டும்; தனக்கு நல்ல உறக்கம் வேண்டும்; தனக்கு மகிழ்ச்சி வேண்டும் என்பதற்காகச் செய்யும் பணிகள் இவை. இவை தன்னலத்தின்பாற்பட்டவை. இங்கே எல்லாம் தனக்காகவே என்னும் தன்னலம் வளர்கிறது.

**அண்ணலும் வளர்த்தார்!**

"நாமெல்லாரும் இந்தியர்; நம் நாடு இந்தியா; நாமனைவரும் ஒரே இனம்." என்ற கொள்கைக்காகப் பாடுபட்டார் அண்ணல் காந்தி.

“இறைவன் ஒருவனே; எல்லா மதங்களும் இறைவன் ஒருவனைப் பற்றியே கூறுகின்றன; பெயர்கள்தாம் வேறு வேறு; உண்மைப் பொருள் ஒன்றே; ஆதலால் மதப் போர் வேண்டாம்; சகோதரர்களாக வாழ்வோம்.” என மதச் சமத்துவத்தை ஊட்டினுர் அண்ணல் காந்தி.

“முப்பது கோடி மக்களைப் பெற்றெடுத்த இந்தியத் தாய்; அவர்களுள் ஐந்து கோடி மக்களை மட்டும் தீண்டத்தகாதவர் என்றும் தாழ்த்தப்பட்டவர் என்றும் ஒதுக்கிவைப்பாளோ? ஐந்து விரல்களைப் பெற்ற கை, ஒரு விரலை வேண்டாமென ஒதுக்குவதுண்டோ? தீண்டாமை என்று சொல்வதே பாவம்; தீண்டத்தகாதவர் எனச் சிலரைச் ஒதுக்குவதோ மிகப்பெரும் பாவம்; அவர்கள் தீண்டத்தசாதவர் அல்லர்; அவர்கள் தெய்வத்தின் மக்கள்.” எனப் போதித்தார் அண்ணல் காந்தி.

ஆயினும் அவர்தம் அறிவுரைகளை மீறி, அறவுரைகளைத் தள்ளி, அருளுரைகளை மறந்து விந்தியத்தின் வடக்கே இந்துக்களும் மகமதியர்களும் ஒருவரோடு ஒருவர் மோதினர்; கொள்ளையும் கொலையும் பெருகின; இந்து மகளிரும் மகமதியப் பெண்டிரும் கற்பழிக்கப் பட்டனர். இவற்றையெல்லாம் அறிந்தார் அண்ணல் காந்தி.

“உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே.” என்று பாடிய மாந்தருக்கிடையே தோன்றிய மாணிக்கம், என்ன செய்தது தெரியுமா?

காந்தியார் உண்ணுவிரதத்தைத் தொடங்கினுர்; உயிர் பிரியினும் உண்ணுநோன்பினைக் கைவிடுவதில்லை என முடிவு செய்தார். உடலை ஓம்பித் திரிகின்ற உத்தமர்களுக்கிடையே தன் உடலை மன்னுயிர்க்காக வருத்திக்கொள்ளத் தொடங்கினுர். ஒரு நாளா? இரு நாட்களா? பல நாட்கள் பட்டினி கிடந்தார். ‘இந்துக்களும் இசுலாமியர்களும் என்று சகோதரர்களாக வாழத் தொடங்குகிறுர்களோ அன்று வரை இந்த உண்ணுவிரதம், என அறிவித்தார்.

நாளுக்கு நாள் உடல் மெலிந்தது; உயிர் ஊசலாடத் தொடங்கியது. எனினும் அவர் உண்ணுவிரதத்தைக் கைவிடவே இல்லை.

அண்ணல் காந்தியார் தன் உடலை வருத்திக் கொண்டாரே யாருக்காக? தனக்காகவா? இல்லை. பிறருக்காக. பிறருக்காகத் தன்னலத்தைத் துறந்தார்; தன்னலத்தைத் தியாகம் செய்தார்.

அவர் தியாகத்தால் இந்துக்களும் இசுலாமியர்களும் ஒன்றுபட்டனர்; உறவாடத் தொடங்கினர்.

புறநானூற்றிலே ஒரு பாடல்,

"உண்டால் அம்ம இவ்வுலகம்"

என்று தொடங்குகிறது. இந்த உலகம் நிலைத்திருக்கிறது; ஆண்டாண்டுக் காலமாக நிலைத்திருக்கிறது; அழிவின்றி நிலைத்திருக்கிறது. எதனால்? அதற்கு விடையும் கூறுகிறது அப்பாடல்.

"தனக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே."

என்று கூறுகிறது. தன்னலம் கருதாத பிறர் நலம் போற்றும் தியாக மனப்பான்மை கொண்டவர்களால்தான் இந்த உலகம் நிலை பெற்றிருக்கிறது எனக் கூறுகிறது புறநானூறு.

## 2. தியாகம் என்றால் என்ன?

நாம் ஒன்றை மிகவும் விரும்புகின்றோம். அதனைப் பிறருக்காகவோ நாட்டுக்காகவோ விட்டுக் கொடுக்கின்றோம். அந்தப் பரந்த மனப்பான்மையே தியாகம் ஆகிறது. விட்டுக்கொடுக்கக் கூடியவை உடலாகவும் இருக்கலாம்; பொருளாகவும் இருக்கலாம்; உயிராகவும் இருக்கலாம்; பொன்னினும் சிறந்த காலமாகவும் இருக்கலாம்.

தன்னலத்தை மறுத்துப் பிறர் நலத்தைப் போற்றுபவர்களாலே தான் உலகம் நிலைத்திருக்கிறது என்று பார்த்தோம்.

கோழி கூவுகிறது; அன்னை எழுகிறாள்; இல்லத்தைச் சுத்தம் செய்கிறாள்; அடுப்பை மூட்டுகிறாள்; அனைவருக்கும் உணவைச் சமைக்கிறாள்.

உன்னைக் குளிப்பாட்டுகிறாள்; உனக்குத் தூய ஆடையை உடுத்துகின்றாள்; உணவளித்து உண்ணச் செய்கிறாள்; ஓய்விருந்தால் உனக்குப் பாடம் சொல்லித் தருகின்றாள்.

உனக்குத் தலைவாரிப் பூச்சூடுகின்றாள்; 'பாடசாலைக்குப் போ' என்று அனுப்பி வைக்கின்றாள். தான் உண்ணவேண்டும் என்பதை மறக்கிறாள்; தன் உடல் நலிவை மறக்கிறாள். அவள் தனக்காக எதையும் செய்யவில்லை; மற்றவர்களுக்காகவே அனைத்தையும் செய்கிறாள்.

மாம்பழம் உண்பதிலே தாய்க்கு மாறாத ஆசை உண்டு. மருத்துவர் சொல்லுகிறார், "நீ மாம்பழம் உண்டால் உன் குழந்தைக்கு மாந்தம் வந்துவிடும்." என்று குழந்தைக்காக தன்னலத்தை மறக்கிறாள். தன் ஆசையைத் துறக்கிறாள்.

குழந்தை நோயால் வருந்துகிறது. மருத்துவர் சொல்கிருர்; 'தாய் பத்தியம் காக்க வேண்டும்; இன்னின்ன பொருள்களை உண்ணக் கூடாது; இன்னின்ன காரியங்களைச் செய்யக்கூடாது' என்று. தன் குழந்தைக்காகத் தாய் தன் நலத்தையே தியாகம் செய்கிருள்.

அதனுல்தான் 'அன்போடு கூடிய உடலே உயிரோடு கூடிய உடலாகும். அன்பற்ற உடலோ எலும்பின்மேல் தோலால் போர்க் கப்பட்ட உயிரற்ற உடலாகும்' என்று வள்ளுவர் கூறுகின்ருர். ஆகவே அன்பின் அடிப்படையிலே தோன்றுவதே தியாகம் என் பதை அறிதல் வேண்டும்.

அன்பு என்னும் பண்பு அற்றவர்கள் எல்லாப் பொருள்களாலும் தமக்கே உரியராயிருப்பர்; அன்புடையவர்களோ தம் உடம்பாலும் பிறர்க்கு உரியராயிருப்பர். இதனையே திருவள்ளுவர்,

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

என்று கூறுகின்ருர்.

அன்பின் அடிப்படையில் கட்டப்படுவதே தன்னலத் தியாகம் ஆகும். தாய் தன் மக்களுக்காக—தன் கணவனுக்காக தன் உடல் பொருள் ஆவி நேரம் ஆகிய அனைத்தையும் தியாகம் செய்கிருள். ஒரு தந்தை தன் மக்களுக்காக—தன் மனைவிக்காக தன் உழைப்பு முழுவதையும் தியாகம் செய்கிருர்.

இஃது சிறு வட்டத்திற்குள் செய்யப்படும் தன்னலத் தியாகம்; பிறர் நலம் போற்றும் பண்பு. இவற்றினும் ஊருக்காக நாட்டுக்காக உலகுக்காக உலகஉயிர்கள் உய்வதற்காக-தன்னலத்தை மட்டுமன்று தன்னையே தியாகம் செய்தவர்கள் நம்மால் போற்றத்தக்கவர்கள் அல்லவா? புகழத்தக்கவர்கள் அல்லவா? தெய்வமெனத் தேடி வணங்கத் தக்கவர்கள் அல்லவா?

## 3. துன்பங்களைத் துடைக்க வந்த தூயவர்கள்

**கருணைக் கடல்**

முதியவன் ஒருவன் வழியே நடக்கிருன். நரைத்த தலைமுடி; சுருங்கிய தசை; குழி விழுந்த கண்கள்; ஒட்டிய கன்னம்; நடுங்கும் உடல்; நடக்க முடியாத நடை; தள்ளாடி நடக்கிருன்; தடியூன்றி நடக்கிருன்.

முதியவனைக் காண்கின்றது ஓர் அன்பின் உருவம். இவன் ஏன் இப்படித் தள்ளாடுகிருன்; இவனுக்கு முதுமை வந்துவிட்டது;

முதுமை வாராமல் தடுக்க வழியே இல்லையா? எண்ணி எண்ணிப் பார்க்கிறது அந்த அன்பின் பேருருவம்.

சங்கொலி கேட்கிறது; தாளம் ஒலிக்கிறது. பாடை ஒன்றை நால்வர் சுமந்து செல்கின்றனர்; உற்றாரும் உறவினரும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் உடன் வருகின்றனர். ஏன் இவர்கள் துயரக் கோலத்தோடு வருகிறார்கள்? பாடையின் மேலே ஒருவன் படுத்திருக்கிறான்; அவன் உடலில் உயிர் இல்லை; அவன் இறந்து விட்டான்; அவனை இடுகாட்டிற்கோ சுடுகாட்டிற்கோ கொண்டு செல்கிறார்கள். அவன் வாழ்வு அன்றோடு முடிந்தது.

'பிறந்தவர்கள் இறந்துதான் ஆகவேண்டுமா? சாக்காட்டைத் தவிர்க்கவே முடியாதா? அதைத் தவிர்ப்பதற்கு ஒரு வழி காண்பேன்' என உறுதி கொள்கிறது அந்த அன்பின் திருவுருவம்.

கையிலே பிச்சைப் பாத்திரம்; 'அம்மா! தாயே!' எனும் கெஞ்சல் மொழி; அதனையும் கூற முடியாமல் இடையிடையே இருமல்; உடலெல்லாம் ஒரே புண் மயம்; அதிலிருந்து சீழும் இரத்தமும் கசியும் காட்சி. அதனால் அந்த எளியவன் படும் துயரம். பிணியாளனின் பெருந்துயரைக் கண்டு கலங்குகிறது அந்தப் பெரிய உள்ளம். "மனிதனைப் பிடித்திருக்கும் இந்தப் பிணி நீங்க வழியே யில்லையா? இல்லாமல் எப்படிப் போகும்? காண்பேன் ஒரு வழி." என உறுதி கொள்கிறது அந்த உள்ளம்.

எங்கு நோக்கினும் பிணி, மூப்பு, சாக்காடு, வறுமை, துயரம் இவற்றைப் போக்கத் தன்னலத்தைத் துறக்கிறது அந்தத் தூய உள்ளம்.

ஆம்! சித்தார்த்தர்தாம் அந்தத் தூய உள்ளத்திற்கு உரியவர்; சித்தார்த்தர்தாம் அந்த அன்பின் திருவுருவம்; சித்தார்த்தர்தாம் அந்தக் கருணைக் கடல்.

அவருக்கு என்ன இல்லை? உரிமையான நாடு உண்டு. ஊரெல் லாம் போற்றும் செல்வாக்கு உண்டு; எடுபிடி ஆட்கள் உண்டு; ஏவலர் பலரும் உண்டு.

அழகுமனைவி; ஆசைமகன்; பாசம் காட்டும் தந்தை; மாட மாளிகை கூடகோபுரம் அமைந்த மகத்தான அரண்மனை; ஆடம்பரப் பொருள்கள்; அந்தபுரத்து அழகிகள் அத்தனைக்கும் சொந்தக்காரர் சித்தார்த்தர். இல்லாதன இல்லை அவருக்கு; எண்ணமறிந்து முன்ன தாக எதையும் கொண்டு வந்து தரும் ஏவலர் பலர் உண்டு; காவலர் பலர் உண்டு.

ஆயினும் சித்தார்த்தர் உள்ளம் உலகநலம் நாடியது; உயிர்களின் நலம்நாடியது. உலகமக்களின் துன்பங்களைத் துடைக்க வழிதேடியது. தன்னலத்தைத் தியாகம் செய்யத் துணிந்தது.

மனைவியின் சுகத்தை ஒதுக்கியது; மகனின் அன்பையும் மறந்தது. அரசபோகத்தை—ஆட்சியின் பெருமையைத் துறந்தது; காடுநோக்கி நடந்தது; உடலை வருத்திப் பெருந்தவம் செய்தது; காலம் நேரம் இன்றிக் கடுந்தவம் புரிந்தது.

பொது நலத்திற்காக—பிறர் நலத்திற்காகத் தன் உடலைத்தியாகம் செய்தது; தன் பொருளைத் தியாகம் செய்தது; தனக்குரிய நேரத்தை யும் செலவு செய்தது.

அந்தப் பேருள்ளத்தின் பெருந்திருவுருவமே புத்தர் பெருமான்; ஆசியப்பெருஞ்சோதி; பௌத்தமதத்தை உருவாக்கிய பரந்தாமன்.

சிலுவையைச் சுமந்த செம்மல் !

இன்று அகில உலகப் பெருஞ்ஜோதியாக ஆண்டவரின் திருக் குமாரராக ஏசுபெருமான் போற்றித் துதிக்கப்படுகிறார்; புகழ்ந்து வணங்கப்படுகிறார்.

தேவகுமாரன் மனித குமாரனாகப் பிறந்தார்; பாவிகளுக்காக இரங்கினார்; அவர்களைப் பாவத்திலிருந்து மீட்கும் வழியைத் தேடினார்; அவ்வழியை மக்களுக்குக் காட்டினார். மற்றவர்தம் பாவங் களுக்காகத் தன்னையே வருத்திக் கொண்டார்.

இரக்கமே ஒருருவான அந்தத் திருவுருவம், ஜெருசலேம் நகரத்து வீதியிலே சிலுவையைச் சுமந்து சென்றது; பொல்லாத யூதர்களாலும் போர்ச்சேவகர்களாலும் இல்லாத பழியைச் சுமந்தது; முள் முடியைத் தலையில் ஏற்றது; சாட்டை அடிகளை உடலிலே ஏற்றது; தரையிலே இரத்தம் சிந்தியது; சிலுவையிலே வைத்து ஆணியால் அறையப் பட்டது. தாகத்தால் வருந்தித் தவித்தது; காளான் கலந்த நீரைக் கனிவோடு அருந்தியது; மக்கள் நலத்திற்காக—பாவிகளை மீட்பதற் காகத் தன்னுயிரையே தியாகம் செய்தது.

அந்த நேரத்திலும் அந்த உள்ளம் மற்றவர்களுக்காகவே இரங் கியது; பாவிகளின் பாவங்களை மன்னிக்குமாறு இறைவனை வேண் டியது. ஆம்! தெய்வத் திருக்குமரன் ஏசுபெருமானின் தன்னலத் தியாகமே அது.

மாணவர்களே! வரலாற்று ஏடுகளைப் புரட்டினால் தன்னலந் துறந்து பொதுநலங்காத்த புண்ணிய சீலர்களின் வரிசை, தொடர் கதையாகவே வளரும்.

தன் சமுதாயத்திற்காக—தன் இனத்திற்காக—தன் நாட்டிற்காக தன் மொழிக்காக—உலகமக்களின் உயர்வுக்காக தன்னலம் துறந்த தியாகிகள் எத்தனைபேர் ? அதோ அண்ணல் காந்தியார்; அருந்தவச் செல்வி மணிமேகலை; அரியணையைத் துறந்த இளங்கோவடிகள்; கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி; கனிவான ஆட்சி கண்ட பேரறிஞர்

அண்ணு; எளியவரும் கல்விநலம் காண வழிவகை செய்த காமராசர்; சுதந்தரத்தீயில் குதித்தெழுந்த அமரர் நேரு; அறிஞர் இராஜாஜி... இப்படிப் பெயர்ப்பட்டியல் நீண்டு கொண்டே போகும்; அவர்தம் தியாகச் செயல்களும் வரலாற்றை வளர்க்கும்.

அவ்வளவு பெரிய தியாகிகளாக நீங்கள் ஆகாவிட்டாலும் பிறர் நலம் போற்றும் பெரும் பண்பைப் பெறலாம் அல்லவா ?

## 4. தன்னலம் துற ; பிறர் நலம் போற்று.

மாணவர்களே ! நீங்கள் இளமையிலேயே தேவையற்ற ஆசைகளை வளர்த்துக் கொள்கிறீர்கள் ! பெறுதற்கரிய தியாகப் பண்பை வளர்த்துக் கொள்ள முயற்சிப்பதில்லை. தியாகப் பண்பை வளர்த்துக் கொள்வதால் தன்னல இழப்பு ஏற்படுவது உண்மைதான். ஆயினும் அதனுல் வரும் பெருமை பெரிதல்லவா ? அதனுல் உண்டாகும் புகழ் உயர்ந்ததல்லவா ?

நாம் பேருந்து வண்டியிலே பயணம் செய்கிருேம்; நமக்கு உட்கார இடம் இருந்தது; வசதியாக உட்கார்ந்து இருக்கிருேம். வயதான பெரியவர் ஒருவர் பேருந்திலே ஏறுகிருர்; பயணச் சீட்டும் வாங்குகிருர். உட்கார இடம் இல்லை; நின்று கொண்டே வருகிருர். வயதானவர்; பெரியவர் — அவருக்கு உட்கார இடந்தருவது நம் கடமை. அவருக்கு உட்கார இடம் கொடுத்தால் நாம் நிற்கவேண்டியிருக்கும். நம் நலம் பாதிக்கப்படும்.

கொஞ்ச நேரம்தானே நாம் நின்று கொண்டு வரலாம்; பெரியவர் உட்காரட்டும் என்னும் தன்னலத் தியாகம் உங்களுக்கு ஏற்படுதல் வேண்டும்.

உன்னலம் உன்சுகம் பற்றிய எண்ணமே உன்னைச் சுற்றிச் சுற்றி வருமாயின் உன் தியாக உணர்வை அது அழித்துவிடும். உன்னலம் பற்றிய நினைவும் உன்சுகம் பற்றிய எண்ணமும் உன் உள்ளத்திருந்து நீங்கிஞல்தான் உன் உள்ளத்தில் தியாக உணர்வு உண்டாகும்.

இந்த ஆண்டு ஏற்பட்ட புயலிலும் வெள்ளத்திலும் தன்னலம் கருதாது பிற உயிர்களைக் காத்த எத்தனை நன்னெஞ்சங்களைப் பற்றிச் செய்தித்தாளில் படித்தோம்.

தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிருர் ஒரு முதியவர்; ஓர் இளைஞன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் வெள்ளத்தில் குதித்து அந்த முதியவரை மீட்கிருன். அடுத்து அடுத்துப் பலரையும் காக்கின்ருன்.

வீட்டிலே வெள்ளம் புகுகிறது; உள்ளே இருக்கிறது சின்னஞ் சிறு குழந்தை; கதறுகிறது; காப்பவர் யாருமில்லை. ஒரு காவலன் தன் உயிரையும் துரும்பாக மதித்து அந்தக் குழந்தையைக் காக்கிறான்.

இத்தகைய தன்னலங் கருதாத தியாக உணர்வுதான் மனித சமுதாயத்தை வளர்க்கிறது; வாழச் செய்கிறது

பக்கத்து மாணவன் பட்டினியாக இருக்கிறான்; நீ மட்டும் பகல் உணவைப்பக்குமாக உண்ணுகின்றாய். அப்போது உன் மனம் கூசுவதில்லையா? பகுத்துண்டு வாழும் வாழ்வை நூலோர் தொகுத்த வற்றுள் எல்லாம் தலை என்று வள்ளுவர் கூறியிருப்பது நினைவுக்கு வரவில்லையா?

வருமாயின் நீ என்ன செய்யலாம்? பசியோடு இருப்பவனுக்கும் கொஞ்சம் பகுத்துக் கொடுக்கலாம்; நீயும் ஒரு பகுதியை உண்ணலாம். அஃது உன் உள்ளத்திலே தியாக உணர்வை வளர்க்கும்.

வறிய குடியிலே பிறந்த தாய்மார் சிலர் இருக்கிற உணவைத் தன்குழந்தைகளுக்கும் கணவனுக்கும் கொடுத்துவிட்டுத் தான்மட்டும் பட்டினி கிடக்கும் அந்தத் தியாக உணர்வு உனக்குத் தெரியாதா?

அந்தத் தாய்ச் சமுதாயத்தின் வயிற்றில் பிறந்த நீயும் தன்னலத்தை விடு; பிறர்நலத்தைப் போற்று. இறைவன் உன் நலம் காப்பான்; உயர்ந்த பெருமையை உனக்கு அளிப்பான்.

## செய்முறைப் பயிற்சி

1. *தன்னலம் எங்கே வளர்கிறது? எவ்வாறு வளர்கிறது?*
2. *அண்ணல் வளர்த்த பொதுநலம் எது?*
3. *அன்னையின் தன்னலத் தியாகத்தை விளக்குக.*
4. *கருணைக் கடலின் உள்ளத்தை விளக்குக.*
5. *சிலுவையைச் சுமந்த செம்மல் யார்? அவர் பட்ட இன்னல்கள் யாவை?*
6. *ஆசிய ஜோதி புத்தரும் அகிலவுலகப் பேரொளி ஏசுவும் பாரத ஜோதி காந்தியும்—தன்னலத் தியாகிகள் என்பதை நீ உணர்கிறாயா? அவர்கள் தன்னலத் தியாகத்தின் வரலாற்றைப் படித்துணர்.*
7. *பள்ளி மாணவனாகிய நீ தன்னலத் தியாகங்கள் எவையேனும் செய்ததுண்டா?*
    1. *நீ உண்ணும் இடத்தில்.*
    2. *படிக்கும் வகுப்பறையில்.*
    3. *நடக்கும் பாதையில்*
    4. *பேருந்தில் செல்லும் போது.*
    5. *வீட்டில் இருக்கும் போது.*

    *நினைவு படுத்திக் கூறு. இல்லையென்றால் இனியேனும் தன்னலத் தியாக வாழ்வைத் தொடங்கு.*

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி :**

1. *உன் உடன் பிறந்தவர்களுக்காக விட்டுக் கொடு.*
2. *உன் உடன் பயிலும் மாணவர்களுக்காக விட்டுக் கொடு.*
3. *உன்னினும் மூத்தவர்களுக்காக உன் நலத்தைத் தியாகம் செய்.*
4. *ஏழை எளியவர்களுக்காக உன் நலத்தைக் குறைத்துக் கொள்.*
5. *உன்னலம் போற்றும் தாயைப் போற்று.*

ஏழு

# உடல் நலம் பேணுவோம்!

## 1. நம் உடல் நமக்குச் சொந்தமா?

நம் உடல் நமக்குச் சொந்தமானதுதான்; ஆயினும் அது நம்முடையதன்று. தாயும் தந்தையும் நம்உடலை உருவாக்கினர்கள்; அந்த உடலுக்கு வேண்டிய உணவைக் கொடுத்தார்கள்; அதனை வளர்த்தார்கள். அவர்களுக்கு அந்த உடல் சொந்தமா? அன்று! அன்று!

அழகான தோட்டம்; அங்கு மரம் செடி கொடிகள் உண்டு; மணக்கும் மலர் தரும் செடிகள் உண்டு; காய்த்துக்கனி குலுங்கும் மரங்கள் உண்டு. அவற்றிற்கு எல்லாம் தோட்டக்காரன் எருவிட்டு நீர்ப்பாய்ச்சுகிருன்; ஆடு மாடுகள் அழித்து விடாமல் வேலியிடுகிருன்; கண்ணும் கருத்துமாகக் காத்து வருகிருன். அதனல் அந்தத் தோட்டம், தோட்டக்காரனுக்குச் சொந்தமாகி விடுமா? சொந்தமாகாது. அந்தத் தோட்டம் உரியவனுக்கே சொந்தமானதாகும்.

உனக்கு உருவத்தைக் கொடுத்தவர்கள் உன் பெற்ருேர்; அதை ஊட்டி வளர்த்தவர்கள் உன் பெற்ருேர்; ஆயினும் உன் உடல் அவர்களுக்கும் உரியதன்று. நீ பெற்றிருப்பது உன்னுடைய உடல்தான்; ஆயினும் அஃது உனக்குச் சொந்தமானதுதான் என்று கூற முடியாது. ஏன்? கழனியிலே நெற்பயிர் விளைக்கிருேம். கதிர் விட்டு முற்றுகிறது; அறுவடை செய்கிருேம். அதற்கென ஒரு காலம் கணிக்கப்பட்டிருக்கிறது.

மரம் பூக்கிறது; காய்க்கிறது; கனிகளைப் பழுக்கிறது. அதைப் பறித்துச் சுவைக்கிருேம். அக்கனிகளுக்கும் ஒரு காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் மனித உடலும் உயிரும் ஒன்றை விட்டு ஒன்று என்று பிரியும்? யாராலும் கணக்கிட்டுக் கூற முடியாது.

குழந்தை பிறந்தது; வளர்ந்தது; வாழ்ந்தது; நூருண்டாயிற்று; இறந்தது என்ற வரையறை உண்டா? இல்லை. பால் குடித்த குழந்தை, தாயானவள் பதறித் துடிதுடிக்கச் சாகிறது. பதினறு

வயது கட்டிளங்காளை; கல்யாணத்திற்குரிய பருவம்; காலரா வந்தது; மண்ணோடு மண்ணாகிறான். நாற்பது வயதுதான்; நான்கு குழந்தைகளுக்குத்தாய்; குழந்தைகள் கதறக்கதற அந்தப் புண்ணியவதியை எமன் கொண்டு போய் விட்டான்.

ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்! — வேண்டாம்
நமக்கும் அதுவழியே நாம் போம் அளவும்
எமக்கென் னென்றிட்டுண்டிரும்.

என்று பாடிய ஔவைப் பாட்டியின் மொழி நமக்கு என்ன கூறுகிறது. நம் உடல் நமக்குச் சொந்தமன்று; அதற்குச் சொந்தக்காரன் ஒருவன் இருக்கிறான்; அவனே அதை ஆக்கவும் அழிக்கவும் வல்லவன்; அந்த உடல் வாழும் நாளையும் போகும் நாளையும் வரையறைப் படுத்துபவன்; அவனே இறைவன். ஆகவே இந்த உடல் நமக்கு இறைவன் இட்ட பிச்சை; பிறருடைய பொருளை இரவலாகப் பெற்றிருக்கிறோம். அதனைப் பேணிக்காத்தல் நம் கடமையல்லவா? அடுத்தவன் புத்தகத்தைப் படிக்கத்தான் வாங்கினோம்; அதைக் கிழிக்காமல் பத்திரமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அது நம் கடமை.

**அழகிய கடிகாரம்**

உன் தந்தை உனக்கு அழகிய கடிகாரம் ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார். அது தங்கச்சங்கிலியோடு இருக்கிறது; தங்க முலாம் பூசப்பட்டிருக்கிறது; சரியான நேரத்தைக் காட்டுகிறது.

நீ குறித்த நேரத்தில் படுக்கையை விட்டு எழ உதவுகிறது; குறித்த நேரத்தில் நீ உண்ணுவதற்கும் பயன்படுகிறது; காலந் தவறாமல் பள்ளிக்குச் செல்லும் காலத்தைக் காட்டுகிறது.

நீ அதை என்ன செய்கிறாய்? பள்ளிக்குச் செல்லும் போது கையில் கட்டிக் கொண்டு செல்கிறாய்; வீட்டிற்கு நீ திரும்பி வந்ததும் அதைக் கழற்றிப் பத்திரமாக வைக்கிறாய்; ஒவ்வொரு நாளும் அதற்குச் சாவி கொடுத்துக் கணக்காக ஓடவைக்கிறாய்; அது கையில் இருக்கும் பொழுதும் கழற்றி வைக்கும் பொழுதும் தவறி வீழ்ந்தால் உடைந்து விடும்; அதனால் அதைப் பத்திரமாகப் பாதுகாக்கிறாய்.

உன் தந்தை உனக்கு வாங்கிக் கொடுத்த கடிகாரத்தை எத்துணை பாதுகாப்பாக வைத்திருக்கிறாய். அதைப்போல இறைவன் உனக்கு அளித்த உடலைப் பாதுகாப்பதும் உன் கடமை அல்லவா?

கடிகாரத்திற்குக் காலம் தவறாமல் சாவி கொடுப்பதைப் போல உன் உடலுக்கும் வேளை தவறாமல் உணவளிக்க வேண்டாமா? கடிகாரத்தைப் பாதுகாப்பது போல உன் உடலையும் நீ பாதுகாக்க வேண்டாமா?

ஒரு கடிகாரம் தொலைந்து விட்டால் இன்னொரு கடிகாரத்தை உன் தந்தை உனக்கு வாங்கிக் கொடுத்து விடுவார்; அல்லது நீயே வாங்கிக்கொள்வாய். உன் உடல் மறைந்து விட்டால் அதை மீண்டும் உன்னால் பெற முடியாது. ஆகவே இறைவன் கொடுத்த உடலைப் பேணிக் காத்தல் இன்றியமையாத கடமை என்பதை நீ உணர வேண்டும்.

சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய முடியும்; உடலை வைத்துத்தானே உயிர் வாழ முடியும். உடம்பார் அழிந்தால் உயிரார் அழிந்து விடுவார்; அதனால்தானே 'உடம்பை வளர்த்தேன்; உயிரை வளர்த்தேன்' என்று திருமூலர் செப்பிச் சென்றுள்ளார்.

நேற்று இருந்தார் இன்று இல்லை; இன்று இருக்கின்றவர் நாளை இருப்பார் என்ற உறுதியில்லை. இத்தகைய பெருமையை உடைய தாயிற்றே இந்த உலகம்.

> நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
> பெருமையுடைத் திவ்வுலகு.

என வள்ளுவர் வாய் மொழியே இதனைப் பறைசாற்றுகின்றதே.

இருக்கின்ற நாட்கள் இறைவன் நமக்கு அளித்த பரிசு நாட்கள்; அவற்றை நாம் இன்பநாட்கள் ஆக்கிக் கொள்ளவேண்டாமா? இன்ப வாழ்க்கையின் அடிப்படையே நம் உடல்தான். அதை நாம் மறந்து விடுகின்றோம்; அதனால் துயர்ப்படுகின்றோம்.

### உடல் நலம் பேணுக!

நாம் நல்ல உடலைப் பெறவேண்டும்; நலத்தோடு வாழவேண்டும்; நலிவின்றி வாழவேண்டும்; வலிவோடு வாழ வேண்டும்; வனப்போடு வாழவேண்டும். ஆயின் நாம் உண்ணும் உணவு சத்துடையதாக இருக்கவேண்டும். நம் உடலுக்கு நாள்தோறும் பயிற்சி கொடுக்க வேண்டும்; நல்ல பழக்கங்களையும் கைக்கொள்ள வேண்டும்; தீய பழக்கங்களை ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும். இவற்றை முறையே கைக் கொண்டால் நம் உடல் வலிவும் பெறும்; பொலிவும் பெறும்.

### உணவு நலம் காண்போம்!

தூய்மையான சத்து நிறைந்த உணவுப் பொருள்களை உண்ண வேண்டும். நம் உணவில் காய்கறிகள், கீரை வகைகள், பருப்பு வகைகள் மிகுதியாக இருத்தல் வேண்டும்.

நேரம் தவறாமல் குறித்த நேரத்தில் உண்ணும் வழக்கத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். நாம் உண்ட உணவு ஜீரண மாயிற்றா என்பதை அறிந்து உண்ணவேண்டும்; உடல் ஏற்றுக்

கொள்ளத்தக்க அளவறிந்து உண்ண வேண்டும். அதுவே மனித உடலை நீண்டகாலம் வாழ வைக்கும் வழியாகும்,

அளவுக்கு மீறி உண்ணுவது உடலுக்குக் கேட்டைவிளைக்கும். அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சுதானே. அளவிற்குக் குறைவாக உண்டாலும் உடலுக்குக் கேடே உண்டாகும்; உடல் மெலிந்துவிடும். ஆகவே 'மிகினும் குறையினும் நோய் செய்யும்.' என்பதை அறிந்து அளவோடு உண்ணுதல் வேண்டும்.

உடலுக்கு நலம்தரும் பழச்சாறு, பால்போன்றவற்றை அருந்துதல் வேண்டும். தேநீர், காபி போன்றவற்றைத் தீதென ஒதுக்குதல் வேண்டும். நாவின் சுவை விரும்பிக் கண்ட பொருள்களை நினைத்த நேரத்தில் உண்ணுகின்ற பழக்கம் மிகவும் கொடியதாகும்; அஃது உடல் நோயை உண்டாக்கும்.

சுத்தமான நீரை அடிக்கடி அதிகமாக அருந்துதல் வேண்டும்; அஃது உடலுக்கு நலம் விளைக்கும்.

நல்ல பழக்கங்கள்

வைகறைத்துயிலெழு; கதிரவன் ஒளிபடுமாறு சிறிது தூரம் நட; மலசலத்தை முறையாகக் கழி; பல்துலக்கு; தூய தண்ணீரில் குளி; நாள்தோறும் இவற்றைக் காலைக் கடமைகளாகக் கொள்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

ஆதலின், அன்னை தந்தையருக்கு வணக்கம் கூறு; ஆண்டவனுக்கு உன் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்து.

"காலை எழுந்தவுடன் படிப்பு; பின்னர்க் கனிவு தரும் நல்ல பாட்டு" என்றுபாடிய பாரதியாரை மறந்து விடாதே. இளமையிற்கல்; எழுந்ததும் படி; கற்பதற்குரிய நேரம் காலைப்பொழுதே ஆகும்.

காலையில் சிற்றுணவை உண்; கல்விக் கூடத்திற்குக் காலத்தோடு செல்; கற்க வேண்டியவற்றைக் கற்றிடு; ஆசிரியரை மதித்திடு; அவர் சொல்வதைக் கேள்.

மாலை முழுதும் விளையாட்டு—இதை
வழக்கப்படுத்திக் கொள்பாப்பா.

என்று பாடினர் பாரதியார். ஆதலால் மாலை நேரத்தில் நன்றாக விளையாடு. அஃது உனக்கு உடற்பயிற்சியாகும்.

## 3. விளையாடலாமா ?

மாலை முழுவதும் விளையாட வேண்டும். என்ன விளையாட்டு விளையாடுவது ? பள்ளிக்கூடத்தில் பயிற்றுவிக்கும் விளையாட்டுகளைத்

தவிர அவரவர் உடல்நிலைக்கு ஏற்றவிளையாட்டுகளைத் தேர்ந்தெடுத்து விளையாடலாம்.

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் முறையான உடற் பயிற்சிகளைச் செய்தல் வேண்டும். உடற்பயிற்சி செய்வதால் இரத்தத்தோடு கலந்துள்ள கழிவுப் பொருள்கள் தோல் வழியே வியர்வையாக வெளியேறுகிறது. நுரையீரல் வழியாகக் கரியமிலவாயு வெளியேற்றப்படுகிறது. பிராணவாயு குருதியாக இரத்தத்தில் புகுகிறது. அதைப்பெறும் தசைகள் சக்தியை வெளிப்படுத்துகின்றன.

உடற்பயிற்சியால் தசைகள் விரிகின்றன; சுருங்குகின்றன. அதனுல் தசைகளும் நரம்புகளும் வலிவு பெறுகின்றன. உடற் பியிற்சி செய்பவன் வலிமையான உடலையும் வனப்பான உடலையும் பெறுகின்ருன். ஆகவே உடற்பயிற்சி ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் விளையாட்டுகளோடு வேறு சில உடற்பயிற்சிகளையும் செய்யலாம்.

காலை எழுந்து நீராடியவுடன் சிலர், சூரியநமஸ்காரம் செய் கிருர்களே ஏன் தெரியுமா? சூரியன் வெப்பம் உடலில் பட்டு வியர்வை வெளிப்படுவதற்காகத்தான். அதுவும் ஓர் உடற்பயிற்சி யேதான்.

பிள்ளையார் கோவிலுக்குச் சென்று தோப்புக்கரணம் போடுகிருர் களே சிலர். அஃது எதற்கு? அதுவும் ஓர் உடற்பயிற்சியேதான்.

அரசமரத்தையும் அம்மன் கோவிலையும் சுற்றிச் சுற்றி வருகிருர்களே ஏன்? தெய்வத்தை வணங்குவதற்காக மட்டுமன்று; அத்துடன் உடற்பயிற்சிக்காகவும்தான் சுற்றிவருகிருர்கள். உடற்பயிற் சியின் இன்றியமையாமை கருதியேதான் நம் முன்னேர்கள் அதனைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்தியுள்ளனர். அதனுல் தெய்வத்தையும் வணங்குகிருேம்; தேகத்தையும் வளர்த்துக் கொள்கிருேம்.

'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு' என்பது உண்பதற்கு மட்டும் கூறப்பட்டதன்று; உடற்பயிற்சிக்கும்தான். உடற்பயிற்சியை நம் உடல் ஏற்றுக்கொள்ளும் அளவுக்குத்தான் செய்யவேண்டும்.

உடற்பயிற்சிக்காக விளாடுகின்ருேம்; பலரோடும் கூடி விளையாடுகின்ருேம். விளையாட்டுப் பொதுவாக எல்லாருக்கும் இன்பத்தையே கொடுக்கும். இன்பத்தைக் கொடுக்கும் விளையாட்டு, உடற்பயிற்சியாகவும் அமைகிறது. உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தருவதோடு பலரோடு சேர்ந்து பழகும் வாய்ப்பையும் ஒற்றுமை உணர்வையும் உண்டாக்குகிறது.

ஆகவே இளைஞர்கள் சடுகுடு போன்ற விளையாட்டுகள், தாண்டி விளையாடுதல், ஓடிப்பிடித்தல், நீந்துதல் போன்ற உடற்பயிற்சிக் குரிய விளையாட்டுகள் ஆகியவற்றை விளையாடி மகிழலாம்.

நோய்க்கு இடங்கொடேல்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா? எத்துணை செல்வம் இருந்தாலும் என்ன பயன்? நோயுடையவரால் அதனை அனுபவிக்க முடியுமா? முடியாதன்றோ! ஆதலின் நோய்க்கு இடம் கொடேல். உடல் நலம் காத்து நோயற்ற வாழ்வு வாழ கவிமணிய வர்கள் காட்டும் நல்வழிகளைக் காண்மின்! அவர் உரைபோற்றுமின்!

(1)

சுத்தமுள்ள இடமெங்கும் சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல் நீண்ட ஆயுள் பெறுவாயே.

ஆம்! சுத்தமே சுகம் தரும் என்கிறார் கவிஞர்.

(2)

காலை மாலை உலாவி நிதம் காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக் காலன் ஓடிப்போவானே.

ஆம்! காலையும் மாலையும் காற்றுட உலாவி வருதல் வேண்டும்.

3

கூழையே நீ குடித்தாலும் குளித்த பிறகு குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும் இரவில் நன்றாய் உறங்கப்பா!

ஆமாம்! கூழானாலும் குளித்துக் குடிக்கவேண்டும்; ஏழையானாலும் இரவில் நன்றாக உறங்க வேண்டும்.

4

தூய காற்றும் நன்னீரும் சுண்டப் பசித்த பின் உணவும்
நோயை ஓட்டி விடும் அப்பா! நூறுவயது தரும் அப்பா!

ஆமாம்! நூறு வயது வாழவேண்டுமா? அதற்கு வழியிருக்கிறது. நீ தூயகாற்றைச் சுவாசிக்க வேண்டும்; நல்ல நீரைப் பருகுதல் வேண்டும்; நன்றாகப் பசித்த பின்னர் உண்ணவேண்டும். இவற்றை ஒழுங்காகச் செய்தால் உன்னை நோய் அணுகாது; நீ நூறாண்டு வாழ்வாய்.

5

வேலை செய்யாது சோம்பேறிகளாய்— நிதம்
வீட்டிலிருப்பது ஆகாதம்மா!

மூலையில் இட்ட இரும்பு துருவேறி
மோசமாய்ப்போவதும் கண்டிலையோ?

ஆம்! ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும்; வேலை செய்வதால் உடல்வலிமைபெறும்; உடல்வலிமை பெற்றால் காலனையும் வெல்ல முடியும் என்கிறார் கவிமணி அவர்கள்.

மாணவச் செல்வங்களே! கவிமணி அவர்களின் மணி மொழியைக் கற்ற நீங்கள், உடலை ஓம்புவீர்; உள்ளத்தை ஓம்புவீர் நோயற்ற வாழ்வு காண்பீர்; நூறாண்டு வாழ்வீர்!

## செய்முறைப் பயிற்சி

1. நம் உடல் நமக்குச் சொந்தமன்று என்பதை விளக்குக.
2. உன் உடலை நீ எவ்வாறு போற்றுதல் வேண்டும்?
3. உடல் நலம் காக்கும் உணவுப் பழக்கங்கள் எவை?
4. நீ உன் உணவுப் பழக்கத்தை எவ்வாறு வரையறைப் படுத்தி வைத்திருக்கிறாய்?
5. உன்னுடைய ஒரு நாளைய பழக்க வழக்கங்களை முறைப் படுத்திக் கூறு.
6. உடற் பயிற்சியின் நலன்களை விவரி.
7. சூரிய நமஸ்காரம்; தோப்புக் கரணம் போடுதல்; அரசமரம் சுற்றுதல் — இவை பற்றி நீ என்ன கருதுகின்றாய்? அவற்றால் நன்மை உண்டா? என்ன நன்மைகள உண்டு? விவரி.
8. நோயற்ற வாழ்வு வாழ நீ வகுத்துக் கொண்ட நடை முறைப் பழக்கங்கள் யாவை?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி :**

1. உடற் பயிற்சி செய்; ஓடிவிளையாடு.
2. சத்தான உணவை உண்; காலமறிந்து உண்.
3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
   ஆதலின் நோய்க்கு இடங் கொடேல்.

எட்டு

# ஒழுங்கும் கட்டுப்பாடும்

## 1. ஒழுங்குமுறை

அன்னை சமைக்கிறாள்.

அன்னை சமையலறையில் இருக்கிறாள்; சமைத்துக்கொண்டிருக்கிறாள். நாம் சமையல் அறையின் உள்ளே நுழைகிறோம். அங்கே காண்பன யாவை? சமையலறைச் சுவர்களில் பல அடுக்குத் தட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒன்றில் நாம் உண்ணும் தட்டுகள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன; மற்றொன்றில் நாம் நீர் அருந்தும் குவளைகள் வைக்கப்பட்டுள்ளன; வேறொன்றில் மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, உளுந்து முதலிய சமையலுக்குத் தேவையான பொருள்கள் கண்ணாடிப்பாட்டில்களில் இட்டு வரிசையாக வைக்கப்பட்டுள்ளன; இன்னொரு அடுக்கில் எண்ணெய்ப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.

பக்கத்தே உள்ள கூடையில், காய் கறிகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நறுக்குவதற்குரிய கத்தி போன்ற கருவிகள் அவற்றின் அருகே வைக்கப்பட்டுள்ளன. அடுப்படிக்கு அருகே கை கழுவும் தொட்டியும் அதில் நீர் விழும் குழாயும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பொருளும் உரிய இடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டுள்ளது. அதனால் அந்தத் தாய் சமையல் வேலையைத் தொடங்கியவுடன் எந்தப்பொருளையும் தேடி அலைவதில்லை; உடனுக்குடன் எடுத்துப் பயன்படுத்திக் கொள்கிறாள்; இதுதான் சமையலறையை வைத்துக் கொள்ளவேண்டிய ஒழுங்குமுறை.

பூபதி பள்ளிக்குப் புறப்படுகிறான்.

ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறான் பூபதி; அவன் அறையின் உள்ளே நுழைந்து பாருங்கள்! அவன் படுப்பதற்குரிய இடத்தில் பாயும் தலையணையும் அழகாகச் சுருட்டி வைக்கப்பட்டுள்ளது. படிப்பதற்குரிய இடத்தில் மேசையும் நாற்காலியும் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடத்திற்குரிய பாடநூல்களும் எழுது கருவி

களும் பக்குவமாக ஒரே இடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

அவன் உடுத்துவதற்குரிய ஆடையை ஒரு பெட்டியிலே ஒழுங்காக அடுக்கி வைத்திருக்கின்றான். பள்ளிக்குச் செல்லு முன் தலைவாரிக்கொள்ள வேண்டுமே; சுவரிலே கண்ணாடி இருக்கிறது; அதன் அருகே சீப்பும் வைத்துள்ளான்.

பூபதி தனக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் ஒழுங்காகக் குறித்த இடத்தில் குறித்த பொருளை வைத்திருக்கிறான். அதனால் அவன் பள்ளிக்குப் புறப்படுமுன் எதையும் தேடி அலைவதில்லை. காலையில் குளிக்கச் செல்வான்; எண்ணெயும் சோப்பும் அவனை எதிர்கொண்டு அழைக்கும். அவ்வளவு ஒழுங்காக அவற்றை வைத்திருப்பான். உண்டு முடிந்ததும் பள்ளிக்குப் புறப்பட வேண்டுமா? எதையும் அவன் தேடி எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவனுக்கு வேண்டிய அனைத்தும் அந்தந்த இடத்திலேயே இருக்கும்.

இத்தகைய ஒழுங்குமுறை, அவன் காலத்தை வீணாக்குவதில்லை; காலம் கடந்து அவனைப் பள்ளிக்குச் செல்ல வைப்பதில்லை; எதையும் காணோமே என்று தேடி அலைய வைப்பதில்லை. ஒழுங்குமுறை அவனுக்கு உதவியாக இருக்கிறது.

ஒவ்வொரு பொருளும் அதனதன் இடத்திலேயே ஒழுங்காக இருப்பதையே ஒழுங்கு என்று கூறுகின்றோம். நம் விருப்பம்போல் கோடுகளைக் கிழித்தால், அது கிறுக்கல் ஆகும். பார்ப்பவர்க்கும் அழகுணர்ச்சியைத் தோற்றுவிக்காது. அக்கோடுகளை ஒழுங்குபடுத்தி வரைந்தால் அஃது ஓவியமாகக் காண்பவர் கண்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும்.

இத்தகைய ஒழுங்குமுறையைப் பின்பற்றாவிடில் என்ன ஆகும்? அன்னை அடுப்பிலே சட்டி வைத்திருப்பாள்; எண்ணெய் ஊற்றியிருப்பாள். கடுகு எங்கேயிருக்கிறது? என்று அரை மணி நேரம் தேடிக்கொண்டிப்பாள். சமையல் என்ன ஆகும்? வீணாகும்.

பூபதி பள்ளிக்குப் புறப்படுவான். அன்றைக்கு அவன் வகுப்பில் கட்டுரை எழுதவேண்டியிருக்கும். பேனா வைத்த இடம் எங்கே என்று தேடிக்கொண்டிருப்பான்; அதனைக்கண்டு பிடித்து எடுப்பதற்குள் பள்ளிக்கு நேரமாகிவிடும் பள்ளிக்குச்சென்றால் ஆசிரியர் தண்டனை கொடுப்பபர்; அதனை ஏற்கவேண்டியிருக்கும்.

ஆகவே பெரியவர்களாயினும் சிறியவர்களாயினும் குறிப்பிட்ட இடத்தில் குறித்த பொருள்களை அழகு நலம் விளங்க ஒழுங்குபடுத்தி வைத்தலே நலம் பயப்பதாகும். அவ்வாறு வைப்பதால் பார்ப்பதற்கு

ஒழுங்காகவும் அழகாகவும் அந்த இடம் அமையும். தேவைக்குப் பயன்படுத்தவும் முடியும்; காலமும் வீணுகாது.

## 2. காலத்தோடு கடமையைச் செய்க!

பொருள்களை அதனதன் இடத்திலேயே தவறாது வைத்தலே ஒழுங்கு; எடுத்த பொருளை எடுத்த இடத்திலேயே மீண்டும் வைத்தலே ஒழுங்கு; ஒரு பொருளைக் குறித்த இடத்தில் வைத்து எடுத்துப் பழகுதலே ஒழுங்கு. இந்த ஒழுங்குமுறை செம்மையாக நடைபெற நமக்குக் கட்டுப்பாடு வேண்டும். அந்தந்தப் பொருள்களை அதனதன் இடத்திலேயே வைக்கவேண்டும் என்ற கடமையுணர்வு வேண்டும்; கட்டுப்பாடு வேண்டும்.

காலையில் ஆறுமணிக்குப் படுக்கையை விட்டு எழவேண்டும் என்று நம்மை நாமே ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டும். ஆறு மணிக்கே ஒவ்வொரு நாளும் எழுந்து பழகி அதனைத் தம் வழக்கமாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை வீட்டுப் பாடங்களைப் படிக்கவேண்டுமென வரையறைப் படுத்திக் கொள்ளவேண்டும். அந்த நேரத்தைக் கட்டுப்பாட்டோடு கற்பதற்கே பயன்படுத்த வேண்டும்.

பள்ளி பத்து மணிக்குத் தொடங்கும்; நாம் ஒன்பதேமுக்கால் மணிக்கெல்லாம் பள்ளியில் இருக்கவேண்டும். ஒன்பதரை மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால்தான் குறித்த காலத்தில் பள்ளிக்குச் செல்ல முடியும். ஆகவே ஒன்பதரை மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட வேண்டும்; ஒன்பதே முக்காலுக்குப் பள்ளியை அடையவேண்டும்; பத்துமணிக்கு வகுப்பறையில் இருத்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கையும் கட்டுப்பாட்டு உள்ளத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

குறித்த இடத்தில் குறிப்பிட்ட பொருளை வைத்துப் பழகுதல் மட்டும் ஒழுங்கன்று; குறித்த பணியைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்தலும் ஒழுங்கே ஆகும்.

"இந்த இடத்தில் இத்தனை மணிக்கு உன்னைச் சந்திக்கிறேன்." என்று ஒருவருக்கு நாம் வாக்கு கொடுத்திருந்தால், அந்த இடத்தில் அந்த நேரத்திற்கு அவரைச் சந்திக்க நாம் தயாராக இருத்தல்வேண்டும். அதில்தான் நம் கடமை உணர்வு வெளிப்படும்; கட்டுப்பாட்டுள்ளம் வெளிப்படும்; சொன்ன சொல் தவருத கண்ணியம் வெளியாகும்.

ஆகவே எந்தச் செயலேயும் காலம்தவருது செய்து பழகவேண்டும். கட்டுப்பாட்டோடு செய்ய வேண்டும்; ஒழுங்கு முறையோடு செய்ய வேண்டும்.

## 3. அமெரிக்கக் குடியரசுத் தலேவர்

ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலேவர் ஜெனரல் வாஷிங் டன். அவர் காலம் தவருமையைக் கருத்தாகக் கொண்டவர்; அவர் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் இருப்பார்; குறித்த நேரத்தில் குறிப்பிட்ட காரியங்களேச் செய்வார்.

"நாட்டுத் தலேவன் நாம்; நம்மைக் கேட்பதற்கு யார் இருக்கிருர் கள்? என்ற கருத்துப்படைத்தவரல்லர்; கடமை தவருத கண்ணியம் மிக்கவர்; காலம் தவருத கடமையுணர்வினர். ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் உயிராகக் கொண்டவர்.

தம்மைப் போலவே மற்றவர்களும் காலந்தவருமையைக் கடைப் பிடிக்கவேண்டும் என்ற கருத்துடையவர்; அதில் கண்டிப்பும் உடையவர். ஒரு நாள் குறித்த நேரத்தில் அலுவலகம் வந்தார்; செயலாளர் இருக்கையைப் பார்த்தார்; இருக்கை இருந்தது; செயலாளரைக் காணேம்.

ஒரு நிமிடம் இப்படி எண்ணிக்கொண்டே இருந்தார். ஐந்து நிமிடம் ஆயிற்று. செயலாளர் வேகம் வேகமாக அலுவலகத்தின் உள்ளே நுழைந்தார்.

தலேவர், செயலாளரை நிமிர்த்து பார்த்தார். "மன்னிக்கவேண் டும்; ஐந்து நிமிடம் காலம் தாழ்த்து வந்திருக்கிறேன்; என் குறை யன்று; இந்தக் கடிகாரம் தவருன காலத்தைக் காட்டி விட்டது." என்ருர் செயலாளர்.

அமெரிக்கக் குடியரசுத் தலேவர் அதற்கு என்ன மறுமொழி சொன்னுர் தெரியுமா? "செயலாளரே! என்னேயும் நீர் மன்னிக்க வேண்டும்; இன்றைக்கே நீர் கட்டியிருக்கின்ற இந்தக் கடிகாரத்தைக் கொடுத்து விட்டுப் புதிய கடிகாரத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் அல்லது நான் உம்மை விலக்கி விட்டு வேருெரு புதிய செயலாளரை அமர்த்திக் கொள்ள வேண்டும்; உம் விருப்பம் போல் செய்யலாம்." என்று கூறினுர்.

குடியரசுத் தலேவர் காலம் தவருமையில் எத்துணே கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிருர் பார்த்தீர்களா? அதனுல்தான் அமெரிக்கா இன்றும் செல்வம் கொழிக்கும் சீர்மிகு நாடாக இருக் கிறது.

**கடமைக்கே முதலிடம்**

தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கிறது; படிக்க வேண்டிய பாடங்களோ ஏராளம்; அல்லும் பகலும் உழைத்து நம்மைப் படிக்க வைக்கின்றார் தந்தை; அருமை மகன் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக வேண்டும் உதவிகளை உடனிருந்து செய்கிறாள் அன்னை.

தேர்வுநேரத்தில் வீட்டிற்கு விருந்தினர் வருகின்றனர். அவர்களை வரவேற்பது நம் கடமை; விருந்தளிப்பது நம் கடமை; அவற்றையெல்லாம் பெற்றோர்களே கவனித்துக் கொண்டனர். நாட்டுப் புறத்திலிருந்து நகரத்திற்கு வந்தவர்களுக்குப் பொழுதுபோக்கு ஏதாவது வேண்டுமே! மாலை நான்கு மணிக்குப் புறப்பட்டார்கள். முதலில் பொருட் காட்சிக்குச் சென்று அதனைக் கண்டுகளிப்பது; பின்னர்த் திரைப்படம் ஒன்றுக்கு செல்வது என்பது அவர்கள் திட்டம். அவர்கள் உபசாரமாக உன்னையும் அழைக்கிறார்கள். நீ என்ன செய்வாய்?

அவர்களுடன் சென்றால் பலகாரக் கடைக்கு அழைத்துச் செல்வார்கள்; பலகாரம் உண்ணலாம். பொருட் காட்சிக்கு அழைத்துச் செல்வார்கள்; இன்பமான காட்சிகளைக் கண்டுகளிக்கலாம்; திரைப் படத்திற்கு அழைத்துச் செல்வார்கள்; பார்த்து மகிழலாம். ஒரு நாள் பொழுது இன்பமாகக் கழியும்.

வீட்டில் இருந்தால் புத்தகப் புழுவாகப் புத்தகமும் கையுமாகத் தான் இருக்கவேண்டும். ஓயாத ஒழியாத படிப்பிலேயே காலம் கழியும். அம்மாவும் பலகாரம் கொடுப்பாள்; பசிக்கு உணவு இடுவாள். ஆனாலும் வந்தவர்களோடு கலகலப்பாகப்பேசி மகிழ்ந்து சென்று வருவதற்கு ஈடாகுமா? ஆயினும் எண்ணிப்பார்!

வந்தவர்களுடன் செல்வது பொழுதுபோக்கு; ஒரு நாளைக்கு இன்பத்தைத் தரும் பொழுதுபோக்கு. ஆனால் படிப்பதோ உன் கடமை; படித்துப் பெறும் வெற்றியோ உன் வாழ்நாளெல்லாம் உனக்கு இன்பத்தைத் தருவது?

எதை விடுவது? எதை ஏற்பது? நீயே முடிவு செய்! கடமைக்கு முதலிடம் தருதல் வேண்டும். கடமையைச் செய்ய வேண்டும்; ஒரு நாளைய இன்பத்தை மறத்தல் வேண்டும். அது நீர் மேற் குமிழி; தோன்றியவுடன் மறைந்துவிடும்.

மாணவர்களே!

உங்கள் வாழ்க்கையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் அமையவேண்டும்; செம்மையும் சீர்மையும் பொருந்தவேண்டும். அப்போதுதான் உங்கள் எதிர்காலம் சிறக்கும். அதற்காக நீங்கள் செய்ய வேண்டுவதென்ன?

முதலில் உங்கள் பணிகளுக்குரிய கால அட்டவணையைத் தயார் செய்யுங்கள்; அந்த அட்டவணைப்படி ஒழுங்காக—கட்டுப்பாடாகச் செயலாற்றுங்கள்.

**கால அட்டவணை**

காலை 6 மணிக்கு எழுதல்.

,, 6 மணியிலிருந்து ஏழு மணிக்குள் காலைக் கடமைகளை முடித்து, குளித்து—உடை உடுத்தல்.

,, 7 மணியிலிருந்து எட்டு மணி வரை பள்ளிப் பாடங்களைப் படித்தல்.

,, 8 மணிக்குக் காலை உணவு; செய்தித் தாள் படித்தல்; தாய் தந்தைக்கு உதவுதல்.

,, 9 மணிக்குப் பள்ளிக்குப் புறப்படல்.

,, 10 மணியிலிருந்து 4 மணி வரை பள்ளிநேரம்.

மாலை 4 மணியிலிருந்து 5 மணி வரை விளையாட்டு.

,, 5 மணிக்கு வீடு திரும்புதல்.

,, 5-30 மணிக்கு உடை மாற்றல்; சிற்றுணவு அருந்துதல்.

,, 6 மணி முதல் 7-30 மணி வரை படித்தல்.

இரவு 7-30 முதல் 8 மணி வரை வானொலி கேட்டல்.

8 மணிக்கு இரவு உணவு.

9 மணி வரை பெற்ரோருடனும் உடன் பிறந்தாருடனும் அளவளாவுதல்.

9 மணிக்குப் படுக்கைக்குச் செல்லல்.

இவ்வாறு அவரவர் வசதிக்கும் வாய்ப்புக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல் கால அட்டவணையைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். கடமை உணர்வோடு காலந்தவறுது தங்கள் கடமைகளைச் செய்து பழகுதல் வேண்டும்.

## 4. எங்கும் எதிலும் ஒழுங்கு வேண்டும்.

உன் அறை

உனக்கென்று உன்வீட்டில் தனியறை இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்; ஆயினும் உன் வீட்டில் உனக்கென்று ஒரு பகுதியிருக்குமே. அந்தப் பகுதியை முதலில் துப்புரவாக வைத்துக்கொள். கண்டதைக் கண்ட இடத்தில் போட்டு வைக்காதே; உன் அறை கலையழகு மிளிர்வதாக இருத்தல் வேண்டும்.

நீ இருக்கும் அறையின் சுவரில் நீ வணங்கும் தெய்வத்தின் படத்தை வைக்கலாம்; அல்லது நீ போற்றும் பெரியாரின் படத்தை வைக்கலாம். உன் அறையின் சுவரும் தரையும் தூய்மையாக இருக்க வேண்டும். அலமாரியின் ஒரு தட்டிலே உன் பாட நூல்கள் ஒழுங்காக அடுக்கப்படவேண்டும்; அதைச் சார்ந்தே பென்சில், பேனு

போன்ற கருவிகளையும் வைத்திருக்க வேண்டும்; மற்றொரு தட்டிலே உன் உடைகள் அடுக்கி வைக்கப் படவேண்டும்; நீ கலைப் பொருள் களைச் சேர்த்து வைக்கும் ஆர்வம் உடையவனாயின் அதற்கென ஓர் அடுக்கை ஒதுக்கி வைக்கலாம்.

உன் பாயும் தலையணையும் சுற்றப்பட்டு அதற்குரிய இடத்தில் வைக்கப் படவேண்டும். உன் அழுக்குத் துணிகளைப் போடுவதற்கு ஒரு கூடை ஒரு மூலையில் இருத்தல்வேண்டும்.

நீ அமர்ந்து படிப்பதற்குரிய மேசையும் நாற்காலியும் தூய்மை யாகத் துடைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். நண்பர்கள் வந்தால் அமர்ந்து பேசவும் இருந்து படிக்கவும் இடம் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு கலையுணர்வோடு உன் அறையை நீ வைத்திருக்க வேண்டும். எந்தப் பொருளையும் எடுத்தால் அது இருந்த இடத்திலே வைக்கும் ஒழுங்கும் கட்டுப்பாடும் உனக்கு வேண்டும்.

### உன் உடைகளும் புத்தகங்களும்

நீ வீட்டில் அணிவதற்கென்று உனக்கு உடைகள் இருக்கும்; பள்ளிக்கு அணிந்து செல்லச் சீருடை வைத்திருப்பாய்; உற்றார் உற வினர் வீட்டிற்குச் செல்லும்போது உடுத்துவதற்கெனப் பகட்டான ஆடைகளும் உன்னிடம் இருக்கலாம். அந்த ஆடைகளை நீ தூய்மை யாக வைத்திருக்க வேண்டும். ‘கந்தையானாலும் கசக்கிக் கட்டு’ என்பது நம் நாட்டுப் பழமொழி. ஆகவே உன் உடைகளைத் தூய்மை யாக வெளுத்து மடித்து வைத்துக் கொள்ளவேண்டும். பள்ளிக்குச் செல்லும்போது மட்டுமே சீருடைகளை அணிந்து செல்லவேண்டும். அவை தூயதாக இருத்தல்வேண்டும். பள்ளியிலிருந்து வீடு திரும்பி யதும் வேறு உடைகளை உடுத்திக் கொள்ளவேண்டும்.

உன்னுடைய புத்தகங்களும் அழுக்குப் படியாமலும் கிழியாமலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். புத்தகங்களுக்கு அட்டை யிட்டுப் பாதுகாக்க வேண்டும். படிக்க வேண்டிய நேரத்தில் புத்தகங்களை எடுத்துப் படிக்க வேண்டும்; பின்னர் அதற்குரிய இடத்தில் அதனை வைத்துவிடவேண்டும். ஆசிரியர் பாடம் நடத்தும் போது நீ எழுதிக் கொள்ள வேண்டிய குறிப்புகள் இருக்கலாம் உடனே அவற்றைப் பாடப் புத்தகத்திலேயே குறித்துக் கொள்ளக் கூடாது. அவற்றைப் பாடத் தலைப்பிட்டுத் தேதியிட்டு வேறொரு கையேட்டில் எழுதி வைத்துக் கொள்ளவேண்டும். அதுவே ஒழுங்கு முறையாகும். வீட்டைப் போலவே பள்ளியிலும் நீ நடந்து கொள்ளவேண்டும்.

### வீடும் பள்ளியும்

வீட்டில் நீ மதிக்கத் தக்கவர்கள் தாயும் தந்தையும்; அன்புடன் பழகத்தக்கவர் உடன் பிறந்தவர்கள். பள்ளியிலே உன்னால் மதிக்கப் படவேண்டியவர்கள் ஆசிரியர்; நீ அன்பு கொண்டு பழகத் தக்க வர்கள் மாணவர்கள். வீட்டிலே காலையில் படுக்கையை விட்டு எழுந்

தும் பெற்றவர்களைக் கண்டு வணங்குவதும் அவர்கள் வாழ்த்தினைப் பெறுவதும் நல்ல பழக்கமும் நற்செயலும் ஆகும். பள்ளயிலும் ஆசிரியரை முதன் முதலாகக்கண்டதும் அவருக்கு வணக்கம் செலுத்தி அவர்தம் வாழ்த்துதலைப் பெறுவது நல்ல பழக்கம் ஆகும்.

உன் வீட்டை—உன் வீட்டிலுள்ள அறையை எவ்வாறு தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்துக் கொள்கின்ருயோ அதைப்போல உன் பள்ளிக் கூடத்தையும் உன் வகுப்பறையையும் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்துக் கொள்ள வேண்டும். உன் வகுப்பறை தூய்மையாக இருக்கவேண்டும்; நீ உட்காரும் இடத்தை நீயே தூய்மைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் வகுப்பிற்கு வருமுன், நீ வகுப்பில் இருத்தல் வேண்டும். அவர் வந்தவுடன் எழுந்து மரியாதை செய்தல் வேண்டும்; அவர் கேட்கும் கேள்விகளுக்கும் முறையாகப் பதில் சொல்ல வேண்டும். அந்தந்தப் பாட வேளைக்குரிய பாடநூல்களை நீ ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் கொண்டு செல்லுதல் வேண்டும்.

இடைவேளை மணி அடித்தவுடன் ஆசிரியர் வெளியே செல்வார்; அதன் பின்னரே நீ வெளியே செல்லுதல் வேண்டும். இடையே வகுப்பறையைவிட்டு வெளியே செல்வதாயின் ஆசிரியர் அனுமதி பெற்றே வெளியே செல்லுதல் வேண்டும். வீட்டிலும் உன் பெற்றோர் அனுமதியின்றி வெளியே செல்லுதல் முறையாகாது.

## செய்முறைப் பயிற்சி

1. சமையல் அறையை அன்னை எவ்வாறு வைத்துக் கொள்கிருள். ஏன்?
2. பூபதியின் ஒழுங்கு முறைகளை விளக்குக
3. எதில் கடமை' கண்ணியம், கட்டுப்பாட்டுள்ளமை வெளிப்படும் என ஆசிர்யர் கூறுகின்றார்?
4. அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் இயல்பு யாது? அவர் காலம் கடந்து அலுவலகம் வந்த செயலாளருக்குக் கூறியது என்ன?
5. நீ பள்ளியில் படிக்கும் மாணவன். உனக்குப் படிக்க வேண்டிய கடமையும் இருக்கிறது: பொழுது போக்காக உறவினர் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது. இரண்டில் எதற்கு முதலிடம் தருவாய்? ஏன்?
6. நீ பள்ளியில் படிக்கும் மாணவி. உனக்கு உன் வீட்டில் சமைக்கும் வேலையும் கொடுக்கப்படலாம்; படிக்கும் வேலையும் உனக்கு இருக்கிறது. உன்னுடைய ஒரு நாள் கடமைகளை எவ்வாறு ஒழுஙகாகச் செய்வாய் என்பதைக் கால அட்டவணை இட்டுக் காட்டு. அந்த அட்டவணையின் படியே உன்னல் நடக்க முடியுமா என்பதை எணணிப் பார்த்துத் தயார் செய்.
7. உன் பெற்றோர்கள் உனக்கென்று ஒரு தனியறை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள். அதை நீ எவ்வாறு வைத்திருப்பாய்? முறைப்படுத்திக் கூறு.
8. நீ பள்ளியிலும் வீட்டிலும் எவ்வாறு நடந்து கொள்வாய்?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி:**

1. எங்கும் எதிலும் ஒழுங்கைக் கடைப் பிடி.
2. நீ வகுத்துக் கொண்ட ஒழுங்கு முறைகளைக் கட்டுப் பாட்டோடு செயற்படுத்து
3. ஒருவர்க்கு நீ கொடுத்த வார்த்தையைக் காப்பாற்று.

ஒன்பது

# வாய்மையும் பொய்மையும்

## 1. வாய்மையால் காணலாம்.

வீட்டிலே வேலை செய்கிறோம்; வெளியே சென்றும் வேலை செய்கிறோம். உடலில் வியர்வை உண்டாகிறது. வெயில் கடுமையாக வீசுகிறது; உடல் வியர்த்துக் கொட்டுகிறது. புழுதியும் தூசும் நம் உடலையும் உடையையும் அழுக்காக்குகின்றன.

அழுக்கேறிய உடல்; அழுக்கு நிறைந்த உடை; நம் உடலின் புறத்தே அழுக்கு; அதனால் ஏற்படும் ஒருவித வாடை. அவற்றைப் போக்குவது எப்படி? ஆடையை அழுக்கு நீங்கத் துவைக்கலாம்; தண்ணீரிலே அலசி வெயிலில் உலர்த்தினால் தூய ஆடையாக மாறிவிடும். நாமும் ஆற்றிற்கோ குளத்திற்கோ செல்லலாம்; தண்ணீரில் மூழ்கலாம்; அழுக்கைத் தேய்த்துக் குளிக்கலாம்; அழுக்குப் போய்விடும்; உடல் தூய்மை பெற்றுவிடும்.

இதனால் நாம் அறிந்து கொள்வதென்ன? உடலின் புறத் தூய்மையை நீரினாலே உண்டாக்கிக் கொள்ள முடியும். ஒருவன் தூய்மையாக சுகாதாரத்தோடு வாழ்கின்றானா என்பதை அவனுடைய வெளுத்த ஆடையால் அறியலாம்; அழுக்கற்ற உடலால் அறியலாம். அவனது புறத்தூய்மை நீரால் அமைகிறது.

ஒருவனுடைய உடல் தூய்மையாக இருக்கிறது என்பதை அறிய வழியிருக்கிறது. அவனுடைய உள்ளம் தூய்மையானதா? உடல் தூய்மையைக் காட்டிலும் உள்ளத் தூய்மையன்றோ சிறந்தது! அதை அறிவதற்கு வழியென்ன? உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு வழியென்ன?

அதற்கும் வழிகாட்டுகின்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவர். ஒருவன் உள்ளம் தூய்மையானதா? என்பதை அவன் பேசும் பேச்சிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒருவன் வாய்மையே பேசுகின்றான் எனின் அவன் அகம் தூய்மையானது. ஒருவன் உண்மையே பேசுகின்றான் எனின் அவன் உள்ளம் தூய்மையானது.

ஆகவே அகத்தின் தூயதாம் தன்மையை அவனது வாய்மையால் தெரிந்துகொள் என்கிறார் வள்ளுவர்.

புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்.

இதுவே அவர் தந்த திருக்குறள். எனவே புறத்தூய்மையை விரும்புபவன் நாளும் நீராடுதல் வேண்டும். அகத்தூய்மையை விரும்புபவன் என்றும் எக்காலத்தும் வாய்மையே பேசுதல் வேண்டும். வாய்மையே ஒருவனுக்கு உள்ளத் தூய்மையை உண்டாக்கும்.

அறநூல்களாகத் தமிழில் எத்தனையோ நூல்கள் உள்ளன. அவையனைத்தும் அறங்கள் பலவற்றை வகுத்துக் கூறுகின்றன. அற நூல்கள் வகுத்துக் கூறும் சிறந்த அறங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது வாய்மையே ஆகும். அதனால்தான் திருவள்ளுவர்,

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற." என்றார்.

## 2. வாய்மையின் இலக்கணம் யாது?

அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார்,

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்." என்றார்.

உள்ளத்தில் ஒன்றை நினைப்பதும் வெளியே ஒன்றைச் சொல்லுவதும் வாய்மையாகாது. உள்ளத்தில் உள்ளதை வாய் சொல்ல வேண்டும். வாய் சொல்லுவதைச் செயல் முறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

கண்ணால் கண்டதைக் கண்டவாறே கூறுவது வாய்மை எனப்படும்; உள்ளதை உள்ளவாறே சொல்வது வாய்மை எனப்படும். உண்மை, வாய்மை, மெய்மை என்னும் அனைத்துச் சொற்களும் உள்ளதைக் கூறுதல் என்னும் ஒரே பொருளைத் தருவனவே ஆகும்.

கண்டதைக் கண்டவாறே சொல்லுவதும், எண்ணியதை எண்ணியவாறே கூறுவதும் பிறர் சொன்னதைச் சொல்லியவாறே கூறுவதும் வாய்மையே ஆகும். என்றாலும் வள்ளுவர் வாய்மைக்குத் தனி இலக்கணம் வகுத்துக் கூறியுள்ளார். அஃது என்ன?

கொடியவன் ஒருவன் கொலைவாளினை ஏந்தி வருகிறான்; நல்லவன் ஒருவனைத் துரத்தி வருகின்றான். நல்லவனோ அச்சத்தால் நடுங்கி நம் வீட்டில் புதுகின்றான்; அடைக்கலம் கேட்டு அடி பணிகின்றான். அவனுக்கு நம் வீட்டார் ஆதரவு காட்டுகின்றனர்; கொடியவன் அறியாவண்ணம் நல்லவனை ஓரிடத்தே மறைந்திருக்கச் செய்கின்றனர்.

கொடியவன் கோபத்துடன் வருகின்றான். "எங்கே அவன்? இந்தப் பக்கம்தானே வந்தான்." என்று கேட்கிறான். நாம் என்ன விடை சொல்லலாம்?

"நீ தேடி வந்த அந்த ஆள், இதோ எங்கள் வீட்டில்தான் இருக்கிறான்; அதோ அங்கே ஒளிந்து கொண்டிருக்கிறான்." என்று கூறலாம். அஃதே உண்மை; ஆயினும் அதன் விளைவு என்ன? கொடியவன் உள்ளே செல்வான்; கொடுவாளை வீசி அந்த நல்லவனின் உயிரைப் பறித்துக் கொள்வான். அது நல்ல செயலாகுமா? நலம் பயக்குமா? நாம் கூறியது உண்மைதான் என்றாலும் பிறர்க்குத் தீமையை விளைக்கின்றதே.

உண்மையைச் சொல்லாமல், "அவன் இங்கு வரவே இல்லை." எனச் சொல்லலாம்; அது பொய்ம்மையாகும்; வாய்மை தவறுவதாகும். ஆயினும் வாய்மை தவறுவதால் ஒருவனை நம்மால் காப்பாற்ற முடிகிறது.

உண்மையைச் சொன்னால் ஒரு நல்லவனை இழக்க வேண்டியிருக்கிறது; என்ன செய்யலாம்? உண்மையைச் சொல்லி ஓர் உயிரை இழப்பதா? பொய்யைச் சொல்லி ஓர் உயிரைக் காப்பதா?

இவற்றிற்கெல்லாம் விடைகூறுவது போல வாய்மையின் இலக்கணத்தை வள்ளுவர் தெளிவாக வகுத்துக் கூறுகின்றார்.

"வாய்மை என்று சொல்லப்படுவது யாது எனின், பிறவுயிர்களுக்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதலே ஆகும்." இதுதான வள்ளுவர் கூறும் வாய்மை.

'பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின் நாம் சொல்லும் பொய்ம்மையும் வாய்மையாகவே கருதப்படும்." இதுவும் வள்ளுவர் கருத்தேயாகும்.

ஆகவே பிறஉயிர்களுக்குத் தீங்கு பயவாத சொற்களே வாய்மையாகும்; நன்மை பயக்கும் சொற்களே வாய்மையாகும் என்பதை நாம் அறியலாம்.

### வாய்மையே வெல்லும்

மாணவர்களே! தமிழ் நாட்டு அரசின் சின்னத்தைக் கூர்ந்து கவனியுங்கள். அங்கே "வாய்மையே வெல்லும்" என்னும் தொடர் பொறிக்கப்பட்டிருக்கும். சொல்லிலும் செயலிலும் உண்மையைக் காத்தலே வாய்மை; பிறர்க்கு நன்மை பயக்கின்ற தீமையைப் பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மை என்பதைப் படித்தோம்.

'கோசர்' என்ற வகுப்பினர் நம் நாட்டிலே வாழ்ந்தனர்; அவர்கள் வாய்மை தவறாதவர்கள்: ஆதலால் அவர்களை வாய்மொழிக் கோசர்

என நம் இலக்கியங்கள் பாராட்டுகின்றன. நம் நாட்டை ஆண்ட மன்னரும் மற்றவரும் வாய்மொழி தவருதவர்கள்; அதனுல் அவர்கள் பெரும்புகழ் பெற்றனர்.

## 3. காந்தி கண்ட நாடகம்

நம் நாட்டிலே 'சொல்லுக்கு அரிச்சந்திரன்' என ஒரு பழமொழி வழங்குகிறது. வாய்மைக்கு அரிச்சந்திரன் என்பதே அதன் பொருளாகும்.

நாடாளும் மன்னவன் அரிச்சந்திரன்; அவன் மனைவி சந்திரமதி; அவனுக்கு ஒரேமகன் தான் இருந்தான். அரிச்சந்திரன் விசுவாமித்திரர் எனும் முனிவருக்குத்தன் நாட்டையே தானமாகக் கொடுத்தான்; நாட்டையே தானமாகப் பெற்ற அந்த முனிவன், அதற்கு முன் தனக்குக் கொடுப்பதாகச் சொன்ன பதினுயிரம் பொன்னையும் அதற்குரிய வட்டியையும் தனக்குத் தரவேண்டுமெனக் கேட்டனன்.

நாட்டையிழந்து நடுத்தெருவில் நிற்கும் அரிச்சந்திரன் பதினுயிரம் பொன்னுக்கு எங்கே போவான்? முனிவன் அவனைப் பார்த்து, "அரிச்சந்திரா! நீ எனக்குப் பதினுயிரம் பொன் கொடுப்பதாகச் சொன்னது உண்மைதானே." என்று கேட்டான்.

அரிச்சந்திரனே, "ஆம்! நான் உமக்குப் பதினுயிரம் பொன் கொடுப்பதாகச் சொன்னது உண்மைதான்; எப்படியும் உமக்குத் தருகிறேன்." என்று கூறினுன்.

"உன்னுல் எப்படிக் கொடுக்க முடியும்? ஏன் சிரமப்படுகிருய்; நீ சிரமப்படாமலிருக்க ஒருவழி இருக்கிறது. நீ எனக்குக் கொடுப்பதாகச் சொன்னதை ஒத்துக் கொண்டால்தானே பதினுயிரம் பொன் கொடுக்க வேண்டும்; 'நான் அப்படிச் சொல்லவே இல்லை' என்று ஒரே ஒரு பொய் சொல்லிவிடு; நான் போய்விடுகிறேன்." என்ருன் முனிவன்.

அரிச்சந்திரன் பொய் சொல்லுவான? காசிக்குச் சென்ருன்; தன் மனைவியையும் மகனையும் கடை வீதியிலே விலை கூறி வேதியனுக்கு விற்ருன்; தானும் புலையனுக்கு அடிமையானுன். முனிவனின் கடனை அடைத்தான்.

அரிச்சந்திரனை மேலும் துன்பம் தொடர்ந்தது.

வேதியனிடம் அடிமையாகியிருந்த அரிச்சந்திரனின் மகன், ஒரு நாள் தருப்பை கொய்யக் காட்டிற்குச் சென்ருன்; அங்கு அவன் பாம்பு கடித்து இறந்தனன். இறந்த மகனைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்ருள் சந்திரமதி. சுடுகாட்டுக் காவலனுக்குக் கொடுக்க

வேண்டிய வாய்க்கரிசியும் முழத்துண்டும் பணமும் இன்றி வருந்தி அழுதாள்.

அந்தச் சுடுகாட்டிலே பிணங்களைச் சுடும் கூலிக்காரனாக இருந்தான் அரிச்சந்திரன்; மகன் பாம்பு கடித்து இறந்து பட்டனன்; தாய் அவனைத் தோளில் சுமந்து சுடுகாட்டிற்கு வந்திருக்கிறாள்; தந்தையோ பிணத்தைச் சுடுவதற்குக் கூலிகேட்கிறான். எத்தகைய சூழ்நிலை இது? அங்கேயும் விசுவாமித்திரர் வந்தார்.

"அரிச்சந்திரா! இப்போதாவது ஒரு பொய் சொல்; நீ நாட்டைப் பெறலாம்; உன் மனைவியைப் பெறலாம்; இறந்த மகனைப் பெறலாம்." என்றார் முனிவர்.

அரிச்சந்திரனோ, "முனிவரே மகனை இழக்கலாம்; மனைவியை இழக்கலாம்; என்னையே நான் இழந்து விடலாம்; ஆயினும் வாய்மையை மட்டும் நான் இழக்கமாட்டேன்." என்று உறுதியாக நின்றான்.

தன் மகனை மயானத்திட்ட சந்திரமதி, தன் கணவன் சொற்படி வேதியரிடம் திரும்பச் சென்றாள். செல்லும் வழியில் விசுவாமித்திரரின் மாயையால் காசியரசன் மகன் கொல்லப்பட்டுக்கிடந்தான்.

அவனைத் தன் பிள்ளையெனக் கருதிய சந்திரமதி, அவ்விடஞ் சென்று பார்த்தனள்; அதுபொழுது காசியரசனின் காவலர், அரசன் பிள்ளையைக் கொன்றவள் சந்திரமதியே எனக் கருதி அவளைப் பிடித்துக் காசியரசன் முன் நிறுத்தினர்.

காசியரசன் சந்திரமதிக்குக் கொலைத் தண்டம் விதித்தனன். காவலர் சந்திரமதியை இழுத்துச் சென்று அவளைப் புலையனுக்கு அடிமைப் பட்டிருந்த அரிச்சந்திரனிடம் ஒப்படைத்துக் கொலை செய்யும்படிக்கூறினர். அரிச்சந்திரனும் தன் வாய்மையைக் காப்பதற்காகத் தன் மனைவியாகிய சந்திரமதியை வெட்டத் துணிந்தனன். அந்த நிலையிலும் அரிச்சந்திரன் பொய்யைக் கூறவில்லை; வாய்மையைக் காத்தனன்.

இந்த நாடகத்தைக் காந்திபண்ணல் தம் இளம்பருவத்தில் பார்த்தார். அன்று முதல் "பொய் புகலேன்; வாய்மை வழுவேன்." என உறுதி கொண்டார்.

அன்று முதல் அண்ணல் காந்தி உள்ளத்தால் பொய்யாது ஒழுகினார்; வாய்மை தவறாது நடந்தார்; அதனால் இன்று அவர் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் நிலைபெற்றிருக்கின்றார்.

> உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்து ளெல்லா முளன்.

என்பது வள்ளுவர் வாய்மொழியாயிற்றே,

# 4. அச்சம் தவிர் !

'அச்சம் தவிர்' என இளைஞர்களுக்குச் சொன்னவர் பாரதி; புதிய ஆத்திச்சூடியின் முதல் தொடரே இது. எவரும் உண்மையைச் சொல்வதற்கு அஞ்சுதல் கூடாது; பொய் சொல்வதற்கே அஞ்சுதல் வேண்டும்.

ஒருவன் தன் நெஞ்சம் அறிந்த ஒன்றை மறைத்துப் பொய்யைச் சொல்லுவான் ஆயின், அவன் நெஞ்சமே அவனைச் சுட்டு வருத்தும். தவம் செய்பவர்கள் உயர்ந்தவர்கள்; தானம் செய்பவர்கள் உயர்ந்த வர்கள்; அவர்களைக் காட்டிலும் மிக உயர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார்? உள்ளத்தோடு பொருந்த உண்மையைக் கூறும் வாய்மையாளர்களே அவர்கள்.

பொய்யாமையினால் ஒருவன் பெறும் புகழைக் காட்டினும் சிறந்த புகழ் வேறு ஒன்றுமே இல்லை. ஆதலின் மாணவப் பருவத்திலிருந்தே இளைஞர்கள் வாய்மையைக் கடைப்பிடிக்கவேண்டும்; உண்மையே பேசுதல் வேண்டும். உண்மையைச் சொன்னால் தண்டனை கிடைக்குமே என்ற அச்சம் காரணமாகப் பொய்யைக் கூறக் கூடாது.

* * *

உன் வகுப்பறையில் தண்ணீர்ப்பானை இருக்கிறது; நீ தண்ணீர் குடிப்பதற்காகப் பானையைச் சாய்க்கிறாய்; பானை சுவரில் மோதி உடைகிறது. நீ அமைதியாக உன் இடத்திற்குப் போய்விடுகிறாய். ஆசிரியர் வருகிறார்; 'பானையை உடைத்தது யார்?' எனக் கேட் கிறார். உண்மையைச் சொன்னால் தண்டனை கிடைக்குமே என்ற அச்சம் உனக்கு. எல்லாரும் அமைதியாக இருக்கிறார்கள்; நீயும் அமைதியாக இருக்கிறாய்.

அந்த அச்சம் உனக்குக் கூடாது; நீதான் பானையை உடைத் தவன்; அதனால் உண்மையைச் சொல்லவேண்டியவனும் நீயே. உன் அச்சம் காரணமாகப் பொய்யைக் கூறாதே; உண்மையைச் சொல்லும் உறுதியான மனத்தைப் பெறு.

* * *

வீட்டில் உன் மேசையின்மீது கண்ணாடிப் பாத்திரம் இருக்கிறது. உன் தந்தை அதை எடுக்காதே என்று பலமுறை உனக்குச் சொல்லி யிருக்கிறார். ஆனாலும் அதை நீ எடுத்தாய்; கை தவறிக் கீழே வீழ்ந்து உடைந்துவிட்டது.

தந்தைக்குத் தெரிந்தால் உனக்குச் செம்மையான அடி கிடைக்கும்; அதனால் உன் உள்ளமும் நடுங்குகிறது; உடலும் நடுங்குகிறது. உன் தந்தை வருகிறார்; "இந்தக் கண்ணாடிப் பாத்தி ரத்தை உடைத்தது யார்?" எனக் கேட்கிறார்.

" நான் உடைக்கவில்லை; தங்கைதான் உடைத்தாள்." என்று நீ பொய்யைக் கூறுகிறாய். அது தருமமா? முறையா? அது முறையன்று. அச்சம் காரணமாகப் பொய் சொல்லாதே; நீ செய்த குற்றத்தை அடுத்தவர் மேல் சுமத்தாதே. உண்மையைச் சொல்லுகின்ற மனோதிடம் உனக்கு வேண்டும்.

## 5. அந்த நரேந்திரன் யார்?

வகுப்பு நேரம்; ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார். மாணவன் நரேந்திரன் ஏதோ வேடிக்கையாக ஒன்றைச் சொல்லுகின்றான்; அதைக் கேட்ட வகுப்பு மாணவர்கள் சிரிக்கிறார்கள்.

ஆசிரியருக்கோ கோபம்; உடனே ஒவ்வொரு மாணவனாக அழைத்துப் பாடத்திலிருந்து கேள்விகளைக் கேட்கிறார்; எந்த மாணவனும் விடை கூறவில்லை; எழுந்து நின்றனர். நரேந்திரனைக் கேட்டார்; அவன் சரியான விடையைச் சொன்னான்.

இருந்தாலும் ஆசிரியரின் கோபம் அடங்கவில்லை. பதில் சொல்லாத மாணவர்களைப் பெஞ்சு மேலே ஏறி நிற்கச் சொன்னார்; எல்லாரும் ஏறி நின்றனர்; நரேந்திரனும் பெஞ்சு மேல் ஏறி நின்றான்.

" நரேந்திரா! நீ ஏன் பெஞ்சு மேல் ஏறி நிற்கின்றாய்; நீதான் சரியான பதிலைச் சொல்லிவிட்டாயே; இறங்கி உட்கார்." என்றார் ஆசிரியர்.

நரேந்திரனோ, "ஐயா, மாணவர்கள் சிரித்ததற்குக் காரணமாக இருந்தவனே நான்தான்; ஏதோ வேடிக்கையாக ஒன்றைச் சொன்னேன்; அதைக் கேட்ட எல்லாரும் சிரித்தனர்; சிரித்த அவர்கள் குற்றவாளி என்றால் அவர்களைச் சிரிக்கச் செய்த நானே பெரிய குற்றவாளி ஆவேன். அதனால் நான் இந்தத் தண்டனையை அனுபவிக்கவேண்டியவனே." என்றான்.

அச்சமின்றி உண்மையைச் சொன்ன நரேந்திரனை ஆசிரியர் பாராட்டினார்; அவனுக்காக மற்றவர்களையும் மன்னித்தார். உண்மையைச் சொல்வதில் அத்தகைய அச்சமற்ற தன்மை மாணவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

உண்மையைச் சொல்லி தண்டனையை ஏற்ற அந்த நரேந்திரன் யார் என்று தெரிகின்றதா? தான் செய்த குற்றத்திற்கு மற்றவர்கள் தண்டனை அனுபவிப்பதைப் பொறுக்காமல் உண்மையை உரைத்த அந்த நரேந்திரன்தான் சுவாமி விவேகானந்தர். அமெரிக்க நாட்டின் பேரறிஞர்களின் முன்னே இந்து மதத்தின் பெருமையை எடுத்துப் பேசி எல்லாராலும் பாராட்டப் பெற்ற சுவாமி விவேகானந்தர்.

* * *

**மோகனு கடன்பட்டான்?**

'உண்மை உயர்வு தரும்' என்பதை உணர்ந்தவர் காந்தியடிகள். அவர் இளம் பருவத்திலிருந்தே வாய்மையைக் கடைப்பிடித்தார். வாய்மை வழியே ஒழுகினர்.

மோகன்தாஸ் என்பது அவர்தம் இளமைப் பெயராகும். மோகன் தன் சகோதரன் பட்ட கடனுக்காக சகோதரனுடைய தங்கக் காப்பில் சிறுபகுதியை வெட்டி விற்ருன்; அவன் பட்ட கடனைத் தீர்த்தான். ஆயினும் அவன் நெஞ்சம் அவனைச் சுட்டுக்கொண்டே இருந்தது; 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்பது வள்ளுவர் வாசகமாயிற்றே!

உண்மையைச் சொன்னல் தண்டனை கிடைப்பது உறுதி; நோயோடு படுக்கையிலிருக்கும் தன் தந்தை உண்மையறிந்தால் மிகவும் வருந்துவார் என்பதும் உறுதி. ஆயினும் உண்மையைச் சொல்லவேண்டும் என்ற மன உறுதியைப் பெற்ருன் மோகன்தாஸ். அச்சத்தை நீக்கி வாய்மையைக்காக்க உறுதி கொண்டான். அதனல் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றும் விடாமல் ஒரு தாளில் எழுதினன்; தன் தந்தையிடம் கொண்டுபோய்க் கொடுத்தான்; வாங்கிப்படித்துப் பார்த்தார் தந்தை; கண்ணீர் வடித்தார். குற்றம் புரிந்த மகனும் கண்ணீர் வடித்தான்; குற்றத்தை மன்னித்த தந்தையும் கண்ணீர் வடித்தார்.

கண்ணீரோடு கண்ணீர் கலந்தது. தந்தை மன்னித்தார்; மகன் மன்னிக்கப்பட்டான். மகன் யாரென்று தெரிகிறதா? நம் அண்ணல் காந்தியடிகளேதாம்.

## 6. பொய் சொல்லாதே!

நம் நாட்டில் "உள்ளத்தில் கள்ளமும் உதட்டில் வெல்லமும்" என ஒரு பழமொழி வழங்கப்படுகிறது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களே இத்தகையவர்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பேச்சு ஒருவனுடைய வாழ்க்கையைக் கெடுக்கும்.

சிலர் தேவையில்லாமலேயே பொய் பேசுவர்; சிலர் சிறு சிறு காரியங்களிலும் பொய் பேசுவர். ஒரு பொய்யைச் சொல்பவர்கள் அதை நிலை நாட்டுவதற்கு ஒன்பது பொய்களைப் பேசுவர். எப்படித்தான் வல்லமையாகப் பேசினலும் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளிப்பட்டுவிடுமே

ஆதலால் மாணவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பொய் பேசக் கூடாது; தீய குணங்களுக்கெல்லாம் முதல் படியாக இருப்பது

பொய்யே ஆகும். பொய் என்ற முதல் படியில் கால் வைக்கும் ஒருவன் இரண்டாம் படியில் காலை வைத்துத் திருடுவான்; மூன்றும் படியில் காலை வைத்துச் சூதாடுவான்; நான்காம் படியில் காலை வைத்து மதுவை அருந்துவான்; ஐந்தாம் படியில் காலை வைத்துக் கொலை புரியவும் துணிவான். ஆகவே, மாணவர்களே! எல்லாவற்றுக்கும் அடிப்படையாக—முதற்படியாக இருக்கும் பொய்மையைத் தவிருங்கள்; வாய்மையைக் கைக்கொள்ளுங்கள்.

### நாட்டு மன்னரும் ஞான மன்னரும்

பெரீஷியா ஒரு சிறந்த நாடாகும். அந்த நாட்டு மன்னன் சைரஸிடன். நாடாண்ட அந்த மன்னரிடம் சென்று, "தாங்கள் இத்தகைய சீரான ஆட்சியை நடத்துகின்றீர்களே! தாங்கள் முதன் முதலாகக் கற்றது யாது?" எனக் கேட்டவர்களுக்கு அவர் கூறிய பதில் இதுதான்.

"எப்பொழுதும் உண்மையே பேசு; உண்மையைத் தவிர வேறு எதையும் பேசாதே." என்பது தான். இதனால் என்ன தெரிகிறது?

பொய் பேசுதல் மிகவும் தவருன பழக்கம்; பொய் பேசுவதால் நமக்குக் கோடி கோடியாகப் பொருள் குவிவதாக இருந்தாலும் பொய் பேசக் கூடாது; பொய் சொல்லாமையால் நம் உயிருக்கே தீங்கு வருவதாயினும் பொய் சொல்லக் கூடாது.

மாணவர்கள் தவறுவது இயற்கையே; தவறுகளை உணர்ந்து மேலும் அத்தவறுகளைச் செய்யாமல் இருக்க முயற்சிக்கவேண்டும். அதைச் செய்யாமல் செய்த தவறுகளை மறைப்பதற்காக மேலும் மேலும் பொய்களைக் கூறிக் கொண்டிருக்கக் கூடாது. பொய் பேசுபவன் என்ருவது ஒரு நாள் அகப்படவே செய்வான்.

ஞான மன்னர் மறைத்திரு போப் அவர்கள், "ஒருவன் எத்துணையோ திறமைகளைப் பெற்றவனுக இருக்கலாம்; அவன் பொய் பேசுபவன் ஆயின் அவன் திறமை அற்றவனே; ஒரு பொய்யை மறைப்பதற்குப பல பொய்களை அவன் கூறவேண்டியிருக்கும்." என்று கூறியருளியுள்ளார்.

ஆமாம்! உண்மை என்றும் நிலைத்திருக்கும்; பொய்யோ என்றும் நிலைத்திருப்பதில்லை. பொய் பேசுபவன் உண்மையைப் பேசினுலும் அதனை உலகம் உண்மையாக ஏற்றுக் கொள்ளாது.

### ஏன் பொய் பேசுகிறோம்?

தவருன வாக்குறுதிகளே ஒருவனைப் பொய் பேச வைக்கிறது. ஆகவே எக்காரணத்தைக் கொண்டும் பிறருக்குத் தவருன வாக்குறுதிகளை அளிக்காதீர். ஒரு வாக்குறுதியை ஒருவருக்குக்

கொடுத்துவிட்டால், அதை நிறைவேற்றுவதில் எத்தகைய துன்பங்கள் வந்தாலும் எதிர் நீச்சலிட்டு வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

ஒருவன் தனக்குத் தெரிந்ததையே பேசுதல் வேண்டும். தெரியாததைத் தெரிந்தது போல் நடித்துப் பேசுவதும் பொய்யே ஆகும். அது விபரீத விளைவுகளை உண்டாக்கும். ஆற்றைக் கடக்கும் ஒருவனுக்கு ஆற்றின் ஆழம் தெரியாத நீ, தெரிந்தவனைப்போல் ''ஆழம் இல்லை; நடந்து போகலாம்.' என்று சொல்லிவிட்டால் ஆற்றைக் கடப்பவன் கதி என்ன ஆகும்?

சிறிய ஒன்றையும் பெரிதுபடுத்திக் கற்பனையாகக் கூறுவதும் ஒரு வகையாகப் பொய்யே ஆகும். அதனால் பலருடைய வாழ்வு சீரழிந்து விடும். வேப்பமரம் காற்றிலே ஆட, அந்த வழியிலே வந்த பெண்ணொருத்திப் பயந்து ஓடி வருகிறாள். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், ''பயப்படாதே; காற்றடித்தால் வேப்பமரம் அசையாமலா இருக்கும்?'' என்று கூறியிருக்க வேண்டும்.

''இந்த உச்சிவெயிலில் இந்தப் பக்கமாக வயதுப் பெண் வரலாமா? அந்த மரத்தில் ஒரு பேய் இருக்கிறது; நேற்றுக்கூட நான் அந்தப் பக்கம் வரும்போது மரத்தைக் குலுக்குக் குலுக்கென்று குலுக்கியது; என் கண்ணாலேயே அந்தப் பேயைப் பார்த்தேன்.'' என்று பொய்யை இட்டுக்கட்டிக் கூறுவது பெருந்துன்பத்தை உண்டாக்கும்.

தனக்கு நல்லதைச் செய்துகொள்ள வேண்டிப் பொய்யாக நடிப்பதும் தனக்குப் பிடிக்காததைப் பிறருக்காகப் பிடித்ததுபோல் நடிப்பதும் பொய்யே ஆகும்.

வாய்மையே தெய்வம்; வாய்மை பேசுபவர்கள் தெய்வத்தை ஒத்தவர்கள். மாணவர்களே நீங்கள் தெய்வங்களாக வாழ வேண்டும்.

## 7. பிறர் பழி கூறேல்.

குறைபாடு உடையவனே மனிதன். மனிதனிடம் ஏதேனும் ஒரு குறைபாடு இருத்தல் இயல்பே. தாமரை அழகான மலர்; அது சேற்றிலேதான் முளைக்கிறது; வளர்கிறது. அதனால் அத்தாமரையை நாம் வெறுத்து விடுகின்றோமா? ரோஜா மணமிக்க மலர்; அதனைச் சுற்றியுள்ள முட்கள் அதனைக் கொய்வாரைக் குத்துகின்றன; அதனால் அதை விரும்பாமல் இருக்கின்றோமா? விரும்புகின்றோம்.

அதைப் போலவே மக்களிடம் உடற்குறையும் இருக்கலாம்; குணக் குறையும் இருக்கலாம்; அவற்றை ஒதுக்கி நிறைவினைப் பாராட்டுகின்ற உள்ளம் மாணவர்களுக்கு வேண்டும்.

ஒருவன் பிறவியிலேயே கால் முடமாகப் பிறந்துவிட்டான்; அஃது அவன் குறையன்று; இயற்கையின் கோளாறு. அவனை 'நொண்டி' என்று அழைத்தால் அவன் உள்ளம் எத்துணை வருத்த முறும்? அவன் பெயரைச் சொல்லி அழைத்தால் எத்துணை மகிழ்ச்சி அடைவான்? இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருவனிடம் குணமும் இருக்கும்; குற்றமும் இருக்கும். குணத் தைப் பாராட்டாமல் குற்றத்தையே பாராட்டிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. குற்றமற்றவர்கள் யார்? குற்றம் பார்க்கில் சுற்றம் ஏது?

ஆகவே, மாணவர்களே! பிறர்தம் குறைகளையே பேசித் திரியா தீர்கள். ஒருவரைப் பற்றி ஒருவரிடம் கோள் சொல்லாதீர்கள். பிறர்தம் குணங்களைப் பாராட்டிப் பேசுங்கள்; நீங்களும் பாராட்டப் படுவீர்கள். கோள் கூறுதீர்கள்; அஃது உங்கள் இழிந்த குணத்தை வளர்த்துவிடும்.

## 8. திருடாதே! தம்பி திருடாதே!

தனக்குரியது அல்லாதது பொன்னே ஆயினும் பொருளே ஆயினும் வேறு பிறவே ஆயினும் அதைக் கவர நினைப்பது திருட்டே ஆகும். நீ வகுப்பில் அமர்ந்திருக்கிறாய்; உன் பக்கத்து மாணவன் தன் புத்தகத்தில் ஒரு ரூபாய் தாள் வைத்திருக்கிறான்; அதை அவனுக்குத் தெரியாமல் எடுத்துக்கொள்கிறாய்; அது திருட்டல்லவா? நீ வகுப்பறையின் உள்ளே நுழைகின்றாய்; பேனா ஒன்று கீழே கிடக் கின்றது; அதை எடுத்து உன் சட்டைப் பையில் வைத்துக்கொள் கிறாய்; அதுவும் திருட்டேதான். அஃது உனக்கு உரிமையல்லாத பொருள்தானே.

நீ படிக்காமல் சுற்றிக்கொண்டிருக்கிறாய்; உன் பக்கத்து மாணவன் இரவு பகலாகப் பாடுபட்டுப் படிக்கிறான். தேர்வு வரு கிறது; இருவரும் பக்கம்பக்கமாக உட்கார்ந்து தேர்வு எழுது கின்றீர்கள். உனக்கு ஒரு வினாவுக்குக்கூட விடை தெரியாது; ஆனாலும் பக்கத்து மாணவனைப் பார்த்து அப்படியே எழுதுகின்றாய்.

நீயும் எண்பது மதிப்பெண் பெறுகிறாய்; அவனும் எண்பது மதிப் பெண் பெறுகின்றான். அவன் உழைப்பை நீ திருடிவிட்டாய்; அது வும் திருட்டேதான்.

உன் வகுப்புத் தமிழாசிரியர் ஒரு தலைப்பைக் கொடுத்து 'ஒரு கவிதை எழுதிக் கொண்டு வாருங்கள்' என எல்லாருக்கும் சொல்லு கிறார். நீ வீட்டிற்குச் செல்கிறாய்; உன் அண்ணன் நன்றாகக்

கவிதை எழுதுவான் ; அவனிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கவிதையை எழுதி வாங்குகின்றாய்.

பள்ளிக்கூடத்திற்கு வருகிறாய்; கவிதையைத் தமிழாசிரியரிடம் கொடுக்கின்றாய்; வாங்கிப் படித்துப் பார்த்த அவர், உன்னை அளவு கடந்து புகழ்கின்றார். அந்தப் புகழ்ச்சி உன் அண்ணனுக்கு உரிய தல்லவா ? அதுவும் திருட்டேதான் !

ஆகவே, தம்பி திருடாதே ! தங்கையே திருடாதே ! பிறர்க் குரியது பொன்னாக இருந்தாலென்ன ? பொருளாக இருந்தாலென்ன? மண்ணாக இருந்தாலென்ன ? மாபெரும் புகழாயிருந்தாலென்ன? எதையுமே திருடாதே.

பொய் கூறுவது, பிறர் புகழைத் திருடுவது, பிறர் பழியையே பேசுவது எத்துணை பெரிய இழிந்த பண்புகளோ அவற்றைப் போன்றதே புறங்கூறுதலும் பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப் படுதலும் ஆகும்.

அழுக்காறு எனும் ஒரு பாவி !

மற்றவர் வளர்ச்சிகண்டு பொறாத தன்மையே பொறாமை எனப் படுவது. மக்களுக்கு வேண்டாத இழிந்த குணங்களுள் இது தலை யாயது. வள்ளுவரும் அதனை 'அழுக்காறு என ஒரு பாவி' என்றார்.

ஒன்பதாம் வகுப்பு மாணவி தாமரை; அவள் கழுத்தில் தங்கச் சங்கிலி; கையில் தங்க வளையல்; விரலில் மோதிரம்; இடையில் பட்டுப்பாவாடை; இத்தகைய ஆடை அணிகளோடு வகுப்பிற்கு வருகிறாள்.

வெண்ணிலாவும் அதே வகுப்பு மாணவிதான்; அவளுக்கும் பட்டாடை இல்லாவிட்டாலும் பருத்தியாடை உண்டு. தங்கவளையல் இல்லாவிட்டாலும் கண்ணாடி வளையல் உண்டு; தங்கச்சங்கிலி இல்லை என்றாலும் பாசி மாலை உண்டு. என்றாலும் தாமரையைப் பார்க்கும் போதெல்லாம் வெண்ணிலாவின் உள்ளம் பொறாமையால் கொதிக்கும்; அது பிறர் ஆக்கம் கண்டு பொறாத உள்ளம்.

பொறாமையின் விளை என்ன ஆகிறது ? தானும் அவளைப் போல உடுத்த வேண்டும்; அணியவேண்டும் என்ற ஆசையைத் தூண்டுகிறது. ஆசை நிறைவேறாதபோது கோபம் உண்டாகிறது; கோபத்தின் விளைவாகக் கடுஞ்சொல் பிறக்கிறது.

ஆகவே பொறாமை என்னும் ஒரு குணம் பேராசையை உண்டாக் கிறது; கோபத்தை உண்டாக்குகிறது; கடுஞ்சொற்களைப் பேசச் செய்கிறது. ஆகவே ஒருவன் பொறாமையற்ற உள்ளத்தைப் பெறுவ தையே சிறந்த ஒழுக்கமாகக் கொள்ள வேண்டும். பொறாமையற்ற

உள்ளத்தைப் பெறுதலே ஒருவன் பெறத்தக்க பேறுகளுள் சிறந்த பேருகும்.

பொருமை என்னும் குணம் மிகவும் இழிந்ததாகும். பகைவரும் உனக்குத் தீங்கு செய்வதற்கு மறந்தாலும் மறப்பர்; பொருமையோ உனக்குத் தவருமல் தீமையை உண்டாக்கியே தீரும்.

ஒருவன் மற்றவனுக்கு கொடுப்பதைப் பார்த்து நீ பொருமைப் படாதே; பொருமைப்படின் நீ மட்டுமன்று; உன் சுற்றத்தாரும் உடுக்க உடையும் உண்ணுவதற்கு உணவும் இன்றி வருந்த நேரிடும். பொருமை உள்ளம் படைத்தவனிடத்தே செல்வம் நிலைத்திருப்பதில்லை.

பொருமை ஒப்பற்ற பாவியாவான்; அவன் இம்மையில் உன் செல்வத்தை அழிப்பான்; மறுமையில் தீயுழித்தள்ளுவான். ஆகவே மாணவமணிகளே! பிறர் வளர்ச்சி கண்டு பொருமைப் படாதீர்! பிறர் வளர்ச்சிகண்டு மகிழ்ச்சி அடையுங்கள்! நீங்களும் வளர முயற்சி செய்யுங்கள்.

புறங்கூருதே !

காணுத வழிப் பிறரை இகழ்ந்துரைத்தலே புறங்கூறுதல் ஆகும். புறங்கூறுதல் இழிந்த பண்பாகும். சில மாணவர்கள், தங்கள் நண்பர்களைப்பற்றியே அவர்கள் இல்லாதபோது குறைபேசித்திரிவர். குறையிருப்பது மனிதர் இயல்பே.

குறைகண்டால் என்ன செய்யவேண்டும்? நேருக்கு நேர் குறைகளைச் சொல்லித் திருத்துதல் வேண்டும். ஏதோ ஒரு பயன் கருதி மற்றவர்களைப் பற்றி அவர்கள் இல்லாதபோது இழித்தும் பழித்தும் கூறுவது மிகவும் இழிந்த செயலாகும். புறங்கூறித் திரிவார் பலர்; ஆதலின் அவர்கள் திருந்தவேண்டு மென்பதற்காகவே வள்ளுவர் புறங்கூருமை என ஓர் அதிகாரம் வகுத்துப் பத்துக் குறட்பாக்களில் புறங்கூறுதலின் இழிவை விளக்கியுள்ளார்.

ஒருவன் அறங்களைச் செய்யான்; பாபங்களையே செய்வான்; என்றாலும் பரவாயில்லை. அவன் பிறரைப் புறங்கூறமாட்டான் என்று உலகத்தவரால் சொல்லப்படுவான் ஆயின் அதுவே நன்றுகும்.

ஒருவனைக் காணுதபோது இகழ்ந்துரைத்துக் கண்டவழி பொய் யாக அவனேடு சிரித்து மகிழ்தல் மிகக் கொடியதாகும். அவனைக் காட்டிலும் அறங்களை அழித்துப் பாவங்களைச் செய்பவனே உயர்ந்த வன் ஆவான்.

ஒருவன், ஒருவனை காணுதவழிப் புறங்கூறிக் கண்டவழி அவனுக்கு நல்லவனுக நடித்து வாழ்வதைக் காட்டிலும் இறத்தலே மேலானது.

ஒருவனுக்கு முன்னே நின்று இரக்கமற்ற சொற்களைச் சொல்லி னும் சொல்லுக. அவன் இல்லாத போது மட்டும் புறங்கூறித் திரியாதே.

ஒவ்வொருவரும் பிறர் பழியைக் கூறுவதற்கு முன்னர்த் தன்னு டைய பழிச் செயலையும் எண்ணிப் பார்க்கவேண்டும். புறங்கூறும் இயல்பினர் நண்பர்களையே தூற்றித்திரிபவர்களாயிற்றே! அத்தகைய வர்கள், பகைவர் எனின் வறிதே விட்டுவிடுவாரோ ?

இவ்வாறு புறங்கூறலின் இழிவையும் புறங்கூறுவானது புன்மைக் குணத்தையும் வள்ளுவர் விளக்கிக் கூறுகின்றார்.

ஆகவே மாணவர்களே! யார் குறையை எடுத்துச் சொல்லி னும் அவரிடமே எடுத்துச் சொல்லுங்கள்! அவர் இல்லாதபோது மற்றவரிடம் புறங்கூறித் திரியாதீர்கள்.

### செய்முறைப் பயிற்சி

1. *புறந் தூய்மையைப் போற்றுவது எங்ஙனம் ?*
2. *அகந் தூய்மையை எங்ஙனம் வளர்க்கலாம் ? அஃது எதனால் அறியப்படும் ?*
3. *வாய்மை யாவது யாது ?*
4. *வாய்மை பற்றி வள்ளுவர் யாது கூறுகின்றார் ?*
5. *காந்தி கண்ட நாடகம் எது ? அந்த நாடகத்தைப் படித்ததால் நீ உணர்ந்து கொண்ட தென்ன ?*
6. *நீ என்றாவது ஒரு குற்றத்தைச் செய்து விட்டு அதைப் பிறர் மேல் சுமத்திய துண்டா ? என்ன குற்றம் செய்தாய் ? யார்மேல் சுமத்தினாய் ? அதைப்பற்றி இப்போதாவது வருந்துகிறாயா ?*
7. *நீ ஒரு தவறு செய்துவிட்டாய்; அந்தத் தவற்றை நீ செய்ததாக ஒப்புக் கொண்ட துண்டா ?*
8. *நரேந்திரனின் உயர்ந்த குணத்தைப் பாராட்டலாமா ? ஏன் ?*
9. *காந்தி தனக்காகத் திருடவில்லை; பிறருக்காகவே திருடினார் — அது குற்ற மாகுமா ?*
10. *குற்றங்களுக் கெல்லாம் பொய்யே முதற்படி என்பதை விளக்குக.*
11. *நாட்டு மன்னரின் நன் மொழி யாது ? ஞானமன்னரின் பொன் மொழி யாது ?*
12. *விளையாட்டுக்காகவும் பொய் சொல்லக் கூடாது; தெரியாததைத் தெரிந் ததைப் போல் நடித்துப் பேசுவதும் பொய்யே — இவற்றை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகின்றார் ?*
13. *எவையெவை திருட்டின் பக்கமாகச் சாரும் என ஆசிரியர் விளக்கு கின்றார் ?*
14. *பொறாமைக் குணத்தின் இழிவினை விளக்குக.*

### நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி

1. *பொய் சொல்லாதே; மெய்யே பேசு.*
2. *சூதாட்டு வேண்டாம்; விளையாட்டுக் கைக் கொள்.*
3. *திருடாதே; கேட்டுப் பெறு.*
4. *பிறர்பழி கூறாதே; பிறர் புகழ் கூறு.*
5. *புறங் கூறாதே; நேர்மையாகத் திருத்து.*
6. *செய்த குற்றத்தைப் பிறர் மேல் சுமத்தாதே; நீயே ஏற்றுக்கொள்.*
7. *பிறர் ஆக்கம்கண்டு பொறாமைப் படாதே; மகிழ்ச்சியே கொள்.*

பத்து

# மக்களுக்குச் சேவை செய்!

## 1. சேவையே அன்பை வெளிப்படுத்தும்.

மனிதன் தன்னலத்திலேயே நாட்டம் உடையவனுக இருக்கிருன்; தன் இன்பத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிருன்; தன் சுகத்துக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிருன். எப்படியோ தன் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக அமைந்தால் போதுமென்றே கருதுகின்ருன்.

வீட்டில் சுவையான தின்பண்டம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாறு குழந்தைகள் அந்த வீட்டில் இருக்கிருர்கள். ஒவ்வொரு குழந்தையும் தனக்குத் தனக்கு என்று அடித்துக்கொள்கிறதே தவிர மற்றவர்கட்கும் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை.

அத்தகைய தன்னல மனப்பான்மை ஒழிந்து பிறர்நலம் போற்றும் மனப்பான்மை வளர்வதற்கு அன்பே அடிப்படையாக அமைகிறது. ஒருவரிடத்து ஏற்படுகின்ற இரக்கமே அன்பாக மலர்கிறது; அந்த அன்பே சேவை மனப்பான்மையாகிறது.

சேவை மனப்பான்மை மக்களிடத்தே வளர்ச்சி பெறவேண்டுமென்பதற்காகவே அண்ணல் ஏசு பெருமான், ‘‘உன்னைப் போல் பிறரையும் நேசி’’ என்ருர். ‘‘உனக்கு மற்றவர்கள் என்னசெய்ய வேண்டும் என்று விரும்புகிருயோ அதையே நீ பிறர்க்குச் செய்’’ என்றும் அவர் கூறினுர்.

உடன் பிறந்தார்க்கும் உற்ருர்க்கும் உறவினர்க்கும் பெற்ரோர்க்கும் நாம் அன்பினுலே வேண்டும் உதவிகளைச் செய்கின்ருேம். அது நம் கடமை ஆகிறது.

முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவருக்கு யார்? எவர்? என்று தெரிந்து கொள்ளாமல் உதவி செய்கின்ருேம். அதுவே சேவை ஆகிறது.

கைம்மாறு கருதி செய்யப்படுவது சேவையன்று; கைம்மாறு கருதாமல் செய்யப்படுவதே சேவையாகும்.

உன் தம்பிக்கோ தங்கைக்கோ நாள் தோறும் பாடம் சொல்லிக் கொடுக்கிறாய். அதற்கு உன் அன்புதான் காரணம்; அஃது உன் கடமையாகிறது.

ஊரிலுள்ள ஏழைக்குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்றுக் கொடுக்கின்றாய். அதற்கும் அன்புதான் காரணம். ஆயினும் கைம்மாறு கருதாது செய்யப்படுவதால் அது சேவை ஆகிறது.

வயதான உன் பாட்டி கோவிலுக்குச் செல்ல விரும்புகிறாள்; நீ பாட்டியின் கையைப் பிடித்துப் பத்திரமாகக் கோவிலுக்கு அழைத்துச் செல்கிறாய். பாட்டியின் மீது கொண்ட அன்பால் நீ அவளுடன் செல்கிறாய்; அஃது உன் கடமை.

வழியில் செல்லும் வயதான கிழவர் ஒருவர், வீதியைக் கடக்க முடியாமல் தடுமாறுகிறார்; அன்பு காரணமாக நீ அவர் கையைப் பிடித்து அழைத்துச் சென்று வீதியைக் கடக்கச் செய்கிறாய். அது நீ செய்யும் சேவை.

மக்களுக்குச் செய்கின்ற சேவை, மகேசனுக்குச் செய்கின்ற சேவையாகும். "இறைவன் எங்கும் நிறைந்தவன்; இறைவன் எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கியவன்." என்று இந்து மதச் சாத்திரங்கள் கூறுகின்றன. ஆகவே உயிர்களுக்குச் செய்யும் சேவையே உலகைப் படைத்த ஆண்டவனுக்குச் செய்யும் சேவை ஆகும் என்பதை அறிதல் வேண்டும்.

## 2. இஸ்லாம் என்ன கூறுகிறது?

இஸ்லாம் மார்க்கத்தினை ஒரு கட்டடம் என்று கொள்வோமாயின் அக்கட்டடத்தின் தூண்களாகக் கருதப்படுபவை தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் என்னும் கடமைகளாகும். அவற்றுள் மூன்றாவதாகச் செல்லப்பட்ட 'ஜகாத்' என்ன என்று உங்கட்குத் தெரியுமா? தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று மட்டும் அன்று; நடை முறைக்குக் கொண்டு வரவேண்டிய ஒன்றும் ஆகும்.

"ஒவ்வொரு முஸ்லிம் செல்வரும் தங்களிடம் ஓர் ஆண்டுவரை குறைந்த பட்சம் ஐம்பத்து இரண்டரைத் தோலா வெள்ளியிருந்தால் அதிலிருந்து நாற்பதில் ஒருபங்கைத் தங்களுடைய ஏழை உறவினருக்கோ, வேறு யாராவது தேவை உளளவருக்கோ, வறுமை வாய்ப்பட்டவருக்கோ, புதிதாக முஸ்லிம் ஆனவருக்கோ, பிராயாணிக்கோ, கடன்பட்டவருக்கோ கொடுக்க வேண்டும்." என்று அல்லாஹ் கடமையாக்கியிருக்கிறான். இதுவே ஜகாத் என்பது.

மேலும் அல்லாஹ் என்ன கூறுகிறார்?

“நீங்கள் உங்கள் ஏழைச் சகோதரருக்கு மன மகிழ்ச்சியோடு ஏதேனும் என்பெயரால் கொடுத்தால், அஃது எனக்குக் கொடுத்தது போலாகும். கொடுக்கப் பட்டவனின் சார்பாக நான் உங்களுக்குப் பன்மடங்கு பிரதிபலன் வழங்குவேன்.” என்று கூறுகின்ருர்.

இவற்ருல் நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்; மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது தானே. இறைவன் பெயரால் ஏழைகளுக்குச் செய்யும் உதவி இறைவனுக்கே செய்ததாகும் என்பதல்லவா ?

## 3. ஏழையின் சிரிப்பே இறைவனின் சிரிப்பு !

மாணவர்களே வேதாகமம் கூறுவதைப் படித்துப் பாருங்கள் !

“இறுதித் தீர்வை நாளில், விண்ணகத் தூதகணங்கள் புடை சூழ மனுமகன் மாட்சி மிக்க அரியணையில் வீற்றிருப்பார். அவர் திருமுன் எல்லா மக்கள் இனத்தாரும் ஒன்று சேர்க்கப் பெறுவர்.

மேய்ப்பன் செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிப்பது போல அவர், அவர்களை வெவ்வேருகப் பிரிப்பார். செம்மறி ஆடுகளைத் தம் வலப்பக்கமும் வெள்ளாடுகளைத் தம் இடப்பக்கமுமாக நிறுத்துவார்.

அவ்வமயம் பேரரசர் வலப்பக்கம் இருப்போரை விளித்து, “என் பேராசீர் பெற்றவர்காள்! வாரீர்; அவனியை அமைத்தது முதல் உங்கள் அனைவருக்காகவும் ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கே உரிமை ஆகுக.

நான் பசியாயிருந்தேன்; எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன்; எனக்குப் பருகக் கொடுத்தீர்கள். அன்னியனாக இருந்தேன்; என்னை உவந்து வரவேற்றீர்கள். ஆடையற்றிருந்தேன்; எனக்கு உடுத்துவித்தீர்கள். நோயுற்றிருந்தேன்; என்னைக் காண வந்தீர்கள். சிறைப்பட்டிருந்தேன்; என்னிடம் வந்து சென்றீர்கள்” என்பார்.

அதற்கு நீதிமான்கள், “ஆண்டவரே! எப்பொழுது நீவிர் பசியாயிருக்கக் கண்டு பசியாற்றினேம்? நீவிர் எப்பொழுது தாகமாயிருக்கக் கண்டு உமக்குப் பருகக் கொடுத்தோம்? நீவிர் எப்பொழுது அன்னியராக இருந்தது கண்டு வரவேற்ரேம் ? என்று நீவிர் ஆடையின்றியிருந்தது கண்டு உடுத்துவித்தோம். நீவிர் எப்பொழுது சிறையிலோ நோயுற்ரே இருந்தது கண்டு நாங்கள் உம்மிடம் வந்தோம்.” என்பார்.

அதற்கு அவர், “உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; சின்னஞ் சிறிய என் சகோதரரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்!” என்பார்.

மாணவர்களே! மீண்டும் ஒரு முறை இறை மொழியைப் படித்துப் பாருங்கள்!

ஏழைக்கு உதவி செய்; அஃது எனக்கே செய்ததாகும். ஏழைகள் மகிழ்ந்தால் நான் மகிழ்கின்றேன்; ஏழைகள் சிரித்தால் நான் சிரிக்கிறேன் என்பது தானே இதன் பொருள்.

ஏழையின் சிரிப்பே இறைவனின் சிரிப்பு என்ருல் நாம் என்ன செய்யவேண்டும்? இறைவனின் பெயரைச் சொல்லி ஏழைகளுக்கு உதவிசெய்ய வேண்டும். ஆம்! எல்லா மதங்களும் இதையே சொல்லுகின்றன.

## 4. அம்மையே அப்பா!

அம்மையே அப்பா! ஒப்பிலாமணியே
அன்பினுள் விளைந்த ஆரமுதே.

இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் போற்றுகிருர் அடிகளார்.

"தாதாய் ஏழுலகுக்கும் தாயே!" எனத் தந்தையாகவும் தாயாகவும் போற்றப்படுகின்ருர் இறைவன்.

"பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பரம பிதாவே! உம்முடைய திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக!" என இறைவனைப் பிதா எனப் போற்றுகிறது கிறித்துவம். இவற்ருல் நாம் அறிவதென்ன?

உலக மக்களுக்கெல்லாம் இறைவன் தாயாகவும் விளங்குகின்ருர்; தந்தையாகவும் விளங்குகின்ருர் என்பது தான். ஆகவே நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள். உலக மக்களாகிய நாம் அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்; ஒரே இறைவனின் குழந்தைகள்.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் சகோதரர்கள் அன்ருே! ஆகவே மாணவர்களே! உலகிலுள்ள ஒவ்வொருவரையும் உங்கள் சகோதரர்களாக எண்ணுங்கள்! சகோதரிகளாக நினையுங்கள். அப்போதுதான் அவர்கள் மீது உங்களுக்குப் பற்றுப் பிறக்கும்; பாசம் உண்டாகும்: அன்பு வளரும்; சேவை மிளிரும்.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தங்களுக்குள் அன்புடையவர்களாக இருக்கிருர்கள். உலக மக்கள் அனைவருமே இறைவனின் குழந்தைகள் என்ற எண்ணம் உருவானல் உலகம் முழுவதும் ஒரே குடும்பம் ஆகிவிடும்; அது நம் குடும்பம் ஆகிவிடும்; உலக மக்கள் அனைவரும் நம் உடன் பிறந்தார் ஆகிவிடுவர்.

அப்பொழுது ஏழைகள், எளியவர்கள், படிக்காதவர்கள், பாமர மக்கள், நோயோடு வருந்துவோர், துன்பத்தால் துயருறுவோர் அனைவர்பாலும் நம் அன்பு செல்லும். அதனால் சேவை மனப் பான்மை வளரும்.

சேவை மனப்பான்மையுடையவன், வேண்டியவன் வேண்டாத வன் என்று பார்க்க மாட்டான்; தன் சாதிக்காரன் வேற்று சாதிக் காரன் என்று எண்ணமாட்டான்; தன் நாட்டான் பிற நாட்டான் என்றும் கருதமாட்டான். ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் சமமே ஆவர்.

## 5. நேசி! நேசிக்கப்படுவாய்!!

எவன் மற்றவர்களை நேசிக்கிறானோ அவன் மற்றவர்களால் நேசிக்கப்படுவான். எனவே பிறரிடம் அன்பு காட்டு! அவர்கள் உன்னிடம் அன்பு காட்டுவார்கள். நீ பிறரிடம் இரக்கம் காட்டு; அவர்கள் உன்னிடம் இரக்கம் காட்டுவார்கள்.

நீ மற்றவர்களிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறாயோ அதனையே நீ மற்றவர்களுக்குச் செய்! அன்பு, ஆதரவு, இரக்கம், ஈகை, உண்மை, ஊக்கம் இவற்றை நீ மற்றவர்களிடம் எதிர்பார்ப்பாய்; அவற்றை முதலில் நீ பெற்றுக் கொள்.

மாணவச் செல்வங்களே! சேவை மனப்பான்மையின் சிறப்பினைப் பற்றிப் படித்தோம்; எளியவர்களுக்குச் செய்யும் சேவையே இறைவ னுக்குச் செய்யும் சேவை என்பதையும் கற்றோம். பள்ளியில் பயிலும் மாணவர்களாகிய நீங்கள் எத்தகைய சேவைகளை மேற்கொள்ளலாம்?

**சிந்தித்துப் பாருங்கள்!**

உங்களைக் காட்டிலும் ஏழை மாணவர்கள் உங்களுடன் படிப் பார்கள்; உங்களைக் காட்டிலும் எளிய மாணவர்கள் உங்களுடன் படிப்பார்கள்; அவர்களிடம் நீங்கள் அன்பு காட்டுங்கள்; ஆதரவு மொழி பேசுங்கள்.

தின்பண்டங்கள் வாங்கி உண்ண உங்கள் தாய் தினமும் உங்களுக் குக் காசுதருவாள் அல்லவா? அதைச் சேர்த்து வையுங்கள்; ஆசிரியர் களிடம் கொடுத்து ஏழை மாணவர்களுக்குச் சீருடை வாங்கிக் கொடுக்கச் சொல்லுங்கள்; புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கச் சொல்லுங்கள்.

உங்கள் வீட்டருகில் எத்தனையோ ஏழைக் குழந்தைகள் படிப் பறிவின்றி இருக்கிறார்களே! அவர்கள் எழுத்தறிவு பெறச் செய்யுங் கள். அவர்கள் கல்வியறிவற்ற பெற்றோர்களைப் பெற்றவர்களாயிருக் கலாம்; அந்தக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடம் போதியுங்கள்.

உங்கள் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது உங்கள் கடமை. உங்கள் வீட்டின் சுற்றுப்புறங்களை-வீதியைச் சுத்தமாக வைத்திருக்க உதவி செய்யுங்கள்; அஃது ஒரு பெருஞ்சேவையாகும்.

பணத்தால்தான் பிறர்க்குச் சேவைச் செய்ய வேண்டும் என்பதில்லை; மனத்தாலும் சேவை செய்யலாம்; உடல் உழைப்பாலும் சேவை செய்யலாம். சிறுவர்களே உங்கள் சேவை நாட்டுக்குத் தேவை.

### செய்முறைப் பயிற்சி

1. சேவை மனப்பான்மையை விளக்குக?
2. பள்ளியில் படிக்கின்ற நீ, செய்யத்தக்க சேவைகளும் உண்டு. நீ என்ன சேவை செய்கிறாய்? ஒன்றுமே செய்யவில்லை யென்றால் இனியேனும் செய்ய முயற்சி செய்.
3. இஸ்லாம் என்ன கூறுகிறது? அதைத் தெரிந்து கொண்ட பிறகு நீ செய்யும் சேவை யாது?
4. ஏழையின் சிரிப்பிலே இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை வேதாகமம் எவ்வாறு விளக்குகிறது?
5. நாம் அனைவரும் ஒரு தாய்மக்களே என்பதை விளக்குக.
6. மாணவப் பருவத்தில் செய்யத்தக்க சேவைகளைத் தேர்ந்தெடு. அவற்றை வரிசைப் படுத்து; உன் நண்பர்களையும் அச்சேவையில் ஈடுபடுத்து.

### நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி

1. உன் பெற்றோர்க்கு நீ செய்யும் உதவிகளும் சேவையே.
2. உன்னைச் சூழ்ந்திருப்பவர்களுக்கு நீ செய்யும் உதவிகளும் சேவையே.
3. எல்லாரையும் நேசிப்பாயாக! எல்லாராலும் நேசிக்கப் படுவாய்.

பதினொன்று

# உரிமைகளும் கடமைகளும்

## 1. அம்மா வேண்டுமா? அப்பா வேண்டுமா?

உங்களுக்குச் சொந்தமான கடிகாரம்; அதை ஒருவன் திருடிக் கொண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்களின் நெருங்கிய நண்பனின் தந்தையைக் காரணமின்றிச் சிறையில் அடைத்து விட்டார்கள்; நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்களின் தாயைப்பற்றி ஒருவன் அவதூருகப் பேசுகின்ருன்; உங்கள் நிலை எப்படியிருக்கும்?

உங்களுக்கும் உங்கள் நண்பருக்கும் கோபமும் வருத்தமும் ஏற்படும். ஏன்?

கடிகாரம் உங்களுக்கு உரிமையான பொருள்; அதை எடுத்துக் கொள்ள மற்றவனுக்கு உரிமையில்லை. உங்கள் நண்பனின் தந்தைக்குச் சுதந்தரமாய் இருக்க உரிமை இருக்கிறது; அந்த உரிமை தடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் போன்றே நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள உங்கள் தாய்க்கும் உரிமை இருக்கிறது.

இவ்வாறே எல்லாருக்கும் பல்வேறு உரிமைகளும் உண்டு; மற்றவர்களின் உரிமைகளை மதிக்க வேண்டிய கடமையும் உண்டு.

எது உரிமை? ஒவ்வொருவருக்கும் எது உரியதோ அதைப் பெறுவதே அவர்கள் உரிமை; தன் உரிமையை விரும்புபவன் பிறர் உரிமையையும் மதிக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் உலகம் சொந்தமானது; அங்கு வாழ அனைவருக்கும் உரிமை உண்டு; உழைக்க—பிழைக்க—உண்டு மகிழ உரிமையுண்டு; ஆயினும் அவன் வாழும் வாழ்க்கை மற்றவர்களைப் பாதிக்காத வண்ணம் அமைதல் வேண்டும்.

கடமையாவது யாது? பகல் நேரத்தில் உன் தந்தை வீட்டுக்கு வருகிருர்; உன் தாயை அழைக்கிருர்; உணவைப்பரிமாறு பசிக்கிறது என்கிருர். உண்ணுவதற்கும் உன் தாயைப் பார்த்து

உணவைப் பரிமாறு என்று சொல்லுவதற்கும் உன் தந்தைக்கு உரிமை இருக்கிறது.

உணவைச் சமைப்பது உன் தாயின் கடமை; பரிமாறுவது உன் தாயின் கடமை. ஆயினும் உணவைச்சமைப்பதற்குரிய பொருள்களை வாங்கித் தருவது உன் தந்தையின் கடமை; உன் தாயைப் பாதுகாக்க வேண்டியதும் உன் தந்தையின் கடமை அல்லவா?

ஆகவே உரிமையும் கடமையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. ஒரு நாணயத்தின் இருபுறம் போன்றவை உரிமையும் கடமையும். கடமையை ஆற்றுபவனே உரிமையைப் பெற முடியும்; உரிமையை விரும்புபவன் கடமையைச் செய்தல் வேண்டும்.

இருகண்களும் இணைந்தே பொருளைப் பார்ப்பது போல கடமையையும் உரிமையையும் இணைத்தே சமுதாயம் காண்கிறது. புகைவண்டியை ஓடச் செய்கின்ற தண்டவாளங்களைப்போல மனித வாழ்க்கையைக் கடமையும் உரிமையும் இணைகோடுகளாகச் சென்று நடத்துகின்றன.

பெற்றவர்கள் பிள்ளைகளைக் கொஞ்சுவார்கள். "உனக்கு அப்பா வேண்டுமா? அம்மா வேண்டுமா?" என்று கேட்டுக்கொஞ்சுவார்கள். புத்திசாலிப் பிள்ளைகளாக இருந்தால் என்ன சொல்லும்? "எனக்கு அப்பாவும் வேண்டும்; அம்மாவும் வேண்டும்." என்றுதான் கூறும். அப்பாவின் உழைப்பும் அம்மாவின் பணிவிடையும் சேர்ந்தே குழந்தையை வளர்க்கும்.

ஆகவே கடமைகளை முறையாகச் செய்பவர்களே, உரிமைகளை உரிமையோடு பெறமுடியும். மாணவர்களே! எட்டாம் வகுப்பில் 'கடமையும் உரிமையும்' என்பது பற்றிப் படித்திருக்கிறீர்கள்; மீண்டும் ஒரு முறை அதைப் படித்து நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

## 2. கடமையைச் செய்வோம்! உரிமையைப் பெறுவோம்!



மக்களாகப் பிறந்தவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. தனக்கு உரிமை இருப்பதைப்போல அடுத்தவனுக்கும் உரிமை உண்டு என்று மதிக்கின்ற கடமையும் உண்டு. மனித சமுதாய ஆராய்ச்சியிலிருந்து, "ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமான ஆசையும் சுதந்தரமான உணர்வும் கட்டுப்பாடற்ற சிந்தனையும் பேச்சுரிமையும்உண்டு." என்பதை நாம் அறிகின்றோம்.

மனிதன் இறைவனுக்காகவே படைக்கப்பட்டவன் என்றால், "இறைவனைச் சுதந்தரமாக வணங்க அவனுக்கு முழு உரிமையும்

உண்டல்லவா? 'நீ உள்ளே வந்து வணங்கு; அவன் வெளியே நின்று வணங்கட்டும்' என்பதில் உரிமை மறுக்கப்படுகிறதல்லவா ?

பால் உணர்விலும் மனிதனுக்கு அந்த உரிமை உண்டு. ஒருவன் தான் விரும்பிய ஒருத்தியை மணக்கலாம்; ஒருத்தி தான் விரும்பிய ஒருவனை மணக்கலாம். இந்த உரிமைகள் அனைத்தும் இயற்கையான உரிமைகள். இவற்றைத் தடுக்கவோ மறுக்கவோ எவர்க்கும் உரிமை இல்லை.

ஆயினும் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள் சில உள; அவற்றை எடுக்கவும் அவற்றில் மாற்றங்களைச் செய்யவும் ஆளுகின்ற அரசுக்கு முழு உரிமையும் உண்டு. போர் நடைபெறும் அவசர காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்; ஆயினும் அது சில காலமே நீடிக்கும்.

நாம் ஒவ்வொருவரும் உரிமையை அனுபவிக்கலாம். அதே போன்று அடுத்தவர் உரிமையை நாம் மதிக்கவும் வேண்டும். நம் கடமைகளை நாம் செய்ய வேண்டும். பார வண்டியை இழுக்கும்படியாக மாட்டை வற்புறுத்துவது போன்று யாரும் கடமையைச் செய் என்று வற்புறுத்துவதில்லை. மாடுகள் இழுக்கும்போது சக்கரங்கள் தானாகவே உருள்வதைப் போல நம் உள்ளுணர்வின் தூண்டுதலே நாம் நம் கடமைகளைச் செய்யத் தூண்டும். ஆகவே கடமையைச் செய்வோம் ; உரிமையைப் பெறுவோம்.

## 3. இணைகோடுகளே உரிமையும் கடமையும்

பிள்ளையைப் பெறுதலும் பெற்ற பிள்ளையைப் பேணி வளர்த்தலும் தாயின் கடமை.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்து நல்லவனாக்குவது தந்தையின் கடமை.

பள்ளிக்கு வரும் பிள்ளைகளை அறிவும் ஆற்றலும் பெறச் செய்வது ஆசிரியர் கடமை.

ஒரு தொழிலைச் செய்யச் செல்லும் தொழிலாளர்கள், தங்கள் தொழிலைத் திறம்படச் செய்ய வேண்டுவது அவர்தம் கடமை.

தொழில் புரிந்து பொருளீட்டித்தரும் தொழிலாளிகளுக்கு வேண்டும் வசதிகளையும் வாய்ப்புகளையும் உண்டாக்கிக் கொடுத்தல் முதலாளியின் கடமை.

நாட்டு மக்களின் நலம் கருதி ஆக்கப்பணிகளைச் செய்வது நாட்டை ஆள வந்த அமைச்சர்களின் கடமை.

நாட்டு நலனுக்காக அரசு ஆக்கும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தலே மக்களின் கடமை. இத்தகைய கடமைகள் ஒவ்வொரு வருக்கும் உண்டு.

உனக்கு உரிமையுண்டா ?

பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய், தன் பிள்ளையைத் தனக்கு உதவி செய் எனக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது.

படிக்க வைத்து நல்லவனுகவும் வல்லவனுகவும் ஆக்கிய தந்தை, தன் மகனைத் தனக்கு உதவவேண்டும் எனக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது.

அறிவும் ஆற்றலும் அளித்த ஆசிரியர்; மாணவன் தவருன வழியில் செல்லும்போது அடித்துத் திருத்துவதற்கு உரிமை இருக்கிறது.

தொழிலைச் செம்மையாகச் செய்து வருவாயைப் பெருக்கித்தரும் தொழிலாளர், தங்கள் ஊதியத்தை உயர்த்தித் தருமாறு கேட்பதற்கு உரிமை இருக்கிறது.

வசதியும் வாய்ப்பும் அளித்து, வேண்டும் ஊதியத்தை விரும்பிக் கொடுக்கும் முதலாளி, தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்ய வேண்டும் என வற்புறுத்துவதற்கு உரிமை இருக்கிறது.

நாட்டு மக்களுக்குத் தேவையான ஆக்கப் பணிகளைச் செய்யும் அமைச்சர்கள், அதற்கென மக்களிடம் வரிப்பணம் கேட்பதற்கு உரிமை இருக்கிறது.

தங்கள் வாக்குகளால் அமைச்சர்களாக நாடாள வந்தவர்கள், தவருன நெறி செல்லும்போது அவர்களைத் தட்டிக் கேட்பதற்கும் நாட்டு மக்களுக்கு உரிமை இருக்கிறது.

இவ்வாறு உரிமையும் கடமையும் இணைகோடுகளாக—நாணயத் தின் இருபக்கங்களாக—ஒருவர் தம் இரண்டு கண்களாக இருப்பதை நாம் அறியலாம்; ஒன்றைவிட்டால் மற்ருென்று இல்லை என்ற நிலை யையும் நாம் அறிகின்ருேம்.

உரிமைகளைப் பற்றியும் கடமைகளைப் பற்றியும் தெரிந்து கொண்டோம். யார் யாருக்கு என்னென்ன உரிமைகள் உண்டு? யார் யாருக்கு என்னென்ன கடமைகள் உண்டு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வகுப்பில் மாணவரும் ஆசிரியரும், பெற்ருேரும் பிள்ளைகளும், தொழிலாளியும் முதலாளியும், ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஆகியவர்கள் உரிமை கள் பற்றியும் கடமைகள் பற்றியும் தெரிந்து கொள்வோம். பொதுவாக எல்லாருக்கும் உள்ள உரிமைகள் பற்றியும் கடமைகள் பற்றியும் புரிந்து கொள்வோம்.

**ஆசிரியரும் மாணவரும் :**

மாணவர்கள் பள்ளிக்குக் காலம் தவருமல் வருதல் வேண்டும் ; சீருடை அணிந்தே வருதல் வேண்டும் ; முதன் முதலாக ஆசிரியரைக் காணும்போது மரியாதை செலுத்த வேண்டும் ; ஆசிரியர் வகுப்பில் நுழையும்போதும் வெளியே செல்லும்போதும் எழுந்து நின்று மரியாதை செய்தல் வேண்டும்; தேவையான பாட நூல்களைத் தவருமல் வகுப்பிற்குக் கொண்டுவருதல் வேண்டும்; வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்துவருதல் வேண்டும்; வகுப்பில் கவனமாகப் பாடங்களைக் கேட்டல் வேண்டும்.

ஆசிரியர் இல்லாத நேரத்திலும், மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக இருத்தல் வேண்டும் ; வகுப்பறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்; நாளும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்; ஆசிரியர் சொல்லைக் கேட்க வேண்டும். இவை மாணவர்களின் கடமைகளாகும்.

ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். மாணவர்கள் கற்கவேண்டுவனவற்றை முறையாகக் கற்பிக்க வேண்டும். மாணவர்களின் அறிவை வளர்க்கத் தாங்களும் தங்கள் அறிவுச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவை மட்டும் புகட்டினுல் போதாது; அடக்கம், ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றையும் கற்பிக்க வேண்டும். மாணவர்களுக்கு வழிகாட்டியாக ஆசிரியரும் நன்னெறியில் ஒழுகவேண்டும். அவை ஆசிரியர்களின் கடமையாகும். கடமைகளை முறைமையாகச் செய்யும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சில உரிமைகளும் உண்டு.

அறிவையும் ஆற்றலையும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஊட்டி வளர்க்கும் ஆசிரியருக்கு, மாணவன் தவறு செய்யுமிடத்து அவனைக் கண்டிக்கும் உரிமையுண்டு.

ஆசிரியரைப் பணிந்து அவர் சொல் கேட்டு நடக்கும் மாணவருக்கு, தன் பாடங்களில் ஐயம் உண்டாகும்போது கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய உரிமை மாணவனுக்கு உண்டு. இவ்வாறு ஆசிரியருக்கு உரிமையும் உண்டு ; கடமையும் உண்டு. மாணவருக்கும் உரிமையும் உண்டு ; கடமையும் உண்டு.

**பெற்ருேரும் பிள்ளைகளும்**

புறநானூற்றிலே பொன்முடியார் என்னும் பெயருடைய புலவர் பெருமாட்டியார் கூறியது போல,

> ஈன்று புறந்தருதல் தாயின் கடமை;
> சான்ருேன் ஆக்குதல் தந்தையின் கடமையாகும்.

பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகட்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்தல் வேண்டும். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இட வசதி, படிப்பதற்கு வேண்டிய உதவிகள் ஆகிய அனைத்தையும் செய்து கொடுப்பது பெற்றவரின் கடமையாகும். இத்தனை உதவிகளைச் செய்யும் பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகள் நன்றுகப் படிக்கவேண்டும் எனவும் நற்பண்புகளோடு வாழவேண்டும் எனவும் எதிர்பார்ப்பது அவர்கள் உரிமையாகும். பிள்ளைகள் தவறு செய்தவிடத்து அவர்களைக் கண்டிப்பதும் திருத்துவதும் பெற்றவரின் உரிமையாகும்.

உடையும் உணவும் உற்றுழி உதவும் கல்வியும் அன்போடும் ஆசையோடும் அளிக்கும் பெற்றவர்க்குப் பணிந்து நடத்தல் பிள்ளைகளின் கடமையாகும்; பெற்றவர்களிடம் தனக்கு வேண்டும் உடை, உணவு மற்றும் தேவையான பொருள்களைக் கேட்டுப் பெறுவது பிள்ளைகளின் உரிமையாகும். இவ்வாறு பெற்ருேர்க்கு உரிமையும் கடமையும் உண்டு; பிள்ளைகட்கும் உரிமையும் கடமையும் உண்டு.

### முதலாளியும் தொழிலாளியும்

தன்னுடைய தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளிக்குப் பொருத்தமான ஊதியம், போதிய ஓய்வு, இருப்பிட வசதி, மருத்துவ உதவி இத்தனையும் செய்து தருவது முதலாளியின் கடமை. வேண்டும் வசதிகளை விரும்பிச் செய்து தரும் தொழில் நிறுவனம் மேலும் மேலும் வளர்ச்சியடைய உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் கடமை உணர்வோடும் கட்டுப்படும் உள்ளத்தோடும் பணி புரிதல் தொழிலாளர் கடமையாகும்.

அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் தொழிலதிபர், தொழிலாளர் தம் பணியை ஒழுங்காகச் செய்யாதபோது அவர்களைக் கண்டித்துத்திருத்தும் உரிமையும் அவருக்கு உண்டு. தாம் நன்றுக தொழிற்கூட வளர்ச்சியைக் கருதி உழைத்தும் தக்க ஊதியம் தராத தொழிலதிபரிடம் கேட்டுப் பெறும் உரிமை தொழிலாளிக்கும் உண்டு. இவ்வாறு தொழிலதிபர்களுக்கு உரிமையும் உண்டு; கடமையும் உண்டு. தொழிலாளர்க்கும் உரிமையும் உண்டு; கடமையும் உண்டு.

### ஆள்வோரும் ஆளப்படுவோரும்

ஆள்வது அரசு; ஆளப்படுவது மக்கட் சமுதாயம். மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றைப் பெற வசதி செய்து கொடுப்பது அரசின் கடமையாகும்; இவற்றைச் செய்து கொடுக்கும் அரசு, அரசையும் அரசு இயற்றும் சட்டங்களையும் மக்கள் மதிக்கவேண்டும் என எதிர்பார்ப்பதற்கு அரசுக்கு உரிமை உண்டு.

நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல், நாட்டு மக்களின் கடமையாகும்; தங்களுக்குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும்போது அவற்றைக் கேட்டுப் பெறுவது நாட்டு மக்களுக் குரிய உரிமையாகும்.

மாணவர்களே! சென்ற வகுப்பில் நாடு நமக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகள் யாவை? குடியரசு நாட்டில் வாழும் நம் கடமைகள் என்ன என்பதைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள். அவற்றை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

மாணவர்களே! குடியரசு நாட்டில் எல்லாருக்கும் எல்லாவுரிமை களும் உண்டு. என்றாலும் அவ்வுரிமைகளைச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் பயன் படுத்தவேண்டும்.

மக்கள் ஆட்சியில் மக்களுக்குப் பேச்சு உரிமை உண்டு; அதனால் எதை வேண்டுமானாலும் பேசலாமா? பேசவேண்டியதை பேச வேண்டிய முறைப்படி சில சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத் தான் பேசவேண்டும்.

சிலர் உரிமை என்றால் 'வேண்டும்—வேண்டும்' என்பார்கள், அதற்கெனச் செய்யத் தகும் கடமைகள் உண்டு என்றால் பின் வாங்குவர்.

சிலர் பதவி என்றதும் ஓடோடி வருவர்; அதற்கென இன்னின்ன பணிகளைச் செய்யவேண்டுமெனின் திரும்பியும் பாரார். அவ்வாறன் றிக் கடமைகளைச் செய்யவேண்டும்; உரிமைகளைப் பெறவேண்டும்.

மாணவர்களே! நம்நாடு குடியரசு நாடு; இன்று நீ ஆளப்படு கின்ற குடிமகனாக இருக்கின்றாய்; நாளை நீ இந்த நாட்டை ஆளு கின்ற முதல்மகனாக வரும் வாய்ப்பு உண்டு. ஆளவந்தவர்க்கு இருக்கவேண்டிய அரிய பண்புகளாகத் தெய்வப் புலவர் திருவள்ளு வர் கூறுவனவற்றைத் தெரிந்து வைத்துக்கொள்; தேவையான போது பிறர்க்கும் தெரியப்படுத்து.

மழை பெய்யுமாயின் உலக உயிர்கள் நிலைபெற்றிருக்கும்; செங் கோல் உளவாயின் குடிமக்கள் நிலைபெறுவர். குடிமக்களுக்குத் தம்மாலும் பகைவராலும் துன்பம் நேராதவாறு பாதுகாக்கவும் வேண்டும்; குற்றம் செய்தவரைத் தண்டிக்கவும் வேண்டும்.

பசிய பயிர்களுக்கிடையே முளைத்துள்ள களையைக் களைதல் உழவன் கடமையாகும்; அதைப்போலக் கொடியவர்களைத் தண்டித்து மக்களைக் காத்தல் ஆளவந்தவர் கடமையாகும்.

மழையின்மை மக்கட்குத் துன்பம் பயக்கும்; ஆளவந்தாரின் இரக்கமின்மையும் மக்கட்குத் துன்பத்தை விளைக்கும்.

குற்றம் செய்தாரைத் தண்டித்தல் வேண்டும்; தண்டிக்கும் போதும் கடிதோச்சி மெல்ல எறிதல் வேண்டும்.

இவை போன்ற கருத்துகள் மிகப்பலவாக வள்ளுவரால் கூறப் பட்டுள்ளன. அவற்றை ஆசிரியர்பால் கேட்டும் நீவிரேகற்றும் அறிக!

## 4. அருளுரை கேண்மின்!

மாணவர்களே! **திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனம் 26–வது** குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த** பரமாசாரிய சுவாமிகள் **'கடமையும் உரிமையும்'** பற்றிக் கூறிய அரு ளுரையினைக் கண்டு தெளிமின்.

"கடமை என்றவுடன் உரிமை பறிபோய்விட்டது என்று எண்ணத் தோன்றும். அவரவரும் கடமையைப் பூரணமாகச் செய் தால் உரிமை தானே கிடைக்கத்தான் செய்யும் தாய் தந்தையர் செய்யும் கடமை பிள்ளைகளுக்கு உரிமையாகிறது. பிள்ளைகள் செய் யும் கடமை, தாய் தந்தையர்களுக்கு உரிமையாகிறது.

மனைவி செய்யும் கடமை, கணவனுக்கு உரிமை ஆகிறது; கணவன் செய்யும் கடமை, மனைவிக்கு உரிமை ஆகிறது.

மாணவன் செய்யும் கடமை, ஆசிரியருக்கு உரிமை ஆகிறது; ஆசிரியர் செய்யும் கடமை, மாணவனுக்கு உரிமை ஆகிறது.

முதலாளியின்கடமை, தொழிலாளிக்கு உரிமையாகிறது; தொழிலா ளியின் கடமை, முதலாளிக்கு உரிமை ஆகிறது.

அரசின் கடமை, குடிமக்கட்கு உரிமையாகிறது; குடிமக்கள் கடமை, அரசுக்கு உரிமையாகிறது. அவரவர் கடமையைச் செய்தால் உரிமைக் குரலுக்கு ஏது இடம்?

அதனால்தான் கீதையில் கண்ணபிரான். "கடமையைச் செய்; பலனில் பற்று வையாதே" என்றார். இவ்வகையில் நம் அப்பர் சுவாமிகளும் இறைவனின் கடமையையும் மனிதனின் கடமையை யும் இணைத்துக் கூறியுள்ளதைக் காணலாம்.

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே."

இதுவே சுவாமிகளின் அருளுரையாகும்.

### செய்முறைப் பயிற்சி

1. *உரிமை எது?*
2. *கடமை எது?*
3. *உரிமைக்கும் கடமைக்கும் உள்ள தொடர்பு எத்தகையது?*

4. கடமையைச் செய்பவனே உரிமையைப் பெறத் தகுதியுடையவன் என்பது எவ்வாறு ?
5. உரிமையும் கடமையும் இணைகோடுகளே என்பதை எவ்வாறு அறிகின்றாய்?
6. ஆசிரியரின் கடமைகள் யாவை ?
7. மாணவர்களின் கடமைகள் யாவை ?
8. பெற்றோரின் கடமைகள் யாவை ?
9. பிள்ளைகளின் கடமைகள் யாவை ?
10. முதலாளியின் கடமை யாது ?
11. தொழிலாளியின் கடமை யாது ?
12. ஆள்வோர் ஆளப்படுவோர்—இவர் தம் கடமைகள் யாவை ? உரிமைகள் யாவை ?

**II கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி ;**

1. கடமையைச் செய்;
2. கடமையைச் செய்பவனே உரிமையை கேட்கத் தகுதியுடையவன்.
3. கடமையைச் செய்; பலனில் பற்றுவையாதே—கீதை.

## பன்னிரண்டு

# கொலையும் தற்கொலையும்

### 1. செல்வன் திருடனா?

சின்னமனூரைச் சேர்ந்தவன் செல்வன்; அவன் இளைஞன். அவனுக்குப் பெற்றவரும் உண்டு; அவன் உடன் பிறந்தவர்களும் உண்டு. ஆயினும் பிழைக்கத்தொழிலும் இல்லை; வயிறுவளர்க்க வகையும் இல்லை.

பல நாட்கள் அவன் குடும்பம் பட்டினி; செல்வனும் செய்யாத முயற்சி இல்லை; வேலை மட்டும் கிடைக்கவில்லை. எத்தனை நாட்ளுக்குத்தான் பட்டினி கிடப்பான்.

ஒரு நாள் நகை வியாபாரி ஒருவரிடமிருந்து மாணிக்கக்கற்களைத் திருடினான்; அவற்றை விற்கச் சென்ற இடத்தில் ஊர்க்காவலரால் கைது செய்யப்பட்டான்; நீதிமன்ற விசாரணைக்குப் பின் சிறையிலே தள்ளப்பட்டான்.

"செல்வன் திருடினானா? உண்மையில் செல்வன் திருடனா?" ஊரே இந்தக்கேள்வியைக் கேட்டுக்கொண்டிருந்தது. செல்வன் என்ற பெயர் அவனுக்கு இருந்தது; ஆனால் செல்வக் குடியிலே பிறக்கவில்லை. ஆயினும் ஒரு நல்ல குடும்பத்திலேதான் பிறந்திருந்தான். என்ன செய்வது? வறுமை அவனைத் திருடச் செய்தது; வகையாக அகப்பட்டுக் கொண்டான்.

சிறையிலிருந்த செல்வன் வருந்தினான்; தன்னால் தன் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவப் பெயருக்காகப் பெரிதும் வருந்தினான். அவமானத்திற்கும் தன் மனச்சான்றின் உறுத்தலுக்கும் ஒரு முடிவு கட்ட எண்ணினான்.

ஒரு நாள் காவலர் அயர்ந்திருந்த நேரம்; சிறையிலிருந்து தப்பினான். அவன் திரும்பவும் தன் வீடு சென்று வாழ விரும்பவில்லை. தன் உயிர்க்கு விடுதலை தரவே தப்பிச் சென்றான். கூரிய கத்தி ஒன்றை வாங்கிக் கையிலே வைத்துக் கொண்டான்; யாருமற்ற காட்டுப்பக்கமாக நடக்கத் தொடங்கினான். காட்டின் நடுப்பகுதிக்குச் சென்றதும் கத்தியை எடுத்தான்; ஓங்கித் தன் மார்பிலே குத்திக்

கொள்ள கையைத் தூக்கியபோது, பெரியவர் கரம் ஒன்று அவனைத் தடுத்து நிறுத்தியது. 'தம்பி நிறுத்து' என்று அவர்குரல் ஒலித்தது.

"தம்பி ஏன் இந்தக் காரியம் செய்யத் துணிந்தாய்; கொலை, பாவச்செயலாயிற்றே! அதிலும் தற்கொலை மிகப்பெரும் பாவ மாயிற்றே!" என்றார்.

செல்வனும் தன் கதையை விளக்கிக் கூறினான்.

"தம்பி! நீ உன் உயிரைப் போக்கிக் கொள்வதனால் உனக்கேற் பட்டுள்ள பழி நீங்கிவிடுமா? அல்லது உன் குடும்பத்தின் வறுமை மாறிவிடுமா? உனக்கு ஏற்பட்டுள்ள பழி நீங்க வேண்டுமானால் செய்த குற்றத்திற்குத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். விடுதலை பெற்ற பின்னர் நல்லவழியில் உழைக்கவேண்டும்; உழைத்து உன் குடும்பத்தைக் காப்பற்றவேண்டும்; அதனால் உன் குடும்பம் உயர வேண்டும்; நற்செயல்களைச் செய்யவேண்டும். அப்போது தான் உன் மீதுள்ள களங்கம் மாறும். அது மட்டுமன்று உயிரைப் போக்கிக் கொள்ள உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன் உடல் உன் பெற்றோர்கள் உணவிட்டு வளர்த்தது; உன் உயிர் இறைவனால் உனக்கு அருளப்பட்டது.

உயிரும் நமக்குச் சொந்தமன்று; உடலும் நமக்குச் சொந்தமன்று. இரண்டுமே நமக்கு இரவலாகக் கிடைத்த பொருள்கள்; இரவலாகப் பெற்ற பிறர்க்குரிய பொருள்களை அழிப்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? பிறர்க்குரிய பொருளைக்காப்பதே நமக்குள்ள கடமை யாகும்." என்று அறிவுரை கூறினார். செல்வன் திருந்தினான்.

மாணவர்களே! இக்கதையால் நீவிர் உணர்ந்துகொண்ட நீதி யாது? உயிர்கள் யாவும் இறைவனால் உண்டாக்கப்பட்டவை. அவற்றை ஆக்கவும் அழிக்கவும் அவனால் மட்டுமே முடியும். அவனுக்கு மட்டுமே அந்த உரிமை உண்டு.

இறைவனால் ஆக்கப்பட்ட உடலையும் உயிரையும் காப்பதற்கு மட்டுமே நமக்கு உரிமை உண்டு. உயிரைப்போக்க—உடலை அழிக்க மனிதனுக்கு உரிமை இல்லவே இல்லை என்பதுதான்.

## 2. தேவர் சொன்ன சித்தாந்தம்!

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலே கருமலைத் தோட்டம் என்று ஒன்று உண்டு; அங்குத் தேயிலையும் காப்பியும் விளைவிக்கப்படு கின்றன. அங்குத் தங்கி வாழ்ந்தவர் சின்னையாத் தேவர்.

அவர் இராமலிங்க அடிகளாரின் அடியார்; கொல்லாமை விரதம் கொண்டவர்; புலால் உண்ணாமையை உறுதியாகக் கடைப்பிடித்

தவர். அவர் புலால் உண்ணுர்; ஆயினும் புலால் உண்ணுபவர்களை வெறுக்கவும் மாட்டார்.

அவரோடு அடிக்கடி வாதம் செய்வதுண்டு. அருளாளராகிய அவர் எல்லா மதங்களும் கொல்லாமையைப் போதிக்கின்றன; புலால் உண்ணுமையைப் போதிக்கின்றன என்பார்.'' நானே புலால் உண்பவன்; உண்ணலாம் என்பதற்குச் சான்றுகள் தேடி அலைபவன்.

அதனுல் ஒருநாள் வாதத்திற்காக அவரிடம் கேட்டேன். '' ஆட்டையோ மாட்டையோ கொன்று புலால் உண்ணவேண்டாம்; மீன் உணவை உண்ணலாம் அல்லவா?'' என்று கேட்டேன்.

'' உனக்கு மீன் உண்ணுவது பாவமன்று; மீன் உண்ணலாம் என்று சொன்னவர் யார்?'' என்று கேட்டார்.

'' என்ன இப்படிச் சொல்கிறீர்கள். மக்களின் பாவத்திற்காக மண்ணிலே பிறந்த மனுமகன்; மக்களுக்காகவே சிலுவையைச் சுமந்தார்; மக்களுக்காகவே சிலுவையில் அறையப்பட்டார்; சித்ர வதைக்கு ஆளானுர்; அந்த அருளாளர், தன் பிரசங்கத்தைக் கேட்க வந்த மக்கள் பசியோடிருப்பதை அறிந்தார். உடனே அவர்களுக்கு மீனையும் அப்பத்தையும் உண்ணக் கொடுத்தார் என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?'' என்று கேட்டேன்.

அதற்குத் தேவர் பெருமான் சொன்ன பதில், என்னைத் திக்கு முக்காடச் செய்துவிட்டது.

'' நல்லது தம்பி! நீ கூறுவதும் ஒருவிதத்தில் நியாயமானதுதான்! ஏசுபெருமான் இறைவன்; ஆண்டவனின் திருக்குமாரர்; அவர் இறந்தவரை எழுப்பியிருக்கிருர்; முடவரை நடக்கச் செய்திருக்கிருர்; குருடரைப் பார்க்கச் செய்திருக்கிருர்; அவரே மூன்ரும் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் நினைத்தால் அந்த மீன்களுக்கெல்லாம் உயிரைக் கொடுக்க முடியும்; உன்னுல் முடியுமா?'' என்று கேட்டார்.

உண்மைதான். ஓர் உயிரை உண்டாக்க முடியாத நமக்கு, ஓர் உயிரை அழிப்பதற்கு உரிமை ஏது? உரிமை இல்லை.

## 3. இரண்டும் பாவச் செயல்களே!

கொலை ஏன் செய்யப்படுகிறது? ஒருவர், மற்றவர்மீது கொண்ட வெறி உணர்வால் கொலை நிகழ்கிறது. பொன்னுசை காரணமாகச் சிலர் கொலை செய்கிருர்கள்; பொருளாசை காரணமாகச் சிலர் கொலை செய்கிருர்கள்; மற்றவர் மீதுள்ள வெறுப்பினுலும் சிலர் கொலை செய்கிருர்கள்.

இராமலிங்க அடிகளார் கூறியதைப் போன்று ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியுள்ளே ஒத்துரிமை உடையவராய்'' உவக்கின்ற நிலைமை உண்டாகிவிட்டால் இவை போன்ற உயிர்க்கொலைகள் நிகழவே நிகழாது. உயிர்க்கொலை செய்வது பாவம் மட்டுமன்று; மரணதண்டனை பெறுவதற்குரிய கொலைக் குற்றமும் ஆகும்.

கொலை செய்தவரை அரசு விட்டு விடாது; அவரைக் கைது செய்யும்; காவலில் வைக்கும்; மரண தண்டனையும் விதிக்கும்.

கொலை செய்வதால் ஒருவன் பாவி ஆகிறான். கொலைகாரன் என்னும் பழிச் சொல்லை அவனும் ஏற்கிறான்; அவன் குடும்பமும் ஏற்கிறது. அவனும் மரணதண்டனையைப் பெறுகிறான்.

பிறவுயிரைக் கொல்லுதல் கொலை; தன் உயிரைக் கொல்லுதல் தற்கொலை. கொலை போன்றதே தற்கொலையும். கோழைகளே தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்.

இறைவன் நமக்கு உடலை அளித்திருக்கிறான்; உயிரை அளித்திருக்கிறான். இறைவன் அவற்றை மீட்டுக் கொள்ளுகின்ற வரை உயிரையும் உடலையும் காக்கின்ற பொறுப்பே நமக்குண்டு என்ற உணர்வு, நமக்கு இருத்தல் வேண்டும்.

பள்ளித் தேர்விலே தோல்வியுற்ற ஒரு மாணவன், தண்டவாளத்திலே வீழ்ந்து தற்கொலை செய்து கொள்கிறான்.

கல்லூரித்தேர்விலே வெற்றிபெறாத கல்லூரிமாணவன், தற்கொலை செய்து கொண்டு கடலிலே மிதக்கிறான்.

காதலிலே தோல்வியுற்ற ஒரு பெண், மூன்றாவது மாடியிலே இருந்து தரையிலே வீழ்ந்து தற்கொலை செய்து கொள்கிறாள்.

தந்தை கடுமையாகச் சிலவார்த்தைகளைப் பேசிவிட்டார் என்பதற்காக ஒரு பெண் மூட்டைப் பூச்சி மருந்தைக் குடிக்கிறாள்; மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே உயிரை விடுகிறாள்.

இத்தகையே செய்திகள் நாள்தோறும் பத்திரிகைச் செய்திகள் ஆகிவிட்டன.

தேர்விலே தோல்வி என்றால் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமா? தேர்விலே தோல்வி என்றால் தேர்வுக்காக நாம் படித்த படிப்பு, எடுத்த முயற்சி போதாது என்று தானே பொருள்; மீண்டும் படிக்க வேண்டும்; வேண்டும் பெரு முயற்சி யெடுத்துப் படிக்க வேண்டும். அதுதானே முறை; தற்கொலை செய்து கொண்டால் தேர்விலே வெற்றிகிட்டுமா? மாணவர்தம் அறியாமையை எண்ணி இரங்கத்தான் வேண்டியிருக்கிறது. தோல்வி

களெல்லாம் வெற்றிக் கோவிலுக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகள் என்பதை மாணவர்கள் உணர்தல் வேண்டும்.

"இடுக்கண் வருங்கால் நகுக." என்பது வள்ளுவர் வாய் மொழி. துன்பங்கள் தொடரும்போது அதைக் கண்டு அஞ்சி ஓடக்கூடாது; அதைத் துரத்தியடிக்க வேண்டும்.

'கொலை செய்வது பாவம்; தற்கொலை பாவமன்று' என்று வாதிடுவாரும் உண்டு. இரண்டுமே பாவச் செயல்தான். கொலை செய்பவனுக்கு மரண தண்டனையே தீர்ப்பு; தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பவனுக்கோ சிறைத் தண்டனையே தீர்ப்பு. தற்கொலை நிகழ்ந்துவிட்டால் தற்கொலை செய்துகொண்டவனின் உற்றாரும் உறவினரும் சட்டத்தின் கையில் அகப்பட்டுப் படும் தொல்லைகள் ஏராளம்.

தற்கொலை செய்துகொள்பவர்கள் அதன் விளைவை நன்றாக எண்ணிப் பார்க்கவேண்டும். அதனால் பெற்றவர்களும் பிறந்தவர்களும் படும் வேதனையை அளவிட்டுக் கூற முடியுமா? உறவினரும் நண்பர்களும் படுந்துயரை அளவிட முடியுமா?

அத்துடன் முடிகிறதா? ஒருவன் அல்லது ஒருத்தி தற்கொலை செய்துகொண்டால் ஊராரின் வாய் என்னென்ன பேசும்? அந்த உடல் மருத்துவப் பரிசோதனையில் கூறு போடும் காட்சி காணத் தக்கதா? காவலர் விசாரணை—அதனால் கெட்டழியும் குடும்பக் கௌரவம்; பெற்றவர்க்கும் மற்றவர்க்கும் ஏற்படுகின்ற பணச் செலவு; இவற்றையெல்லாம் தற்கொலையை விரும்பிச் செல்லும் அவசரப் புத்திக்காரர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே கொலை பாவம்! தற்கொலை மிகப் பெரும் பாவம்! இரண்டுமே இம்மையில் நம் புகழைக் கெடுக்கும்; நம் குடும்பப் பெருமையை அழிக்கும்; மறுமையில் பெறத்தக்க பேறு பெற முடியாமல் செய்யும் என்பதை மாணவர்கள் தாங்களும் உணர வேண்டும்; மற்றவர்கட்கும் உணர்த்துதல் வேண்டும்.

## 4. கொலைத் தீர்ப்பு நியாயமானதா?

கொடியவன்—அவன் பலரைக் கொலை செய்தவன். பல நாள் அகப்படாமல் இருந்தான்; சில தடவைகளில் அகப்பட்டான்; சாட்சிகள் இல்லை. இம்முறை நன்றாக அகப்பட்டான். கண்ணால் கண்ட சாட்சிகள்; கொலை செய்யத் திட்டமிட்டதைக் காதால் கேட்ட சாட்சிகள் எல்லாம் கிடைத்தன.

நீதிமன்றம் அந்தக் கொடியவனுக்கு மரண தண்டனை விதித்தது. அதாவது கொலை செய்யத் தீர்ப்பளித்தது. நீதிமன்றத் தீர்ப்பு முறையானதா? அதனால் அந்த நீதிபதி கொலைகாரர் ஆக மாட்டாரா? கொலைத் தீர்ப்புக் கிடைக்கும் வகையில் சாட்சி சொன்னவர்கள் குற்றவாளி ஆகமாட்டார்களா? அதனால் அவர்கள் அனைவரும் பாவிகள் ஆகமாட்டார்களா? இத்தகைய வினாக்கள் மாணவர் உள்ளத்தில் எழுவது இயற்கையே ஆகும்.

கொடியவன் எத்தனை கொலைகளுக்குக் காரணமாக இருக்கிறான்.

பொன்னுசாமிச் செட்டியார் மிகவும் நல்லவர்; பெரிய வியாபாரி; தர்ம சீலர். என்ன காரணமோ தெரியவில்லை. இந்தக் கொடியவன் அவரைக் கொன்றுவிட்டான். இப்போது அவர் குடும்பம் நடுத் தெருவில் நிற்கிறது. வீடுவாசல் எல்லாம் போயிற்று; வியாபாரமும் இருந்த இடம் தெரியவில்லை.

கண்ணம்மாள் நல்ல பெண்; கைக்குழந்தைக்காரி. தண்ணீர் எடுக்க ஆற்றுக்குச் சென்றாள்; அவள் கழுத்தில் தங்கச் சங்கிலி இருந்தது. இந்தக் கொடியவன் பார்த்தானோ இல்லையோ? நகையைப் பறித்துக் கொண்டான். ஆற்று வெள்ளத்திலே அவளைத் தள்ளிவிட்டான். இப்போது பால்மணம் மாறாத பச்சிளங் குழந்தையோடு அவள் கணவன் படாதபாடு படுகிறான்.

இவ்வாறு கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தோட பொன்னுக்காகவும் பொருளுக்காகவும் கொலை செய்பவர்களை நாட்டில் நடமாட விட்டால் நாட்டில் கண்ணீர் வெள்ளத்தோடு இரத்த வெள்ளமும் அல்லவா பெருகியோடும்.

நன்செய் நிலம்; நெற்பயிர் விளைத்திருக்கிறோம். எருவிட்டு நீர் பாய்ச்சி பயிர் நன்றாக வளர்ந்திருக்கிறது அதற்கிடையே தேவையற்ற களைகள் தோன்றுகின்றன. அவை பயிருக்குக் தேவையான சத்துப்பொருளை எடுத்துக் கொள்கின்றன; தண்ணீரை இழுத்துக் கொள்கின்றன; கொஞ்சங் கொஞ்சமாகப் பயிரையே அழிக்கத் தொடங்குகின்றன.

உழவன் என்ன செய்வான்? அவன் கடமை என்ன? உழவன் வயலிலே இறங்குவான்; களையை வேரோடு களைவான்; வரப்பிலே எறிவான்; அவை வெய்யிலிலே காய்ந்து அழிந்துவிடும். உழவனின் செயலை எவரேனும் குற்றமென்று கூறுவதுண்டோ?

நாட்டில் வாழும் மக்களும் நன்செய் நிலத்துப் பயிர் போன்றவர்கள்தாம்; பயிரை அழிக்கக் களைகள் தோன்றினாற் போல மக்களை அழிக்கும் கயவர்கள் தோன்றினால் அரசு என்ன செய்யும்? உழவன் களைகளைப் பறித்துப் பயிர்களைக் காத்தாற்போல அரசும்

நீதிமன்றத்தின் வழியே கொலையிற் கொடியாரை அழித்து மக்களை காக்கிறது.

ஆதலால் நீதிமன்றத் தண்டனை கொலை அன்று. அதுதான் முறை ; நீதிமன்றத்துத் தண்டனை கொலை அன்று ; மற்றவர்கள் திருந்துவதற்கு ஒரு எச்சரிக்கை ; வலிமையற்றவர்கட்கும் எளியவர் கட்கும் ஒரு பாதுகாப்பு. சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநிறுத்த இத்தகைய தண்டனைகள் தேவையே. அதுவே நீதி. அதுவே மதி யுடையார் செயல். அதில் எந்தவிதப் பாவமும் இல்லை.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் இதனை விளக்கமாகக் கூறியுள் ளார். இதோ அவர் குறள்,

> கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்கூழ்
> களைகட் டதனெடு நேர்.

## 5. உண்ணுவிரதமிருத்தல் தற்கொலையா?

கத்தி கூர்மையானது ; பளபளப்பானது. அது நல்லதா? கெட்டதா? என்றால் அது பயன்படும் முறையைப் பொறுத்தது. பயன் படுத்துவோரைப் பொறுத்தது.

கூர்மையான கத்தி காய்கறிகள் நறுக்கவும் பயன்படும். கழுத்தை அறுக்கவும் பயன்படும். காய்கறி நறுக்கும்போது நல்ல தாகிறது ; கழுத்தை அறுக்கும்போது கொடியது ஆகிறது.

உண்ணுவிரதம் அத்தகையதுதான். உடல் நலத்தைப் பாதுகாப் பதற்காக சிலர் வாரத்தில் ஒருநாள் உண்ணுவிரதம் இருப்பர் ; சிலர் வாரத்தில் ஒருவேளை மட்டும் உண்டு விரதம் இருப்பர் ; சிலர் மாதத் திற்கு ஒரு நாள் உண்ணுவிரதம் இருப்பர்.

சிலர் தெய்வத்தின் பெயரில் வேண்டுதல் செய்து வெள்ளிக் கிழமை விரதம் இருப்பர் ; சனிக்கிழமை விரதம் இருப்பர் ; மகளிர் சிலர் செவ்வாய்க்கிழமையும் திங்கட்கிழமையும் விரதம் இருப்பர். இவையெல்லாம் உடலைக்காக்க வேண்டும் ; உயிரைப்போற்ற வேண் டும் என்பதற்காகக் காக்கப்படும் விரதங்கள் ஆகும்.

எனவே இவை ஏற்கத்தக்க உண்ணுவிரதங்களே!

சிலர் கணவனெடு சண்டையிடுவர் ; வேண்டத் தகாத வாக்கு வாதங்களைப் புரிவர். பட்டினி கிடந்து சாவதாகக் கூறி உண்ணு விரதம் இருப்பர் ; நாட்கணக்கில் இருப்பர். உயிரை விட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏற்கப்படும் உண்ணுவிரதமே இது ஆகும். அதனல் இது தற்கொலை முயற்சியே ஆகும்.

## 6. அண்ணலின் உண்ணுவிரதம்.

காந்தியடிகள் பலமுறை உண்ணுவிரதம் இருந்ததை நம் வாழ்நாளிலேயே கண்டிருக்கிறோம்; கேட்டிருக்கிறோம். அவர் தற்கொலையை எண்ணி உண்ணுவிரதம் இருக்கவில்லை.

அரிஜனங்களின் துயர் துடைப்பதற்காக உண்ணுவிரதம் இருந்திருக்கிறார். இந்துக்களும், மகமதியரும் ஒன்றுபடவேண்டும் என்பதற்காக உண்ணுவிரதம் இருந்திருக்கிறார். தன் மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்காக உண்ணுவிரதம் இருந்திருக்கிறார்.

காந்தி சமூக நன்மைக்காக உண்ணுவிரதம் இருந்தார். பிறர் நலனைப் பாதுகாப்பதற்காகவும் நாட்டுரிமையைப் பெறுவதற்காகவும் அன்னியர் கொடுமை அகற்றப்படுவதற்காகவும் அண்ணல் காந்தி உண்ணுவிரதம் இருந்தார்.

மக்களின் மனத்தை மாற்றுவதற்காக மற்றவர்களை வருத்தாமல் தன்னைத்தானே வருத்திக் கொண்டு இறக்க நேர்ந்தால் அது தியாகமே ஆகும்; தற்கொலையாகாது. காந்தியின் உண்ணுவிரதம் தியாக மனப்பான்மையின் வெளிப்பாடேயாகும்; தற்கொலை முயற்சி ஆகாது.

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் உண்ணுவிரதம் இருப்பதில்லை.

### செய்முறைப் பயிற்சி

1. தன் வயிற்றுப்பசியைப் போக்க ஒருவன் திருடுகிறான்.
   தன் தாயின் பசியைப் போக்க ஒருவன் திருடுகிறான்--இவையும் பாவச் செயல்தாமா? சிந்தித்துப் பார்.
2. தற்கொலை கூடாது என்பதற்குப் பெரியவர் கூறிய காரணங்களை விவரி. அவர் கூறும் காரணங்கள் பொருத்தமானவைதாமா?
3. தேவர் சொன்ன சித்தாந்தம் யாது? அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
4. கொலையும் தற்கொலையும் ஒன்றாகுமா? நம் உயிரை நாம் போக்கிக் கொள்ளக் கூடாதா?
5. ஒருவனுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கிறது. அதுவும் பிற உயிரைக் கொல்லுதல் அல்லவா? அது கொலையாகாதா?
6. கொலையிற் கொடியாரை வேந்து ஒறுக்க வேண்டும் என்பதை வள்ளுவர் எங்ஙனம் விளக்குகின்றார்?

### நீ கற்றுக்கொள்ள வேண்டிய நன்னெறி

1. இறைவனின் பத்துக் கட்டளைகளில் ஒன்று "கொலை செய்யாதிருப்பாயாக!" என்பது.
2. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
   எல்லா வுயிரும் தொழும்.

## பதின்மூன்று

# நல்ல பழக்கங்கள்

### 1. பழக்கமும் வழக்கமும்

நல்ல பழக்கங்களை ஒருவன் பழகுவதால் அவை அவனுடைய வழக்கம் ஆகிறது ; அவ்வழக்கமே ஒருவனை ஒழுக்கமுடையவனாக உயர்த்துகிறது. ஒருவன் உள்ளத்தால் நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது ; சொல்லாலும் செயலாலும் ஒருவன் தன்னுடைய அன்புடைமை, பணிவுடைமை, மரியாதை, நன்றி மறவாமை, இரக்க மனப்பான்மை, மன்னிக்கும் மனப்பான்மை ஆகியவற்றை வெளிப் படுத்த வேண்டும்.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் இப்பழக்கங்கள் இரண்டறக் கலக்க வேண்டும். நல்ல பழக்கங்களே ஒருவனுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை உருவாக்குகின்றன ; நல்ல பழக்கங் கள் குடும்பத்தில் அமைதியையும் இன்பத்தையும் உண்டாக்கு கின்றன. நல்ல பழக்கங்கள், ஊர் மக்களிடையே கலந்துறவாடும் உயர் பண்பை தருகின்றன.

நல்ல பழக்கவழக்கங்கள் இளமைப் பருவத்திலிருந்தே வளர்க்கப் படுதல்வேண்டும் ; அது வீட்டிலிருந்தே தொடங்கப்படவேண்டும் ; வீட்டில் தொடங்கும் நல்ல பழக்கங்கள் பள்ளியில் வளர்க்கப்பட வேண்டும் ; சமுதாயத்தில் பரவுதல்வேண்டும். அப்போது நாடு நன்னிலை பெறும்; நாடு நன்றாகும். நாட்டின் நலம் வீட்டில் தொடக்கமாகும். ஆதலின் மாணவர்களே ! நல்லனவற்றைப் பழகுங் கள் ; அவை உங்கள் வழக்கமாகட்டும் ; உங்களிடம் ஒழுக்க நெறி வளரட்டும் ; அஃது உங்கட்கு உயர்வை வழங்கட்டும். மாணவர் கள் பழக வேண்டிய நல்ல பழக்கங்கள் யாவை? பழகத்தக்க முறை என்ன ? தெரிந்து கொள்வீர் ! திருநாட்டின் பெருமை காப்பீர் !

### 2. குமரனும் குமுதாவும்

குமரன் ஒரு நல்ல மாணவன். அவன் அழகாக இருக்கிறான் ; நன்றாகப் படிக்கிறான் என்பதால் மட்டும் நல்ல மாணவன் ஆகவில்லை. அவனுடைய நல்ல பழக்க வழக்கங்களே அவனை நல்ல மாணவன் ஆக்கியது.

காலை மணி ஆறு அடிக்கிறது; குமரன் படுக்கையிலிருந்து எழுகின்றான்; படுக்கையில் அமர்ந்தவாறே "இரவுப் பொழுதை நற்பொழுதாக்கிய இறைவா! உமக்கு என் நன்றி; வணக்கம்." எனத் தொழுகிறான்.

படுக்கையைச் சுருட்டி வைக்கிறான். தந்தையிடம் செல்கிறான் "அப்பா! காலை வணக்கம்; நலமாக இருக்கிறீகளா?" எனக் கேட்கிறான்.

தந்தையின் உள்ளம் மகிழ்கிறது. "என்றென்றும் நீ நலமாக வாழ்க" என அவர் உள்ளம் வாழ்த்துகிறது.

அன்னையிடம் செல்கிறான்; "அம்மா! வணக்கம்; நலமாக இருக்கிறீர்களா?" எனக்கேட்கிறான். அந்தத் தாயுள்ளம் தன் மகனை உச்சி மோந்து வாழ்த்துகிறது.

மாணவர்களே! குமரனைப்போல நீங்களும் காலையில் எழுந்தவுடன் இறைவனுக்கு உங்களின் நன்றியறிந்த வணக்கத்தைக் கூறுங்கள். அஃது உங்கள் தெய்வ பக்தியை வளர்க்கும்; நன்றி மறவாத் தன்மையை வளர்க்கும்.

உங்கள் பெற்றோருக்குத் தவறாமல் வணக்கத்தைச் செலுத்துங்கள்; அவர்களின் உடல் நலத்தை விசாரியுங்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள். அவர்களின் நல்வாழ்வில்தான் நம் வாழ்வும் அடங்கியிருக்கிறது. நம் மகிழ்ச்சிக்காக வாழும் அவர்களை உங்கள் வார்த்தைகளால் மகிழச் செய்யுங்கள்.

குமுதா பள்ளிக்குப் புறப்படுகிறாள்!

அன்புடைய மனம், தன் அடக்கத்தை வெளிப்படுத்தும் செயலே பணிவு. பணிவுடைமை பிறரை மதிக்கக் கற்றுத் தருகிறது; பிறரிடம் நாம் கொண்டுள்ள மதிப்பை வெளிப்படுத்துகிறது.

அதோ குமுதா பள்ளிக்குப்புறப்பட்டு விட்டாள். "அம்மா! அப்பா! வணக்கம்; நான் பள்ளிக்குப் புறப்பட்டுவிட்டேன்; வருகிறேன்." என்று சொல்லிப் புறப்படுகிறாள், 'நன்றாகப்படி மகளே' என்கிறார் தந்தை. "வழியில் வண்டிவாகனம்; வரும் பத்திரமாகச் சென்று வா மகளே" என்கிறாள் தாய். மாணவர்களே பணிவுடைமையும் இன்சொல்லும் பெற்றவர்களையும் பிள்ளையையும் எவ்வாறு பிணைக்கிறது பார்த்தீர்களா?

குமுதா புறப்படும்போது அமுதா ஓடி வந்தாள். "அக்கா, இதோ தங்கள் பேனா; நேற்றுஎழுதுவதற்கு எனக்கும் கொடுத்தீர்கள்; நானும் திருப்பிக் கொடுக்க மறந்து விட்டேன்; நீங்களும் கேட்க மறந்து விட்டீர்கள்; நல்லவேளை இப்போது தான் எனக்கு நினைவு

வந்தது; மன்னித்துக்கொள்ளுங்கள்.'' என்று பணிவோடு கூறிப் பேனாவைக் கொடுத்தாள்.

''அமுதா! உன் அன்புக்கு மிக்க நன்றி; மறதி எல்லாருக்கும் இயல்பாக இருப்பதே; வருத்தப்படாதே; நான் வருகிறேன் அமுதா.'' என்று சொல்லிப்புறப்படுகிருள் குமுதா.

வகுப்பறையில் சங்கரன்

சங்கரன் ஒன்பதாம் வகுப்பு மாணவன்; அவன் பள்ளியில் படிக்கிருன்; பள்ளிநேரம் அல்லாத நேரத்தில் ஓர் அச்சுக்கூடத்திலும் பணியாற்றுகின்ருன்.

வகுப்பில் சங்கரன் மற்ற மாணவர்களுடன் அமர்ந்திருந்தான் கணக்கு ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார். எல்லா மாணவர்களோடும் சங்கரனும் எழுந்து ஆசிரியருக்கு மரியாதை செய்தான். ஆசிரிய உட்காரச் சொன்னவுடன் எல்லா மாணவர்களும் உட்கார்ந்தனர் சங்கரன் மட்டும் நின்றுகொண்டிருந்தான்.

ஆசிரியருக்கு வியப்பாக இருந்தது. ''சங்கரா! ஏன் நின்றுகொண்டிருக்கிருய்? உனக்கு என்னவேண்டும்?'' என்ருர்.

''ஐயா! என்னை மன்னியுங்கள்! நேற்று வீட்டுக்கணக்குகளைச் செய்து வரச் சொன்னீர்கள்; அச்சகத்தில் நேற்று இரவெல்லாம் வேலை கொடுத்துவிட்டார்கள்; தாங்கள் சொன்னபடி கணக்குகளைச் செய்துவர முடியவில்லை. என்னை மன்னிக்கவேண்டும்.'' என்ருன் சங்கரன்.

கணக்கு ஆசிரியர் கொஞ்சம் கண்டிப்பானவர்தான்; ஆயினும் சங்கரனின் பணிவும் அடக்கத்தோடு வெளிவந்த அவன் சொற்களும் அவன் தன் தவறுக்கு மன்னிப்புக்கேட்ட மனப்பாங்கும் ஆசிரியரின் உள்ளத்தை மகிழச் செய்தது.

'சங்கரா! உட்கார். தவறுவது இயற்கைதான். நாளை செய்து கொண்டுவா.'' என்று அன்போடு கூறி அமரச் செய்தார்.

மாணவர்களே! சங்கரனைப்போல கடமையைச் செய்ய முடியாமைக்கு வருந்துகின்ற-மன்னிப்புக்கேட்கின்ற மனப்பாங்கு உங்களுக்கு வருதல் வேண்டும். மன்னிப்பைக் கேட்பதும் மன்னிப்பை அளிப்பதும் உயர்ந்த குணங்கள் ஆகும்.

## 3. தெரிந்து கொள்வீர்! சிறப்புடன் வாழ்வீர்!

நாம் பிறரிடம் உதவியைக் கேட்கும்பொழுதும் அவர்கள் நமக்கு உதவி செய்த பின்னரும் நாம் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள் சில உண்டு.

நாம் அஞ்சலகத்திற்குச் செல்கின்றோம் ; அஞ்சலட்டை ஒன்றை வாங்கினோம்; எழுதுவதற்குப் பேனா இல்லை ; பக்கத்திலே நிற்கும் ஒருவர் பேனா வைத்திருக்கிறார் ; அவர் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். இரவலாகக் கொஞ்ச நேரம் உனக்குப் பேனா வேண்டியிருக்கிறது ; நீ பேனா கேட்பதால் அவருடைய வாசிப்பும் தடைப்படுகிறது.

எப்படிக் கேட்கலாம்? "ஐயா ! மன்னியுங்கள் ! கொஞ்ச நேரம் தங்கள் பேனாவை எனக்கு உதவ முடியுமா?" இவ்வாறு கேட்க வேண்டும். அவர் பேனாவை உனக்குக் கொடுத்தார் ; நீ கடிதம் எழுதி முடித்து விட்டாய் ; பேனாவைத் திருப்பி அவருக்குக் கொடுக்க வேண்டும். எப்படிக் கொடுக்கலாம் ?

"ஐயா, தங்கட்குச் சிரமம் கொடுத்துவிட்டேன் மன்னியுங்கள்; இதோ தங்கள் பேனா; மிக்க நன்றியுடையேன்" என்று கூறிக் கொடுக்க வேண்டும்.

ஒருவர் நம்மைவிட அறிவில் குறைந்தவராக இருக்கலாம் ஆற்றலில் குறைந்தவராக இருக்கலாம். ஆயினும் அவர்களிடமும் மரியாதையாகப் பேசுதலே நல்லதாகும். நம் வீட்டிற்கு ஒருவர் வருகிறார். அவர் உனக்குத் தெரிந்தவராகவும் இருக்கலாம் ; தெரியாதவராகவும் இருக்கலாம். அவரை எப்படி வரவேற்பது ?

"வணக்கம் ஐயா ! வாருங்கள். இருக்கையில் உட்காருங்கள்." என்று வரவேற்க வேண்டும். தன்னினும் சிறியவராக இருப்பினும் "வா, உட்கார்" என ஒருமையில் அழைப்பதோ கட்டளையிடுவது போல் பேசுவதோ தவறாகும்.

வழியே சென்றுகொண்டிருக்கின்றோம் ; நாம் செல்லும் இடம் புதிது ; செல்லும் இடத்திற்கு வழியை அடுத்தவரிடம் கேட்டுத் தெரியவேண்டியிருக்கிறது. எவ்வாறு கேட்டுத் தெரிந்து கொள்வது?

"ஐயா, மன்னிக்கவும். கோட்டைக்குச் செல்லும் வழியைத் தங்களால் எனக்குத் தெரிவிக்க முடியுமா? நான் இந்த ஊருக்குப் புதியவன்." என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் நமக்கு ஓர் உதவியைச் செய்தார். நாம் அந்த உதவியை பெறுவதோடு அமைந்துவிடக் கூடாது ; உதவி சிறிதாகவும் இருக்கலாம்; பெரிதாகவும் இருக்கலாம். செய்த உதவிக்கு நன்றி கூறுவது நம் தலையாய கடமையாகும்.

ஆதலால் உதவியைப் பெற்ற பின்னர்' "ஐயா! நன்றி" என்று கூறுங்கள். "ஐயா ! தங்கட்கு என்றும் நன்றியுடையேன்" என்று கூறி உதவி செய்தவரை மகிழ்ச்சியடையச் செய்யுங்கள்.

ஒரு தவறு செய்துவிட்டீர்கள்; தவறு என்று உங்களுக்குத் தெரிந்துவிட்டது; தவற்றைத் திருத்திக் கொள்ளுங்கள். நீங்கள் செய்த தவறை ஒப்புக்கொள்ளுங்கள். தவறை ஒப்புக்கொள்ளுதலே உயர்ந்த பண்பாகும்.

தவறைச் செய்தவர்கள் மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்பதே சிறந்த பண்பாகும். "ஐயா! என்னை மன்னியுங்கள்" என்று கேளுங்கள். "ஐயா! என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்." என்று வேண்டிக் கொள்ளுங்கள்.

தவறு செய்த ஒருவர், "நான் செய்த தவறுக்காக வருந்துகின்றேன். ; தயவு செய்து என்னை மன்னியுங்கள்" என்று வேண்டுகிறார். அஃது அவர்தம் உயர்ந்த பண்பினைக் காட்டுகின்றது; தவறை உணர்ந்து திருந்துவதற்குரிய மன நிலையைக் காட்டுகிறது. நீங்கள் என்ன செய்யலாம்?

எத்தனை பெரிய இடரினை அவர் உங்களுக்கு இழைத்திருந்தாலும் நீங்கள் அவரை மன்னிக்க வேண்டும்; அவர் உங்கட்குச் செய்த தவறை மறக்க வேண்டும். அதை உங்கள் வாயால் வெளிப்படுத்தவும் வேண்டும்.

"ஐயா! பரவாயில்லை! வருந்தாதீர்கள்." என்று ஆறுதல் மொழிகளைக் கூறுதல் வேண்டும்.

## 4. சொன்னபடி நட

"தொட்டில் பழக்மம் சுடுகாடு மட்டும்" என்பது நம் நாட்டுப் பழமொழி. இளமையில் ஏற்படும் பழக்க வழக்கங்களே ஒருவர் உள்ளத்தே பசுமரத்தாணிபோல் பதியும், ஆகவே மாணவர்கள் இளமையிலிருந்தே பெற்றவர்களிடமும் பெரியவர்களிடமும் ஆசிரியர்களிடமும் அன்புக்குரிய நண்பர்களிடமும் அன்புடன் பழகவேண்டும்; அனைவரையும் மதிக்க வேண்டும்; எல்லோருக்கும் மரியாதை செலுத்த வேண்டும்; உதவி செய்தவர்க்கு நன்றி கூற வேண்டும். தவறு செய்யின் மன்னிப்புக் கேட்க வேண்டும்; தவறு செய்தவர்களை மன்னிக்க வேண்டும்.

அத்துடன் குறித்த நேரத்தில் குறித்த செயல்களைச் செய்தல் வேண்டும். குறித்த நேரத்தில் குறித்த செயல்களைச் செய்யும் பண்பு நமக்கும் நன்மையைத் தரும்; பிறர்க்குத் தீமை ஏற்படுவதைத் தவிர்க்கும்.

### இராமனும் பரதனும்

கைகேயியின் வரத்தினால் இராமன் காடு சென்றான்; பரதன் இராமனின் பாதுகையை ஏற்று நகரத்திற்கு வெளியே தங்கியிருந்து நாடாண்டான்.

பரதன் இராமனைக் காட்டிலே சந்தித்தான்; "அண்ணா நீயே வந்து நாடாள வேண்டும்." என வேண்டிக் கொண்டான்.

இராமனோ, "தந்தையின் வாக்கை நிறைவேற்றுதல் என் கடன்; ஆதலின் பதினான்கு ஆண்டுகள் கழித்தே நாடு திரும்புவேன்." என உறுதியாகச் சொல்லிவிட்டான்.

அப்பொழுது பரதன், "அண்ணா! உன் எண்ணப்படியே ஆகட்டும்; ஆயினும் உன் எண்ணப்படியே பதினான்கு ஆண்டுகளை எண்ணிக் கொண்டிருப்பேன்; குறித்த நாளில் உன் வருகை இல்லை என்றால் அக்கணமே தீக்குளித்து இறப்பேன்!" என்று சத்தியம் செய்தான்.

இராமனும் அதற்கு இசைந்து வருவதாக வாக்களித்தான்.

பதினான்கு ஆண்டுகள் முடிவதற்குச் சில நாழிகைகளே இருக்கின்றன. பரதன் தீயை மூட்டினான்; இராமனை எண்ணி வணங்கினான்; தீயை வலமாகச் சுற்றி வரத் தொடங்கினான். யார் யாரோ தடுத்தனர்; பரதன் கேட்பதாக இல்லை

இராமனோ சொன்ன சொல்லைக் காப்பவன்; அரை நாழிகைப் பொழுது இருக்கும் போதே சீதையோடும் இலக்குவனோடும் அனுமனோடும் அங்கு வந்து சேர்ந்தான்.

பரதன் மகிழ்ந்தான்; இராமன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

மாணவர்களே! குறித்த நேரத்தில் இராமன் வாராவிட்டால் பரதன் தீக்குளித்து இறந்திருப்பான்; இராமன் தம்பியை இழந்து துயர்க் கடலில் மூழ்கியிருப்பான். இராமன் குறித்த நேரத்தில் குறித்த செயலைச் செய்தான்; அதனால் அவனும் நன்மையடைந்தான்; பரதனுக்கு ஏற்படவிருந்த மரணத்தையும் தவிர்த்தான்.

ஆதலால் சொன்ன நேரத்தில் சொன்ன செயலைச் செய்யுங்கள். ஒருவரைப் பகல் பன்னிரண்டுமணிக்குச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தால் சரியாகப் பகல் பன்னிரண்டு மணிக்குச் சந்தியுங்கள்.

ஒருவரை ஒரு மணிக்கு உங்களைச் சந்திக்கும்படியாகச் சொல்லியிருந்தால் நீங்கள் ஒரு மணிக்கு அவர் வருகைக்காகக் காத்திருங்கள். காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது. கடமையும் காலமும் உங்களின் இரு கண்கள்.

வாக்குத் தவறாமை

ஒருவருக்கு உதவி செய்வதாக ஒரு வாக்குக் கொடுக்கின்றோம்; அந்த வாக்கை உறுதியாகக் காப்பாற்ற வேண்டும். ஆதலால் ஒருவருக்கு ஒன்றைச் செய்வதாக உறுதிமொழி கூறினால், நம்மால்

அதைச் செய்யமுடியுமா ? என்பதை எண்ணியே வாக்களித்தல் வேண்டும். செய்ய முடிவதைச் 'செய்கிறேன்' என்று வாக்களித்தல் வேண்டும்; செய்ய முடியாததை "மன்னிக்கவேண்டும் ; இக்காரியம் என்னுல் இயலாது." என்று கூறிவிடுதல் வேண்டும்.

அப்போதுதான் "செய்கிருேம் என்று சொன்னேம் செய்ய முடிய வில்லையே" என்ற வருத்தம் வாக்குக் கொடுத்தவர்க்கு ஏற்படாது ; "செய்கிறேன் என்று சொன்னுர் ; செய்யாமல் ஏமாற்றி விட்டாரே." என்ற வருத்தம் வாக்கைப் பெற்றவருக்கும் ஏற்படாது.

அதனுல்தான் வாக்கு கொடுப்பவர்களுக்கு எச்சரிக்கை தருவது போல்

"சொல்லுதல் யார்க்கும் எளிய ; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்." என்ருர் திருவள்ளுவர்.

சொன்ன சொல் தவறுதல் ஒருவகையில் பொய்யாகவே கருதப் படும் ; பொய் பேசுதல் எத்தகைய இழிவைத்தரும் என்பதைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள்.

## 5. ஒரு கதை தெரியுமா ?

நான் சொல்லப் போவது கதையன்று ; வரலாற்று நிகழ்ச்சியே கொஞ்சம் உங்களுக்கு மாற்றிச் சொல்கிறேன்.

அரியநாதன் சிறுவர்களோடு ஓரிடத்தில் விளையாடிக் கொண் டிருந்தான். அவ்வழியே கைரேகை பார்ப்பதிலே வல்ல அந்தணர் ஒருவர் வந்தார். சிறுவர்கள் விளையாடுவதைக் கொஞ்ச நேரம் நின்று கவனித்துக் கொண்டிருந்தார்.

அரியநாதன் விளையாடும் முறையும் அவன் தோற்றமும் பேச்சுத் தோரணையும் அந்தணரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அரியநாதனைப் பார்த்து" தம்பி இங்கேவா!" என அழைத்தார். அரியநாதன் அமைதி யாக வந்தான். அந்தணரை வணங்கி, "ஐயா! என் பெயர் அரியநாதன் ; என்னைத் தாங்கள் அழைத்த காரணம் என்னவோ?" என்ருன்.

"அரியநாதா! நீ கிடைத்தற்கு அரிய நாதனுக விளங்கப் போகிருய் என்று என் உள்ளம் சொல்லுகிறது; எனக்குக் கொஞ்சம் கைரேகை பார்க்கத் தெரியும்; எங்கே உன் வலக்கையை நீட்டுப் பார்க்கலாம்." என்ருர் அந்தணர்.

அரியநாதன் மகிழ்ச்சியோடு கையை நீட்டினுன். அந்தணர் மேலும் கீழும் குறுக்கும் நெடுக்குமாக ஓடுகின்ற கைரேகைகளை யெல்லாம் நுட்பமாகப் பார்த்தார்.

“அரியநாதா! நீ எதிர்காலத்தில் ஒரு நாட்டுக்கே அதிபதியாக விளங்கப்போகிருய்.” என்ருர் அந்தணர்.

“பெரியவரே! இப்போது நான் ஒரு வேளை உணவுக்கே சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறேன்; பசியை மறப்பதற்கு இப்போது இங்கே விளையாடிக்கொண்டிருக்கிறேன்; நீங்கள் சொன்னபடி நான் அந்த நிலையைப் பெற்ருல் நீங்கள் கேட்பதையெல்லாம் கொடுப்பேன்.” என்ருன் அரியநாதன்.

“நான் ஒரு நாட்டின் அதிபதியாக வந்தால் என்னுடைய செல்வத்தில் ஒரு பகுதியை இந்த ஓலையைக் கொண்டு வருபவர் களுக்குக் கொடுப்பேன்.” என்று எழுதி அதில் கையெழுத்துப் போட்டுத்தருமாறு கேட்டார் அந்தணர்.

அரியநாதனும் அவ்வாறே செய்தான். காலச்சக்கரம் உருண் டது; நாற்பது ஆண்டுகள் ஓடி மறைந்தன. ஏழை அரியநாதன், மதுரை மன்னனிடத்தே தளவாய் அரியநாதராகச் செல்வாக்குப் பெற்ருன்.

ஒரு நாள் அந்தணன் ஒருவன் மதுரைமாநகர் அரண்மனைக்கு வந்தான். தளவாய் அரியநாதரைத் தான் காண வந்திருப்பதாகத் தெரிவித்தான்; உள்ளே வருமாறு கட்டளை வந்தது.

மன்னரும் மற்றவரும் வீற்றிருக்கும் பேரவைக்கு வந்த அந்த ணன், அரியநாதருக்கும் மற்றவர்களுக்கும் தன் வணக்கத்தைத் தெரிவித்தான்.

அரியநாதர் அந்தணரை நோக்கி, “அந்தணரே! நீவிர் எம்மைப் காண வந்ததன் நோக்கம் யாது?” என்று கேட்டார்.

“ஐயனே! என் தந்தை ஒரு சிறந்த கைரேகை நிபுணர்; அவர் இறந்து ஓராண்டு ஆகிறது. அவர் நினைவு நாளுக்காக வீட்டைத் தூய்மை செய்தேன். பரண்மீதிருந்த ஓலைச்சுவடிகளையெல்லாம் எடுத்துச் சுத்தம் செய்தேன். அந்த ஓலைச் சுவடுகளின் இடையே யிருந்த இந்த ஓலை என் கண்ணில் பட்டது; அதில் தங்கள் கையெழுத் தும் இருக்கிறது. வறுமையால் வாடும் நான் தங்களைக் காண வந்தேன்” என்று சொல்லி ஓலையைக் கொடுத்தார் அந்தணர்.

அரியநாதர் ஓலையை வாங்கிப் படித்துப்பார்த்தார்; அவர் இளம் பருவத்து நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்ருக நினைவுக்கு வந்தன.

“அந்தணரே! இந்த ஓலை நான் எழுதிக்கொடுத்ததுதான்; உம் தந்தைக்கு எழுதிக்கொடுத்ததுதான். நான் வாக்குத் தவற மாட்டேன்; என்னுடைய சொத்தில் பாதியை இப்பொழுதே நீவிர் பெற்றுக் கொள்ளலாம்.” என்ருர் அரியநாதர்.

"வாக்குத் தவருத வள்ளலே! அவ்வளவு சொத்தும் எனக்கு எதற்கு? என் குழந்தைக்குப் பால்தருவதற்காக ஒரு நல்ல பசுவை மட்டும் தானமாகக் கொடுத்தால் போதும்." என்ருர் அந்தணர்.

"அந்தணரே! பொருளாசையில்லாத உம் பொன்னடியை வணங்குகின்றேன்; இன்று முதல் நீவிர் குடியிருக்கும் ஊர் முழுவதும் உமக்கே சொந்தம்; அதிலிருந்து வருகின்ற வரிப்பொருள் எல்லாம் உம்மையே சாரும்; சிறந்த பசுக்கள் உம் இல்லம் தேடி வரும். மகிழ்ச்சியோடு சென்று வாரும்." என்று கூறி அந்தணரை அனுப்பிவைத்தார் அரியநாதர்.

அரியநாதரை நாம் இன்றும் நினைக்கின்ருேம். எதனல்? அவர் தம் வாக்குத் தவருமையால்தான். ஆதலின் மாணவர்களே! நீங்களும் இளமையிலிருந்தே சொன்ன சொல்லைக் காப்பாற்றப் பயிற்சி பெறுங்கள்! கொடுத்த வாக்கை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள்.

### செய்முறைப் பயிற்சி

1. பழக்கமும் வழக்கமும் பயிலும் முறையை விளக்குக.
2. குமரனின் நல்ல பழக்கங்கள் யாவை? அந்தப் பழக்கங்கள் உன்னிடம் உள்ளனவா? இன்றேல் பழகிக்கொள்.
3. குமுதாவின் நல்ல பழக்கங்களை விவரி.
4. நல்ல பழக்க வழக்கங்களே நாகரிகத்தின் படிக்கட்டுகள் என்பதை விளக்கு.
5. நீ பள்ளியிலும் வீட்டிலும் எவ்வாறு மற்றவர்களோடு பழகுகின்ருய்?
6. 'இராமனும் பரதனும்' கதைப் பகுதியால் நீ தெரிந்து கொண்டதென்ன?
7. அரியநாதர் வரலாறு உனக்குக் கூறும் அறிவுரை யாது?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி :**

1. பிறரிடம் ஒன்றை விரும்பிக் கேட்கும்போது வேண்டிக் கொண்டு கேளுங்கள்.
   (தயவுசெய்து, அன்புடன், அருள் கூர்ந்து)
2. பிறர் உதவியைப் பெற்றவுடன் அவர்க்கு நன்றி செலுத்துங்கள்.
   (நன்றி, மிக்க நன்றி.)
3. நீங்கள் செய்தது தவறு என்று உணரும்போது உரியவரிடம் மன்னிப்புக் கேளுங்கள்.
   (ஐயா மன்னிக்கவும்)
4. பிறர் உங்களிடம் மன்னிப்புக் கேட்கும்போது பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ளுங்கள். (பரவாயில்லை)

## பதினான்கு

# வீரம்

### 1. ஒன்பான் சுவைகளுள் ஒன்று.

இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்பன அறுவகைச் சுவைகள்; இவை நாவால் அறியத்தக்கவை. வாழைப் பழம் இனிக்கிறது; பாகற்காய் கசக்கிறது; மாங்காய் புளிக்கிறது; உப்பு கரிக்கிறது; பாக்கு துவர்க்கிறது. இவை நீங்கள் அறிந்த சுவை நிலைகள். ஒவ்வொரு நாளும் உணவில் கலந்து நீங்கள் உண்ணும் சுவைகள்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை என்பன ஒன்பது வகையான சுவைகள். இவற்றைக் கேட்டும் உணர முடியும்; கண்டும் உணரமுடியும்; படித்தும் உணர முடியும். ஒன்பான் சுவையும் அமையஉருவாக்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்கள் ஏராளம்.

இவற்றுள் 'பெருமிதம்' என்று சொல்லப்படுவது வீரம் என்று கூறப்படும். பெருமிதம் எக்காரணங்களால் தோன்றும்? கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நான்கு காரணங்களால் பெருமிதம் தோன்றும். கல்வியில் மேம்பட்டு நிற்றலும் வீரமேயாகும்; போரிடுவதில் வலிமை காட்டுதலும் வீரமேயாகும்; மிக்க புகழ்பெற்று நிற்றலும் வீரமே ஆகும்; பிறர்க்கு வரையரையின்றி அள்ளியள்ளிக் கொடுப்பதும் வீரமேயாகும்.

இந்த நான்கு துறைகளிலும் பெருமிதம் பெற்ற நாடு நம் நாடாகும்.

முதல்நாள் போர் நடந்தது; அவள் தந்தை போருக்குச் சென்றான்; யானையை எதிர்த்துக் கொன்றான்; களத்திலே இறந்து பட்டான். அடுத்த நாளும் போர்ப்பறை ஒலித்தது; தன் கணவனை அனுப்பிவைத்தாள். அவனும் பகைவரைக் கொன்று குவித்துக் களத்திலே மடிந்தான்; மூன்றாவது நாளும் போர்ப்பறைகேட்டது.

பால்மணம் மாறாத தன் பாலகனை அழைத்தாள்; தலையைவாரினாள் "செருக்களம் நோக்கிச் சென்றுவா மகனே; பகைவரை வென்றுவா மகனே." என அனுப்பி வைத்தாள்.

அந்தத்தாயின் வீரத்திற்கு எல்லை ஏது? போர்க்களம் சென்றவர்கள் அவளுடைய தந்தையும் கணவனும்; இருவருமே போர்க்களத்தில் இறந்து பட்டனர். மூன்ருவதாகத் தன் ஒரே மகனைப் போர்க்களம் நோக்கி 'போய்வா மகனே!' என அனுப்புகிருள் அந்தத்தாய்!

அவள் மனவலிமை மிகப் பெரிதல்லவா ?

காட்டுப்பகுதியில் அவளுக்கு வீடு; ஒருநாள் அவள் கணவன் வேட்டைக்குச் சென்று விட்டான். அவள் மட்டுமே வீட்டில் இருந்தாள்; அப்போது வந்தது ஒரு புலி; அவள் கையில் இருந்தது ஒரு முறம் மட்டுமே.

வேலும் வாளும் எடுத்துச் சென்று புலியைக் கொல்லமுடியாமல் அதன் வாய்க்கு உணவானேர் பலர். இவள் முறத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வாள் ? தன் உயிரைக் காக்கவேண்டும் என்னும் துணிவு இருந்தது; புலியைத் தன்னுல் கொல்ல முடியும் என்னும் மனவலிமை இருந்தது. அதனுல் அந்தப் பெண் முறத்தினுலேயே அந்தப்புலியை விரட்டினுள்.

முதல் பெண்ணின் வீரம் நாட்டுப்பற்ருல் எழுந்தது. இரண்டாவது பெண்ணின் வீரம் சூழ்நிலையால் உருவானது. இத்தகைய வீர வரலாறு படைத்தது நம் தமிழ்நாடு. ஒருவர்க்கு வீரம் என்பது உடல் வலிமையால் மட்டும் உண்டாவதன்று; மனவலிமையாலும் உண்டாவதாகும். இடர் பல வரினும் எதிர்த்துச் செயல்படும் ஆற்றலும் வீரமேயாகும்.

## 2. அதுதான் வீரம்

கோடை விடுமுறை தொடங்கியது. உதகைக் கல்லூரியிலே படிக்கும் மாணவர்கள் அனைவரும் தங்கள் சொந்த ஊருக்குப்புறப்பட்டனர். எல்லாரும் உதகை புகைவண்டி நிலையத்தில் ஏறி மேட்டுப் பாளையம் வரவேண்டும் அங்கிருந்து கோவைக்கு வரவேண்டும். கோவையிலிருந்து அவரவர் தத்தம் ஊர்களுக்குச் செல்லவேண்டும்;

மாணவர்கள் அனைவரும் செல்வக்குடியிலே பிறந்தவர்கள் ; அவர்கள் கட்டுப்பாட்டோடு கல்வி கற்க வேண்டும் என்பதற்காகவே ஊட்டிக் கல்லூரியில் சேர்க்கப்பட்டவர்கள். வண்டியில் ஏறிய அவர்கள் கட்டவிழ்த்து விட்ட காளைகள் போல ஆட்டம் போடத் தொடங்கினர்.

ஆளுக்கொரு சிகரெட் பாக்கெட்டை எடுத்தனர்; ஒவ்வொன்ருகப் பற்றவைத்துப் புகைத்தனர்; குடித்துவிட்டுக் கும்மாளம் போட ஆரம்பித்தனர்.

ஆனால் ஒரு மாணவன் மட்டும் தனியாக அமைதியாக புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருந்தான். எல்லா மாணவர்களும் அவனிடம் வந்தனர்; சிகரெட்டைக் கொடுத்தார்கள்; வேண்டாம் என மறுத்தான்.

''மதுவைக் கொஞ்சம் சுவைத்துப்பார்.'' என்றனர் மறுத்து விட்டான்.

''நாங்களும் உன்னைப்போல் மாணவர்கள்தாமே; நாள்தோறுமா நாங்கள் குடிக்கிறோம்; இன்றொருநாள் மகிழ்ச்சிக்காகத்தானே! அருளாளா! இதோ ஒரே ஒரு சிகரெட்.'' என்றனர்.

அருளாளன் உறுதியாக மறுத்துவிட்டான். ஒவ்வொருவராக அவனிடம் வந்து கேலியும் கிண்டலும் பேசத்தொடங்கினர்.

அருளாளனின் மனம் புண்படப் பேசினர் ; உயிருக்குயிரான நண்பர் சிலர் அவனின் நட்பையே வெறுத்தொதுக்கினர். ஆயினும் அவன் மட்டும் ''புகை பிடிக்கக் கூடாது; மது அருந்தக்கூடாது.'' என்ற தன் கொள்கையிலிருந்து மாறவே இல்லை.

அருளாளனின் மனத்துணிவே அவனை வீரனாக்கியது; அருளாளனின் மனவலிமையே அவன் கொள்கையைக் கடைப்பிடிக்கச் செய்தது. ஆகவே வீரம் என்பது உடல்வலுவில் மட்டும் ஏற்படுவதன்று; உள்ளத்திண்மையாலும் ஏற்படுவதே ஆகும்.

துப்பாக்கியும் பீரங்கியும் வெள்ளையருக்குத் துணையாக இருந்தன. அண்ணல் காந்திக்கோ இராட்டையைத் தவிர வேறு ஆயுதம் இல்லை. அவர்கள் ஆள்பவர்களாக இருந்தார்கள்; நாம் அடிமைகளாக இருந்தோம். சட்டம் அவர் கையில் இருந்தது; சரித்திரம்தான் நம் கையில் இருந்தது. அவர்கள் கொடி உலகமெல்லாம் பறந்து கொண்டிருந்தது; நம் கொடி இருந்த இடமே யாருக்கும் தெரியாது.

ஆயினும் அண்ணல் காந்தி வெள்ளையரை எதிர்த்தார்; துப்பாக்கியும் பீரங்கியும் கொண்டல்ல—அறப்போர் மூலமாக வென்றார். இந்திய மக்களுக்கு உரிமையைப் பெற்றுத் தந்தார். எவ்வாறு ?

உடற்பலத்தாலா ? அவர் தாம் அடிக்கடி உண்ணாவிரதம் இருப்பவராயிற்றே; அவர்க்கு உடலில் வலு ஏது ? ஆன்மபலம்தான்; ஆன்மபலத்தால்தான் வெற்றி கண்டார்.

வாழ்க்கையே ஒரு பெருங்கடல்; அதைக் கடப்பது கடினம்; அங்கே திமிங்கலம் உண்டு; சுறாமீன் உண்டு அவை நம்மை விழுங்க வரும்; புயல் வீசும் நம் படகையே அழித்து விடும் இத்தகைய வாழ்க்கை என்னும் கடலைக் கடப்பதற்கு நமக்கு வேண்டுவது மனவலிமை.

வீரத்திற்கு அடிப்படையே கலங்காத நெஞ்சம்; உறுதிகொண்ட உள்ளம். மரம் அறுக்கும் தொழிலாளியின் மகன் அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் ஆனது எப்படி? வறுமை வாட்டியபோதும் கலங்காத நெஞ்சம் இருந்தது; தோல்வி மேல் தோல்வி வந்தபோதும் துவளாத மனவலிமை இருந்தது. ஆதலால் ஆபிரகாம்லிங்கன் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆனார்.

## 3. வள்ளுவர் காட்டும் வீரம்

பகைவரை சினத்தோடு பார்க்கின்ற கண்கள், அவர் தம் வேல் தம்மீது பாய வருவதை அறிந்து அஃது ஆற்ருது இமைக்குமாயின் அதுவே வீரர்களுக்குப் புறங்கொடுத்தலாகும்.

தன் கையில் உள்ள வேலினைத் தன்னை எதிர்த்த களிற்றின் மேல் எறிந்து, வருகின்ற களிற்றை அழிப்பதற்கு வேலைத்தேடித் திரியும் ஒருவன், தன் மார்பின் கண் பாய்ந்திருந்த வேலைக் கண்டு மகிழ்வான்.

எமனே கோபம் கொண்டு எதிர்த்து வந்தாலும் அவனை எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றதே படையாகும்.

இவை மறக்கள வீரம்; அங்கும் உடல்வலிமை மட்டும் வீரமாகக் கூறப்படவில்லை. உள்ளவலிமையும் இணைத்தே கூறப்பட்டுள்ளது. மன வலிமையில்லாதான் உடல்வலிமை பெற்று என்ன பயன்? அது பேடி கையில் ஏந்திய வாளேயாகும்.

மாணவர்களே !

இஃது அறிவியல் வளர்ந்த காலம்; அணுகுண்டு ஒன்றினுலேயே உலகையே அழிக்கும் ஆற்றல் வளர்ந்திருக்கின்ற காலம்; உடல் வலிமையைக் காட்டிலும் அறிவு வலிமை தேவையான காலம்; அஞ்சாத உள்ளம் தேவையான காலம்.

ஆதலால் நீங்கள் உங்கள் மனவலிமையை வளர்த்துக்கொள்ளுங்கள்; மனத்துணிவைப் பெறுங்கள்.

> அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!
> உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
> அச்சமில்லை ! அச்சமில்லை ! அச்சமென்பதில்லையே !

என்னும் பாரதியின் பாவரிகளைப் பாடிப்பாடி அச்சத்தைஅகற்றுங்கள்.

## 4. இவையே வீரச் செயல்கள் !

வீடு தீப்பற்றி எரிகிறது; வீட்டினுள் சிலர் அகப்பட்டுத் தவிக்கின்றனர். வீட்டைச் சுற்றிலும் நெருப்புச் சுடர்விட்டு எரிகின்றது.

நீ செய்யவேண்டியது என்ன? நீ உடனே நெருப்பினுள் பாய்வாய்; உள்ளே இருப்பவர்களை மீட்கத் துணிவாய்; அஃது உன் முரட்டுச் சுபாவத்தையே காட்டும்; நீ முரடன் வலிவுள்ளவன் என்பதற்காக நெருப்புச் சுடாமல் இருக்குமா? இத்தகைய முரட்டுத் தைரியம் தேவையற்றதாகும்.

நீ செய்ய வேண்டியது என்ன? தீயணைக்கும் படைக்குச் செய்தி தெரிவிக்க வேண்டியதே உன் முதற் கடமை.

வீரம் என்பது ஓர் உயர்ந்த பண்பு; உடல் வலிமையோடு போரிடுவது தான் வீரம் என்று சிலர் கருதுகின்றார்கள். உண்மையில் அது மட்டுமே வீரமன்று. வாழ்க்கையில் தனக்கு ஏற்படும் துன்பங்களைத் தடுத்து நிறுத்தி வெற்றி காண்பதும் வீரமேயாகும்.

நீ பள்ளிக்கு வருகிறாய்; உன் பெற்றோர் மிகவும் ஏழைகள்; உனக்கு உணவு அளிக்கவே அவர்களால் முடியவில்லை. புத்தகமும் பேனாவும் உனக்கு அவர்களால் எப்படி வாங்கித் தரமுடியும்? முடியாது. அதனால், நமக்கு எதற்குப் படிப்பு? எனப்படிப்பை நீ நிறுத்தி விடலாமா? அது கோழைத்தனம்.

"காலையிலும் மாலையிலும் நானும் என் பெற்றோருடன் வேலைக்குப் போவேன்; ஓய்வு நாட்களில் வேலை செய்வேன்; அதில் வருகின்ற வருவாயைக் கொண்டு கல்வி கற்பேன்." என உறுதி கொள்வது தான் வீரம்.

உயர்நீதிமன்ற நீதிபதி முத்துசாமி ஏழை வீட்டில் பிறந்தார். படிப்பதற்கு விளக்கில்லை; எங்கே படித்தார்? தெருவிளக்கின் துணை கொண்டு படித்தார். இருந்து படிக்க இடமில்லை. எங்கே சென்று படித்தார்; ஆற்றங்கரையிலும் தென்னந்தோப்பிலும் அமர்ந்து படித்தார்; வாழ்க்கைப் போரிலே வெற்றி பெற்றார். அதுதான் வீரம்.

நீ ஒவ்வொரு தேர்வுக்கும் படித்துக் கொண்டுதான் செல்கிறாய்; மற்ற மாணவர்கள் எல்லாம் எழுபதும் எண்பதுமாக மதிப்பெண் பெற்றுவிடுகின்றனர். உன்னால் மட்டும் தேர்ச்சியே பெறமுடியவில்லை

அதனால் "நமக்குப்படிப்பே வராது; பேசாமல் வீட்டுக்குப் போய் விடுவோம்." என்று எண்ணுவது கோழைத்தனம்.

"தேர்விலே தோல்வி பெற்று விட்டோம்; இனி எப்படி மற்றவர்கள் முகத்தில் விழிப்பது; தண்டவாளத்தில் விழலாமா? தனியாக எங்காவது போய்விடலாமா? " என்று எண்ணுவது வீரமில்லாத இயல்பு.

"தோல்வியே வெற்றிக்கோவிலின் முதற்படி; ஆதலின் மீண்டும் முயல்வேன்; வெற்றிபெறுவேன்." என மனவலிமை காட்டித் துணிவு கொள்வதே வீரம்.

மாணவர்களே இத்தகைய வீரத்தையே நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

காந்தியின் சத்திய சோதனையைப் படியுங்கள்; மன வலிமை பெறுவீர்கள்.

## செய்முறைப் பயிற்சி

1. நம் நாட்டு வீர வரலாறுகளை விளக்குக.
2. "உடல் வலிமையால் காட்டப் படுவதுமட்டும் வீரமன்று; உள்ள வலிமையைக் காட்டுவதும் வீரமே" என்பதை விளக்குக.
3. வள்ளுவர் காட்டும் வீரம் யாது?
4. இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் நீ பெறத்தக்க வீரம் எது?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி :**

1. உன் உடலை வலுவுள்ளதாக்கிக் கொள்.
2. உன் உள்ளமும் வன்மை பெறட்டும்.
3. உடலைக் கட்டுப் படுத்துவதில் உன் வீரத்தைக் காட்டு.
4. உள்ளத்தைக் கட்டுப் படுத்துவதில் உன் வீரத்தைக் காட்டு.

பதினைந்து

# பணிவுடைமை

## 1. எல்லார்க்கும் நன்றாம் பணிதல்

பணிவுடைமை, அடக்கமுடைமை, கீழ்ப்படிதல் ஆகிய சொற்கள் அனைத்தும் உள்ளத்தால் அடங்கும் மனிதப் பண்பையே உணர்த்தும். ஒழுக்கத்தின் உயர்வுக்கும் பணிவுடைமையே அச்சாணி போன்றதாகும். பணிவுடைமை என்னும் பண்பே ஒருவருக்கு அமைதியான வாழ்க்கையை உருவாக்கித் தருகிறது.

அதனால்தான் தெய்வப்புலமைத் திருவள்ளுவர், ''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி'' என்றும் '' எல்லார்க்கும் நன்றாம் பணிதல்'' என்றும் கூறினர். பகுத்தறிவாளர்களாலும் பாராட்டப்படுகின்ற ஒரு சிறந்த மதம் 'இஸ்லாம்' என்று அழைக்கப்படுகிறது இஸ்லாம் என்பது அரபிச் சொல் ; அச்சொல்லின் பொருள் யாது ? கீழ்ப் படிதல்; கட்டளைகளை நிறைவேற்றுதல் என்பதே ஆகும். இறைவனுக்கு கீழ்ப்படிவதும் அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுதலும் அம்மதத்தின் சாரம்.

அதனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன ? அறிவால், ஆற்றலால், ஒழுக்கத்தால், உயர்பண்பால், வயதால், உயர் பதவியால் நம்மினும் உயர்நிலையில் உள்ளவர்களிடம் நாம் பணிவுடையவராயிருத்தல் வேண்டும் ; அவர்தம் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான்.

பணிவுடைமை என்பது அடிமைத்தனத்தை விளக்கும் சொல் அன்று ; அன்பினல் உலகம் அமைதியாக இயங்குவதற்கு உரிய உயர்ந்த பண்பை விளக்கும் சொல்லே பணிவுடைமை ஆகும்.

''எவன் தன்னைத்தானே தாழ்த்துகிருனே அவன் உயர்த்தப்படுவான்'' என்பது வேதம். அமைதியும், ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவ வேண்டின் தம்மினும் உயர்ந்தார் இடும் கட்டளைகளுக்குச் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிய மறுப்பதால் அமைதி குலையும். இல்லம், பள்ளி, அலுவலகம், நகர், நாடு ஆகிய எங்கும் அமைதி நிலவ பணிவே தேவை. யாருக்கு யார் பணிவது ? ஏன்

பணிய வேண்டும் ? இந்த வினக்களுக்கு விடை காண வேண்டியது நம் கடமையாகும்.

## 2. அமைதி தரும் இல்லம்

இல்லத்திலே உள்ளவர்கள் அனைவரும் இன் முகத்தோடும் அமைதியோடும் வாழ வழி வகுத்துத் தருவது பணிவுடைமை என்னும் பண்பே ஆகும்.

"மகனே! காலை ஆறு மணிக்கு நீராடு; எழுந்ததும் உன் படுக்கையைச் சுற்றிவை." எனக் கட்டளையிடுகிருர் தந்தை. மகன் தந்தையின் சொல்லுக்குப் பணிந்து நடந்தால் அவனுக்கு வைகறைத் துயிலெழும் பழக்கம் உண்டாகும்; தன் படுக்கையைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் வழக்கம் ஏற்படும். பணிய மறுத்தால் தந்தைக்கு மனவருத்தம்; மகன் வாழ்வும் சீர்கெடுகிறது.

"மணிமேகலை! அதோ பூக்காரி போகிருள்; அவளைக் கூப்பிடு." எனக் கட்டளை இடுகிருள் தாய். மகள் தாயின் சொல்லுக்குப் பணிந்து நடந்தால் தாயின் மனம் மகிழும்; மகளின் தலையைப் பூ மணக்கச் செய்யும். இல்லாவிட்டால் தாயின் மனம் வருந்தும்; மகளும் பூவை இழப்பாள்.

"குமுதா உன் பேனவைக் கொஞ்ச நேரம் தருகிருயா?" அண்ணன் குப்புசாமி கேட்கிருன். "அண்ணு இதோ என் பேன." என்று குமுதா கொடுத்தால் குப்புசாமி மகிழ்ச்சி அடைவான்.

இவை கட்டளை அன்று! அன்பின் வேண்டுகோள். மாணவர்களே! நாம் முதன் முதலாகக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டியது வீட்டில்தான்; மனிதனுடைய முதல் கல்விக் கூடமே வீடுதான்; முதல் ஆசிரியரும் தாயும் தந்தையுமே. சட்டாம் பிள்ளைகள்தாம் நம்முடன் பிறந்த மூத்தவர்கள்; அவர்கள் கட்டளைக்கு பணிய வேண்டியது நம் கடமை.

வீட்டில் தாத்தா இருப்பார், பாட்டி இருப்பார், அத்தை இருப்பார். அவர்கள் நம்மினும் மூத்தவர்கள். அவர்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒருவருக்கொருவர் பணிந்து வாழ்கின்ற குடும்பமே பல்கலைக் கழகமாக விளங்கும். இன்றேல் குடும்பம் கலகக் கூடமாக மாறிவிடும்.

பெற்றவர்கள் நமக்கு ஏதேனும் கட்டளை இடுவர்; நாம் அதற்கு மறுப்புக் கூருமல் உடனடியாகச் செய்தல் வேண்டும். சிலர் முணு முணுத்து கொண்டே செய்வர்; சிலர் ஏனோதானே என்று வெறுப்பு

டன் அரைகுறையாகச் செய்வர். அவ்வாறு செய்வது நல்ல பழக்கம் அன்று ; நன்மை தரும் பழக்கமும் அன்று.

தங்கள் கட்டளைக்குப் பிள்ளைகள் கீழ்ப் படியும்போது பெற்றோர்கள் மகிழ்கிறார்கள் ; அந்த மகிழ்ச்சி பிள்ளைகளுக்கு வாழ்த் தாக மாறுகின்றது. மேலும் மேலும் பிள்ளைகளுக்கு வேண்டியதையெல் லாம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு உண்டாகிறது.

எங்கள் வீட்டில் 'சாந்தி' இருக்கிறாள் ; அவள் அண்ணன் அழைக்கிறான் என்றால் உடனே ஓடிப்போய் 'ஏன்?' என்று கேட்பாள் ; அவன் சொன்ன வேலையைத் தட்டாமல் செய்வாள். அதன் விளைவு என்ன தெரியுமா ? சாந்திக்கென்று அவள் அண்ணன் ஏதாவது வாங்கிக் கொடுத்துக் கொண்டேயிருப்பான். இதனால் என்ன தெரிகிறது? பணிவுடைமை உயர்ந்த குணம் மட்டுமன்று; பலருடைய உதவியையும் பெற்றுத் தரும் குணமுமாகும் என்பதுதான்.

## 3. பள்ளியிலும் பாராட்டு!

பள்ளியின் தலைவர் தலைமை ஆசிரியர் ; அவரை வழிகாட்டியாகக் கொண்டு ஆசிரியர் பலரும் பள்ளியில் பணியாற்றுகிறார்கள் ; அங்கு ஆயிரக்கணக்கில் மாணவர்கள் படிக்கிறார்கள் ; பள்ளி அலுவலகத் தில் எழுத்தர்கள் இருப்பார்கள் ; ஏவலர்கள் இருப்பார்கள்.

வீட்டிலே பழகுகின்ற பழக்கமே பள்ளியிலும் நம்மைத் தொடரும். ஒருவர்க்கொருவர் பணிந்து வாழ்ந்து பழகியிருப்பின் அப்பழக்கம் பள்ளியில் தொடரும் ; பயன் விளைக்கும்.

பள்ளியில் பல சட்டதிட்டங்கள் உண்டு ; அவை மாணவர் களின் நன்மைக்காகவும் பள்ளியின் உயர்வுக்காகவுமே ஏற்படுத்தப் பட்டுள்ளன. பள்ளியால் மாணவர்கள் பெருமை பெறவேண்டும் ; மாணவர்களால் பள்ளியும் பெருமை அடைய வேண்டும்.

வகுப்பறையைவிட்டு வெளிச் செல்ல விரும்பும் மாணவர், ஆசிரியர் அனுமதி பெற்றே வெளியே செல்ல வேண்டும் என்பது சட்டம். மாணவர்கள் அதற்குக் கீழ்ப்படிய மறுத்தால் பள்ளி நடக் குமா? கல்வி வளருமா? எல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆகவே சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

ஆசிரியர்கள் பாட நேரத்தில் வகுப்பறையில் இருக்க வேண்டும் என்பது சட்டம் ; அது தலைமை ஆசிரியரின் கட்டளையாகவும் இருக் கலாம். அதை ஏற்று நடப்பவரே நல்லாசிரியர். இவ்வாறு தலைமை ஆசிரியர் கட்டளையை ஆசிரியர்களும், ஆசிரியர் கட்டளையை மாண வர்களும் கேட்டுப் பணிந்து நடப்பதால் கல்வி வளரும் ; கண்ணியம்

வளரும்; கட்டுப்பாடு வளரும்; அப்போதுதான் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியும்.

ஆசிரியர் மாணவர்களைக் குறிப்பிட்ட பாடங்களை படித்துவரச் சொல்லியிருப்பார்; குறிப்பிட்ட கணக்குகளைச் செய்து வரச் சொல்லியிருப்பார். அஃது ஆசிரியரின் கட்டளை; அதைக் கேட்டு அதன்படி செய்து வருவது மாணவன் கடமை; அதுவே பணிவுடைமை. "நான் கீழ்ப்படிய மாட்டேன்; பணிய மாட்டேன்; சொன்னதைச் செய்ய மாட்டேன்." என்றால் அதனால் மாணவர்களுக்குத்தான் இழப்பு ஏற்படும். ஆகவே பள்ளியிலும் ஆசிரியர், தலைமை ஆசிரியர் போன்றவர்கள் இடும் கட்டளைகளை ஏற்றுக் கீழ்ப்படிந்து நடந்து மாணவர்கள் நற்பெயர் பெறுவார்களாக.

## 4. இறைவனுக்கே கீழ்ப்படிகின்றோம்

மக்கள் அனைவரும் சமத்துவநிலை பெற்றவர்களே; அவர்களுக்குள் உயர்வும் இல்லை; தாழ்வும் இல்லை. ஆண்டவன் ஒருவனுக்கே கீழ்ப்படிய வேண்டும். இதுதான் தத்துவம் என்பர். உண்மைதான். ஆயினும் மக்களை நன்னெறிப்படுத்துவது எவ்வாறு? ஆண்டவனே ஒவ்வொருவருக்கும் நேரில் வந்து இப்படியிப்படி நட என்று சொல்ல முடியுமா?

ஆண்டவன் குரல்தான் ஒவ்வொருவர் மனதிலும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது; அதையும் மீறிச் சில காரியங்கள் நடந்து விடுகின்றனவே. ஆதலால்தான் தம்மினும் மூத்தார் வழியாகக் கட்டளைகள் பிறக்கின்றன.

அண்ணன் சொன்னதைக் கேட்கவேண்டுமா? அக்காள்சொன்னதைக் கேட்கவேண்டுமா? அடுத்த வீட்டுக்காரப் பெரியவர் சொல்வதைக் கேட்க வேண்டுமா? ஆசிரியர் சொல்வதைக் கேட்க வேண்டுமா? என்று கேட்பதில் அர்த்தமில்லை. அவர்கள் உனக்குக் கட்டளை இடுவதில்லை; அவர்கள் வாயிலாக இடப்படுவது ஆண்டவன் கட்டளை என்று எண்ணிக்கொள்.

நம்மைவிடப் பெரியவர்களுக்கு நாம் பணிகிறோம் என்றால் நாம் இறைவனுக்குப் பணிகிறோம் என்று தான் பொருள். அலுவலகத்தில் பணியாற்றுபவர் பணிவோடு கடமையைச் செய்வதால் உயர்வு பெறுகின்றார்கள். பணிவுடைமையைக் கைக்கொள்ளாதவர்கள் இருந்த இடத்திலேயே இருக்கிறார்கள்; சிலர் கீழேயும் இறங்குகிறார்கள்.

அலுவலகத்தின் மேலாளர் எழுத்தரை அழைத்து 'இந்த வேலையைச் செய்' என்று கட்டளை யிடுகிறார். எழுத்தர் 'என்னால் அதைச்

செய்ய முடியாது' என்று பணிய மறுத்தால் அலுவலக வேலை ஒழுங்கு பெறுமா ?

பணிவுடைமை என்றும் தோல்வியைத் தந்ததில்லை ; பணிவுடைமை இன்மை என்றும் வெற்றியையும் தந்ததில்லை.

**நாடும் நகரமும் :**

நகரத்திற்கென்று சில சட்ட திட்டங்கள் உண்டு ; நாட்டிற்கென்று சில சட்ட திட்டங்கள் உண்டு அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடந்தால் தான் நகராட்சி நிலைபெறும் ; நாட்டாட்சி நிலைபெறும். எல்லாரும் தனக்குத் தானே ராஜா என்று முடிவு செய்து விட்டால் நகராட்சி நரகாட்சி ஆகிவிடும்; நாட்டாட்சிக் காட்டாட்சி ஆகிவிடும்.

நாட்டில் அமைதியும் ஒழுங்கும் கட்டுப்பாடான வாழ்வும் மலர வேண்டுமானால் இல்லத்தில் தொடங்கிய கீழ்ப்படிதல், பள்ளி, கல்லூரி அலுவலகம், நகராட்சி, நாட்டாட்சி வரையில் முறையே வளர்ச்சி பெற வேண்டும். நாட்டு மக்கள் நாட்டின் சட்ட திட்டங்களுக்குச் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

''வீதியில் குப்பைகளைக் கொட்டக்கூடாது'' என்பது நகராட்சியின் சட்டம். நான் அப்படித்தான் கொட்டுவேன்; நீ சொல்லி நான் கேட்கவேண்டுமா? எனக் கீழ்ப்படிய மறுத்தால் வீதியெல்லாம் குப்பை பெருகும் ; சுகாதாரம் கெடும் ; நோய் பெருகும்.

'வீட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிப் பணத்தை உரிய காலத்தில் கட்டவேண்டும்' என நகராட்சிமன்றம் ஆணையிடுகிறது. நீ என்ன கட்டளையிடுவது ; நான் என்ன உனக்குப் பணிவது என்றால் நகர வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படும். உன் வீட்டில் விளக்கு எரியாது ; உன் விட்டுக் குழாயில் தண்ணீர் வராது.

சாலையில் மிதிவண்டி ஏறிச் செல்கின்றோம் ; நான்கு சாலைகள் சேருமிடம் ; நடுவில் காவலர் நின்று 'நில்' எனக் கையைக் காட்டுகிறார். அவர் கட்டளைக்குப் பணிய வேண்டியது நம் கடமை ; நான் ஏன் பணிய வேண்டும் என்றால் நீ மிதிவண்டியில் செல்வாய் ; குறுக்கே வரும் பேருந்து வண்டி உன்மீது மோதும்; அதன் விளைவைப் பல இடங்களில் நீயே பார்த்திருப்பாய் ?

இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் கீழ்ப்படிவதால் நன்மை அடைவதையும் கீழ்ப்படிய மறுப்பதால் துன்பம் உறுவதையும் நீ தெரிந்து கொள்ளலாம்.

நாடு என்பது தனி மனிதன் வாழ்வதன்று; மனித சமுதாயம் சேர்ந்து வாழ்வது ; சேர்ந்து வாழும் மனித சமுதாயம் ஒன்றற்கொன்று விட்டுக் கொடுத்துப் பணிந்து வாழ்வதன் மூலமே நல்வாழ்வு காண முடியும்.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஒவ்வொரு மனிதனும் கீழ்ப படிந்து நடக்க வேண்டும். தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த இராமன் காட்டிற்குச் சென்ருன். இன்றும் காவியத் தலைவனுகப் போற்றப்படுகின்ருன் ; என்றும் போற்றப்படுவான்.

ஆண்டவனுக்குக் கீழ்ப்படிவதை மறந்த ஆதாமும் ஏவாளும் தம் பரம்பரைக்கே பாவச் சுமையை சுமத்தி வைத்துச் சென்ருர்கள்.

ஆகவே மாணவர்களே! கீழ்ப்படியுங்கள் ; நீங்கள் உங்களின் மூத்தவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் உங்களுக்கும் இளையவர் கள் உங்களுக்குக் கீழ்ப்படிவர். மூத்தவர்களை நீங்கள் மதித்தால் இளையவர்கள் உங்களை மதிப்பார்கள். சிறுவன் அமலநாதன் கதை உங்கட்குத் தெரியுமா ?

## 5. அமலநாதன்

மிக்கேல்பட்டியில் ஆசிர்வாதம் என்னும் பெரியவர் ஒருவர் இருந்தார்; அவர், தம் மகன் அருள்சாமியின் வீட்டில் தங்கியிருந்தார். அருள்சாமியின் மனைவி ராணி.

ஆசிர்வாதத்திற்கு வயது எண்பதுக்கு மேல் இருக்கும். கைகள் நடுங்கத் தொடங்கின ; தரையில் உட்கார்ந்து எழுவது அவருக்குச் சிரமமாக இருந்தது, அதனுல் அவர் நாற்காலியில் அமர்ந்து மேசைமேல் உணவை வைத்துக் கரண்டியால் எடுத்து உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ராணி மிகவும் கொடுமையானவள். எப்பொழுதும் அவள் தன் மாமனுரைக் குறை கூறிக் கொண்டே இருப்பாள். "இந்தக் கிழவ னுக்கு மேசையும் நாற்காலியும் இல்லாமல் முடியவில்லையா ? என்னு டைய அழகான மேசை விரிப்பெல்லாம் வீணுகிறது." என்று குறைப் படுவாள் ; அருள்சாமியும் தன் மனைவியைக் கண்டிப்பதில்லை.

ஒரு நாள் ஆசிர்வாதம் உண்பதற்காகத் தம் உணவுத் தட்டைக் கையில் எடுத்தார்; இயற்கையாக உள்ள கைநடுக்கத்தால் தட்டுத் தரையில் விழுந்து உடைந்தது.

அதைப் பார்த்த ராணிக்குக் கோபம் வந்துவிட்டது. உமக்காக நான் ஒவ்வெரு நாளும் புதிய தட்டு வாங்கிக் கொடுக்க முடியாது ; இனிமேல் சமையற்கட்டில் வந்து சாப்பிடும் ; தகரத்தட்டுத்தான் இனி உமக்கு ; அதில்தான் நீர் சாப்பிட வேண்டும்." எனக் கொடூர மாகப் பேசினுள். ஆசீர்வாதத்தின் வாய் ஒன்றும் பேசவில்லை ; அவர் கண்கள் தம் பெயரன் அமலநாதனைப் பார்த்தது ; கண்ணீர் விட்டது.

ஆமாம்! அருள்சாமி, ராணி இவர்களின் செல்வப் புதல்வனே அமலநாதன். அவனுக்கு எட்டு வயதிருக்கும்; தாத்தாவின் மீது பாசம் உடையவன்.

அன்று இரவு எட்டு மணி இருக்கும். அமலநாதன் ஒரு மரப் பலகையை எடுத்தான்; மேஜைமீது வைத்தான்; அவன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்; ஒரு கத்தியால் அந்தப்பலகைச் சீவிக் கொண்டிருந்தான்.

அதைப்பார்த்துக் கொண்டிருந்த அருள்சாமியும் இராணியும் ''அமல்! நீ என்ன செய்து கொண்டிருக்கின்ருய்?'' என்று கேட்டனர்.

''அப்பா! அம்மா! இந்த மரப்பலகையால் ஒரு உணவுத்தட்டு தயார் செய்யப் போகிறேன். ஏனென்ருல் உங்களுக்கு வயதான பிறகு உங்களே வீட்டுக்கு வெளியே உட்கார வைத்துக் தான் சோறு போடவேண்டியதிருக்கும்; அப்போது மரத்தட்டு வேண்டுமல்லவா! அதற்காக இப்போதே தயார் செய்து கொண்டிருக்கிறேன்; அப்பாவுக்கு ஒரு தட்டு; அம்மாவுக்கு ஒரு தட்டு; அம்மா! உனக்கு எந்தத் தட்டு வேண்டும்?'' என்று கேட்டான் அமலநாநன்.

அருள்சாமியும் இராணியும் தங்கள் மகனின் பதிலேக்கேட்டு அப்படியே அயர்ந்து நின்று விட்டனர். அவர்களின் செயல் அவர்களேயே வெட்கப்படச்செய்தது.

அருள்சாமி தன் தந்தையிடம் சென்ருன். ''தந்தையே எங்களே மன்னியும்; ஆண்டால் முதிர்ந்திருக்கிருேம்; அறிவால் முதிரவில்லே; பண்பால் முதிரவில்லே. தங்கள் பெயரன் எங்களுக்குப் புத்திகற்பித்து விட்டான்.'' என்று மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டனர்.

பெரியவர் மகிழ்ந்தார்.

ஆகவே மாணவர்களே! பெரியவர்களின் வழியை பின்பற்றியே இளேஞர்கள் செயல்படுவர். நீங்கள் உங்கள் தந்தைக்குக் கீழ்ப்படிந்தால் உங்கள் பிள்ளேகள் உங்களுக்குக் கீழ்ப்படியும்; நீங்கள் உங்களின் மூத்தவரின் சொல்லுக்குப் பணிந்தால் இளேயவர்கள் உங்கள் சொல்லுக்குப் பணிவர்.

ஆகவே, கீழ்ப்படிதலுக்கு எடுத்துக் காட்டாகவிளங்குவீர்!

### செய்முறைப் பயிற்சி

1. பணிவுடைமையை விளக்குக. 'இஸ்லாம்' என்னும் சொல் எதை விளக்குகிறது?
2. இல்லத்தில் அமைதியை எவ்வாறு உண்டாக்கலாம்?
3. வகுப்பறையில் பாராட்டு பெறுவதற்குரிய வழிகள் யாவை?
4. நகரத்திலும் நாட்டிலும் அமைதி நிலவ பணிவு தேவை என்பதை விளக்குக.
5. அமல நாதனின் கதை உனக்கு அறிவிக்கும் நீதி யாது?

**நீ கற்றுக் கொள்ள வேண்டிய நன்னெறி :**

1. பணிவு பெருமை தரும்.
2. தன்னேத் தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுகிருன்.
3. பெற்றவரை நீ பணிந்தால் பிள்ளேகள் உன்னேப் பணிவர்.

பதினாறு

# அ ழ கு

## 1. வியக்கத்தக்க பேரெழில்!

நம்மைச் சுற்றியுள்ள இயற்கையைக் காணுங்கள்! எங்கும் அழகு; எதிலும் அழகு. அழகை விரும்பாதார் யாருளர்? எல்லாரும் அழகைக் காண விரும்புகின்றனர்; கண்டு மகிழ்கின்றனர், அழகிலே மனதைப் பறிகொடுக்கின்றனர்.

நீலக்கடலும் அதிலே மோதியலையும் அலைகளும் கடலுக்கு வேலியிட்டாற்போலத் தோன்றும் தொடுவானமும் காணுதற்கரிய காட்சிகளன்றோ! காலைப்பொழுதிலே - அங்கே வட்டமிட்ட இளஞ்சோதியோ வார்த்தெடுத்த தங்கத்தட்டோ என்னும்படி வண்ணக்குழம்புகளால் இந்திர ஜாலம் காட்டும் செவ்வானத்திற்கிடையே தோன்றும் கதிரவனின் காட்சிதான் எத்தனை அழகு?

மேகந்தவழும் மலை; அதன் மேனியெங்கும் பச்சை கம்பளம் விரித்தாற்போல் பசுரமரக் காடுகள்; வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல வீழ்ந்து ஒலிக்கும் அருவிகள்—நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சிகளன்றோ! மலையிலிருந்து மண்பகுதியை அடைந்த அருவிகள் ஆறுகிப்பெருகி, கல்லும் மலையும் குதித்துவரும் அழகு; காடும் செடியும் கடந்து வரும் அழகு; எல்லை விரிந்த சமவெளி எங்கும் இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வரும் காட்சிகள் கொள்ளை அழகை அள்ளித் தருகின்றனவே.

நீலவானம் என்னும் நெடுங்கடல்; அங்கே கோடி கோடியெனும் மீன்கள்; அவற்றிடையே வேள்ளியோடம் போலவரும் வெண்ணிலா; இத்துணை அரிய அழகை உருவாக்கிய இறைவன் எத்துணை வல்லவன்?

மரமும் செடியும் கொடியும் பூத்துக் குலுங்கிப் புன்னகை புரிவதைப் பார்மின்! மணக்கும் மலர்களின் நறுமணத்தை நுகருங்கள்! வண்ணவண்ண நிறமலர்கள்; முகமெனத்தோன்றும் மலர்கள்; கண்ணெனக் காட்சிதரும் மலர்கள்; கூப்பிய கரமெனக் குவிந்த மலர்கள்.

அவை வண்டின் வரவை எதிர்நோக்கி நிற்பதைப் பாருங்கள்; இசை பாடி மகிழ்விக்கும் வண்டினை இனிமை மிகுதேன் தந்து உண்ணச் செய்வதைக் காணுங்கள்!

எங்கும் அழகு! எதிலும் அழகு!! இவ்வாருக நம்மைச்சுற்றி யுள்ள உலகம் வியக்கத் தக்க பேரெழிலுடன் விளங்குகின்றது. இயற்கை அழகு ஒவ்வொன்றும் தத்துவக் கருத்துகளின் முத்துக் கோவைகளாகவே விளங்குகிறன. ஒவ்வொன்றும் காரண காரியங்க ளோடு படைக்கப்பட்டிருக்கின்றன.

மல்லிகை முல்லை முதலிய பூக்கள் மாலையில் மலர்கின்றன. ஏன்? கதிரவன் மறைந்து விட்டான்; மாலைப்பொழுது வந்து விட்டது என்பதை மக்களுக்கு அறிவிப்பதற்காக.

சரி; மாலையில் பூக்கும் அம்மலர்கள் மிக்க மணமுடையதாக இருப்பது ஏன்? வண்டுகள் தன் இருப்பிடம் தேடி வருவதற்காக; அவை வந்தால்தானே மகரந்தச் சேர்க்கை உண்டாகும்.

அதுவும் சரியே. மாலையில் பூக்கும் மலர்கள் வெண்மை நிறம் பெற்றிருப்பதேன்! இரவுக் காலத்தில் தன்னைத் தேடிவரும் வண்டு களுக்குத் தன்னிருப்பிடம் தெரிய வேண்டாமா? அதற்காகத்தான் வெண்ணிறம் பெற்றிருக்கின்றன. இவ்வாறு ஒவ்வொன்றும் காரண காரியத்தோடு படைக்கப்பட்ட இயற்கைக் காட்சிகள் எத்துணை பேரழகுடன் விளங்குகின்றன.

அழகுப் பொருட்கள் என்றும் எவருக்கும் இன்பந்தரத்தக்க வையன்றோ! கவிஞர்கள் இக்காட்சிகளைக் கண்டார்கள்; அந்த எழிற் காட்சியிலே மயங்கினுர்கள்; கவிதைகள் பிறந்தன; இயற்கைக் காட்சிகளின் இன்பத்தைப் புலவர்கள் கவிதைகளாக்கினர்; காவிய மாகத் தொகுத்தனர்.

நற்றிணையும் நல்ல குறுந்தொகையும் ஐங்குறுநூறும் அகநானூ றும் இயற்கை யழகின் இன்பத் தொகுப்புகளாயின.

## 2. அழகு எது ?

காண்பவர் தம் கருத்திற்கேற்பவே அழகு காட்சியளிக்கிறது என்பர். அஃது உண்மையே; ஆயினும் எல்லாருக்கும் இன்பத்தை அளிக்கும் இயற்கைக் காட்சிகள் ஏராளம். இயற்கைக் காட்சிகள் அனைத்தும் — இறைவன் படைப்புகள் அனைத்தும் அழகின் சிரிப்புகளே.

இறைவன் ஒவ்வொன்றையும் ஒழுங்குறவும் சரியான விகிதத்தி லுமே படைத்திருக்கிருன். அதனுல் அவை அனைத்தும் அழகாகவே காட்சியளிக்கின்றன.

தாமரைப் பூவைப் பாருங்கள்! ஒவ்வொரு இதழும் அளவாக அமைந்திருக்கின்றன; அவை அடுக்கடுக்காகப் பொருந்தியிருக்கின்றன; நடுவிடம் மகரந்தம் பொருந்தி நறுமணம் பரப்பி நிற்கின்றது. ஒழுங்காகவும் அமைய வேண்டிய விகிதப்படியும் அம் மலர் அமைந்திருக்கிறது; அதனுல் அஃது அழகாக இருக்கிறது. ஆகவே உண்மை அழகு ஒழுங்கிலும் நியதியிலுமே உருவாகின்றன என்பதை அறியலாம்.

**அழகினை அனுபவிப்போம் !**

இன்பமும் துன்பமும் நிறைந்ததே உலகம். மக்கள் தம் வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டியவர்களாக உள்ளனர். குளத்தின் நடுவே ஒரு கல்லை எடுத்துப்போட்டால், அது வட்ட வட்டமாக அலையை எழுப்பும்; அது கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகும். அதைப் போலவே மனிதன் சிறுசிறு பிரச்சினைகளையும் பெரிதாக்கிக் கவலையில் ஆழ்கிருன்.

அவர்களின் கவலையைப் போக்கும் மாமருந்து அழகுச் செல்வங்களே; இன்பத்தை அள்ளியள்ளித் தரும் கொடைவள்ளல்கள் அழகுக் காட்சிகளே. கவலை தீரட்டும்; இயற்கையழகில் இன்பம் காண்போம் என்ருல் அலை ஓய்வது எப்போது? கடலில் நீராடுவது எப்போது?

முதலில் அழகோவியங்களைக் காண்மின்! அந்த இன்பத்திலே மூழ்குமின்! கவலையை மறந்திடுமின்! துன்பத்தைத் துரத்தியடிமின்!

## 3. இயற்கையும் செயற்கையும்

இறைவன் படைப்பின் இயற்கை காட்சிகள் அனைத்தும் இயற்கை அழகுக் காட்சிகளே! இறைவனின் இயற்கையைத் துணையாக்கிக் கொண்டு மனிதன் படைத்துக் காட்டும் செயற்கைக் கூடங்களே செயற்கை அழகுக் காட்சிகளாகும்.

உயர்ந்த மலைக்குன்று ஓங்கி நிற்கும் காட்சி இறைவனின் இயற்கை அழகு காட்சி; வளர்ந்து நிற்கும் கோயிற் கோபுரம் மனிதனின் செயற்கை அழகுக் காட்சி.

வானம்பாடிப் பறவை வரிசையாக வானத்திலே பறந்து செல்லும் காட்சி இயற்கையின் எழிலோவியம்.

என். சி. சி. மாணவியர் பயிற்சியில் ஒன்றுபோல ஒழுங்காக கைவீசிச் செல்லும் காட்சி, செயற்கையின் சித்திரக் காட்சியாகும்.

வானத்திலே பருந்து வட்டமிட்டுப் பறக்கும் காட்சி இறைவன் படைத்த இயற்கை அழகுக் காட்சி.

விண்ணிலே வண்ணப் பறவையென விமானம் பறப்பது மனிதன் படைத்த செயற்கை அழகுக் காட்சி.

மலையிலும் காட்டிலும் மரம் செடி கொடிகளையும் அவற்றில் மணக்கும் மலர்களையும் இனிக்கும் கனிகளையும் படைத்துக் கண்ணுக்கு விருந்தாக்கியிருப்பது இயற்கை அழகின் இன்பக்காட்சி.

பூங்காவில் மரம் செடி கொடிகளை உண்டாக்கி கூட்டியும் குறைத்தும் வெட்டியும் விரிவாக்கியும் அழகுக் காட்சி ஆக்கியிருப்பது மனிதன் படைத்த செயற்கை அழகுச் காட்சி.

இறைவனின் படைப்பிலே இயற்கையழகைக் காண்கின்றோம். மனிதனின் படைப்பிலே செயற்கை அழகைக் காண்கின்றோம்.

செயற்கையின் அழகுப் பொருட்கள் எல்லாம் இயற்கையின் மாதிரி வடிவங்களே. "பறவையைக் கண்டான் விமானம் அமைத்தான்; மீனினைக் கண்டான் கப்பல் அமைத்தான்" என்றெல்லாம் பாடுகிறார்களே அவை உண்மைதாம்.

இயற்கையிலும் அழகு ஒளிர்கிறது; செயற்கையிலும் அழகு விளங்குகிறது; அனுபவிக்கும் மனம் மட்டும் இருந்துவிட்டால் போதும்; உலகமே அழகுமயமாகும்.

## 4. அழகை விரும்புவீர்!

மாணவர்களே! நீவிர் அழகை விரும்புமின்; அழகினைக் கண்டு களிமின். வீட்டில் உங்கள் அறையைத் தூய்மையாக அழகாக வைத்துக் கொள்ளுங்கள்.

பள்ளியில் உங்கள் வகுப்பை அழகாகத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் உடலை ஒழுங்காக அழகாக வைத்துக்கொள்ளுங்கள். அழுக்கு நீங்க நீராடுங்கள்; வெளுத்த ஆடைகளை உடுத்திக் கொள்ளுங்கள்.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாம்
கல்வியழகே அழகு."

ஆதலின் அன்போடுகூடிய—அறிவோடு சேர்ந்த—பண்போடு பொருந்திய—பரிவோடு வளர்கின்ற கல்வியழகே அழகு; கள்ளமிலா

உள்ளத்து அழகே அழகு. அந்த அழகை உங்கள் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

### செய்முறைப் பயிற்சி

1. *இயற்கையின் பேரெழிலை எண்ணிப் பார்!*
2. *இயற்கை யழகு நுட்பவுணர்வோடு படைக்கப் பட்டிருப்பதை எண்ணிப் பார்!*
3. *இறைவனே இயற்கையின் ஓவியன்; அவன் ஓவியத்தில் களங்கமென்ப தில்லை.*
4. *செயற்கை யழகின் செம்மையினை விவரி.*

**நீ கற்றுக் கொள்ளவேண்டிய நன்னெறி :**

1. *இயற்கை இன்பத்தில் மூழ்கு.*
2. *இயற்கை யழகைப் போல் செயற்கை அழகை உண்டாக்கு.*
3. *செயற்கையினும் இயற்கையின் மேன்மை உணர்.*
4. *இயற்கை தரும் பாடம் இறைவன் இருக்கிறான் என்பதே.*

அண்மையில் அரசினரால் வெளியிடப்பெற்ற புதிய பாடத்திட்டத்தினை முற்றிலும் பின்பற்றித் தயாரிக்கப் பட்டுள்ளது இந்நல்லொழுக்கக்கல்வி நூல் வரிசை.

இவ்வரிசையில்.........

| | |
|---|---|
| மூன்றும் வகுப்பு | ஏழாம் வகுப்பு |
| நான்காம் வகுப்பு | எட்டாம் வகுப்பு |
| ஐந்தாம் வகுப்பு | ஒன்பதாம் வகுப்பு |
| ஆறும் வகுப்பு | பத்தாம் வகுப்பு |

THE PROCEEDINGS OF THE DIRECTOR OF SCHOOL EDUCATION, MADRAS.
R. C. No. 122296, E4/76
DATED 25-9-1976.

"PAPER USED FOR THE PRINTING OF THIS BOOK WAS MADE AVAILABLE BY THE GOVERNMENT OF INDIA AT CONCESSIONAL RATES".